**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

*வெளியீடு :* 4-6-2016 Issued : 4-6-2016

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, ஜனவரி 22, 2016—தொகுதி 91—எண் 2**

**Friday, the 22nd January 2016—Volume 91—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**22–1–2016**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 305-356 |
| **2. அறிக்கை அளித்தல்—** | |
| திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள்மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை | 356-358 |
| **3. அரசினர் தீர்மானங்கள்—** | |
| (அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து அரசினர் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளுதல் | 358 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 358 |
| (ஆ) திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள்மீதான உரிமை மீறல் பிரச்சினையில் அவை உரிமைக் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளுதல் | 359-365 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 359,361, 364,365 |
| *திரு. அ. சவுந்தரராசன் | 363 |
| **4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**–தொடர்ச்சி | 366-504 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 366-375 |
| திரு. உ. தனியரசு | 375-384 |

*பக்கங்கள்*

**4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—*தொடர்ச்சி*


| | |
|---|---|
| **திரு. க. பாலகிருஷ்ணன்* | 384 |
| *திரு. ஆர். மனோகரன்* | 384-392 |
| **டாக்டர் க. கிருஷ்ணசாமி* | 392-396,398, 399,401-403, 405-407 |
| *மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்* | 393-395,397, 399,400, 403-406, 421-426,438, 439,454,455 |
| **மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்* | 396-399,404, 405,408 |
| **மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி* | 400-402,412, 413, 487, 490-492 |
| *மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்* | 402,403 |
| *மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* | 406,407,427, 428, 432-434, 465,466,470, 471, 473-477, 483,484,485 |
| *முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா* | 408-419,478 |
| *செல்வி கே. பாலபாரதி* | 419 |
| *திரு. அ. கணேஷ்குமார்* | 420-423, 425-436 |
| *மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்* | 430 |
| *திரு. ஜே.ஜி. பிரின்ஸ்* | 434-437, 440-442, 444-452 |




*பக்கங்கள்*

**4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—*தொடர்ச்சி*


| | |
|---|---|
| **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு* | 439-441 |
| *திரு. சு. குணசேகரன்* | 440,480 |
| *மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி* | 443-445 |
| **மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி* | 446,447, 449-451 |
| *திரு. எம். ஆறுமுகம்* | 451-460 |
| **திரு. அ. சவுந்தரராசன்* | 460-463, 469, 470, 472-478, 480-486, 488,489, 491-494 |
| **மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா* | 460-461 |
| *மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்* | 463-465, 472,473,490 |
| **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி* | 466-470 |
| **மாண்புமிகு திரு. ப. மோகன்* | 478,479 |
| *மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்* | 481,482 |
| *மாண்புமிகு திரு. பி. தங்கமணி* | 486-488 |
| **திருமதி ச. முத்துசெல்வி* | 494-504 |
| **5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 505 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மன்மத, தை 8, திருவள்ளுவர் ஆண்டு—2047

## 2016 ஜனவரி 22, வெள்ளிக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"ஒல்வது அறிவது அறிந்ததன் கண்தங்கிச்*
*செல்வார்க்குச் செல்லாதது இல்"*

*தம்மால் எதைச் செய்ய முடியும் என்பதையும், அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் அறிந்து, செயலில் சோர்வடையாமல் தொடர்ந்து முயல்கிறவர்களுக்கு முடியாத செயல் என எதுவும் இல்லை.*

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**16—**

### மின் வாரியப் பிரிவு அலுவலகம்

***53559—திருமதி மனோரஞ்சிதம்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2016 ஜனவரி 22

ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஒன்றியம், ஆனந்தூரில் மின் வாரியப் பிரிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஒன்றியம், ஆனந்தூரில் மின் வாரியப் பிரிவு அலுவலகம் அமைக்க சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை. ஆனந்தூர் மின் நுகர்வோர்களுக்கான பிரிவு அலுவலகம், ஆனந்தூரிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கல்லாவி எனும் இடத்திலுள்ள பிரிவு அலுவலகத்தின்கீழ் தற்போது இயங்கி வருகிறது. கல்லாவி பிரிவு அலுவலகத்தின்கீழ் 128 மின்மாற்றிகள் உள்ளன. புதிய பிரிவு அலுவலகம் ஒன்றை அமைக்க வேண்டுமானால் வாரிய விதிகளின்படி 126 மின்மாற்றிகள் இருக்க வேண்டும். ஆனால், தற்போது ஆனந்தூரில் 15 மின்மாற்றிகள் மட்டுமே இயங்கி வருகின்றன. எனவே, ஆனந்தூரில் புதிய பிரிவு அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம் அவர்கள்.

**திருமதி மனோரஞ்சிதம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்குகிறேன். வருகின்ற 2016 சட்டமன்றத் தேர்தலில், 234 தொகுதிகளும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இனி வருங்காலங்களில் எதிர்க்கட்சிகள் உட்காருவதற்கு இடமில்லை, அனைத்து இடங்களும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மட்டும்தான் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஒன்றியம், ஆனந்தூரில் மின் வாரியப் பிரிவு அலுவலகத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருங்காலத்திலாவது அமைத்துத் தர முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.



2016 ஜனவரி 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஊத்தங்கரை தொகுதி, மத்தூர் ஒன்றியம், ஆனந்தூரில் புதிய மின் வாரியப் பிரிவு அலுவலகம் ஒன்றை அமைக்க வேண்டுமானால், பொதுவாக வாரிய விதிகளின்படி குறைந்தபட்சம் 126 மின்மாற்றிகள் இருக்க வேண்டும். ஆனால், தற்போது ஆனந்தூரில் 15 மின்மாற்றிகள் மட்டுமே இயங்கி வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, வருங்காலத்தில் மின்மாற்றிகளின் எண்ணிக்கை அதிகரிக்குமானால், அங்கே மின் தேவையும் அதிகரித்து, அதற்குரிய கட்டமைப்பு வசதிகளும் மேம்படுமானால், அந்தப் பகுதியில் 126 மின்மாற்றிகள் வருகின்றபோது புதிய மின் வாரியப் பிரிவு அலுவலகம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா, மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**17—**

## குளிர்பதனக் கிடங்கு

***53060—திருமதி எல். ஜெயசுதா:**

மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம், இந்திரவனம் ஊராட்சியில் வேளாண் விளைபொருட்களுக்கென குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

*[2016 ஜனவரி 22*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா அவர்கள்.*

**திருமதி எல். ஜெயசுதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழு கோடி தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக, 100 கோடி இந்திய மக்களின் எதிர்காலமாக, அனைத்து முதலமைச்சர்களுக்கும் முதலமைச்சராக பரிணாமம் பெற்றிருக்கின்ற, (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்பாரும், மிக்காரும் இல்லாத ஒப்பற்ற நிரந்தர ஒரே முதலமைச்சராகத் திகழ்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரணி போற்றும் தஞ்சைக்கு அடுத்தபடியாக விவசாயம் நிறைந்த திருவண்ணாமலை மாவட்டத்தில், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகள், பழங்கள், மலர்கள் போன்றவற்றை நீண்டநாள் கெடாமல் பாதுகாப்பதற்காக விவசாயிகளின் நலன் கருதி, போளூர் சட்டமன்றத் தொகுதியில், சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் இந்திரவனம் ஊராட்சியில் உள்ள விவசாயிகள் மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். குவிந்த கைகள் விலகும் முன்பாகவே வரம் அளிக்கும் நம் தாயின் நல்லாட்சியில், இந்தக் கோரிக்கையானது மீண்டும் பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசிடத்திலும் கேட்டு அமர்கிறேன். நன்றி.*

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றியம்,*



*2016 ஜனவரி 22]*

*இந்திரவனம் ஊராட்சியில் நெல், நிலக்கடலை, உளுந்து, பாசிப்பயறு, துவரை, கத்தரிக்காய், மிளகாய், தக்காளி, வெண்டை போன்ற பயிர்கள் 399 ஹெக்டேர் அதாவது 1,000 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, 2,067 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்திரவனம் ஊராட்சியிலிருந்து, சேத்துப்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு 10 கிலோ மீட்டர் தூரம்தான் உள்ளது. உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி உதவியுடன் 25 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு ஒன்று அங்கே அமைக்கப்பட்டுள்ளது. இந்திரவனம் ஓர் ஊராட்சியாகும். இங்கு கிடங்கு அமைக்கக்கூடிய அளவிற்கு உற்பத்தியோ, உற்பத்தி செய்த பொருட்களை சேமித்து வைத்து, இலாபகரமாக விற்கக்கூடிய அளவிற்கு சூழ்நிலையோ இல்லை. இந்திரவனம் ஊராட்சியிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சேத்துப்பட்டு குளிர்பதனக் கிடங்கை இந்திரவனம் ஊராட்சியிலுள்ள விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளலாம் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**18—**

## சாலையை அகலப்படுத்துதல்

***52337—திரு. நயினார் நாகேந்திரன்:**

*மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி தொகுதி, மதவகுரிச்சி ரஸ்தா-தாழையூத்து சாலையினை இருவழிச் சாலையாக அகலப்படுத்த அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*[2016 ஜனவரி 22*

*திருநெல்வேலி தொகுதி, மதவகுரிச்சி ரஸ்தா-தாழையூத்து சாலையினை இருவழிச் சாலையாக அகலப்படுத்த தற்போது சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

**திரு. நயினார் நாகேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும், தமிழ் மக்களுக்காக, உலகெங்கும் வாழும் தமிழர்களுடைய ஒளியாக, ஒன்றரை கோடி தொண்டர்களின் விழியாக விளங்குகின்றவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முடியாததை முடித்து வைக்கின்ற தலைவிதான் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மதவகுரிச்சி ரஸ்தா-தாழையூத்து சாலையினை அமைப்பதனால் 30 கிராமங்கள் பயனடையும். அதுமட்டுமல்ல, தூத்துக்குடி துறைமுகத்திற்கு செல்லும் சாலையிலும், செங்கோட்டை-கொல்லம் சாலையிலும் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றது. கனரக வாகனங்கள் அனைத்தும் அந்தச் சாலை வழியாகத்தான் வருகின்றன. இந்தச் சாலையினை அமைப்பதனால், 30 கிராம மக்கள் பயனடைவது மட்டுமல்ல, தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து கொல்லம் வரைக்கும் செல்லக்கூடிய கனரக வாகனங்கள், திருநெல்வேலி நகரத்திற்குள்ளாக வருவதால் ஏற்படுகின்ற வாகனங்களின் போக்குவரத்து நெரிசலும் தவிர்க்கப்படும். தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருநெல்வேலிக்கு ஏற்கெனவே ஒரு* Ring Road-ஐ *தந்திருக்கின்றார்கள். இதனை அந்தச் சாலையுடன் சேர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இந்தச் சாலையை இருவழிச் சாலையாக அகலப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*



*2016 ஜனவரி 22]*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி தொகுதி, மதவகுரிச்சி ரஸ்தா சாலையானது, மாவட்ட இதர சாலையான தாழையூத்து-ரஸ்தா சாலை கி.மீ. 0/0-லிருந்து 9/6-ல் உள்ளது. இச்சாலை தற்போது போக்குவரத்து செறிவிற்கேற்றாற்போல ஒருவழித் தடமாக உள்ளது. இச்சாலையில் போக்குவரத்து செறிவு அதிகரிக்கின்றபட்சத்தில் இச்சாலையை அகலப்படுத்துவதற்கு அரசால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

**திரு. நயினார் நாகேந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனிவுடன் பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

**முனைவர் கோவி. செழியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதிக்குட்பட்ட ஆடுதுறை, திருவிடைமருதூர், திருபுவனம் ஆகியவை பேரூராட்சிப் பகுதிகளாகவும், தெ.பெருமாள்நல்லூர், உமாமகேஷ்வரம், உள்ளூர் ஆகியவை ஊராட்சிப் பகுதிகளாகவும் மயிலாடுதுறை-கும்பகோணம் நெடுஞ்சாலையில் இருக்கின்றன. ஆடுதுறையிலிருந்து கும்பகோணம் செல்ல வேண்டுமேயானால், சுமார் 12 கிலோ மீட்டர் தூரத்திற்கு 40 நிமிடங்களுக்கு மேலாக காலதாமதம் ஏற்படுகிறது. போக்குவரத்து அடர்வு இருக்கிற காரணத்தினால், வாகனங்கள் வேகமாகச் செல்லக்கூடிய வகையில், ஆடுதுறையிலிருந்து கும்பகோணத்திற்கு காவேரி ஆற்றங்கரை ஓரமாகச் செல்கிற ஒரு வழிப் பாதையை இருவழிப் பயணம் செய்யக்கூடிய சாலையாக மாற்றி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில், ஆடுதுறையிலிருந்து கும்பகோணத்திற்கு காவேரி ஆற்றங்கரையோரம் நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக இருவழிச் சாலை அமைத்துத் தரப்படுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

[2016 ஜனவரி 22

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆடுதுறையிலிருந்து கும்பகோணம் வரை உள்ள சாலையை அகலப்படுத்த வேண்டுமென்று இங்கே வினா எழுப்பி இருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மாவினுடைய அரசு இந்த 5 ஆண்டு காலங்களில் 7,929.57 கிலோ மீட்டர் சாலைகளை அகலப்படுத்தியிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சாலையிலே செல்கின்ற வாகனப் போக்குவரத்துச் செறிவின் அடிப்படையில்தான் சாலைகள் அகலப்படுத்தப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற ஆடுதுறையிலிருந்து கும்பகோணம் செல்கின்ற சாலையின் வாகனச் செறிவை ஆய்வு செய்து, அங்கே அதிகமான வாகனச் செறிவு இருக்கும்பட்சத்தில், சாலையை அகலப்படுத்துவதற்கு நிதி நிலைமைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசைப் பொறுத்தவரையிலே, பட்டுக்கோட்டை மக்களுடைய நீண்டகால கோரிக்கையான புறவழிச் சாலைத் திட்டத்திற்கு 22.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு டெண்டரும் விடப்பட்டு, பணிகள் துவங்க இருந்த நேரத்தில், தனியார் ஒருவர் ஏதோ ஒரு காரணத்திற்காக தடையுத்தரவு கேட்டு நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கக்கூடிய காரணத்தினாலே பணிகள் சற்று காலதாமதமாகும் என்று தெரிவிப்பதாகத் தெரிகிறது. ஒருவேளை அப்படி இருந்தால், நீதிமன்ற நடவடிக்கையில் நமது அரசு கவனம் செலுத்தி, பணிகள் தடைபடாத அளவிற்கு நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.



2016 ஜனவரி 22]

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியான பட்டுக்கோட்டையில் புறவழிச் சாலை அமைக்கும் பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டு துவக்க நிலையிலே இருக்கின்றன. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனியார் ஒருவர் அதற்கு Stay வாங்குவதற்காக நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். நீதிமன்றத்திலே உரிய தீர்வு காணவும், விரைவாக சாலைப் பணிகளை மேற்கொள்ளவும் அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. தன்சிங் அவர்கள்.

**திரு. ப. தன்சிங்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் நித்தம் நித்தம் வணங்குகின்ற மனிதப் புனித தெய்வம் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய புனித ஆட்சியில், பல்லாவரம் பகுதியில் ஜன நெருக்கடியை சமாளிக்க 82 கோடி ரூபாயில் மேம்பாலம் அமைத்துத் தந்ததற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே பகுதியில் ஒரு சுரங்கப் பாதை இருக்கிறது. அது 70 அடி ஆழமாக உள்ளது. ஜன நடமாட்டம் அதிகமாக இருப்பதால், நகரும் படிக்கட்டு அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுரங்கப் பாதை வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து அங்கே சுரங்கப் பாதை அமைப்பதற்கான வாய்ப்புகள் இருந்தால், சுரங்கப் பாதை அமைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2016 ஜனவரி 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் அரசரடி-காளவாசல், கோரிப்பாளையம், சிந்தாமணி சாலை, அண்ணா சிலையிலிருந்து பெரியார் பேருந்து நிலையம் வரையிலும் பறக்கும் பாலம் என நான்கு பாலங்கள் 2012 ஆம் ஆண்டிலேயே தமிழக முதலமைச்சரால் அறிவிக்கப்பட்டன. இதுகுறித்து ஏற்கெனவே சபையில் பலமுறை பேசியிருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கும், அதேபோல மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு சென்றிருக்கிறேன். இதுவரையிலும் இந்தப் பணிகள் துவங்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எப்போது பணிகள் துவங்கப்படும் என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசரடி-காளவாசல் சந்திப்பிலே உயர்மட்டப் பாலம் வேண்டுமென்றும் மேலும் பல்வேறு இடங்களிலே பாலப் பணி எந்த அளவிலே இருக்கிறதென்றும் கேட்டிருக்கின்றார்கள். அரசரடி-காளவாசல் சந்திப்பிலே உயர்மட்டப் பாலம் கட்டுவதைப் பொறுத்தவரைக்கும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கின்ற நிலையிலே இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல பெரியார் பேருந்து நிலையப் பகுதியிலும் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை சுற்றுச் சாலை, மதுரை-திருச்சி சாலை மற்றும் மதுரை-நத்தம் சாலை இணையும் இடத்தில் மீனாட்சி மிஷன் மருத்துவமனைப் பிரிவிலிருந்து கப்பலூர் நான்கு வழிச் சாலை N.H. 7 இணைகின்ற 27.20 கிலோ மீட்டர் சாலைகளை, நான்கு வழிச் சாலைகளாக அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் இப்பொழுது டெண்டர் விடப்பட்டிருக்கின்றது. டெண்டர் விரைவிலே இறுதி செய்யப்பட்டு, அந்தப் பணிகளும் தொடங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2016 ஜனவரி 22]

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகின்றேன்.

எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட, சோழவந்தான் இரயில்வே மேம்பாலம் கட்ட நில ஆர்ஜிதம் செய்யும் வேலைகள் முடிந்த நிலையில், அந்தப் பால வேலைகளோடு, கொளிஞ்சிப்பட்டி, கோட்டைமேடு, தண்டலை, பம்மம்பட்டி, நாச்சிக்குளம் ஆகிய சாலைகளையும் புதுப்பித்து, அகலப்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சோழவந்தான் பகுதியிலே பாலம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் ஒவ்வோர் ஆண்டும் தேவையான எண்ணிக்கையில் பாலங்களைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய 5 ஆண்டுகால பொற்கால ஆட்சியில் கிட்டத்தட்ட 67 இரயில்வே பாலங்களுக்கு ஆணையிடப்பட்டு, 52 இரயில்வே பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தற்போது 9 பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, ஒவ்வோர் ஆண்டும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் உயர்மட்டப் பாலங்கள் கட்டுவதற்கு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[2016 ஜனவரி 22

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற பாலத்தை ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**19—**

## அங்கன்வாடி மையம்

***42077—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், தளபதிசமுத்திரம் ஊராட்சி, கீழசண்முகபுரத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், தளபதிசமுத்திரம் ஊராட்சி, கீழசண்முகபுரம் கிராமத்திலுள்ள பயனாளிகள் அனைவரும் அருகிலுள்ள மேட்டுகாலனியில் இயங்கிவரும் முதன்மை அங்கன்வாடி மையத்தில் பயனடைந்து வருவதால், கீழசண்முகபுரம் கிராமத்தில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்கும் தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருமழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சிறிய வணிகர்களின் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்த இன்றையதினம்



2016 ஜனவரி 22]

அம்மா சிறு வணிகர் கடன் உதவித் திட்டம் என்ற திட்டத்தின் மூலமாக மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் நகரக் கூட்டுறவு வங்கியின் மூலமாக 5 ஆயிரம் ரூபாய் வரை வட்டியில்லாக் கடன் உதவி; சிறு வணிகர்களுக்கு உதவும் வகையில் 11 சதவிகித வட்டியை தமிழக அரசே ஏற்கும் என்ற அறிவிப்பு; பூக்கள், பழங்கள், காய்கறிகள், உணவுப் பொருட்கள் போன்றவற்றை விற்கும் தெருவோர சிறு வணிகர்கள், தள்ளுவண்டி வியாபாரிகள், பெட்டிக் கடை நடத்துவோர் இத்திட்டத்தின்மூலம் பயன்பெறுதல்; எளிய தவணையில் வாரம் ரூ.200/- வீதம் 25 வாரங்களில் திரும்பச் செலுத்தும் வசதித் திட்டம்; குறித்த காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தும் சிறிய வணிகர்களுக்கு 4 சதவிகித குறைந்த வட்டியில் மீண்டும் கடன் உதவி பெறும் வசதி; மேலும், இத்திட்டத்திற்காக 500 இடங்களில் சிறப்பு முகாம்களை ஏற்பாடு செய்து, வணிகர்களின் துயர் துடைத்து, தமிழக வணிகர்களின் வாழ்வில் ஒளியேற்றிய தாயே! தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கை சிறப்பான முறையில் வழிநடத்தி, தமிழக மக்களின் இதயங்களில் நீங்கா இடத்தில் இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, தமிழகத்தில் உள்ள என்னைப் போன்ற, ஒட்டுமொத்த வணிகர்களின் சார்பில் கோடானு கோடி நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், தளபதிசமுத்திரம் ஊராட்சியில் உள்ள கீழசண்முகபுரம் மற்றும் அதன் அருகில் உள்ள வேப்பங்குளம் ஆகிய இரு கிராமங்களில் 30 குழந்தைகள் இருக்கிறார்கள். இங்குள்ள அங்கன்வாடி மையம் விவசாய சங்கக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அதனால் புதிய அங்கன்வாடி மையத்தை கீழசண்முகபுரத்தில் கட்டித் தர மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கீழசண்முகபுரம் கிராமத்தில் அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருந்தார். இப்பொழுதுள்ள கணக்குப்படி அங்குள்ள மக்கள்தொகை 179. இப்பொழுது 6 குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

வேறு பகுதியைச் சுட்டிக்காட்டுகிறார் என்று கருதுகிறேன். அந்தப் பகுதியிலே 30 குழந்தைகள் இருப்பதாக அவர் குறிப்பிடுகிறார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அதிகமாக குழந்தைகள் வரத்து இருப்பின், தேவைக்கேற்ப புதிய அங்கன்வாடி மையம் கட்டிக் கொள்ளலாம் என்ற உத்தரவை தந்திருக்கிறார்கள். அதனடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்தப் பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

**திரு. ஆ. நாராயணன்:** இந்த வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதியின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**20—**

## கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***51071—திருமதி செல்வி ராமஜெயம்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதியில் மகளிருக்கென ஒரு தனி கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தற்போது புதிதாக மகளிர் கல்லூரி துவக்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசை நாடி மக்களெனும் அக்கால வழக்கத்தை அடியோடு மாற்றி, மக்களை நாடி அரசு என்று பொற்காலம் படைத்திட்ட புனிதத் தாயின் அரசின் (மேசையைத் தட்டும் ஒலி) பொன்மனத்துப் பெருமை, அதுதான் 'அம்மா அழைப்பு மையம்', அது விஞ்ஞானப் புதுமை. பசி போக்க அரிசி தந்து, படிப்புக்கு மடிக் கணினி தந்து, பாமரருக்குப் பசுவும், கன்றும் தந்து, பசுமை வீடுகள் தந்து, இப்படி அனைத்தையும் அள்ளித் தருகின்ற அம்மா அரசின் அபாரத் திறமை. அம்மா, நாடுபோற்றும் பொன்மனத் தலைவியே! புரட்சிகளைப் படைக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்திலுள்ள 9 சட்டமன்றத் தொகுதிகளில், மக்கள்தொகை அதிகம் கொண்ட பெரிய தொகுதி, புவனகிரி தொகுதியாகும். இதில் 3 பேரூராட்சிகளும், 4 ஊராட்சி ஒன்றியங்களும் அடங்கியுள்ளன. இத்தொகுதி முற்றிலும் விவசாயம் சார்ந்த கிராமப் பகுதியாக உள்ளது. இங்குள்ள மாணவ, மாணவிகள் தங்களது கல்லூரிப் படிப்பைத் தொடங்குவதற்கு கல்லூரி வசதியில்லாமல் இருப்பதால், கடலூர், விருத்தாசலம், சிதம்பரம் போன்ற இடங்களுக்குச் செல்ல வேண்டியுள்ளது. இவ்வாறு வெளியில் சென்று படிப்பதற்கு வசதியில்லாத பெண் பிள்ளைகளின் கல்வியைப் பன்னிரெண்டாம் வகுப்பில், பாதியில் நிறுத்துகின்ற நிலை உள்ளது. மேலும், கடலூர் மாவட்டத்தில் தனியார் மகளிர் கல்லூரி மட்டும்தான் உள்ளது. அரசு கலைக் கல்லூரி இல்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, பெண் கல்வியை ஊக்குவிக்கும் விதமாக பல நல்ல திட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகிறது. எனவே, மாண்புமிகு

[2016 ஜனவரி 22

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில், கம்மாபுரத்தை மையமாகக் கொண்டு ஓர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தர முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், 77 அரசு கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. 148 அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. 490 சுயநிதிக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. 37 பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டிலே மாண்புமிகு அம்மாவினுடைய அரசில் இன்றைக்கு 752 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் என மொத்தம் 2,542 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. நாட்டிலேயே அதிகமான எண்ணிக்கையில் கல்லூரிகளைக் கொண்ட மாநிலம், தமிழ்நாடு என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2011 முதல் 2015 வரையிலான ஆட்சியில், இதுவரையில் இல்லாத அளவிற்கு 54 கல்லூரிகளை வழங்கி, தமிழகத்தில் உயர் கல்வித் துறையை முன்மாதிரித் துறையாக மாற்றிய பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்கள் பகுதியில் மகளிர் கல்லூரி வேண்டும் என்று இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் தொடங்கப்பட்ட 54 கல்லூரிகளில் இதுவரை 2 கல்லூரிகள் மகளிருக்கென தொடங்கப்பட்டிருக்கின்றன. கடலூர் மாவட்டத்திலே, திட்டக்குடியில் ஒரு மகளிர் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது. தருமபுரி மாவட்டத்திலிருக்கக்கூடிய காரிமங்கலம் என்ற இடத்தில் ஒரு மகளிர் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது. அந்தவகையில், மகளிருக்கு



2016 ஜனவரி 22]

முக்கியத்துவம் கொடுக்கிற அம்மாவினுடைய அரசு, உங்களுடைய தொகுதியினுடைய தேவைக்கேற்ப, மாணவிகளின் எண்ணிக்கைக்கேற்ப எதிர்காலத்தில் இதனைப் பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்மாபுரம் பகுதியில் அரசு கேட்கின்ற நிலமும் இருக்கிறது. பெண் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. அதனால், வருங்காலத்தில் அந்தப் பகுதியில் மகளிர் கல்லூரியை அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் முன்வரவேண்டுமென தங்கள் வாயிலாக மீண்டும் வலியுறுத்தி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் பகுதியில் அவசியமாக மகளிர் கல்லூரி துவக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மகளிருக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில், பன்னாட்டு மையம் ஒன்றை ரூ.5 கோடி மதிப்பீட்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் நிறுவியுள்ளார்கள். அதோடுமட்டுமல்லாமல், பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிற வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு வகைகளில் நல்ல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இன்றைக்கு பல்வேறு துறைகளின் சார்பாக பல்வேறு வசதிகளை மகளிருக்கென உருவாக்கிக் கொடுக்கிற அரசு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2016 ஜனவரி 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரி மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் கௌரவ பேராசிரியர்கள் ஆயிரம் பேர் பணியாற்றி வருகிறார்கள். இதர பேராசிரியர்களைப் போலவே கல்வித் தகுதி மற்றும் அனைத்துத் தகுதிகளையும் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இந்த அரசு சம்பளத்தை உயர்த்தி வழங்கியிருக்கிறது. இருந்தாலும், இவர்களைப் படிப்படியாக பணி நிரந்தரம் செய்யவோ அல்லது அதுவரையில், விலைவாசிக்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு மீண்டும் ஊதியத்தை உயர்த்தித் தரவோ அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரிகளில் மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் காலிப் பணியிடங்கள் ஏற்படுகிறபோது, அவை தேர்வு வாரியத்தின்மூலமாக நிரப்பப்பட்டு வருகின்றன. அதற்கு முன்பாக, காலிப் பணியிடங்கள் ஏற்படுகிறபோது, மாணவர்களின் கல்வி பாதிக்காதவண்ணம் அங்கே கௌரவ பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டு வந்தார்கள். முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், கௌரவ பேராசிரியர்களுக்கு ரூ.6,000/- மட்டுமே சம்பளமாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களுடைய நிலையைக் கருதி, ரூ.10,000/- ஆக சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே, அவர்களுக்குக் கூடுதலாக சம்பளம் வழங்க வேண்டும் அல்லது அவர்களுக்கு நிரந்தரப் பணி கொடுக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கென்று இருக்கக்கூடிய ஆசிரியர் தேர்வாணையத்தின் மூலமாக ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.



2016 ஜனவரி 22]

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘மக்களால் நான், மக்களுக்காக நான்’ என்கின்ற தாரக மந்திரத்தோடு செயல்படக்கூடிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். இந்தியாவில் உயர் கல்வி பெறுபவர்களுடைய சதவிகிதம் 23.6 ஆகும். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய சிந்தனையினால், கல்வியால் மட்டும்தான் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும், இளைஞர்களை நல்வழிப்படுத்த முடியும் என்கின்ற நோக்கத்தோடு உயர் கல்விக்கும், பள்ளிக் கல்விக்கும் முக்கியத்துவம் அளித்து, இன்றைக்கு இந்தியாவில் எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்கு உயர் கல்வி பெறுபவர்களுடைய சதவிகிதம் 44.8 ஆக இருக்கிறது. ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கு இதுவே ஓர் உதாரணம் என்றுகூட சொல்லலாம். அந்த வகையில், இன்னும் ஒரு படி மேலே சொல்ல வேண்டுமென்று சொன்னால், வசதி படைத்தவர்கள் மட்டும்தான் வெளிநாட்டுக்குச் சென்று படிக்க முடியும் என்கின்ற ஒரு சூழ்நிலையை மாற்றி, சாதாரண, சாமானிய, ஏழை மாணவர்கள் எல்லாம் வெளிநாட்டிற்குச் சென்று படிக்கக்கூடிய வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் கட்சியை ஆரம்பித்த காலத்திலிருந்து அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட மலைக் கிராமங்களில் இருக்கக்கூடிய மக்களுக்குத் தெரிந்த ஒரே சின்னம் இரட்டை இலைச் சின்னம்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட மக்கள் பயன்பெறுகின்ற வகையில், அரசு கலைக் கல்லூரியை அந்தப் பகுதியில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு அமைகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசினுடைய ஐந்தாண்டு ஆட்சிக் காலத்தில், இதுவரையில் இல்லாத அளவிற்கு, 54 கல்லூரிகளை உருவாக்கிய பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

[2016 ஜனவரி 22

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 39 கல்லூரிகள் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டிருக்கின்றன. பொறியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அம்மா அவர்கள் 4 கல்லூரிகளை வழங்கியிருக்கிறார்கள். பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், 11 கல்லூரிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய தொகுதியில் ஒரு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். உங்களுடைய மாவட்டத்திற்கு ஏற்கெனவே 3 கல்லூரிகளை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். 2 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளையும், 1 பலவகை தொழில்நுட்பக் கல்லூரியையும் வழங்கியிருக்கின்றார்கள். மாணவர்களுடைய சதவிகிதத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். 2011-ல், இந்தியாவில் உயர் கல்வி பெறுவோருடைய எண்ணிக்கை 15 சதவிகிதமாக இருந்தது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், அது 18 சதவிகிதமாக இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் உயர் கல்விக்குத் தருகின்ற முக்கியத்துவத்தின் அடிப்படையில், இன்றைக்கு இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்தில் 44.8 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையிலும், வெகுதொலைவில் உள்ள மாணவர்கள் எளிய முறையில் உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடும் மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தில் எந்தெந்த இடங்களிலெல்லாம் கல்லூரிகள் இல்லையோ, அங்கெல்லாம் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை துவக்கி வருகின்றார்கள். தமிழகத்திலே உள்ள 32 மாவட்டங்களில், ஈரோடு, தேனி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இதுவரை கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லாத நிலை இருந்தது. ஆனால், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், ஈரோடு, தேனி, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களுக்கும் கூடுதலாக 3 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை வழங்கி, தமிழகத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லாத மாவட்டமே



2016 ஜனவரி 22]

இல்லையென்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையில், உங்களுடைய கோரிக்கையையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் 2, 3, 4 என்று 234-ஐயும் மகிழ்ச்சியோடு சொல்லிக் கொண்டிருப்பதனால், நானும், 2-ல் துவங்கி 4-ல் முடிவதனால் மக்கள் நலக் கூட்டணியே 234 தொகுதிகளிலும் வெற்றி பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர் கல்வியில் நிறைய அறிவியல் பாடங்கள், புதிய பாடங்கள் அரசுக் கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அடுத்து, கணிதம். இந்த இரண்டு பாடப் பிரிவுகளுக்கும் ஆசிரியர் இல்லையென்றால், மாற்று ஏற்பாடு எதுவுமே செய்ய இயலாது. இந்தக் காலங்களில் ஆசிரியர்கள் நியமனம் என்பது போதிய அளவில் இல்லை. ஆகவே, கணிதம், அறிவியல் பாடங்களுக்கான ஆசிரியர்கள் நியமனத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், TET தேர்வு எழுதிய 16,000 பேர் 90 மதிப்பெண்களுக்குமேல் எடுத்து வெற்றி பெற்று, சான்றிதழ் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு பணியிடம் இன்னமும் வழங்கப்படவில்லை. அதுகுறித்து அரசு என்ன முடிவு செய்திருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது 2016-ன் மிகப் பெரிய ஜோக் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உயர் கல்வித் துறையில் சாதனை படைத்து, இந்தியாவிலேயே உயர் கல்வித் துறையை முதன்மைத்

*துறையாக மாற்றிய பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையிலே, நடைபெறவிருக்கின்ற 2016 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலும் சாதனை படைத்து, 234-க்கு 234-ம் தருகின்ற ஒரே தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிதாகத் தொடங்கப்பட்ட கணிதப் பாடப் பிரிவிற்கு ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுமூலம் புதிதாக ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்காக தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த வகையில், அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணி முடிவடைந்தவுடன், ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர் தேர்வு வாரியம், TET பற்றி இங்கே சொல்லியிருக்கின்றார்; அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**21—**

## புதிய கட்டடம்

***57705—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குளச்சல் தொகுதி, ரீத்தாபுரம் பேரூராட்சி, ரீத்தாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*





*கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதியிலுள்ள ரீத்தாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம், 1978 ஆம் ஆண்டு முதல் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றது. தற்போது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்மூலம் ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்பட்டு, கட்டடப் பணி நிறைவு பெற்றுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வளர்ச்சியடைந்த ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குக் கட்டடம் கட்டித் தருவதற்கு நான் பல்வேறு முறை கோரிக்கை வைத்தேன். ஆனால், கட்டடம் கட்டித் தராத காரணத்தால், என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.5 இலட்சத்தை நானே ஒதுக்கீடு செய்து அந்தக் கட்டடப் பணி முடிவடைந்திருக்கிறது. 3,800 உறுப்பினர்களைக் கொண்ட அந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில், 1991 ஆம் ஆண்டு ரூ.36 இலட்சம் கையாடல் செய்யப்பட்டதால் பின்னடைவு ஏற்பட்டது. இப்போது மீண்டும் அது வளர்ந்து கொண்டிருக்கக்கூடிய நிலையில் இருக்கின்றது. வட்டித் தொகையோடு சேர்த்து 61 இலட்சம் ரூபாய் வருகிறது. வட்டியைத் தள்ளுபடி செய்து, அசலாக இருக்கக்கூடிய ரூபாய் 36 இலட்சத்தை சரி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? அவ்வாறு செய்தால், அந்தக் கூட்டுறவுச் சங்கம் மேலும் வளர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-35*

*மேலும், ரீத்தாபுரம் பேரூராட்சியிலே 40 ஆண்டுக் காலமாக இயங்கிக் கொண்டிருக்கிற பனைவிளை ஒய்.285 கூட்டுறவுப் பண்டகசாலை, 1,428 உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது. அங்கே விநியோகப் பொருட்களைச் சேர்த்து வைப்பதற்கான இடம் மற்றும் அலுவலகம் மிகப் பழமை வாய்ந்ததாக இருக்கிறது.*

[2016 ஜனவரி 22

அந்த இடத்திலே புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கு அரசு இடமும் இல்லை. ஆகவே, அந்தக் கடன் சங்கத்தினுடைய வளர்ச்சிக்காக புதிய இடத்தைத் தேர்வு செய்தோ அல்லது அதற்கு அருகில் இருக்கக்கூடிய அரசு இடத்தைத் தேர்வு செய்தோ புதிய கட்டடத்தைக் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொந்த நிதியிலிருந்து கொடுத்ததாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் உங்களுடைய தொகுதியிலே இதுபோன்ற பணிகளை, அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகத்தான் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை அதிகப்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். இப்பணிக்காக தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் கொடுத்திருக்கிறார். ஆனால், அவர் சொந்த நிதியிலிருந்து கொடுத்த மாதிரி சொல்கிறார். இன்னொன்று, அந்தச் சங்கத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தச் சங்கம் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வந்தது; இப்போது cumulative loss-ல் இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் சீரிய நடவடிக்கை எடுத்த பிறகுதான், கிட்டத்தட்ட 1963-லே தொடங்கப்பட்ட இந்தக் கூட்டுறவுச் சங்கமானது, இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அற்புதமான ஆட்சியில் கூட்டுறவுத் துறை பொற்காலத்தைக் கண்டிருக்கின்ற காலத்தில்தான், 2012-2013, 2013-2014, 2014-2015 ஆகிய மூன்று ஆண்டுகளில்தான் ஏறத்தாழ இலாபத்தை ஈட்டியிருக்கிறது. அப்படியும் கூட, 82,50,000/-ரூபாய் இன்னும் cumulative loss-ல்தான் இருக்கிறது.

இன்னொரு கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார், அந்தச் சங்கத்திலே கையாடல் நடந்திருக்கிறது என்று. கையாடல் நடந்தது 1996-1997 ஆம் ஆண்டில்; எங்களுடைய ஆட்சியில் அல்ல. முந்தைய தி.மு.க. ஆட்சியிலே, அந்தக் காலத்திலேயே நடந்தது. அன்றைக்கு இருந்த நிருவாகிகள் கையாடலைச் செய்திருக்கிறார்கள்.



2016 ஜனவரி 22]

அதன்காரணமாக பல சங்க உறுப்பினர்கள் மற்றும் நிருவாகிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2003 ஆம் ஆண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் அலுவலக நடவடிக்கை எடுக்கப்பட்டது. வழக்கு தொடரப்பட்டு, வழக்கு நிலுவையில் உள்ளது. மேலும், அந்தச் சங்கத்தினுடைய செயலாளர்மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவரிடத்திலே சொத்தும் எந்தவிதமான பணமும் இல்லாத சூழ்நிலையில், மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கை எடுக்கலாமென்று ஆலோசித்து, அன்றைக்கிருந்த தலைவர்கள் திரு. எஸ்.வி. அந்தோணி முத்து, இராகவன் போன்றவர்கள்மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இன்னொரு சங்கத்திற்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அந்தச் சங்கமும் நலிவடைந்த நிலையில் இருக்கிறது. அதற்கும் மாவட்ட ஊராட்சி வளர்ச்சி நிதியிலிருந்தோ, மாவட்ட ஆட்சித் தலைவருடைய மேம்பாட்டு நிதியிலிருந்தோ கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிகளை சற்று தளர்த்தி, கூடுதலான பகுதிநேரக் கடைகளைத் துவக்குவதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், 150 கார்டுகள் இருந்தால்தான் பகுதிநேரக் கடைகள் அமைக்கப்படுமென்ற விதி இருக்கிறது. பல குக்கிராமங்களில் 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் தூரத்தில் கடைகள் இருந்தாலும், 100 கார்டுகள் வரை இருந்தாலும் பகுதிநேரக் கடைகளை வழங்க முடியாத நிலை நீடிக்கிறது. எனவே, 100 கார்டுகள் இருக்கக்கூடிய இடங்களுக்கும் பகுதிநேரக் கடைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது கூட்டுறவு அமைப்பிலுள்ள

[2016 ஜனவரி 22

வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்ற பகுதிநேரக் கடைகளை மூடிவிடுவோம், சொந்தக் கட்டடங்கள் இருந்தால்தான் அனுமதிப்போம் என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே இயங்கும் பகுதிநேர நியாய விலைக் கடைகளைக்கூட இப்போது மூடக்கூடிய ஓர் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. எனவே, சொந்தக் கட்டடங்கள் இல்லாத இடங்களில், பழைய முறையிலேயே, வாடகைக் கட்டடங்களில் நியாய விலைக் கடைகள் இயங்குவதற்கான அனுமதியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுதிநேர நியாய விலைக் கடைகளை அமைக்க சட்டத்தின் விதிகளைத் திருத்த வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். ஏற்கெனவே உள்ள விதிப்படி, ஒரு நியாய விலைக் கடை அமைந்துள்ள பகுதியில் 2 பகுதிநேர நியாய விலைக் கடைகளைத் திறக்கலாம். அதற்கும் மேலாக, மக்களுடைய தேவையைப் பொறுத்து, மூன்றாவது கடையையும் திறக்கலாம் என்றும் இருக்கிறது. தாய்க் கடையில் பணியாளர்களாக யார் இருக்கிறார்களோ, அவர்கள்தான் அந்த பகுதிநேரக் கடைகளையும் பார்க்க வேண்டியிருக்கிறது.

இரண்டாவது, காலவிரயம் ஏற்படுகிறது. தாய்க் கடையிலிருக்கும் பொருட்களை, பகுதிநேர நியாய விலைக் கடைகளுக்குக் கொண்டு போக வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வந்த பிறகு, இன்றைக்கு 150 கார்டுகள், 500 கார்டுகள் இருந்தாலும் பகுதிநேரக் கடைகளைத் திறக்க வேண்டுமென கோரிக்கை வருகின்றது. கிராமப்புறங்களில், சில நேரங்களில் ஜாதிப் பிரச்சினை, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை, இன்னும் சில விரும்பத்தகாத நிகழ்வுகள் ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட நிகழ்வுகளில், மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கூடுதல் அதிகாரங்கள் கொடுக்கப்படுகின்றன. அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவரே அந்தப் பகுதி மக்களின் தேவைகளை அறிந்து, பகுதிநேர நியாய விலைக் கடைகளைத் திறக்கலாம் என்ற கருத்துருவும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மூன்று கடைகள் திறந்தால் இரண்டு நாட்களுக்குத்தான் கடைகளைத் திறக்க முடியும். (குறுக்கீடு) அதாவது, ஏற்கெனவே 80 கார்டுகள் இருந்தாலும், 100 கார்டுகள் இருந்தாலும் கொடுக்கலாம்; கொடுக்கக்கூடாது என்று சொல்லவில்லை. நான்கு, ஐந்து கிலோ மீட்டர் தூரம் சென்று பொருட்களை வாங்க வேண்டியிருக்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், இராமநாதபுரம் பகுதி குறித்து நாளிதழில் வந்த செய்தியைப் பார்த்தார்கள். இரண்டு அல்லது மூன்று கிலோ மீட்டர் நடந்து சென்று அவர்கள் அத்தியாவசியப் பொருட்களை வாங்கி வருகிறார்கள் என்று அறிந்தவுடன், உடனடியாக எங்கள் துறையின் அதிகாரிகளிடம் தெரிவித்து, அதுகுறித்து என்னவென்று கேட்கச் சொன்னார்கள். உடனடியாக அந்தக் குறை களையப்பட்டது. ஏறத்தாழ மூன்று கிலோ மீட்டர் தூரம் தலையில் சுமந்து கொண்டு அத்தியாவசியப் பொருட்களை வாங்கிச் செல்கிறார்கள் என்று சொன்னவுடன், உடனடியாக அந்தப் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கப்பட்டது.



2016 ஜனவரி 22]

இன்னொரு குறையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், சில நியாய விலைக் கடைகள் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன என்று. ஏற்கெனவே அந்தச் சங்கங்களுக்கு மிகப் பெரிய அளவில் பளு இருக்கின்றது. நியாய விலைக் கடைப் பொருட்களை விற்பதால் Margin amount குறைவாக உள்ளது. எனவே, வாடகைக் கட்டடங்களில் கடைகளைத் திறப்பது என்பது அந்தச் சங்கங்களுக்கு மேலும் பளுவாக அமையும். எனவே, பகுதிநேரக் கடைகளைக் கேட்கும்போது, அத்தியாவசியப் பொருட்களை அவர்களே அங்கு எடுத்துச் செல்ல வேண்டும். அங்கு ஊராட்சி முகமைக்குச் சொந்தமான கட்டடங்களோ அல்லது தனியார் கட்டடங்களோ இருக்க வேண்டும். கட்டடங்கள் இருந்தால்தான், மழை பெய்தால் அத்தியாவசியப் பொருட்கள் நனையாமல் இருக்கும்; அதற்காகத்தான் அந்தச் சட்டம் இருக்கிறது. அரசு கொடுக்கின்ற பொருள், மக்களுக்குத் தரமான பொருளாக சென்றடைய வேண்டும் என்ற அடிப்படையில்தான் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

[2016 ஜனவரி 22

**22—**

## பேருந்து வசதி

***47036—திரு. கே. உலகநாதன்:**

*மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருத்துறைப்பூண்டியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே திருத்துறைப்பூண்டி வழியாக நேரடியாக இராமேஸ்வரத்திற்குச் செல்கின்ற பேருந்துகள் இருக்கின்ற காரணத்தினால், இப்போதைக்கு புதிய பேருந்துகளை இயக்குவது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

**திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகரத்திலிருந்து இராமேஸ்வரம் செல்ல பேருந்துகள் இயக்க வேண்டுமென்று நான் கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அங்கே பேருந்துகள் செல்வதாகச் சொல்கிறார்கள். வேளாங்கண்ணியிலிருந்து வரக்கூடிய அந்தப் பேருந்துகள் கிழக்குக் கடற்கரைச் சாலையில் செல்கிற காரணத்தினாலே, திருத்துறைப்பூண்டியிலிருந்து செல்லக்கூடிய மக்கள் மிகவும் நெருக்கடிக்கு ஆளாகி இருக்கிறார்கள். குறிப்பாக, இராமேஸ்வரம் சென்று கடலில் குளித்தால் சிறப்பு என்று கடலில் குளிக்கச் செல்கிறார்கள். அங்கிருந்து அருகில் இருக்கக்கூடிய தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை போன்ற சுற்றுலாத் தலங்களுக்கும் செல்லும் வகையில், திருத்துறைப்பூண்டியிலிருந்து அரசு விரைவுப் பேருந்து இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள்*



2016 ஜனவரி 22]

*ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்திலிருந்து இராமேஸ்வரம் செல்கின்ற பேருந்துகள், சிதம்பரத்திலிருந்து இராமேஸ்வரம் செல்கின்ற பேருந்துகள் என மொத்தம் ஐந்து பேருந்துகள் திருத்துறைப்பூண்டி வழியாகச் செல்கின்றன. கணக்கு எடுக்கின்றபோது 6 மாத காலத்தில் திருத்துறைப்பூண்டியிலிருந்து தினந்தோறும் ஒன்று அல்லது இரண்டு பயணிகள்தான் செல்கின்றனர். பயணிகளின் அடர்வு போதிய அளவு இல்லை என்ற காரணத்தினால்தான் சொன்னேனேயொழிய, தேவை இருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, பயணிகளின் அடர்வு இருந்தால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

*முற்பகல் 10-45*

**திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், களப்பால் ஊராட்சியை சுற்றியிருக்கக்கூடிய அக்கரைக்கோட்டகம், குறிச்சிமுனை மற்றும் முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த மருதபுரம், மாங்குடி, குலமாணிக்கம் போன்ற ஊராட்சிகளிலிருந்து பொதுமக்களும், வியாபாரிகளும் சென்னை செல்ல வேண்டுமென்றால், சுமார் 15 கி.மீ. தூரத்திலுள்ள மன்னார்குடிக்கோ, திருத்துறைப்பூண்டிக்கோ செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அங்கு இரயில் போக்குவரத்து கிடையாது. எனவே, பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளின் நலன் கருதி, களப்பாலிலிருந்து ஓர் அரசு விரைவுப் பேருந்து இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

[2016 ஜனவரி 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்து இயக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, சென்னைக்கு வரும் பேருந்துகளை திருத்துறைப்பூண்டி வழியாக இயக்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**23—**

## வணிக வரி அலுவலகக் கட்டடம்

***50358—திரு. து. முருகேசன்:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டிலுள்ள வணிக வரித் துறை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டில் வணிக வரித் துறை அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. செங்கல்பட்டு மற்றும் திருக்கழுக்குன்றம் ஆகிய இரண்டு இடங்களில் அமைந்துள்ள வணிக வரி அலுவலகங்களுக்காக 8,000 சதுர அடியில் தாலுகா அல்லது வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்திற்குட்பட்ட அரசு நிலம் அல்லது தாலுகா/வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தில் 4,000 முதல் 5,000 சதுர அடியில்



2016 ஜனவரி 22]

காலியிடம் இருக்குமாயின், அதனை வணிக வரித் துறைக்கு ஒதுக்குமாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. அவ்வாறு ஒதுக்கும்பட்சத்தில், அவ்விடத்தில் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கோ அல்லது காலியாக உள்ள அரசுக் கட்டடங்களில் இடம் ஒதுக்கும்பட்சத்தில், அவ்விடங்களில் வணிக வரி உதவி ஆணையர், செங்கல்பட்டு மற்றும் திருக்கழுக்குன்றம் ஆகிய வரி விதிப்பு வட்ட அலுவலகங்களைக் கட்டித் தரவோ உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**24—**

## குடிநீர் வசதி

***45543—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, நாய்க்கனேரிமலை ஏரியிலிருந்து ஆம்பூர் நகருக்கு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் 28-12-2015 அன்று துவக்கி வைக்கப்பட்ட வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்

வாயிலாக 1.20 இலட்சம் மக்கள்தொகை கொண்ட ஆம்பூர் நகருக்கு நாள் ஒன்றுக்கு 9.22 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், நாய்க்கனேரிமலை ஏரியிலிருந்து ஆம்பூர் நகருக்கு குடிநீர் வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆம்பூர் நகராட்சிக்கு, காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதேநேரத்தில் ஆம்பூரை ஒட்டியிருக்கக்கூடிய, ஆம்பூர் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியத்தைச் சேர்ந்த வெங்கடசமுத்திரம், கம்மகிருஷ்ணபள்ளி, கரும்பூர், மிட்டாளம், வடசேரி, குமாரமங்கலம், மலையம்பட்டு, தென்னம்பட்டு, கொல்லமங்கலம் போன்ற 17 பஞ்சாயத்துகளில் 1,000 அடி ஆழத்திற்கு ஆழ்துளைக் கிணறு போட்டால் மட்டுமே குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்கின்றது. ஏற்கெனவே நான் இதுகுறித்து இம்மன்றத்தில் கேள்வியாகவும் எழுப்பியுள்ளேன். மேற்கண்ட 17 பஞ்சாயத்துகளுக்கும் இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் இணைப்பு வழங்கப்படுமேயானால், ஏறத்தாழ 75 ஆயிரம் மக்கள் பயன் பெறுவார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆம்பூர் தொகுதிக்குட்பட்ட 17 பஞ்சாயத்துகளுக்கும் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் இணைப்பு வழங்க ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலுள்ள, வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944 ஊரகக் குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க மேட்டூர்





அணையின் கீழ்ப்புறம் சொக்கானூர் அருகே காவேரி ஆற்றின் நீரினை ஆதாரமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட திட்டம்தான் வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம். வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைப் பொறுத்தவரை, 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலைக் கருத்திற்கொண்டு, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், நிதியாதாரங்கள் எதுவும் இறுதி செய்யப்படாமலும், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்த நிறுவனம் தேர்வு செய்யப்படாமலும், பணியாணைகள் எதுவும் வழங்கப்படாமலும் 25-1-2011 அன்று அவசர கோலத்தில் அப்போதைய துணை முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. தமிழக மக்களின் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, வேலூர் மாவட்ட மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்கும்பொருட்டு, 1,295 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டத்திற்கு 30-12-2011 மற்றும் 5-3-2012 ஆகிய தேதிகளில் இரு கட்டங்களாகப் பணி ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் துவங்கப்பட்டன. இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் 28-12-2015 அன்று திறந்து வைக்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், ஆம்பூர் நகராட்சிக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் குடிநீர் வழங்க திட்டம் அறிவிக்கப்பட்டு, ஆம்பூர் நகராட்சியில் தற்போதைய மக்கள்தொகையான 1.20 இலட்சம் பேருக்கு நாளொன்றுக்கு 9.22 மில்லியன் லிட்டர் அளவிற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஆம்பூர் நகராட்சிப் பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளுக்கு நாளொன்றுக்கு 2 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆம்பூர் நகராட்சியில் 2042 ஆம் ஆண்டில் இருக்கக்கூடும் எனக் கருதும் மக்கள்தொகையான 1.93 இலட்சம் பேரின் உச்சகட்ட தேவையான 15.85 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் இந்தத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற அந்த ஊர்களுக்கும் சேர்த்துத்தான் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதேபோல், வேலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், நெடுஞ்சாலைத் துறையைப்

பொறுத்தவரையில், NHAI-யிடமிருந்து அனுமதி வராமல் உள்ளது. அந்த அனுமதி கிடைத்தால் வேலூர் ஊராட்சிக்குட்பட்ட ஒன்றியங்கள் மற்றும் ஆற்காடு ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளெல்லாம் கண்டிப்பாக சரி செய்யப்படும். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து ஊர்களுக்கும் சேர்த்துத்தான் முழுமையாக நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். ஆகவே, உறுப்பினர் கேட்ட அந்தக் கோரிக்கை கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. மாதனூர் ஒன்றியத்தைச் சேர்ந்த அகரம், அக்ரஹாரம், தோளப்பள்ளி, வளையாம்பட்டு, வேப்பம்குப்பம் போன்ற பகுதிகள் வழியாகத்தான் பைப் லைன் செல்கின்றது. ஆனால், இந்தக் கிராமங்களுக்கெல்லாம் அந்தக் குடிநீர் இணைப்பு வழங்கப்படாமல் இருக்கின்றது. மேலும், தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியிருக்கின்ற பல்வேறு ஊராட்சிகளுக்கு காவேரி கூட்டுக் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அதிக நேரம் மின்சாரம் வழங்கப்படவில்லை. ஒரு நாளைக்கு 2 அல்லது 3 மணி நேரம்தான் மின்சாரம் வழங்கப்படுகின்றது. ஆகவே, அந்தப் பஞ்சாயத்துகளுக்கு குறைந்தபட்சம் 6 மணி நேரமாவது மின்சாரம் வழங்கினால், அந்தக் கிராம மக்களுக்குத் தேவையான அளவிற்குக் குடிநீர் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அகரம், அக்ரஹாரம், தோளப்பள்ளி, வளையாம்பட்டு, வேப்பம்குப்பம் போன்ற விடுபட்ட பகுதிகளுக்கு அதாவது, பைப் லைன் செல்கின்ற அந்த ஊராட்சிகளுக்கும் குடிநீர் இணைப்பினை வழங்குவதோடு, மின் பிரச்சினையையும் தீர்த்து வைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*



**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு, மின் வெட்டே கிடையாது. அனைத்தும் சிறப்பான முறையில் இருந்து வருகிறது. மின்சாரம் கொடுக்க முடியாத இடங்களிலும் genset வைத்து மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, நீங்கள் சொல்லும் இடங்களில், நமது துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**25—**

## கால்நடை மருத்துவமனை

***59799—திரு. ஏ.ஏ. கருப்பசாமி:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், குட்டகம் ஊராட்சி, குட்டகத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், குட்டகம் ஊராட்சி, குட்டகத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். அரசு விதிகளின்படி, நேரடியாக கால்நடை மருத்துவமனையை அமைக்க முடியாது. முதலில் கால்நடை கிளை நிலையம் அமைக்கப்பட்டு,

[2016 ஜனவரி 22

அது மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டு, அதற்குப் பின்னர்தான் மருத்துவமனை அமைக்க முடியும். ஆனால், உறுப்பினர் கேட்டிருக்கின்ற அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-க்கும் அதிகமாக உள்ளதால், மாண்புமிகு அம்மா அவர்களது ஆணை பெற்று, அங்கு ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஏ. கருப்பசாமி அவர்கள்.

**திரு. ஏ.ஏ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6-வது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்க உள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவினாசி வட்டம், குட்டகத்தில் கால்நடைகள் அதிகமாக உள்ள காரணத்தினால் கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தருவேன் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் அந்தப் பகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**26—**

## ஜவுளிப் பூங்கா

***54755—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை ஒன்றியம், அம்மையார்குப்பத்தில் ஜவுளிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று கூறி, நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். 234 பெறுவோம் என்று சொல்கிற மக்கள் நலக் கூட்டணி, தேர்தல் வரையாவது நீடிக்குமா என்பதை இந்த நேரத்திலே கேட்க விரும்புகிறேன்.



2016 ஜனவரி 22]

முற்பகல் 10-55

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, அம்மையார்குப்பத்தில் தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை. எனினும், அப்பகுதியில் உள்ள தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயாயின், நடைமுறையில் உள்ள ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின்படி, இப்பகுதியில் தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்க ஜனாதிபதி திரு. ஆப்ரகாம் லிங்கன், அமெரிக்காவின் இன்னொரு ஜனாதிபதி திரு. ஜான் கென்னடி, கருப்பின மக்களின் தலைவர் திரு. மார்ட்டின் லூதர் கிங், இந்திய விடுதலையின் தந்தை திரு. மகாத்மா காந்தி, Pakistan Parliamentarian திரு. லியாகத் அலி, இலங்கை அதிபர் திருமதி பண்டார நாயக், இந்திய நாட்டின் பிரதமர், Iron Lady of India என்று கூறப்பட்ட திருமதி இந்திரா காந்தி அம்மையார், பங்களாதேஷ் அதிபர் திரு. முஜிபூர் ரஹ்மான், இந்திய நாட்டின் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி; இந்த மாபெரும் தலைவர்களெல்லாம் சுடப்பட்டார்கள்; இறந்துவிட்டார்கள். ஆனால், தமிழ்நாட்டில் 3 முறை தொடர்ந்து முதலமைச்சராக இருந்து, நல்லாட்சி செய்து, மக்கள் மனதில் மறைந்தும் மறையாமலும் வாழ்கின்ற மன்னாதி மன்னன், நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) எம்.ஆர். ராதா சுட்டார். ஆனால், தெய்வப் பிறவியான

[2016 ஜனவரி 22

எம்.ஜி.ஆர். அவர்கள் மட்டும்தான், அறம், சகோதரத்துவம், மனிதநேயம், மனிதாபிமானம், தான் செய்த தர்மம் இவற்றால் செத்துப் பிழைத்து, தமிழகத்தில் 3 முறை தொடர்ந்து முதலமைச்சராக இருந்து, நல்லாட்சி தந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அரசியலில் அவரது ஒரே வாரிசான மாண்புமிகு அம்மா அவர்கள், பகுத்தறிவு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அறம், சகோதரத்துவம், அமைதி, வளம், வளர்ச்சி, மனிதநேயம், மனிதாபிமானம் இவை அனைத்தையும் ஒருங்கே பெற்றுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் உள்ள ஏழையெளிய, ஆதரவற்ற, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் வறுமை, ஏழ்மை, இயலாமை முதலான துன்பமெனும் இருள் நீங்கி, இன்ப ஒளி காணவும், வாழ்வின் துயரம் நீங்கி, வளமான வாழ்வு காணவும், எண்ணிலா மக்கள் நலத் திட்டங்கள் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) 2011 சட்டமன்றத் தேர்தலில், மாண்புமிகு அம்மா அவர்கள் அளித்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி, 2016-ல் 234 தொகுதிகளிலும் மாண்புமிகு அம்மா அவர்களே வெற்றி பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) உலக அரசியல் வரலாற்றில் 234 தொகுதிகளிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் நின்றார், வென்றார் என்ற கின்னஸ் சாதனை படைப்பார். 2016-ல் பொன்மனச் செம்மல், மன்னாதி மன்னன், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவை உலகமே உற்றுப் பார்க்கும் வகையிலே சிறப்பாகக் கொண்டாடவும், இந்தியாவின் இணையில்லா மாநிலமாய், தமிழ் மண்ணைத் தலைநிமிரச் செய்திடவும், வருங்கால பாரதத்தை வல்லரசாய் வடிக்கும் செயலாற்றல்மிக்க கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதியிலே இருக்கின்ற மக்கள் விவசாயத்தையும், நெசவுத் தொழிலையும் மட்டும்தான் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு நெசவுத் தொழில்தான் பிரதான தொழில். ஆகவே, அந்த மக்களுடைய நெசவுத் தொழில் செழித்தோங்க, அங்கே ஜவுளிப் பூங்கா ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று அமைக்க வேண்டுமாய்க் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



2016 ஜனவரி 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி பகுதியிலே உள்ள நெசவாளப் பெருமக்களுக்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய திட்டங்களில் ஒன்றான விலையில்லா வேட்டி-சேலை வழங்கும் திட்டத்திலே தொடர்ச்சியாக வேலைவாய்ப்பு வழங்கப்படுகின்றது. அதைப்போல, மற்றொரு முக்கிய திட்டமான சீருடைகள் வழங்கும் திட்டத்திலும் நெசவாளர்களுக்கு அரசு சார்பாக வேலை வழங்கப்படுகின்றது. ஜவுளிப் பூங்கா என்பது அரசு ஏற்படுத்துவது அல்ல. தனியார் முன்வருவார்களேயானால், குறைந்தது 50 ஏக்கர் நிலம் வேண்டும்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** 40 சதவீத நிதியை தொழில் முனைவோர்கள் முதலீடு செய்ய முன்வர வேண்டும்; 25 தொழிற்கூடங்கள் அமைக்க வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் மத்திய அரசு 40 சதவீதமும், மாநில அரசு 9 சதவீதமும் நிதி வழங்கி, அந்தத் தொழிற்பூங்காவை அமைக்க முன்வரும். அந்த அடிப்படையில்தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஈரோடு, கரூர் போன்ற பகுதிகளிலே தொழிற்பூங்கா அமைப்பதற்கு உதவியாக இருந்து வருகிறது. அதோடு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 1-9-2015 அன்று இதே மன்றத்திலே விதி 110-ன்கீழ் அறிவித்த அறிவிப்பிலேயே, "ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்க முன்வரும் தொழில் முனைவோர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட 9 சதவீத நிதியுதவியோடு, ரூ.2 கோடியே 50 இலட்சம் வரை உட்கட்டமைப்பு வசதிகளுக்காக நிதி வழங்கப்படும்" என்று அறிவித்திருக்கின்றார்கள். அதேபோல, புதிய பதனிடு பூங்காக்களை உருவாக்குவதற்கு 25 சதவீத மானியம் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். தொழில் முனைவோர்கள் யாராவது சிறிய அளவிலே முன்வருவார்களேயானால், அவர்கள் அடையாளம் காணப்பட்டு, உரிய முறையில் அவர்களுக்கு

[2016 ஜனவரி 22

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**27—**

## வீட்டுமனைப் பட்டா

***47639—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, பொன்னமராவதி பேரூராட்சி, சத்தியா நகர், கொல்லங்காடு, தவாங்குண்டு, பாலமேடு வீதி, வடக்கு புதுவளவு, அடைக்கலங்காத்தான் கோயில் வீதி ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருமயம் தொகுதி, பொன்னமராவதி பேரூராட்சி, சத்தியா நகர், கொல்லங்காடு, தவாங்குண்டு, பாலமேடு வீதி, வடக்கு புதுவளவு, அடைக்கலங்காத்தான் கோயில் வீதி ஆகிய அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்கள் ஆட்சேபகரமான நீர்நிலைப் புறம்போக்கு நிலங்களில் குடியிருந்து வருவதாலும், நீர்நிலைப் புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கான தடை விதிக்கும் அரசாணைகள், மாண்புமிகு உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற ஆணைகள் அமலில் இருப்பதாலும், மேற்கண்ட இடங்களில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.



2016 ஜனவரி 22]

**திரு. பி.கே. வைரமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லார்க்கும், இயலார்க்கும் ஏற்றங்கள் தந்திடும் ஒப்பில்லா தியாகமே, எங்கள் அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) உழைப்பவரைத் தேடித் தேடி உயர்வளிக்கும் ஈரமே, எங்கள் அம்மா; கடல் ஏவிய அலையாயினும், கார்மேகம் ஏவிய மழையாயினும், காற்று வீசிய புயலாயினும், தாய் இருக்க பயமெதற்கு என்று தமிழினத்தைக் காத்து நிற்கும் தமிழர் குலச் சாமியே, எங்கள் அம்மா; கழகத்தை இமயத்து உச்சத்தில் நிறுத்திக் காத்திடும் கவசமாக, சித்திரையில் ஆறாம் முறையும் சிம்மாசனம் அமர்கின்ற வாகையே; (மேசையைத் தட்டும் ஒலி) வானளவு விரிந்த ஈகையே, எங்கள் அம்மா; நான் வணங்கும் தாயுருவத் தெய்வமே, தங்களின் பொற்பாதங்களில் என் வணக்க மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன் அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையில் வளர்ச்சி கண்டிட பல இலட்சம் மக்களுக்கும் பட்டா வழங்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சியில், திருமயம் தொகுதி, பொன்னமராவதி பேரூராட்சியில், சத்தியா நகர், கொல்லங்காடு, தவாங்குண்டு, பாலமேடு வீதி, வடக்கு புதுவளவு, அடைக்கலங்காத்தான் கோயில் வீதி ஆகிய இடங்களில் 30 ஆண்டுகளாக வீடு கட்டி வசித்து வருபவர்களுக்கு வகைமாற்றம் செய்து பட்டா வழங்க வேண்டும் என மாண்புமிகு அம்மா அவர்களையும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்களின் முன்னேற்றத்திற்காக, அடிப்படைத் தேவையான வசிப்பதற்கு இடம் வழங்குவதே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித அரசினுடைய நிலையான கொள்கையாகும். இந்தக் கொள்கையின் அடிப்படையிலே ஒப்படை செய்ய எங்கெங்கு நிலம் உள்ளதோ, அங்கு வீட்டுமனைகளை தகுதியுள்ள நபர்களுக்கு ஒப்படை செய்து மாண்புமிகு இதய தெய்வம்

[2016 ஜனவரி 22

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய மக்களுடைய பாதுகாப்பு அரணாக நலன் காத்து வருகின்றார்கள். அந்த வகையில் இந்த ஐந்து ஆண்டுகளில், ஒவ்வோர் ஆண்டிலும் மாண்புமிகுஇதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஓர் இலக்கை நிர்ணயித்து, இந்த இலக்கையும் மிஞ்சும் வகையில் பட்டாக்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

*2011 ஆம் ஆண்டில் 1 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1,21,000 பேருக்கும், 2012 ஆம் ஆண்டில் 1 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 1,31,000 பேருக்கும், 2013 ஆம் ஆண்டில் இரண்டு இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 2,17,000 பேருக்கும், 2014 ஆம் ஆண்டில் 3 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 3,81,000 பேருக்கும், 2014 ஆம் ஆண்டில் 3 இலட்சத்து 50,000 இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 31-12-2015 வரையில் 3,35,000 பேருக்கும், ஆக மொத்தம் இந்த ஐந்து ஆண்டுகளிலே 10½ இலட்சம் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, நிர்ணயிக்கப்பட்ட இலக்கையும் மிஞ்சி, சுமார் 12 இலட்சம் ஏழையெளியவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கியிருக்கிற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 30 ஆண்டுகாலமாக குடியிருந்து வருகிறவர்களுக்கு பட்டா வகைமாற்றம் செய்ய வேண்டுமென்று கூறினார். ஆட்சேபகரமான புறம்போக்கு இடங்களில், நீர் நிலைகள் உள்ள இடங்களில் பட்டா வகைமாற்றம் செய்ய முடியாது. ஆகவே, ஆட்சேபகரமான இடங்களில் வசிக்கும் மக்களுக்கு, மாற்று இடங்களை மாவட்ட நிருவாகம் சார்பில் அடையாளம் கண்டு, அனுமதி தருவார்களேயானால், மாவட்ட நிருவாகம் உரிய ஏற்பாடுகளைச் செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



2016 ஜனவரி 22]

**28—**

## மாவட்ட மைய நூலகம்

***49301—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் மாவட்ட மைய நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகரத்திலுள்ள கிளை நூலகம் முழுநேர நூலகமாக தற்போது செயல்பட்டு வருகின்றது. ஏற்கெனவே, தஞ்சாவூர் மாவட்ட தலைமையிடத்தில் மாவட்ட மைய நூலகம் சிறப்பாகச் செயல்பட்டு வருவதாலும், ஒரு மாவட்டத்திற்கு, ஒரு மாவட்ட நூலகம் மட்டுமே அமைக்க வழிவகை உள்ளதாலும், கும்பகோணத்தில் பிறிதொரு மாவட்ட மைய நூலகம் அமைப்பதற்கு வழிவகை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதியில் தமிழ்ச் சுவடிகளுக்கு நல் வடிவம் வழங்கிய நூலகச் சிற்பி திரு. உ.வே.சா. அவர்கள், உலகம் போற்றும் கணித மேதை திரு. இராமனுஜம் அவர்கள், இரட்டை நாக்கு, silver tongue படைத்த சீனிவாச சாஸ்திரி அவர்கள், திருபுறம்பியம் ஊராட்சியில் பிறந்த சரித்திர கல்வெட்டு ஆராய்ச்சியாளர் திரு. சதாசிவம் பண்டாரத்தார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்போடு அண்ணன் என்று அழைத்த சுயமரியாதைச் சுடர் திரு. கே.கே. நீலமேகம் போன்ற சான்றோர்கள் வாழ்ந்த குடந்தையில் சுமார் 150 ஆண்டுகளுக்கும் மேலாக பழமை பாராட்டும் W.Porter என்ற ஆங்கிலேயர் முதல்வராகப்

[2016 ஜனவரி 22

பணியாற்றிய தென் இந்திய Cambridge எனப்படும் குடந்தை கல்லூரி, W.Porter என்பவரால் திறக்கப்பட்டு, 150 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கிற நல்ல பள்ளிகளில் ஒன்றான நகர மேல்நிலைப் பள்ளி, ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்கும், நான் கல்வி பயின்ற சிறியமலர் உயர்நிலைப் பள்ளி உள்ளிட்ட பல பள்ளிகளும், 20-க்கும் மேற்பட்ட கல்லூரிகளும், மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் எதிர்காலம் திரு. ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் உரையாற்றிய குடந்தை சாஸ்த்ரா கல்லூரி, “எழுமின், விழிமின்” என்ற வாசகத்தைத் தந்த இளைஞர்களின் எழுச்சி நாயகனாக விளங்கும் சுவாமி விவேகானந்தர் வருகை தந்து உரையாற்றிய சிறப்புப் பெற்றது கும்பகோணம். கும்பகோணம் மாவட்ட அந்தஸ்த்தைப் பெற்று வருகின்றது என்பதற்கு உதாரணமாக, மாவட்ட மருத்துவமனைகள், மாவட்ட நீதிமன்றங்கள், மாவட்ட பத்திரப் பதிவு அலுவலகம், மாவட்ட கால்நடை அலுவலகம், மாவட்ட மோட்டார் வாகன அலுவலகம், மண்டல அரசு போக்குவரத்துக் கழகம் போன்ற அலுவலகங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஆகவே, வருங்காலத்தில் மாவட்ட அளவில் மின்னணு நூலகம்-Digital Library ஒன்றைத் தொடங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகரத்தில் உள்ள கிளை நூலகம் 1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, முழுநேர நூலகமாக செயல்பட்டு வருகின்றது. இந்நூலகத்தில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை 8,562 ஆகும். நூல்களின் இருப்பு 53,825 ஆகும். இங்கு சராசரியாக நாளொன்றுக்கு 210 வாசகர்கள் வருகை புரிகின்றனர். இந்நூலகம் குடிமைப் பணி, குறிப்பு உதவி, நூலகம் வாசிப்பு, மகளிர், சிறுவர்கள் படிப்பதற்கான நாளிதழ் மற்றும் பருவ இதழ் ஆகிய பிரிவுகளுடன் போதிய இட வசதியுடன் செயல்பட்டு வருகின்றது.

முற்பகல் 11-10

தஞ்சாவூர் மாவட்ட தலைமையிடத்தில் மாவட்ட மைய நூலகம் 33,373 உறுப்பினர்களுடன் 1,91,041 நூல்களுடன் தற்போது



2016 ஜனவரி 22]

செயல்பட்டு வருவதால், ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட மைய நூலகம் மட்டுமே அமைக்க வழிவகை உள்ளதால், கும்பகோணத்தில் பிறிதொரு மாவட்ட மைய நூலகம் அமைக்க வழி இல்லை. இது அரசின் கொள்கை முடிவு என்ற காரணத்தினால், வருகின்ற காலங்களிலே அரசினுடைய கொள்கை முடிவுக்கேற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை பரிசீலினையில் எடுத்து, அதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் கொள்கையாக இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கொள்கை முடிவை தயவுசெய்து மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சோழப் பேரரசின் தலைநகரமாம் தஞ்சை நகரில் 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஓலைச்சுவடிகள், அச்சு நூல்கள், சரபோஜி மன்னரால் வழங்கப்பட்ட நூல்கள் என பல்துறையைச் சார்ந்த ஒரு இலட்சம் நூல்களைக் கொண்ட பொக்கிஷமாக சரஸ்வதி மஹால் நூலகம் உள்ளது. மற்றும் தமிழ் பல்கலைக்கழகத்தில் பாரம்பரியம் மிக்க நூல்களைக்கொண்ட பெரிய நூலகமும் உள்ளது. நான் பிறந்த சாக்கோட்டையில், 1946-ல் தந்தை பெரியார் அவர்களால், திரு. கே.பி. சாமி மற்றும் எனது தந்தை திரு. கணபதி இன்னும் பல பெரியோர்களால் தொடங்கப்பட்ட படிப்பகம் படிப்படியாக வளர்ந்து தற்பொழுது 15,000 நூல்களைக் கொண்ட நவீன நூலகமாக மாற்றி அமைக்கப்பட்டிருக்கின்றது. நான் சுய மரியாதைக் குடும்பத்தின் வழிவந்தவன் என்ற முறையில் சுய மரியாதைக் குடும்பத்தின் வழிவந்த மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்; விதியை மதியால் வெல்லலாம் என்பார்கள். அந்த மதியைப் பெறுவதற்கு அரசின் விதிமுறைகளைத் தளர்த்தி மாவட்ட தலைநகர் என்ற அளவுகோலை வைக்காமல் நூலகம் தொடங்கிட வேண்டும். வேளாண்மைக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, தொழிற்பயிற்சி நிலையம், கல்வியியல் கல்லூரி, மாவட்ட விளையாட்டரங்கங்கள் போன்ற கல்வி சம்பந்தமான பல கோரிக்கைகளை நான் சட்டமன்றத்தில்

[2016 ஜனவரி 22

வைத்திருக்கிறேன். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் பயின்ற யானையடி பள்ளி அமைந்துள்ள கும்பகோணத்தில் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பெயரால் இன்டர்நெட் வசதி உள்ளிட்ட நவீன வசதிகள் கொண்ட புதிய Digital library-மின்னணு நூலகம் தொடங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? இதனைக் கேட்கிற நான் அன்பழகன், கொடுக்கிறவர் மாண்புமிகு வீரமணி அவர்கள்; வரலாற்றில் பெயர் உள்ளவர்கள்; தயவுசெய்து ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடிய பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன்வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கைகளையெல்லாம் பரிசீலனை செய்து, எதிர்வருகின்ற காலங்களிலே, கொள்கை முடிவினைத் தளர்த்துவதற்கு வழிவகைகள் இருக்கும்பட்சத்தில், தேவையான வழிவகைகளை உருவாக்கி, உறுப்பினருடைய கோரிக்கைகள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**29—**

## மாணவியர் விடுதி

***56447—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2016 ஜனவரி 22]

(அ) அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படிக்கின்ற மாணவ, மாணவியர்களுக்கு 14 விதமான விலையில்லா பொருட்களைத் தந்து, விலையில்லா மிதிவண்டி தந்து மற்றும் விலையில்லா மடிக் கணினியும் தந்து, கல்வி உதவித்தொகையும் தந்து, பல நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், பல உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்திக் கொடுத்து, கல்வித் துறையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) கிராமங்களில் வசிக்கும் சாதாரண அடித்தட்டு மக்களின் பிள்ளைகளும் மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் நிலையை உருவாக்கித் தந்த எங்கள் தாய் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்தில் லிங்காயத் எனும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மாணவியர் சுமார் 700 பேர் உயர் கல்வி பயின்று வருகின்றனர். இப்பகுதியில் 3 உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. இவர்கள், அடர்ந்த காட்டுப் பாதை வழியாகத்தான்

[2016 ஜனவரி 22

பள்ளிக்கு வர வேண்டிய சூழ்நிலை உள்ளது. இப்பகுதியில் எந்தவொரு பிற்படுத்தப்பட்டோர் விடுதியும் இல்லை. இப்பகுதி மக்கள் பாதுகாப்பு கருதி தங்கள் குழந்தைகளை பள்ளிகளுக்கு அனுப்ப முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, இப்பகுதியில் உள்ள பிற்படுத்தப்பட்ட மாணவிகளின் நீண்ட நாள் கோரிக்கையான பர்கூர் மலைக் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி ஒன்றை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, இனி வருங்காலங்களில் புதிய விடுதிகள் துவங்குவதற்கான வரன்முறைகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் புதிய பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதி துவங்குவது குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று ஆவன செய்யப்படும் என்று கூறியதற்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.



2016 ஜனவரி 22]

**30—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***55138—திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்வேளூர் தொகுதி, கச்சநகரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூவுலகின் பொன்மனமாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்டிருக்கக்கூடிய கச்சநகரம் கிராமம், விதிமுறைகளைப் பூர்த்தி செய்யாத காரணத்தினாலும், ஏற்கெனவே, மக்கள்தொகைக்கேற்ப அந்த ஒன்றியத்திலே 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் நல்லமுறையிலே செயலாற்றி வருகின்ற காரணத்தினாலும் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, கச்சநகரம் கிராமத்தைச் சுற்றி கச்சநகரம், கொத்தாங்குடி, தாங்கல், சித்தாயனூர், கொளப்பாடு ஆகிய ஊராட்சிகள் உள்ளன. இந்த ஊராட்சிகளில் சுமார் பதினைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இவர்கள், நீண்ட தொலைவில் இருக்கிற நீர்மலை ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது வலிவலம் ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது திருக்குவளையில் உள்ள வட்டார மருத்துவமனை இவற்றிற்குச் சென்றுதான் மருத்துவ சிகிச்சை செய்துகொள்ள வேண்டிய நிலை

[2016 ஜனவரி 22

இருக்கிறது. ஆகவே, கச்சநகரம் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டால், 15,000 கிராம மக்களும் சிரமமின்றி மருத்துவ சிகிச்சையை எளிதில் பெற முடியும். எனவே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், மறுபரிசீலனை செய்து, கச்சநகரம் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமாய் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய பொதுமக்கள் எளிதிலே மருத்துவ சிகிச்சை பெற வேண்டுமென்கிற உயர்ந்த நோக்கோடு இந்த நான்கரை ஆண்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 172 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை 134 கோடி ரூபாயிலே மிகச் சிறப்பாகத் திறந்து, நல்லமுறையிலே அங்கே சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் நீண்ட தொலைவு செல்ல வேண்டியிருக்கிறது என்று சொன்னார். கச்சநகரத்திலிருந்து வலிவலம் ஆரம்ப சுகாதார நிலையம் 2 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. நீங்கள் குறிப்பிடுகின்ற கச்சநகரம் கிராமத்திலிருந்து திருவாரூர் மருத்துவக் கல்லூரி 8 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. மேலும், தேமங்கலம் என்ற ஊருக்கு கடந்த ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைக்கேற்ப அமைத்துக் கொடுத்து அதைத் திறந்தும் வைத்திருக்கிறார்கள். வருங்காலங்களிலே, மக்கள்தொகைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற இந்த கச்சநகரமும் கவனத்தில்கொள்ளப்பட்டு, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.

**திரு. வீ.பி. நாகைமாலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு தகவல். தாங்கள் சொல்லியிருக்கிற அந்த தேமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் என்னுடைய தொகுதியில் இல்லை. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் தொகுதியில் இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



2016 ஜனவரி 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, கீழையூர் கிராமத்தில் இயங்கி வந்த ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தித் தர வேண்டுமென்ற அப்பகுதி மக்களின் நீண்டநாள் விருப்பத்தை இம்மாமன்றத்தில் தொடர்ந்து கோரிக்கையாக வைத்துள்ளேன். தாங்களும் இதுகுறித்து ஆவன செய்வதாகக் கூறியிருக்கிறீர்கள். இந்த நிலையில், திடீரென்று மேற்படி ஊராட்சி ஒன்றிய மருந்தகம் மூடப்பட்டுவிட்டது. இதனால் இப்பகுதி மக்களுக்கு மருத்துவ சிகிச்சை கிடைப்பதில் மிகவும் சிரமமாக இருக்கிறது. அந்த ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த வேண்டுமென்று நான் உங்களிடம் கோரிக்கை வைத்து வருகிறேன். இந்த நிலையில், இருக்கும் அந்த மருந்தகத்தையும் மூடியிருப்பது அந்தப் பகுதி மக்களிடம் மிகப் பெரிய கேள்வியை எழுப்பியிருக்கிறது. ஏன் மூடினார்கள் என்றே தெரியவில்லை. ஆகவே, உடனடியாக அந்த ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தைச் செயல்பட வைக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரத்திலே, கீழையூர் ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், எழுதிக் கொடுத்த கேள்வியிலேயே, ‘கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த கச்சநகரம் கிராமத்தில்’ என்றுதான்

எழுதிக் கொடுத்திருக்கிறார் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த ஊராட்சி ஒன்றியத்தின்கீழே ஏற்கெனவே செயல்பட்டு வந்த dispensaries எல்லாவற்றையுமே ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு முடிவெடுத்து, அதிலே சாத்தியக்கூறுகள் இருந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய மருந்தகங்களை, ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்த ஆணை பிறப்பிக்கப்பட்டு, திறக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற ஊராட்சி ஒன்றியத்தினுடைய அந்த மருந்தகத்தையும் அடுத்த சுற்றிலே ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிக்கை அளித்தல்

### திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள்மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின்முன் வைக்கப்பட்டிருக்கின்ற உரிமைக் குழுவின் அறிக்கையை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இன்னும் உரிமைக் குழுவின் அறிக்கையை வைக்கவில்லை. அதற்குள் நீங்கள் எழுந்து





நிற்காதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இன்னும் நான் சொல்லவே இல்லை. வைக்கவே இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, மேசையில் வைத்தாகிவிட்டது. அவை உரிமைக் குழுவின் தலைவர் சொல்லட்டும், உட்காருங்கள். என்ன? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** எந்த paper ஆக இருந்தாலும் ஒருமுறை இந்த அவையில் வைக்கப்பட்டால் அது இந்த House-னுடைய property ஆகிவிடும். எனவே, இங்கே வைக்கப்பட்டது House-னுடைய property. இதைப் படிக்க, இதுகுறித்து கேள்வி கேட்க. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை வைத்ததற்குப் பிறகு கேட்கலாமே என்று தான் சொன்னேன். (குறுக்கீடுகள்) அதாவது, அறிக்கையை அவர் வைத்ததற்குப் பிறகு நீங்கள் சொல்லலாமே என்றுதான் நான் சொல்ல வருகிறேன்.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் அவர் சொன்னதற்குப் பிறகு வைத்திருக்க வேண்டும். ஆனால், வைத்துவிட்டீர்கள். Once it is already placed in the House, we have the right to ask. எங்கள் தலைவர்மீது வேண்டுமென்றே ஒரு குற்றச்சாட்டை உருவாக்கிக்கொண்டு, அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள், குழுவின் அறிக்கையை வைக்கட்டும். குழுவின் அறிக்கை அளித்தல். அவை உரிமைக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், அவை உரிமைக் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள்மீது எழுப்பப்பெற்ற உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவை உரிமைக் குழு அறிக்கையின் நகல்களைக் கிழித்தெறிந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் சரியில்லை. (குறுக்கீடுகள்) இல்லை. அவர் அறிக்கையை அவையில் வைத்ததற்குப் பின்னாலே பேசுவதற்கு உங்களுக்கு அனுமதி

[பேரவைத் தலைவர்] [2016 ஜனவரி 22

தருகிறேன் என்றுதான் சொன்னேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அவர் வைப்பதற்கு முன்னதாகவே பேச வாய்ப்புக் கேட்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டனர்.)

## 3. அரசினர் தீர்மானங்கள்

### (அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து அரசினர் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இதெல்லாம் முறையில்லை. (குறுக்கீடுகள்) ஒரு அறிக்கையை இதுமாதிரி செய்வது முறையற்ற செயல். (குறுக்கீடுகள்) இல்லை, இதெல்லாம் முறையற்ற செயல். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 13 (2)-ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து, இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற அவை உரிமைக் குழுவின் அறிக்கையை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (அ)-ன்கீழ் (குறுக்கீடுகள்) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடுகள்)



2016 ஜனவரி 22]

முற்பகல் 11-25

### (ஆ) திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள்மீதான உரிமை மீறல் பிரச்சினையில் அவை உரிமைக் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற அவை உரிமைக் குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 229 (ஈ)-ன்கீழ் இப்பேரவை ஏற்றுக்கொள்கிறது"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று, கோஷமிட்டுக் கொண்டே அவை உரிமைக் குழு அறிக்கையின் நகல்களைக் கிழித்தெறிந்தனர்.)

இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் இந்த அவையை நடத்தவிடாமல், அவையில் வைத்திருக்கிற இந்த அறிக்கை குறித்து அவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு குழப்பத்தை விளைவிக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நான் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) அவரவர்களுடைய இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்)

[பேரவைத் தலைவர்] [2016 ஜனவரி 22

இது முறையல்ல. நான் பல முறை எச்சரித்தும் நீங்கள் செவி சாய்க்காவிட்டால் நான் உங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

நீங்கள் உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை. அவை உரிமைக் குழுவினுடைய அறிக்கை முறையாக மேசையின்மீது வைக்கப்பட்டு, அவை உரிமைக் குழுவினுடைய தலைவர் அவையிலே வைக்கிறேன் என்று சொன்னதற்குப் பின்னாலே, உங்களுக்கு நான் அனுமதி கொடுக்கிறேன் என்று தெரிவித்ததற்குப் பின்னாலே நீங்கள் வேண்டுமென்றே இதுபோன்று அறிக்கையை கிழித்து எறிந்து அராஜகம் செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, வேண்டுமென்றே குழப்பம் செய்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு அருகில் வந்து தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)

இது மிகப் பெரிய தவறு. (குறுக்கீடுகள்) இல்லை, இப்போது அனுமதி இல்லை. நான் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தேன். ஆனால், இப்போது நடப்பது என்ன? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், அவரவர்களுடைய இருக்கைக்குச் சென்று அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அவரவர்களுடைய இருக்கைக்குப் போகும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அவரவர்களுடைய இருக்கைக்குப் போகும்படி கேட்டுக்கொள்கிறேன். நான் பல முறை எச்சரித்தும் இன்றைக்கு இந்த அவையை நடத்த விடாமல் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் திட்டமிட்டு குழப்பம் விளைவிக்கிற காரணத்தாலே, பல முறை எச்சரித்தும் முறையாக இந்த அவை நடக்கிறபோது வேண்டுமென்றே குழப்பம் விளைவிக்கிற காரணத்தாலே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களை அவையிலிருந்து வெளியேற்றும்படி அவைக் காவலர்களுக்கு உத்தரவிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களை வெளியேற்றும்படி நான் உத்தரவிடுகிறேன்.



2016 ஜனவரி 22] [பேரவைத் தலைவர்]

வேண்டுமென்றே அவையிலே இன்றைக்கு நீங்கள் குழப்பம் விளைவித்ததும், இந்த உரிமைக் குழு அறிக்கை நகல்களை கிழித்து எறிந்ததும், மிகப் பெரிய ஒரு தவறான முன்னுதாரணத்தை நீங்கள் ஏற்படுத்தியும் இருக்கின்ற காரணத்தாலே உங்களை நான் வெளியேற்றுகிறேன். (குறுக்கீடுகள்) அவையிலேயிருந்து அவர்களை வெளியேற்றும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இந்தப் பேரவையினுடைய டாக்குமென்ட்டை வேண்டுமென்றே கிழித்து எறிந்து அராஜகம் செய்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை வெளியேற்ற நான் உத்தரவிட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அவர்களை வெளியேற்றும்படி நான் அவைக் காவலர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அவர்களை வெளியேற்றும்படி நான் அவைக் காவலர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

மற்றவர்கள் இருங்கள், சில விளக்கங்கள் சொல்ல வேண்டும், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்படி அமையப்பெற்ற விசாரணைக் குழு நீதிமன்றமாக அல்லது பகுதி நீதிமன்றமாக இயங்குகிறது. சட்டப்படி அமைக்கப்பட்ட ஆணைக் குழுவாக அவை உரிமைக் குழு இருக்கிறது. அதனிடம் ஒரு பொருள் விசாரிக்க அனுப்பப்பட்டு, அது தீர விவாதிக்கப்பட்டு, அங்கு எடுக்கப்பட்ட ஒரு முடிவை, இங்கே சட்டமன்றத்தில் அறிக்கையாக வைத்திருக்கின்றபோது, அதை எடுத்து, கிழித்து, அவர்கள் இஷ்டம்போல இங்கே வந்து முன்னால் உட்கார்ந்துகொண்டு கோஷம் போடுவது என்பது இந்த அவையை மிகவும் அவமரியாதைக்குள்ளாக்கிய செயலாகும். சட்டப்படி அமையப்பெற்ற அவை உரிமைக் குழுவை அவமதிப்பதாகும். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இதன்மீது தனிக் கவனம் செலுத்தி, இதுபோன்ற நிகழ்வு எதிர்காலத்தில் வராமல் இருக்கக்கூடிய அளவில் இதற்கு நல்ல ஒரு முடிவை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்)

*(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர், திரு. அ. கணேஷ்குமார் ஆகியோர் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை. இதில் உங்களுக்கு விவாதம் செய்ய ஒன்றுமில்லை. (குறுக்கீடுகள்) ஏற்கெனவே உங்களுடைய கட்சி உறுப்பினர்கள் அவை உரிமைக் குழுவில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஏற்கெனவே அதைத் தீர ஆய்ந்துதான் ஓர் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அதாவது, திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வேண்டுமென்றே குழப்பம் விளைவிக்கின்றனர். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை உரிமைக் குழுவில் அனைத்துக் கட்சிகளினுடைய பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு கூட்டத்திலும், இதுபற்றிய விவாதத்தில் அவர்கள் கலந்துகொண்டு பேசியிருக்கிறார்கள்; விவாதித்திருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு தெரியப்படுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இருப்பினும், அதனுள்ளே நுழைந்து, அந்த விவாதத்தில் என்னென்ன பேசியிருக்கிறார்கள் என்பது குறித்து திரும்பவும் இங்கே ஆரம்பிப்பது சரியான மரபாகாது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காத்து, இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிட வேண்டும். மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் சபையை நடத்துவதற்கு உதவ வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை. ஏற்கெனவே, உங்கள் கட்சி உறுப்பினர்கள் அந்தக் குழுவில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். அந்தக் குழுவில் பேசி, ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடுகள்) இந்த மாதிரியான நடவடிக்கைகளையெல்லாம் நீங்கள் ஆதரிக்கின்றீர்களா? (குறுக்கீடுகள்) இந்த அவையில் நான் ஒப்புதல் வாங்கிவிட்டேன். (குறுக்கீடுகள்) அவை இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டுள்ளது. (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள். இதோடு அந்தப் பிரச்சினையை விட்டுவிடுங்கள். ஏற்கெனவே அவை இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு, ஒப்புதலளித்துள்ளது. (குறுக்கீடு)





***திரு. அ. சவுந்தரராசன்:** அவையில் விவாதம் இல்லாமல் நீங்கள் எப்படி ஒப்புதல் கேட்க முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை. நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் நான் சொல்வதை பொறுமையாகக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வது முழுவதையும் பொறுமையாகக் கேளுங்கள்.

முதலில், இன்றைக்கு சபையினுள் அந்த அறிக்கை வைக்கப்பட்டது. அறிக்கை வைக்கப்பட்டதற்குப் பின்னால், அவை உரிமைக் குழுவின் தலைவர், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அந்த அறிக்கையை இந்தச் சபையில் வைப்பதற்கு நான் அனுமதி அளித்தேன். அவர் எழுந்து அனுமதியளிக்கிற நேரத்திலே, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் எழுந்து நாங்கள் பேச வேண்டுமென்று சொன்னார்கள். அவர் அறிக்கை வைக்கிறார், அறிக்கை வைத்ததற்குப் பின்னர் உங்களுக்கு அனுமதி தருகிறேன் என்று சொன்னேன். (குறுக்கீடு) அதற்குள்ளே, அவையில் வைக்கப்பட்ட இந்தப் பேரவை டாக்குமென்ட்டை இதுமாதிரி கிழித்தெறிந்து, நான் வாய்ப்புக் கொடுக்கிறேன் என்று சொன்னதற்குப் பின்னாலேயும் இந்த மாதிரி நடந்து கொண்டுள்ளார்கள். (குறுக்கீடு) வாய்ப்புக் கொடுக்கிறேன் என்று சொன்னதற்குப் பின்னாலேயும் இந்த மாதிரி இந்தச் சபையை இன்றைக்கு நடைபெறவிடாமல், அராஜகமாக, இதையெல்லாம் கிழித்தெறிந்து, இந்தச் சபையை நடத்தவிடாமல் மிகப் பெரிய குழப்பத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் செய்திருக்கிறார்கள். அதற்குப் பின்னர்தான், அவையில் நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம்.

*முற்பகல் 11-35*

ஆக, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தைக் கொண்டுவந்து, இந்த அவை அதை ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஏற்றுக்கொண்டதற்குப் பின்னாலே எந்தவொரு விவாதமும் இருக்கக் கூடாது என்பது விதி. ஆகவே, அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதோடு அந்தப் பிரச்சினையை விடுங்கள், இப்போது அதற்கு நான் findings கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்)

உட்காருங்கள்; தருகிறேன். (குறுக்கீடுகள்) அதற்கு அனுமதியில்லை. உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சியினுடைய உறுப்பினர் அந்தக் குழுவில் இருக்கிறார். அந்தக் குழுவில் உங்கள் கட்சி உறுப்பினர் பேசியிருக்கிறார். அவர் பேசியிருக்கிற கருத்தும் அந்த அறிக்கையிலே பதிவாகியிருக்கிறது, பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவு விவரங்களுக்குப் பின்னாலேயும், குழு முழுமையாக விவாதித்து, அறிக்கையினை இந்த அவையிலே வைத்ததற்குப் பின்னாலே, அதன்மீது மேற்கொண்டு நீங்கள் பேச வேண்டும் என்று கேட்க முடியாது. முறையாக அவர் வாய்ப்பு கேட்டு, நான் வாய்ப்பு கொடுக்கிறேன் என்று சொன்னதற்குப் பின்னாலேயும், இப்படி அராஜகம் நடந்ததற்குப் பின்னாலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (குறுக்கீடுகள்) திரு. சவுந்தரராசன், அவை, தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் முறையாக நிறைவேற்றப்பட்டுவிட்டது. தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னாலே, அதன்மீது எந்த விவாதமும் இருக்கக் கூடாது என்று நீங்களெல்லாம் வகுத்துக் கொடுத்திருக்கிற அந்த விதிகளின்படிதான் நான் இந்த அவையை நடத்திக் கொண்டிருக்கிறேன். ஆகவே, முழு ஒத்துழைப்புக் கொடுக்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவை உரிமைக் குழுவின் கூட்டத்தில் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல், இப்போது நீங்கள் பேச எழுந்திருப்பது முறையற்ற செயல்; முறையல்ல. (குறுக்கீடுகள்) இந்த அராஜகத்திற்கு நீங்களெல்லாம் துணை போவது சரியல்ல; இது ஜனநாயகத்திற்கு எதிரானது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர் திரு. லாசர் அவர்கள், அவைக் குழுவின் உறுப்பினராக இருக்கிறார். அவர் அனைத்து விவாதங்களிலும் கலந்து கொண்டிருக்கிறார். அவருடைய கருத்துகளும் அறிக்கையில் பதிவாகி இருக்கின்றன. இறுதியாக, விவாதம் முடிவுற்று, draft-ம் வைக்கப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்த draft-ஐ வைத்தபோது, அவர் அந்தக் கருத்திற்கு எதிர்ப்போ, அவை உரிமைக் குழு கூட்டத்திலிருந்து வெளிநடப்போ செய்யவில்லை. ஆகவே, அந்த draft அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுதான் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.





அதைத்தான் இன்றைக்கு சட்டமன்றம், அரசினர் தீர்மானமாகக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறது என்பதை இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியினுடைய மற்ற உறுப்பினர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்களை கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. சவுந்தரராசன், உங்கள் கட்சி உறுப்பினர் குழுவில் பேசியிருக்கிறார். அவை உரிமைக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு வந்தவுடனே நீங்கள் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) அதைப் பற்றிய முழு விவரமும் அந்த அறிக்கையிலே இருக்கிறது. (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புக் கொடுக்கிறேன் என்று சொன்னதற்குப் பின்னால், இப்படிப்பட்ட அராஜகம் இன்றைக்கு நடந்திருக்கிறது. இந்த அராஜகம் நடந்ததற்குப் பின்னாலே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்குப் பின்னாலே அதன்மீது எந்தவித விவாதமும் இருக்கக் கூடாது என்று விதி உள்ளது. (குறுக்கீடுகள்)

*(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

இவ்வளவு வாய்ப்பு கொடுத்த பின்பும் வெளியேறுவது குறித்து நான் ஒன்றும் சொல்ல முடியாது. வாய்ப்பு கொடுத்ததற்குப் பின்பும் இதுமாதிரி செய்வது முறையல்ல.

இப்பொழுது அவையிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, சட்டமன்றத்தின் இறையாண்மை, மாண்பு, சிறப்புரிமை ஆகியவை காக்கப்பெற வேண்டும் என்ற உயரிய நோக்கினைக் கருத்திலே கொண்டு, சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்கள் செய்துள்ள இந்த அவை உரிமை மீறல் குற்றத்திற்கு, வருங்காலத்திலே வேறு எந்த உறுப்பினரும் செய்யாத வகையிலும், பிற உறுப்பினர்களுக்கு இது ஒரு பாடமாக அமைய வேண்டும் என்ற வகையிலும், இனிமேல் இதுபோன்ற தவறுகளில் அவர் ஈடுபடக் கூடாது என்று எச்சரிக்கை விடுத்து, சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. கருணாநிதி அவர்களுக்குக் கடுமையான கண்டனத்தை இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

*[2016 ஜனவரி 22*

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். இன்று 13 உறுப்பினர்கள் விவாதத்திலே பேசவுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய உரையினை சுருக்கமாக முடித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

*முற்பகல் 11-40*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள், இந்தப் பேரவையிலே உவந்தளித்திருக்கின்ற உரைக்கு நன்றி தெரிவித்து, முன்மொழிந்திருக்கின்ற நன்றி அறிவிப்புத் தீர்மானத்தின்மீது வழிமொழிந்து பேசுகின்ற வாய்ப்பை வழங்கியமைக்காக, உங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

*தனது பதவிக் காலத்திலே 4 ஆண்டுகள் 8 மாதங்களை முடித்து, இந்திய துணைக் கண்டத்திலேயே தமிழகம்தான் ஒரு முன்னோடி மாநிலம், (மேசையைத் தட்டும் ஒலி) முதல் மாநிலம், முன்மாதிரி மாநிலம் என்று அறிவுசார் உலகம் வியந்து பாராட்டுகிற வகையிலே தமிழகத்தை போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலே தலைநிமிரச் செய்திருக்கின்ற இந்த அரசின் (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த கால சாதனைப் பட்டியலாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்று சொன்னால், அதை யாரும் மறுத்துவிட முடியாது. கடந்த நான்காண்டுக் காலத்திலே தமிழகம் எந்தளவுக்கு தன்னிறைவு பெற்றிருக்கிறது என்பதற்கான ஒரு சாதனைப் பட்டியலாய், பெருமிதத்தோடு, பெருமையோடு, தன்னம்பிக்கையோடு, தளராத உறுதியோடு தமிழகத்திற்கு சாதனைப் பட்டியலை இந்த மாமன்றத்தின் வழியாக தெளிவுபடுத்துகிறவிதமாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. ஆகவேதான், அதை வாழ்த்துவதற்கு, வழிமொழிவதற்கு, வரவேற்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.*



*2016 ஜனவரி 22] [முனைவர் செ.கு. தமிழரசன்]*

*எனக்கென எப்போதுமே ஒரு தனிப் பார்வை உண்டு. தமிழகத்திலே போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவர், அவரைத் தொடர்ந்து 5 முறை தமிழகத்திலே முதலமைச்சராக விளங்கி, 6-வது முறையும் முதலமைச்சராக (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்கள் ஏகோபித்து தேர்ந்தெடுக்கின்றவகையிலே நல்லாட்சி தருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் இந்த அரசின் பல திட்டங்கள், தமிழகம் இந்தியத் துணைக் கண்டத்திலே ஒரு தன்னிறைவு பெற்ற தன்னிகரற்ற மாநிலம் என்று மற்றவர்கள் சொல்வதற்கு அடித்தளமாய் அமைந்திருக்கின்றன. தமிழகத்தின் மூலை முடுக்குகளிலே, கிராமங்களிலே, குக்கிராமங்களிலே உழைக்கும் மக்களாக, ஏழையெளிய மக்களாக, அடித்தளத்து மக்களாக, நலிந்த மக்களாக விளங்கிக் கொண்டிருக்கின்ற மக்கள், தங்கள் உணவுக்காக யாரையும் அண்டிப்போக வேண்டிய அவசியமில்லை; தங்கள் உடைக்காக, வாழ்வாதாரத்திற்காக யாரிடமும் கையேந்த வேண்டிய அவசியமில்லை; தமிழகத்தின் ஒவ்வொரு குடிமகனின் வாழ்வாதாரமும் இந்த அரசின் நேரடிப் பார்வையிலே (மேசையைத் தட்டும் ஒலி) அமைந்திருக்கிறது. அந்த வகையில், மக்கள் நலத் திட்டங்கள் எந்த மாநிலத்திலே இருக்கின்றன என்று கேட்டால், அவை தமிழகத்திலேதான் இருக்கின்றன.*

*தமிழகத்திலே ஒரு குடும்பம் அரசை நம்பியே வாழலாம்; வேறு யாரை நம்பியும் வாழ வேண்டிய அவசியமில்லை; அண்ணன், தம்பியைக்கூட நம்ப வேண்டிய அவசியமில்லை; உற்றார், உறவினரைக்கூட நம்ப வேண்டிய அவசியமில்லை. இந்த அரசு நேரடியாக அந்தக் குடிமகனுக்கு அனைத்து பாதுகாப்புகளையும், அனைத்து உரிமைகளையும், அனைத்து வழிகளையும் அமைத்துக் கொடுக்கின்ற வகையிலே பல மக்கள் நலத் திட்டங்கள் உள்ளன. ஆகவேதான், 'அம்மா உணவகம்' திட்டத்தை குஜராத், இராஜஸ்தான் மாநிலங்களிலிருந்து வந்து எப்படிச் செயல்படுத்துகிறார்கள் என்று பார்க்கிறார்கள். ஆனால், தமிழகத்திலேதான் இந்தச் சாதனைகள் ஒருபோதும் மக்களுக்குப் போய்விடக்கூடாது என்பதற்காக ஒரு சக்தி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் சொன்ன அந்தத் தீய சக்தி முயற்சித்துக் கொண்டே இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காகத்தான் அந்த சக்தியை அப்போதே அடையாளம் காட்டுகின்ற வகையிலே அவர் ஒரு பெயரைச் சொன்னார்.*

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2016 ஜனவரி 22

துறைதோறும், துறைதோறும், கல்வி, சுகாதாரம், தொழில், வீட்டு வசதி, வேளாண்மை, எளியோர்களை ஏற்றுவிக்கின்ற, அவர்களை உயர்விக்கின்ற நலத் திட்ட வசதி, உணவா, உடையா, உறைவிடமா, அடிப்படை வசதிகளா, இப்படி எல்லாத் துறைகளியிலும் மத்திய அரசு பாராட்டுகின்ற வகையிலே, பிற மாநிலங்கள் பாராட்டுகிற வகையிலே, ஆராய்ச்சி வல்லுநர்கள் பாராட்டுகின்ற வகையிலே, கட்சி சார்பற்றவர்கள் பாராட்டுகிற வகையிலே, மக்கள் நலம் விரும்புபவர்கள் பாராட்டுகிற வகையிலே, நாள்தோறும், நாள்தோறும் இந்தச் சாதனைகள் மலர்ந்துகொண்டே இருக்கின்றன. 'கேட்டவர் குரலுக்கு வருவேன்' என்றான், கீதையிலே கண்ணன். 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்றார் இயேசுநாதர். அந்த வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அழைப்பு இருக்கிறதே, 'நீங்கள் அழையுங்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு, செயல்படுத்துவதற்கு இருக்கிறது; இது உங்கள் அரசு, மக்கள் அரசு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அம்மாவின் அரசு' என்ற வகையிலே ஆளுநர் உரை நிகழ்த்துவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னாலேகூட ஓர் அறிவிப்பு வந்திருக்கிறது.

*முற்பகல் 11-45*

கல்வியிலே குறை சொல்ல முடியவில்லை. கல்வி வளர்ச்சியிலே இந்த மாநிலம் இந்தியாவின் முதல் வரிசையிலே இருக்கிற மாநிலமாக இன்றைக்கு வளர்ந்திருக்கின்றது. மருத்துவ வசதியிலே இந்தியாவினுடைய தலைநகரமே தமிழகம்தான் என்கிற வகையிலே வளர்ந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலவே, இங்கு தனி நபர் வருமானம் இந்தியாவின் சராசரி வருமானத்திலே மிகுந்திருக்கின்றது; அந்த அளவிற்கு நம்முடைய தமிழகத்திலுள்ள தனி நபர் வருமானம் பொருளாதார ரீதியாகவும் உயர்ந்து தன்னிறைவு அடைந்திருக்கின்றது. சிசு மரண விகிதத்தைக் குறைப்பதிலே இந்தியாவிலேயே தமிழகம் இன்றைக்கு முதல் மாநிலமாக வளர்ந்திருக்கின்றது. ஆனால், இதில் என்ன வேடிக்கை என்றால், களராகக் கிடந்த தமிழ் மண்ணை, 2011-ல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையேற்று, ஒரு தலைசிறந்த விவசாயியாய் இருந்து, இன்றைக்கு பழத் தோட்டமாய், மலர்த் தோட்டமாய், (மேசையைத் தட்டும் ஒலி) பூத்துக் குலுங்குகின்ற மொட்டாய், மலராய், கனியாய், காயாய், செழித்து நிற்கின்ற பூவாய், அப்படிப்பட்ட விளைநிலமாக மாற்றி, ஒரு தலைசிறந்த விவசாயியைப்போல் தமிழகத்தைச்



2016 ஜனவரி 22] [முனைவர் செ.கு. தமிழரசன்]

சீர்படுத்தியிருக்கிறார்கள். இருந்தும்கூட, அந்தப் பழத்தைப் பார்ப்பதற்குப் பார்வையில்லாதவர்கள், அந்த மலரை நுகர்வதற்கு உணர்வு இல்லாதவர்கள், விழுந்து கிடக்கின்ற சருகுகளையே எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். இப்படி ஒரு விவசாயி செப்பனிடுகின்றபோது, விழுந்து கிடக்கின்ற சருகுகளையே பார்த்துக் கொண்டிருக்கின்ற அவர்கள், சருகுகளைப் போல காற்றிலே பறந்து போவார்கள்; தேர்தல் காற்றிலே கட்டாயம் பறந்து போவார்கள் என்பதை மட்டும் நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், உலகத்திலேயே மழைக்குக்கூட நீதி விசாரணை கேட்டு தமிழகத்திலிருந்துதான் குரல் வரும்; மழைக்குக்கூட நீதி விசாரணை கேட்கின்ற ஓர் அரசியல் தமிழகத்திலிருந்துதான் கிளம்பும். மழை என்பது எல்லை கடந்த ஒன்று. வட்டம் மீறி, மாவட்டம் மீறி, மாநிலம் மீறி, ஆந்திராவிலே மழை பொழிந்தால்கூட தமிழகத்திலே வெள்ளம் வரும். செம்பரம்பாக்கத்திற்கு எங்கிருந்து நீர் வரும்? பூண்டியிலிருந்து வரும். பூண்டிக்கு எங்கிருந்து வரும்? ஆந்திராவிலிருந்து வரும். ஆக, கர்நாடக மாநிலத்தின் எல்லையோரத்தில் இருக்கக்கூடிய எங்களைப் போன்றவர்கள் வசிக்கும் பகுதிகளில் கர்நாடகாவிலிருந்தும் வெள்ளம் வரும். ஆனால், மழைக்குக்கூட நீதி விசாரணை கேட்கின்ற ஓர் உணர்வு, ஒரு சிந்தனை, அப்படிப்பட்ட அரசியல் இந்தத் தமிழகத்திலேதான் இருக்கும். வெள்ளம் வந்தவுடனேயே முதல் அறிக்கை என்ன வந்தது தெரியுமா? வெள்ளம் வந்திருக்கின்றது, தேர்தலும் வருகின்றது. ஆகவே, தேர்தலுக்காக இந்த ஆட்சியாளர்கள் அதிகமான தொகை தருவார்கள், அதைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்பதுதான் முதல் அறிக்கை. இரண்டாவது அறிக்கை, கடைசியான அறிக்கை - நீதி விசாரணை. குடும்பம் குடும்பமாக நீதி விசாரணை வேண்டும் என்று அலைகிறார்கள். மக்களுக்குத் தெரியும், மக்கள் மிக நன்றாக அறிந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்கள் மட்டுமல்ல; உலக மக்களும் அறிந்திருக்கின்றார்கள். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்று கிராமத்துப் பெண்கள் சொல்வார்கள். அமெரிக்காவிலிருந்து இதழாளர் ஒருவர் சொல்கின்றார், இரண்டு நாட்கள் மின்சாரம் போனது எங்களுடைய வளர்ந்த நாடான அமெரிக்காவிலே உள்ள ஒரு மாகாணத்தில் இந்த மாகாணத்திலே இரண்டு நாட்கள், அதாவது 48 மணி நேரம் மின்வெட்டு வந்தது.

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2016 ஜனவரி 22

சமூக விரோத சக்திகள் செய்த அட்டூழியம் இருக்கின்றதே, அத்தனை அட்டூழியம் நடந்தது. நான் வெள்ள நிவாரணத்திற்கே போகவில்லை. எப்போதுமே எனது பார்வை தனி. வெள்ள நிவாரணம் வழங்குவதிலே எவ்வளவோ அட்டூழியம் இந்த மாகாணத்திலே நடந்தது. சமீபத்திலே, சீனாவிலே, வெள்ளத்திற்குப் பிறகு நடந்த ஒரு விஷயம். கன்பியூஷியஸ் தத்துவ மாநாட்டிலே, ஒரு சீன தமிழறிஞர், சீனத்துக்காரர், தமிழ் படித்தவர், அவர் என்ன சொன்னார் என்றால், 'இரண்டு வாரங்களாக அவ்வளவு கடுமையான மழை பொழிந்து இவ்வளவு பேர் பாதிக்கப்பட்டு, ஒரு கால் கோடி மக்கள் அதாவது, 25 இலட்சம் மக்கள் நிவாரணம் பெறுகிற வகையிலே அவ்வளவு குடும்பங்கள் பாதிக்கப்பட்ட நிலையிலும், தொற்று நோயே இல்லையா? ஒரு தொற்று நோய் கூட ஏற்படவில்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) இது எப்படி அந்த மாநிலத்தால் முடிந்தது? (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி முடிந்தது, எப்படி முடிந்தது' என்று சொல்லி, சீனத்துத் தமிழறிஞர் ஒரு வள்ளுவர் குறளைச் சொன்னார், 'இடும்பைக்கு இடும்பை சேர்த்தவர் உங்கள் முதலமைச்சர்' என்று. (மேசையைத் தட்டும் ஒலி) துன்பத்திற்கே துன்பம் விளைவித்த முதலமைச்சரை (மேசையைத் தட்டும் ஒலி) இடும்பைக்கு இடும்பை சேர்த்த முதலமைச்சரை நாம் பெற்றிருக்கின்றோம். இவ்வளவு பெரிய வெள்ளம் வந்து, அந்த ஈரம் காய்வதற்கு முன்னாலேயே நம்முடைய மண், நம்முடைய தமிழ் மண் ஒரு சகஜ நிலையைப் பெற்றது என்றால், தீரம் செறிந்த முதலமைச்சரை, வீரம் செறிந்த முதலமைச்சரை நாம் பெற்றிருப்பதனாலேதான் (மேசையைத் தட்டும் ஒலி) 20 நாட்களில் தமிழ்நாடு இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியது.

முற்பகல் 11-50

இதையெல்லாம், இந்தச் சாதனைகளையெல்லாம் ஒரே ஒரு stroke, one stroke-ல் செய்திருக்கிறார்கள். எப்படி 21 ஆயிரம் ஆசிரியர்களை ஒரே ஆணையிலே இந்தத் தமிழகத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு நியமிக்க முடிந்ததோ, அதைப் போல ஓர் உத்தரவிலே 25 இலட்சம் குடும்பங்களுக்கும் நிவாரணத் தொகை, அவர்களுடைய வங்கிக் கணக்கில் போய்ச் சேர்ந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 2 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே போயிருக்கிறதென்றால், இவையெல்லாம் ஒரு சாதாரண சாதனையல்ல. இவற்றையெல்லாம் பாராட்ட முடியாதவர்கள், இந்தப் பாராட்டுகளை சகித்துக்கொள்ள முடியாதவர்கள், தமிழர்களை ஏமாற்றிவிடலாம்; தமிழர்களை திசை திருப்பிவிடலாம்; தமிழர்களை ஏதோ ஒரு வகையில் ஏமாற்ற முடியாவிட்டால், கடைசியிலே, அவர்களை முட்டாள்கள் என்றும் சொல்லலாம் என்பதிலே நம்பிக்கை உள்ளவர்கள், இப்படிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு வெற்றி கிடைக்காவிட்டால், வாடிக்கையாளர்கள் சொல்வதைப்போல, இதையும் சொல்லலாம் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் நிச்சயம் இந்தத் தமிழ் மண்ணிலே நிகழப் போவதில்லை. போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த சாதனைத் திட்டங்களை, நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் வரிசைப்படுத்தி இந்தப் பட்டியலிலே சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற திட்டங்களிலே இப்படிப்பட்ட குறைபாடுகள் நிகழ்ந்திருக்கின்றன என்று யாராவது சொல்ல முடியுமா? வழக்கம்போல இந்த உரைக்குத் தொடர்பு இல்லாதவற்றை எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.



2016 ஜனவரி 22] [முனைவர் செ.கு. தமிழரசன்]

இந்தச் சந்தர்ப்பத்திலே சிலவற்றை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற இந்த மாமன்றத்திலே, நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இவ்வளவு சிறப்பு வாய்ந்த போற்றுதலுக்குரிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய பெயரிலே ஒரு பல்கலைக்கழகம் உருவாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பல்கலைக்கழகம் உருவாக வேண்டும் என்பது எனது விருப்பம். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரிலே அனைத்து மருத்துவக் கல்லூரிகளையும் ஒருங்கிணைத்து ஒரு மருத்துவப் பல்கலைக்கழகத்தை உருவாக்கினோம். அண்ணா அவர்கள் பெயரிலே பொறியியல் கல்லூரிகளையெல்லாம் ஒருங்கிணைத்து ஒரு பொறியியல் பல்கலைக்கழகத்தை உருவாக்கினோம். சர்வதேச பெருமை பெற்ற அன்னை தெரசா அவர்களால், தொட்டில் குழந்தைத் திட்டத்திற்காக (மேசையைத் தட்டும் ஒலி) எனது மகள் என்று வாழ்த்தப் பெற்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரிலே மருத்துவத் துறை வளருமேயானால் மிகச் சிறப்பாக இருக்கும். தற்போது செவிலியர்களைப் பிரிக்கின்ற ஒரு வாய்ப்பு வளர்ந்து வருகிறது. எனவே, தொட்டில் குழந்தைத் திட்டம் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயரிலே, (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது 'புரட்சித் தலைவி

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2016 ஜனவரி 22

அம்மா செவிலியர் பல்கலைக்கழகம்' என்ற ஒன்றை உருவாக்கினால் (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பாக இருக்கும் என்கின்ற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

எத்தனையோ தமிழ் பேரறிஞர்களுக்கு, தமிழ் அறிஞர்களுக்கு பெருமை சேர்த்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய பிறந்த நாளை, தமிழ் கவிஞர் நாளாக அறிவித்திருக்கிறார்கள். அதனை நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்; பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்றுதான் போற்றுதலுக்குரிய பாபா சாகிப் அம்பேத்கர் அவர்களுடைய 125-வது பிறந்த நாள். 1991 ஆம் ஆண்டிலே பாபா சாகிப் அம்பேத்கர் அவர்களுடைய நூற்றாண்டு வந்தபோது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தது. அப்பொழுது அவர்கள் ஒரு துரும்பையும் அதற்காக எடுத்து வைக்கவில்லை. திராவிட வழி வந்தவர்கள், பகுத்தறிவு வழி வந்தவர்கள் என்றெல்லாம் பேசிக் கொண்டவர்கள், அதற்காக ஒரு துரும்பையும் எடுத்துப் போடவில்லை. 1991 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலே, 'மே' மாதத்திற்குப் பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, மத்திய அரசு அந்த நூற்றாண்டு விழாவிற்காக ஒதுக்கிய தொகையையும் செலவழிக்க மறந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் அவலத்தை இந்த அவையிலே எடுத்து வைத்த பின்னாலே, மாண்புமிகு அம்மா அவர்கள்தான் நூற்றாண்டு விழாவையொட்டி பாபா சாகிப் அம்பேத்கர் பெயரிலே ராஜா அண்ணாமலைபுரத்திலே ஒரு மணிமண்டபத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக 5 ஏக்கர் நிலம் ஒதுக்கி, 5 கோடி ரூபாய் நிதியொதுக்கி அவருக்குப் பெருமை சேர்த்தார்கள். அதற்குப் பின்னாலே ஒரு சந்தர்ப்பத்திலே வந்த ஒரு தலைமை, 5 ஏக்கர் நிலத்தை ஒன்றரை ஏக்கர் நிலமாகக் குறைத்து, 5 கோடி ரூபாயை ஒன்றரை கோடி ரூபாயாகக் குறைத்து, ஒரு குடையைக் கவிழ்த்தி வைத்துவிட்டது. போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம், ஒடுக்கப்பட்ட மக்களின் உணர்வுகளைச் சொல்கின்றவகையிலே அம்மா, நீங்கள் அடிக்கல் நாட்டிய அந்த மணிமண்டபம் பிற்காலத்திலே அப்படி ஒரு சூழலை உருவாக்கிவிட்டது, அப்படிப்பட்ட ஒரு விளைவை ஏற்படுத்திவிட்டது. அதைப் புனரமைக்கிற வகையிலே, நீங்களே மீண்டும் ஆட்சிக்கு வந்து, மீண்டும் அந்தப் புனரமைப்பு விழாவைத் தொடங்கி வைக்கிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி)



2016 ஜனவரி 22] [முனைவர் செ.கு. தமிழரசன்]

அம்பேத்கர் அவர்களின் 125-வது பிறந்த நாளையொட்டி, ஏப்ரல் 14 ஆம் நாளன்று பாபா சாகிப் அம்பேத்கர் ஆராய்ச்சி மையத்தை நீங்கள் உருவாக்க வேண்டும்; அதற்கான அறிவிப்பை இங்கே வெளியிட வேண்டும் என்கிற அந்த வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-55

அவருடைய பிறந்த நாளையொட்டி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் இன்னொரு கோரிக்கையையும் நான் முன்வைக்க விரும்புகிறேன். நீங்கள் பல முறை மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறீர்கள்; பல முறை இதுகுறித்து வலியுறுத்தியிருக்கிறீர்கள். இன்னமும்கூட, தமிழகத்தில் இலட்சக்கணக்கான நரிக்குறவர் சமூகம், நாடோடி சமூகமாய் இருக்கிறது. அவர்கள் இன்னமும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில்கூட இணைய முடியாத அளவிற்கு தற்போது பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலேயே இருக்கிறார்கள். மலைவாழ் மக்கள் என அவர்கள் அறிவிக்கப்படவேண்டும். நரிக்குறவர் சமூகத்தை மலைவாழ் பட்டியலிலே இணைக்க வேண்டுமென்று வலியுறுத்தி பல முறை நீங்கள் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறீர்கள். அவர்கள் உண்மையாகவே, மிக, மிக, மிக, மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தினர். அவர்களை மலைவாழ் சமூகத்தினராக அறிவிப்பவதற்கு நீங்கள் முயற்சிக்க வேண்டும் என்று நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

இன்னும் ஒன்றேயொன்றை மட்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். அம்பேத்கர் அவர்களின் நூறாவது ஆண்டு பிறந்த நாள் விழாவை மத்திய அரசும் கொண்டாடவிருக்கிறது. அதையொட்டிய எண்ணங்களை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே மதம் மாறிய பௌத்தர்கள் பல்லாயிரக்கணக்கிலே இருக்கிறார்கள். அவர்கள் ஏற்கெனவே Converted Buddhist Adi Dravidars என்ற பெயரிலே, தமிழக ஆதி திராவிடர் பட்டியலிலே 77-வது வகுப்பினராக இருந்தார்கள். இப்போது அந்த வகுப்பினர் அந்தப் பட்டியலிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டதனாலே, பதிவு செய்ய இயலவில்லை. அந்த வகுப்பினர் குறித்த விவரம் program-ல் இல்லாமல் இருப்பதால், கணினியில் பதிவு செய்ய முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, மதம் மாறிய பௌத்தர்கள், பௌத்த ஆதி திராவிடர்கள் என்று அழைக்கப்படும் வகையில், ஏற்கெனவே இருந்த அந்த ஆணையை

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2016 ஜனவரி 22

நடைமுறைப்படுத்துவதற்கு, செயல்படுத்துவதற்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநாள்கொண்டச்சேரியிலே ஒரு தலித்தின் மரணம் ஏற்பட்டது குறித்து இந்த மன்றத்திலே, நேற்றைக்குக்கூட சிலர் வலியுறுத்திப் பேசினார்கள். 15, 20 ஆண்டுகளுக்கு முன்னால் போகிறேன். இதேபோல, அந்த ஊருக்குப் பக்கத்திலே இருக்கிற குடிதாங்கியிலே ஒரு மரணம் ஏற்பட்டபோது, இந்த அவையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து கோரிக்கையை வைத்தபோது, தமிழ்க் குடிதாங்கியாக இருந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எவ்வளவு பெரிய நடவடிக்கையை எடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைக்கு குடிதாங்கி பகுதியிலே பெருமை சேர்த்தார்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சம்பவத்திலும் யார் உண்மையான குற்றவாளிகளாக இருந்தாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்கிற அந்தக் கோரிக்கையை இங்கே முன் வைக்கிறேன்.

தமிழ் மண், தமிழ் மொழி, தமிழ் இனம்; ஆக மண், மொழி, இனம் இந்த மூன்றும் கொஞ்சம் பாதிக்கப்பட்டாலும், ஒரு சின்ன சேதாரத்திற்கு உள்ளானாலும், பொங்கி எழுகிற அரிமாவாய், தமிழகத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆளுமை நீடித்து நிற்கிற வரையிலே, மண்ணுக்கோ, மொழிக்கோ, நாட்டிற்கோ ஒரு பங்கமும் ஏற்படாது என்பதை இன்றைக்குத் தமிழர்கள் உணர்ந்திருக்கிறார்கள்; தமிழ்நாட்டு மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

முல்லைப் பெரியாறு பிரச்சினையானாலும், காவேரி நதி நீர்ப் பிரச்சினையானாலும், அது எந்த வரலாறானாலும் எப்போது அதற்கு விடுதலை, தீர்வு கிடைத்திருக்கிறது, விடுதலைப் பயணம் தொடங்கியிருக்கிறது, முன்னேற்றப் பாதையிலே செல்கின்ற நிலைமை வந்திருக்கிறது என்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழன் காப்பாற்றப்பட வேண்டுமானால், மொழி காப்பாற்றப்பட வேண்டுமானால், இனம் காப்பாற்றப்பட வேண்டுமானால், இந்த நாடு தன்னிகரற்ற நாடாக தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமானால், பல்லாண்டு,



2016 ஜனவரி 22] [முனைவர் செ.கு. தமிழரசன்]

பல்லாண்டு, இந்த ஆளுமையும், ஆட்சியும் நீடித்திருக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது. அதனை 234 தொகுதிகளிலும் நாளைய வரலாறு நிரூபிக்கும், நிரூபிக்கும் என்று சொல்லி, வாழ்த்துகளோடு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

நண்பகல் 12-00

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியையும், வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 ஆம் ஆண்டு சட்டமன்றப் பொதுத் தேர்தலில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அணி மக்களின் பேராதரவோடு மகத்தான வெற்றி பெற்று, ஆட்சிப் பொறுப்புக்கு வந்த காலத்திலிருந்து இந்த 4¾ ஆண்டுகளில் மக்களின் அனைத்து வகையான பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு, மக்களின் நல்வாழ்வுக்கு பல்வேறு நலத் திட்டங்களைத் தந்து, வரலாற்றுச் சாதனைமிக்க இந்த நல்லாட்சியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணி, எண்ணி மக்கள் பாராட்டி மகிழ்கின்றார்கள். அந்த வகையில், ஓராண்டு சாதனையை நூறாண்டுகள் பேசும் அளவிற்கு நிலையை உயர்த்திய அரசு இது.

அதேபோன்று, இந்த ஐந்தாண்டுகளில் ஆற்றிய அளப்பரிய பணிகளின்மூலம், தமிழ்நாட்டு மக்கள் பெற்றிருக்கிற பல்வேறு நலத் திட்டங்களின்மூலம் மக்களின் வாழ்வு உயர்ந்திருக்கிறது. இந்த ஐந்தாண்டுக் கால சாதனைகளின்மூலம், வருகின்ற ஆட்சிக் காலங்களிலே ஒரு முன்மாதிரி அரசாக, ஒரு மிகச் சிறந்த அரசாக இது விளங்குகிற வகையில், மக்கள் நலத் திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் பதிவு செய்து, நிறைவேற்றிக் காட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் இந்த ஐந்தாண்டுக் கால சாதனையை, பல நூறாண்டுகள் பேசுகின்ற சாதனையாக சரித்திரத்தில் இடம்பெறச் செய்திருக்கிறார்கள். உதாரணமாக, வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி, ஆயிரக்கணக்கான மாணவச்

[திரு. உ. தனியரசு] [2016 ஜனவரி 22

செல்வங்கள், இளைஞர்கள் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பைப் பெறுகின்ற வகையில் அளப்பரிய பணியை ஆற்றியிருக்கிறார்கள். இதுவரை கண்டிராத வகையில், அரசுத் துறைகளிலும், தனியார் துறைகளிலும் எண்ணற்ற வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் காட்டிய ஒரு மகத்தான அரசுதான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு; மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.

மகளிருடைய, தாய்மார்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு இதுவரை இல்லாத அளவுக்கு மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்து, அவை ஆரோக்கியமாகச் செயலாற்றிட, அவர்கள் கேட்கின்ற அளவுக்குக் கடனைத் தாராளமாகத் தந்து, இன்று தாய்மார்கள் மகளிர் குழுக்கள் மூலமாகத் தங்களுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்குவதற்கு துறை சார்ந்த அளப்பரிய உதவியைத் தொடர்ந்து செய்கிறது இந்த அரசு.

அதேபோன்று, பசுமை வீடுகள் திட்டம். ஊராட்சிகளில் மட்டுமே நடைபெற்று வந்த பசுமை வீடுகள் திட்டம் பேரூராட்சிகளுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. பேரூராட்சிகளிலே 20 ஆயிரம் பசுமை வீடுகளை நிறுவுகின்ற வகையில், அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி, பேரூராட்சிகளில் இருக்கின்ற ஏழை, எளிய மக்கள், குடிசைகளில் வாழ்கின்ற மக்கள் தங்களது வீடுகளைப் புதுப்பித்துக்கொள்ள, கான்கிரீட் வீடுகளை பசுமை வீடுகளாக மாற்றிக்கொள்ள திட்டம் தந்த அரசு, நம்முடைய அரசு.

என்னுடைய பரமத்திவேலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருச்செங்கோடு-நாமக்கல் இருவழிச் சாலையை நான்குவழிச் சாலையாக உயர்த்துவதற்கு ரூ.120 கோடியை ஒதுக்கீடு செய்து தந்திருக்கிறார்கள். தமிழகத்திலே, முதன்முதலாக நான்குவழிச் சாலையை மாநில அரசு நிறுவிட, அறிவித்த ரூ.120 கோடியை ஒதுக்கியதோடு, அதற்கான பணிகளையும் துவக்கியிருக்கிற அரசு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான்.

அடுத்து, மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிற “அம்மா அழைப்பு மையம்” என்பது தமிழ்நாட்டிலே உள்ள அல்லது இந்தியாவிலே இருக்கின்ற சாதாரண மனிதன்கூட



2016 ஜனவரி 22] [திரு. உ. தனியரசு]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, தங்களுடைய மிக முக்கியமான குறைகளை, கோரிக்கைகளைக் கொண்டு செல்ல முடியும். அப்படி கொண்டு செல்கின்றபோது, அந்தக் குறைகள், கோரிக்கைகள் பதிவு செய்யப்பட்டு, அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த குறுஞ்செய்தி மனுதாரரின் கைபேசிக்கு உடனுக்குடன் அனுப்பப்படும். இப்படிப்பட்ட சிறப்பான திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு துவக்கி வைத்தார்கள். இதன்மூலம் நவீன அரசியல் சமூக நிருவாக நிலைகளிலே ஒரு மிகப் பெரிய புரட்சியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிகழ்த்தியிருக்கின்றது.

அதேபோல், கரும்பு விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ.2,500/- வழங்கப்படும் என்று ஏற்கெனவே தேர்தல் வாக்குறுதியாகத் தந்தார்கள். தேர்தலின்போது தந்த வாக்குறுதியை நிறைவேற்றாத அரசுகளுக்கு மத்தியிலே, தேர்தலின்போது தந்த வாக்குறுதியைவிட கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.2,500/- வழங்கப்படும் என்று அறிவித்த நிலையில், கொடுத்த வாக்குறுதியைவிடக் கூடுதலாக ரூ.2,850/- ஆக அதனை உயர்த்தித் தந்து, கரும்பு விவசாயிகளுடைய நலன்களைப் பாதுகாத்திட, உகந்த அறிவிப்பைத் தந்தவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 12-05

அதுபோன்று, மீனவர்களுடைய உரிமையை, உடைமையை, உயிரைக் காக்கின்ற அரசாக இருக்கிறது நம் அரசு. அதுபோன்று, காவேரி மேலாண்மை வாரியம் அமைப்பது குறித்தும், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தியது குறித்தும், மேலும் அணையின் முழுக்கொள்ளளவான 152 அடி உயரத்திற்கு உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பது குறித்தும் மேதகு ஆளுநர் உரையிலே நம்முடைய அரசின் கொள்கையாக, நோக்கமாக பதிவு செய்யப்பட்டுள்ளதை நான் மிகுந்த மகிழ்வோடு வரவேற்கிறேன்.

அதுபோன்று, இலங்கையிலுள்ள ஈழத் தமிழர்களுடைய உரிமையை மீட்பதிலே, அவர்களுக்கு நீதியைப் பெற்றுத் தருவதிலே, சம வாய்ப்பைப் பெற்றுத் தருவதிலே, சட்டமன்றத்திலே தீர்மானம் கொண்டு வந்து, மத்திய அரசுக்கு, சர்வதேச அரசுகளுக்கு ஒரு

நிர்ப்பந்தத்தை, ஒரு கோரிக்கையை முன்வைத்த தமிழர்களின் நலன் சார்ந்த அரசு, நம்முடைய அரசு என்பதற்காகப் பாராட்டுகிறேன்.

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூன்று தமிழர்களின் உயிரைக் காப்பதற்கு இந்தப் பேரவையிலே தீர்மானம் நிறைவேற்றித் தந்த நாம், கூடுதலாக, அவர்களை விரைந்து விடுவிப்பதற்குரிய சட்ட நடவடிக்கைகளை, கடைசி அதிகாரத்தையும் அரசு பயன்படுத்தும்; பயன்படுத்த வேண்டுமென்கிற அந்த நிலைக்கும் செல்ல வேண்டும்.

தலைநகர் சென்னையிலே உள்ள மனமகிழ் மன்றங்களிலே, மிக முக்கியமான கிளப்களிலே தங்களுடைய பண்பாட்டு உடையான வேட்டியை தமிழர்கள் அணிந்து செல்ல முடியாத நிலையை மாற்றுவதற்கு, பண்பாட்டு உரிமையை மீட்பதற்கு, அதுகுறித்த பிரச்சினை வந்தபோது, தமிழர்கள் வேட்டியை அணிந்துகொண்டு தலைநகர் சென்னையிலே எந்தவிதமான மன்றங்களுக்கும் தடையில்லாமல் செல்ல முடியும் என்கிற அரசாணையைப் பிறப்பித்து, தமிழர்களுடைய பண்பாட்டை மீட்டெடுப்பதிலே உறுதியாக இருக்கிற அரசு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.

அதுபோன்று, இ-சேவை என்கிற பொது சேவை மையங்கள். அரசினுடைய பொதுத் துறை நிறுவனங்களுடைய அலுவலகங்களிலேயே பொதுமக்களுடைய கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டு, அந்த மனுக்களுக்கெல்லாம் உடனுக்குடன் தீர்வு காணுகிற வகையில், வருவாய்த் துறையிலே ஒரு மிகச் சிறந்த மாற்றத்தை, மறுமலர்ச்சியை உருவாக்கி, மக்களுடைய கோரிக்கைகளை, துன்பங்களை, துயரங்களைத் தீர்ப்பதற்கான மகத்தான சேவையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செய்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோன்று, தமிழ்நாட்டிலே மின்சாரப் பற்றாக்குறையே இல்லாத அளவிற்கு மின்மிகை மாநிலமாக மாற்றிக் காட்டியிருக்கிறார் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனே, இதே சட்டமன்றத்திலே, “நான் 2006-ல் ஆட்சிப் பொறுப்பினை விட்டுச் சென்றபோது, தமிழ்நாடு மின்மிகை மாநிலமாக இருந்தது. ஆனால்





2011-லே நாங்கள் வந்தபோது தமிழ்நாடு மின்சாரப் பற்றாக்குறை மாநிலமாக இருந்தது” என்று சொன்னார்கள். அந்த நிலையை மாற்றுவதற்கு 4 ஆண்டுகளிலே ஏராளமான மின் திட்டங்களைத் தந்து, இப்பொழுது தமிழ்நாட்டில் மின் தடையே இல்லாத அளவுக்கு மின்சாரத் துறையிலே மிகப் பெரிய சாதனையை இந்த அரசு படைத்திருக்கிறது.

அதேபோன்று, மீத்தேன் எரிவாயுத் திட்டத்தைத் தடுத்து நிறுத்தி, விவசாயிகளுடைய விளைநிலங்களைப் பாதுகாத்த அரசு; கெயில் நிறுவனம் விளைநிலங்களிலே எரிவாயு குழாய் பதித்துச் செல்வதை விவசாயிகள் சுட்டிக்காட்டியபோது, அதனைத் தடுத்து நிறுத்திய அரசு; பேரிடர் மீட்பிலே, அது ‘தானே’ புயல் என்றாலும், இப்பொழுது சென்னை பெருவெள்ள மீட்புப் பணி என்றாலும், மீட்பு நடவடிக்கைகளை எடுத்து மகத்தான சாதனையைப் படைத்த அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு.

தாய்மார்கள் குழந்தை பெற்ற நிலையில், அந்தப் பச்சிளங் குழந்தைகூட சுகாதாரமான நிலையில் பராமரிக்கப்பட வேண்டுமென்ற நோக்கோடு, இப்போது கடைசியாக அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டகம் தந்து, சுகாதாரத் துறையிலே ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கி, எண்ணற்ற சாதனைகளை இந்த அரசு படைத்திருக்கிறது.

கூட்டுறவுத் துறை, சமூக நலத் துறை, விவசாயம், உணவு, நெசவு என்று அனைத்துத் துறைகளிலும் மாற்றத்தைத் தந்திருக்கிறது இந்த அரசு. அதேபோன்று நெடுஞ்சாலைத் துறையில் சாதனைகள்; தமிழ்நாட்டிலேயே நெடுஞ்சாலைகள் இவ்வளவு தரமாக இருக்கிறதென்றால், சாலைப் போக்குவரத்து இந்த அளவுக்கு மேம்படுத்தப்பட்டிருக்கிறது என்றால், அதற்குக் காரணம் நம்முடைய அரசுதான்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எப்படி மனிதன் ஆரோக்கியமாக வாழ்வதற்கு சுகாதார நிலையங்கள் துவக்கப்பட்டிருக்கின்றனவோ, அதைவிடக் கூடுதலாக, ஆடும், மாடும், கோழியும் ஆரோக்கியமாக வாழ்வதற்கு, வாயில்லாத அந்த விலங்குகளும், பறவைகளும்கூட நோயில்லாமல் மகிழ்ந்து வாழ வேண்டுமென்று கால்நடை பராமரிப்புத் துறையிலே, இதுவரையில்லாத அளவுக்கு சாதாரண குக்கிராமங்களிலேகூட,

[திரு. உ. தனியரசு] [2016 ஜனவரி 22

கால்நடை கிளை நிலையங்களையும், மருந்தகங்களையும் அமைத்து, கால்நடை மருத்துவர்களை நியமித்து, கால்நடைகளுக்கென ஸ்கேன் கருவிகளைத் தந்து, கால்நடைகள் மீதும் அன்பு காட்டி, கால்நடைச் செல்வங்களுடைய வளம், அவற்றின் வாழ்க்கை, ஆரோக்கியம், வளர்ப்பு, வளர்ப்போருடைய மகிழ்ச்சி குறித்து சிந்தித்து, செயலாற்றி கால்நடை பராமரிப்புத் துறையில் இதுவரை கண்டிராத வளர்ச்சியைத் தந்த அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு.

*பிற்பகல் 12-10*

வருவாய்த் துறையிலே நாம் சாதனையைப் படைத்திருக்கிறோம். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த இராஜராஜ சோழன் காலத்திலிருந்து, கரிகால் சோழன் காலத்திலிருந்து, சுதந்திரப் போராட்டத்திற்காக அளப்பரிய தியாகங்களைச் செய்த தியாகிகள் திப்பு சுல்தான் காலத்திலிருந்து ஆரம்பித்து, நம்முடைய ஒப்பற்ற மாவீரன் தீரன் சின்னமலையாக இருந்தாலும், வேலுநாச்சியாராக இருந்தாலும், குயிலி தாயாக இருந்தாலும், அப்படிப்பட்ட சான்றோர் பெருமக்களுக்கும், இலக்கியச் செல்வர்களாக, இலக்கியத் துறையிலே சான்றோர்களாய் விளங்கியவர்களுக்கும் மணிமண்டபம் அமைத்து, திருவுருவச் சிலை தந்து, தமிழ்ச் சமூகம், உயர்ந்த சான்றோர் பெருமக்களை சமகாலத்திலே மதித்து, அவர்களின்பால் ஈர்ப்பை உருவாக்குவதற்கு, மணிமண்டபங்களையும், நினைவாலயங்களையும் தந்த அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.

அதுபோன்று, சட்டமன்றப் பேரவையிலே சட்டமன்ற விதிகளையும், மரபுகளையும் மிகச் சிறந்த முறையில் பாதுகாக்கின்ற அரசு, ஆளுங்கட்சி உறுப்பினர்களைவிட எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு கூடுதலாக, தாராளமாகப் பேச வாய்ப்புத் தருகிற அரசு நம்முடைய அரசு. மிக மென்மையாக, மிகக் கவனத்தோடு, சட்டமன்ற எதிர்க்கட்சிகளுக்கு இருக்கின்ற ஜனநாயக மரபுகளையும், விதிகளையும் முழுமையாகப் பயன்படுத்துகிற, வாய்ப்பைத் தருகிற ஒரே சட்டமன்றம் தமிழ்நாடு சட்டமன்றம் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மட்டும்தான், எதிர்க்கட்சிகள் தாராளமாகப் பேசுவதற்கு, மகிழ்ந்து பேசுவதற்கு வாய்ப்பு தரப்படுகிறது. பாராளுமன்றத்திலே இல்லாத உரிமையைக்கூட தமிழ்நாடு சட்டமன்றத்திலே எதிர்க்கட்சி உறுப்பினர்கள்



2016 ஜனவரி 22] [திரு. உ. தனியரசு]

அனுபவித்து, மகிழ்ச்சியோடு இங்கே சட்டமன்றத்திலே தம்முடைய கடமையாற்றுவதை எண்ணி நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம். ஊடகங்களிலே எதிர்க்கட்சியினர்கூட மறுக்க முடியாத அளவிற்கு நம்முடைய பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அரசை, நம்முடைய சட்டமன்றத்தை, இந்த மாண்புள்ள சட்டமன்றத்தைப் பாராட்டுகிறார்கள். தமிழ்நாடு சட்டமன்றம் மரபுகளுக்கும், மாண்புகளுக்கும் பாரம்பரியமிக்கது. அந்தப் பாரம்பரியத்தைப் பாதுகாக்கிற அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு; மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.

அப்படித்தான் ஓராண்டிலே, ஆற்று நீர் உரிமையிலே தன்னுடைய எல்லா வகையான உரிமைகளையும் மீட்டெடுப்பதற்கு சமரசமில்லாமல் போராடிய அரசு; தமிழர்களின் உரிமைகளுக்காக, உலகளாவிய அளவில் பரவி வாழ்கிற தமிழ்ச் சமூகத்தினுடைய உரிமைகளுக்காகப் போராடுகிற அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.

ஏழை, எளிய மக்களின் கண்ணீரை, துன்பத்தைத் துடைக்கும் வண்ணம், சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து 500 ரூபாய் உதவித் தொகை பெற்று வந்த நிலையை மாற்றி, 1,000 ரூபாய் உதவித் தொகை தந்து, சமூகத்தினுடைய கடைசி நிலையிலே முடங்கிக் கிடந்த முதியோர்கள், விதவைகள், மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட மக்களின் துன்பத்தைத் தீர்ப்பதற்குத் திட்டம் தந்த அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.

தொடர்ந்து இந்த 4¾ ஆண்டுகளில், ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததிலிருந்து, தந்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றியதோடு, வாக்குறுதிகளாகத் தராதவற்றையும்கூட தாயுள்ளத்தோடும், கருணையோடும், அன்போடும், ஈவோடும், இரக்கத்தோடும் நிறைவேற்றி, மக்களாட்சித் தத்துவத்திற்கு மதிப்பு தந்து, ஜனநாயகத்தின்பால் மதிப்பும், பற்றும் கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்களை நேசிக்கிற அரசாக இந்த அரசை வழிநடத்திச் செல்கிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் செல்லாத குக்கிராமங்களே

இல்லை என்ற வரலாற்றை இந்த அரசுதான் 2011-லிருந்து 2016 வரை இந்த 4¾ ஆண்டுகளிலே படைத்திருக்கிறது. மாவட்ட ஆட்சியர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைத்துக் கிராமங்களுக்கும் சென்று பல்வேறு நலத் திட்டங்களை வழங்குவதிலும், மக்களுடைய கோரிக்கைகளைப் பெற்று, கடைசி மனிதன் வாழ்கிற இடத்திற்கும் அரசினுடைய திட்டங்களைக் கொண்டு செல்வதிலும் மகத்தான மக்கள் அரசு, நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. ஒரு முறை அல்ல, இரு முறை அல்ல, சாதாரண கிராமங்களுக்கு பல முறை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சென்றிருக்கிறார்கள். நானேகூட பல முறை மாண்புமிகு அமைச்சர்களோடு சென்றிருக்கிறேன். ஒரு முறை அல்ல, 3 முறை, 4 முறைகூட ஒவ்வொரு கிராமத்திற்கும் மாண்புமிகு அமைச்சர்கள் சென்றிருக்கிறார்கள். சாமியை வரவேற்பதுபோல, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை மக்கள் மகிழ்ந்து வரவேற்கிறார்கள். ஊர் திருவிழாவைப்போல, அரசினுடைய விழாக்களை, தமிழ்நாட்டினுடைய பல்வேறு பகுதிகளிலே, மக்கள் மகிழ்ந்து வரவேற்றுக் கொண்டாடுகிற நிலை இருக்கிறது. அப்படி, மக்கள் மகிழ்ந்து, அரசு நிருவாகத்தோடு இணைந்து செயலாற்றும்வண்ணம், மக்களுடைய துன்பத்தை, துயரத்தைத் தீர்த்து, கண்ணீரைத் துடைத்து, எளிய மக்களுக்கும், பலதரப்பட்ட மக்களுக்கும் நம்பிக்கையூட்டுகிற அரசாகத் திகழ்கிற அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.

சாதி மோதல் இல்லாத, மத மோதல் இல்லாத, வர்க்க மோதல் இல்லாத, அரசியல் மோதல் இல்லாத, தனி மனிதனுடைய உரிமையை, உடைமையைப் பாதுகாத்து, சட்டத்தின், நீதியின் ஆட்சியை நிலைநாட்டி, மக்களுடைய ஜனநாயக உரிமையைப் பாதுகாத்து, எல்லாவகையான மக்களுடைய மாண்புகளையும் பாதுகாத்து, அவர்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பளிப்பது மட்டுமல்ல; அவர்கள் தன்மானத்தோடு வாழ்வதற்கு, சுய மரியாதையோடு வாழ்வதற்கு, கௌரவத்தோடு வாழ்வதற்கு, கடைசி தனி மனிதனும் மகிழ்ந்து வாழ்வதற்கு நாளும் திட்டம் தருகிற அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு.



பிற்பகல் 12-15

அரசியல் அதிகாரம், ஆளும் கட்சியினுடைய எந்த மேலாதிக்கமும் இல்லாத ஒரே அரசு. அப்படிப்பட்ட சமூக தளத்திலே, எப்படிப்பட்ட உயர்ந்த மனிதனாக இருந்தாலும், அவர்கள் சட்டத்தை மீறி எந்த நிலையில் இருந்தாலும், யாரையும் அச்சுறுத்த முடியாத அளவிற்கு, அனைத்துத் தரப்பு மக்களும் உரிமையைப் பெற்று, மகிழ்வோடு நல்வாழ்வு வாழ்வதை உறுதி செய்கிற மகத்தான மக்கள் அரசாகத்தான் இந்த அரசு செயல்படுகிறது. நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையிலே அரசினுடைய கொள்கைகளும், திட்டங்களும், மக்கள் நலத் திட்டங்களும் நிரம்பி இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

நாங்கள் எங்கள் தொகுதியிலே, மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் கலந்து கொண்ட அரசு விழாவிலே பங்கெடுத்தோம். கபிலர் மலை, ஒரு பிரசித்திபெற்ற முருகன் திருக்கோயில். அந்த ஆலயப் பகுதியில் நடந்த அரசு விழாவிலே, அருள் வந்து சாமி ஆடிய முதிய பெண்மணி, ‘இந்த அரசு, மக்கள் நல அரசு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வருகின்ற 2016-ல் (மேசையைத் தட்டும் ஒலி) 234 தொகுதிகளிலும் வெற்றி பெற்று ஆட்சியை முழுமையாகப் பிடிப்பார்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அன்பைப் பெற்றவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக வருவார்கள். ஆட்சியை மீண்டும் நிர்மாணிப்பார்கள்’ என்று முருகனின் ஆலயத்திலே மெய்மறந்த நிலையிலே, ஓர் அருள் வாக்கைச் சொன்னார்கள்.

கடவுள் நம்பிக்கையை மறுக்கின்ற நாங்கள் மட்டுமல்ல; அந்தக் கிராமப்புறத்திலே இருக்கிற மூதாட்டிகூட, மெய்மறந்த நிலையிலே, இறைவனின் வாக்காகச் சொல்லி, இந்த அரசைப் பராமரிப்பதிலே, பாதுகாப்பதிலே, வாழ்த்துவதிலே இன்னமும் இந்த அரசு தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்பதிலே உறுதியாக இருக்கிறார்கள். மெய்மறந்த நிலையிலேகூட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அரசை அவர்கள் நினைத்து, நினைத்து வாழ்கின்ற அளவிற்கு, மக்களின் மனங்களிலே நீக்கமற நிறைந்திருக்கிற மக்கள் நல அரசு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசு தொடர்ந்து நீடிக்க இந்த ஆளுநர் உரையில் அனைத்துத் திட்டங்களும் இருப்பதனால், இந்த மகத்தான மக்கள் அரசு, எல்லா வகையான மக்களின் துன்பத்தை, துயரத்தை எப்படிப்பட்ட நெருக்கடியிலிருந்தும் மீட்ட அரசு. 2016-ல் வருகின்ற பொதுத் தேர்தலிலே முழுமையாக, இன்னும் வலிமையாக, அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி பெற்று, மகத்தான ஆட்சிப் பொறுப்பை ஏற்று, மகத்தான மக்கள் நலத் திட்டங்களை, வரலாற்றுச் சாதனைகளை நாளெல்லாம் தரும், தரும் எனச் சொல்லி, வாய்ப்புக்கு நன்றி பாராட்டி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா, திரு. ஆர். மனோகரன் அவர்கள்.

**திரு. ஆர். மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈகையும் வாகையும். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இன்று காலையில் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் இங்கே உரையாற்றினார்கள். அவரைத் தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள் இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். அவர்கள் எதிர்க்கட்சிகளின் சார்பில் உரையாற்றினார்களா அல்லது ஆளும் கட்சியின் சார்பில் உரையாற்றினார்களா என்பதைத் தாங்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மக்களுக்காக உரையாற்றினார்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** எந்தக் கட்சியின் சார்பில் பேசினார்கள் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். மனோகரன் அவர்கள்.

**திரு. ஆர். மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈகையும் வாகையும் இருகரம் ஏந்திவரும் ஈரிலைப்





பெருந்தெய்வம், வளர்தமிழ் பூமியை வாழ்விக்க வந்த பேரரசி, இல்லார்க்கும், இயலார்க்கும் அரணாய் இருக்கின்ற பேரிமயம். (மேசையைத் தட்டும் ஒலி) வீரத்தின் விளைநிலம், விவேகத்தின் தொடர்களம், காலத்தின் நெடுந்தவம், காவியத்தின் கம்பீரம், பகைக்கு நெருப்பு, பாசத்தின் இருப்பு, வெற்றிகளின் பிறப்பு, மனித சக்தியைக் கடந்த மகாசக்தி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் 20-1-2016 அன்று இப்பேரவையில் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகின்ற அரிய வாய்ப்பினை வழங்கிய ஒப்பில்லாத் தாயின் ஒப்பற்ற அருளுக்கு நன்றி கூறி, எனது உரையைத் துவங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய இந்த உரை, தமிழகத்திலே வாழ்கின்ற ஒவ்வொரு தமிழர்களுடைய மனசாட்சியின் குரலாக இந்த அவையிலே ஒலித்திருக்கிறது என்றே நான் கருதுகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி, அறிவுக் கூர்மையும், (மேசையைத் தட்டும் ஒலி) மதிநுட்பமும் வாய்ந்த அவரது தலைமையின்மீது தமிழக மக்கள் வைத்துள்ள அளப்பரிய நம்பிக்கையை நிலைநாட்டியுள்ளது என்று மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டுள்ளது, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அரசினுடைய மேன்மையினை நாட்டிற்குப் புலப்படுத்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-20

நூறாண்டு காலத்தில் இதுவரை பெய்திராத அளவிற்கு ஒரே நாளில் கொட்டித் தீர்த்த கனமழையின் தாக்கத்தையும், அது ஏற்படுத்திச் சென்ற பாதிப்பின் சுவடுகளையும் குறிப்பிட்டுச் சொல்லியிருப்பதுடன், அந்தப் பாதிப்பிலிருந்து மக்களை மீட்டெடுக்க 7,244 நிவாரண முகாம்களைத் திறந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு, உடை மற்றும் தங்குமிடம் ஆகியவற்றை உடனடியாக வழங்கி அவர்களைக் காத்ததுடன், 36,840 மருத்துவ முகாம்களை நடத்தி, அவர்களுக்கு தொற்றுநோய் ஏதும் பரவவிடாமல் தடுத்து காப்பாற்றிய ஒப்பற்ற தலைவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதையும் மேதகு ஆளுநரின் உரை தெளிவாகத் தெரிவிக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசிடம் 17,432 கோடி ரூபாயை கோரியதோடு நின்றுவிடாமல், சாலைகள், பாலங்கள், பாசனக் கட்டமைப்புகள் மற்றும் பொதுக் கட்டமைப்பு வசதிகளை சரி செய்ய 595.82 கோடி ரூபாய் ஒதுக்கி, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தனிப்பட்ட உடைமைகளை இழந்த குடும்பங்களுக்கு தலா 5,000 ரூபாயும், குடியிருப்புப் பகுதிகளை இழந்த குடும்பங்களுக்கு தலா 10,000 ரூபாயும் அறிவித்துள்ளது இந்த அரசு. குடிசைகள் மற்றும் வீடுகள் சேதமடைந்ததால் பாதிக்கப்பட்ட 5 இலட்சம் குடும்பங்களுக்கு 273.10 கோடி ரூபாயும், வீடுகளில் வெள்ளம் புகுந்ததால் பாதிக்கப்பட்ட 25 இலட்சம் குடும்பங்களுக்கு 1,274 கோடி ரூபாயும் பாதிக்கப்பட்டவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வழங்கி சாதனை படைத்திருப்பது இந்தியாவிலேயே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான் என்பதையும் மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டிருப்பது சிறப்புக்குரியதாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது குறித்து தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களும், நேற்று, இந்தப் பேரவையில் மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் நடைமுறையில் உள்ள விதிகள் குறித்தும், திறந்துவிடப்பட்ட தண்ணீரின் அளவு மற்றும் நாட்கள் குறித்தும் தெள்ளத்தெளிவாக விளக்கி இருக்கின்றார்கள். இதனை தமிழக மக்கள் முழுவதுமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், சில எதிர்க்கட்சிகள் மட்டும் அரசியல் ஆதாயத்திற்காக மாண்புமிகு அம்மா அவர்களின் தலைமையிலான இந்த அரசை விமர்சிக்கின்றன. இயற்கைச் சீற்றத்தினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு குறித்தோ, நீர்நிலை ஆக்கிரமிப்புகள் குறித்தோ பேசுகின்ற தகுதி தி.மு.க.-வினருக்குக் கொஞ்சம்கூட இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால், இவற்றிற்கெல்லாம் மூல காரணமே அவர்கள்தான்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர்நிலைகளில் ஆக்கிரமிப்புகள் ஏற்படக் காரணமாக இருந்தவர்கள் தி.மு.க.-வினர்; நீர்நிலைகள் குறுகுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் தி.மு.க.-வினர்; நீர்நிலைகள் காணாமல் போனதற்குக் காரணமாக இருந்தவர்கள் தி.மு.க.-வினர்; நீர்நிலைகளில் கட்டடங்களைக் கட்ட அனுமதித்தவர்கள் தி.மு.க.-வினர்; மதுரையில் தயா கல்லூரியின் ஒரு பகுதியை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டதை மறந்தவர்கள் தி.மு.க.-வினர். நீதி வழுவா நெறிமுறையில் செங்கோலோச்சும் தங்கத் தாரகை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின்மீது, தங்களை மறந்து, கண்ணாடி வீட்டிலிருந்து கல் வீசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் நிதர்சனமான உண்மையாகும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆன்றோரை, அருந்தமிழ்ச் சான்றோரை மதித்துப் போற்றி வரும் மாண்புமிகு அம்மா அவர்கள், புரட்சிக் கவிஞரின் பிறந்தநாளை தமிழ் கவிஞர்களின் தினமாகக் கொண்டாட அறிவித்திருப்பதையும், டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் அவர்கள் பெயரில் விருது அறிவித்து, அவரது பிறந்தநாளை இளைஞர்களின் எழுச்சி நாளாக அறிவித்திருப்பதையும் மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் குறிப்பிட்டிருப்பதைப் பெருமையுடன் நினைவுகூர்ந்து நன்றி கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மேற்கொண்ட நடவடிக்கையையும், முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்திக் காட்டிய மாண்புமிகு அம்மா அவர்களின் சட்டப் போராட்டத்தின் வெற்றியையும் மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையில் பாராட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது, போற்றுதலுக்குரியது. அம்மா உப்பு, அம்மா உணவகம், அம்மா சிமெண்ட், அம்மா இ-சேவை மையங்கள், அம்மா மருந்தகங்கள் என அம்மாவின் திட்டங்களைக் கண்டு பொறுக்க முடியாமல், இதுவரை சும்மாவே இருந்த சில சூனிய சக்திகள், தேர்தல் வந்தவுடன் மாயாஜாலத்தில் வெற்றி பெற்றுவிடலாம் என கூட்டணி சேர்ந்து, கண்கட்டி வித்தை காட்ட முயற்சி செய்கின்றார்கள்.

மேஜிக் நிபுணர்கள் ஒரு கைக்குட்டைத் துணியை கையில் வைத்துக்கொண்டு, மாற்றி மாற்றி சில முடிச்சுகளைப்

[திரு. ஆர். மனோகரன்] [2016 ஜனவரி 22

போடுவார்கள், சில மூலைகளை இழுப்பார்கள். ஒருமுறை பார்த்தால் முயல் போல் இருக்கும்; இன்னொருமுறை பார்த்தால் தவளைபோல் காட்சியளிக்கும்; பிறிதொருமுறை பார்த்தால் எலி போல் தோற்றமளிக்கும்; அதையெல்லாம் கண்டு தமிழக மக்கள் நிச்சயமாக ஏமாற மாட்டார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-25*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கு ஆண்டுகளில் உணவு தானிய உற்பத்தியில் மூன்று முறை, 100 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கு மேலாக உற்பத்தி செய்து பெரும் சாதனை படைத்துள்ளது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. இதற்கும் மேலாக, மத்திய அரசின் "க்ரிஷி கர்மான்" விருதை இருமுறை பெற்றுள்ளது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. இதே விருதுக்கு 2014-2015 ஆம் ஆண்டிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசே தேர்வு செய்யப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில மின்வழித் தொகுப்பில் 7,485 மெகா வாட் கூடுதல் உற்பத்தித் திறன் குறித்தும், சூரிய ஒளி மின் திட்டங்கள் குறித்தும், தமிழகம் மின்மிகை மாநிலமாக ஒளிர்வது குறித்தும் மேதகு ஆளுநர் அவர்களது உரையில் குறிப்பிட்டிருப்பது, சிறப்புக்குரியது.

தாய் திட்டம், பசுமை வீடுகள் திட்டம், புதுவாழ்வுத் திட்டம் ஆகியவற்றின்மூலம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்துவரும் சிறப்புமிகு பணிகளை மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையில் பாராட்டியுள்ளார்கள்.

ஊரகப் பகுதிகளின் வளர்ச்சியோடு நின்றுவிடாமல், நகர்ப் பகுதிகளின் மேம்பாட்டிற்காக மத்திய அரசின் 'அம்ருத்' (AMRUT) திட்டத்தின்கீழ் 32 நகரங்களையும், 'திறன்மிகு' நகரங்கள் திட்டத்தின்கீழ் 12 நகரங்களையும் மேம்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளையும் மேதகு ஆளுநர் அவர்களின் உரை குறிப்பிட்டுக் காட்டுகிறது.

மெட்ரோ இரயில் திட்டத்தின் சிறப்புப் பணிகள், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்மூலம் பெற்ற 2.42 இலட்சம் கோடி ரூபாய் அளவிற்கான முதலீடுகள் ஆகியன பற்றி மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் சிறப்பாகக் குறிப்பிட்டிருப்பது மாண்புமிகு



2016 ஜனவரி 22] [திரு. ஆர். மனோகரன்]

அம்மா அவர்களின் அரசுக்கு மகுடம் சூட்டுவதாகவுள்ளது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய சாமானிய மக்கள், தங்கள் குறைகளை அரசுக்குத் தெரிவித்து, உரிய தீர்வினைப் பெற, 24 மணி நேரமும் இயங்கும் கட்டணமில்லா அம்மா அழைப்பு மையத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அண்மையில் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் அயராத முயற்சியினால், தீவிரமான திட்டமிடுதலால், தினந்தோறும் அணிவகுக்கும் திட்டங்களினால் செழுமை மற்றும் வளமை பெறுகிறார்கள் தமிழக மக்கள். பெருமை, சீர்மை பெறுகிறது தமிழகம் என்பதால் மனம் புழுங்கி, திட்டங்களைப் பற்றி கருத்துச் சொல்ல ஏதுமில்லை என்பதால், இதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி 1100 என்ற எண்ணை 110-க்குப் பக்கத்திலே ஒரு பூஜ்ஜியத்தைப் போட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார் ஒருவர். இங்கே விதி 110-ன்கீழ் அறிவிப்பு என்றால், மக்களுக்கு மகிழ்ச்சி. சிலர் செய்கிறார்கள், இகழ்ச்சி. 110 என்றாலே இவர்களுக்கு அலர்ஜி. அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது, தமிழக மக்களின் நலனுக்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எண்ணற்ற திட்டங்களை விதி 110-ன்கீழ் அறிவிப்பு செய்து, இன்றைக்கு சிறப்பாக செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். நானும் சொல்கிறேன் 110. இந்த 110-ஐக் கூட்டினால் கிடைப்பதோ இரண்டு. இரண்டு என்றால் இரட்டிப்பு. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் முதியோர் உதவித் தொகை ரூபாய் ஐநூறை ஆயிரமாக்கி, மீன்பிடித் தடைக்கால நிதி உதவி ரூபாய் ஆயிரத்தை இரண்டாயிரமாக்கி, திருமண உதவித் திட்ட நிதியை ரூபாய் இருபத்தைந்தாயிரத்திலிருந்து ஐம்பதாயிரமாக்கிக் காட்டியுள்ளார்கள். அதேபோன்று, தமிழ்நாட்டில் முதல் முறையாக நடத்தப்பட்ட உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் எதிர்பார்க்கப்பட்டதைவிட, இரு மடங்கு கூடுதலான முதலீடுகளை ஈர்த்து, மக்களுக்காக அறிவிக்கப்பட்ட திட்டங்களாகட்டும், ஒதுக்கப்படும் நிதியாகட்டும், ஏழையெளிய சாமானிய மக்களுக்கு வழங்கப்படும் நிதியுதவிகளாகட்டும், அத்தனையும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், கடந்த காலங்களைவிட இரட்டிப்புத்தான். இதனால் மக்களுக்குக்

[திரு. ஆர். மனோகரன்] [2016 ஜனவரி 22

கிடைக்கும் மகிழ்ச்சியும் இரட்டிப்புத்தான். இதை, பூஜ்ஜியத்தை வைத்து வார்த்தை விளையாட்டு காட்டும் பூஜ்ஜியமாகப் போகிறவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்திலிருந்து, குழந்தை பிறந்தவுடன் 'அம்மா குழந்தை நலப் பரிசுப் பெட்டி' மற்றும் 'அம்மா மகப்பேறு சஞ்சீவி' என வழங்கி, அதனைத் தொடர்ந்து அந்தக் குழந்தை பள்ளிக்குச் செல்லும்போது, சீருடை, புத்தகப் பை, காலணி, மிதிவண்டி, மடிக் கணினி என எல்லாம் வழங்கி அந்தக் குழந்தையின் கல்லூரிப் படிப்பு முடியும் வரை, தேவையான எல்லா உதவிகளையும் செய்து, அவரது திருமணத்திற்குத் தாலிக்குத் தங்கம் வழங்கி, திருமண உதவித் தொகையாக ரூ.50,000/- வரை வழங்கி, சீர்வரிசையாக, மின் விசிறி, மிக்சி, கிரைண்டர் ஆகியவற்றையும் வழங்கி, வாழ்வாதாரத்திற்குக் கறவை மாடுகளையும், வெள்ளாடுகளையும் வழங்கி, குடியிருப்பதற்குப் பசுமை வீடுகளையும் தந்து, தமிழக மக்களை தன் மக்களாய்க் கருதி, நம் பாசமிகு அம்மா அவர்கள் பரிவோடு காத்து வருகிறார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்கள் மிதிவண்டி தந்தால், பிற மாநிலங்களும் மிதிவண்டி தருகின்றன. மடிக் கணினி தந்தால், பிற மாநிலங்களும் நம் மாதரசி வழியிலேயே மாணவர்களுக்கு மடிக் கணினி தருகின்றன. மகளிர் காவல் நிலையம் அமைத்தால், மழைநீர் சேகரிப்புத் திட்டம் அமல்படுத்தினால், பிற மாநிலங்களும் ஏற்று பின்பற்றுகின்றன. நற்றமிழ் தாயின் திட்டங்களை நாடே முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றி நடக்கிறது. நல்லரசு நாயகமாம் நம் தாயை வல்லரசும் வந்துதான் வாழ்த்தியே செல்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அம்மாவின் திட்டங்களோ அகிலத்தையும் ஈர்க்கின்றன. மேதகு ஆளுநர் அவர்கள், 'பிற மாநிலங்கள் பின்பற்றத்தக்க முன்மாதிரி மக்கள் நல அரசாகவும் தமிழக அரசு உருப்பெற்றுள்ளது' என்று பாராட்டியிருப்பது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய 5 ஆண்டுக் கால அரசின் சாதனைகளுக்கு மேலும் கட்டியங்கூறும் வைர வரிகள் என்பதைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2016 ஜனவரி 22] [திரு. ஆர். மனோகரன்]

பிற்பகல் 12-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிறந்திருக்கும் இந்தப் புத்தாண்டு, நம் தாய்க்கு நல்லாசி கூறும் நலமிக்க நல்லாண்டு! எதிரிகள் நமக்கு நாமே என்று, தமக்குத் தாமே கழுத்தில் சுருக்கு மாட்டிக்கொண்டு சுருண்டு விழப்போகும் இறுதி ஆண்டு! (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 2016, ஈரிலைத் தாயின் வெற்றிகளை இரட்டிப்பு ஆக்கப்போகும் important ஆண்டு! (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு நம் தாய்க்கு பார் வியக்கும் வெற்றிகள் பன்மடங்காகி, பரிவட்டம் சூட்டப்போகும் ஆண்டு! (மேசையைத் தட்டும் ஒலி) இறைவனின் ஆசியோடு, இலை ஆட்சி மிடுக்கோடு, வாஞ்சைமிகு பூமியின் வருங்காலத்தை வசந்த காலம் ஆக்கப்போகும் ஆண்டு! கட்டுகளைக் காட்டி, வாக்குகளைக் கைப்பற்றத் துடிக்கும் குறுமதியாளர்களை நம் தாய், வேரோடு பிடுங்கி, வெற்றுச் சாம்பலாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) சம்ஹார சாதனை புரியப் போகும் ஆண்டு!

வரவிருக்கும் சித்திரைப் புத்தாண்டையும், இரட்டை இலைக்கான முத்திரைப் புத்தாண்டாக மலர வைக்கப்போகும் ஆண்டு! (மேசையைத் தட்டும் ஒலி) நம் தாயின் வெற்றியை இமயத்தின் உச்சமென உலகமே போற்றிப் புகழப் போகும் ஆண்டு! ஓராயிரம் குள்ளநரிகள் வண்ண வண்ண வர்ணங்கள் தடவி ஒன்றாகக் கூடி நின்றாலும், விஷம் தடவிய கூர் ஆயுதங்கள் ஏந்தி கும்பலாக நின்றாலும், தர்மத்தின் வழி நின்று, தமிழ் மக்கள் துணையோடு வெற்றியின் உச்சத்தை நம் தாய் எட்டப் போகும் ஆண்டு! (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

5 ஆண்டு நல்லாட்சியை தமிழகத்தின் நிரந்தர ஆட்சியாக, தாயின் தலைமையில் தொடர்ந்து நிலைத்திட, நிரந்தர சாசனம் எழுதப் போகும் ஆண்டு! நம் வெற்றித் தாயின் விரல் அசைவின் வீரியத்தை, உலகுக்கு உணர்த்தப் போகும் ஆண்டு! (மேசையைத் தட்டும் ஒலி) வரும் வைகாசித் திங்களில் வள்ளல் தாயின் கரங்களில் புத்தம் புது செங்கோல், புதுமைகளால் ஜொலிக்கப் போகும் ஆண்டு! (மேசையைத் தட்டும் ஒலி) பார் புகழும் பாரதத்தின் வளர்ச்சியில் முன் நிற்கும் முதல் மாநிலம் தமிழகம்தான் என்னும் வரலாற்றை நிரந்தரமாக்கப் போகும் நல்லாண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆம்! தமிழகத்தில் வெற்றி

[திரு. ஆர். மனோகரன்] [2016 ஜனவரி 22

பெறப் போகும் 234-ம், அதனைத் தொடர்ந்து நியமிக்கப்படும் 235-ஆவதையும் சேர்த்து, இந்தச் சட்டமன்றத்தில் அமரப் போவது நம் தாயின் நல்லாசி பெற்ற பிள்ளைகள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இது சத்தியம்! சத்தியம்! சத்தியம்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரையின்மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பேசுகின்ற அரிய வாய்ப்பினை அளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14-வது சட்டமன்றப் பேரவையில், மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது புதிய தமிழகம் கட்சியின் சார்பாக சில கருத்துகளை முன்வைப்பதற்கு எனக்கு அனுமதி அளித்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் முதற்கண் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் பல்வேறுவிதமான நிகழ்வுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. எல்லா அம்சங்கள்மீதும் பேசுவதற்கு நேரம் இடம் கொடுக்காது என்ற அடிப்படையில் ஒருசிலவற்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாக, அண்மையில் பெய்த மழை, சென்னை, கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் தென் தமிழகத்தில் தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களை மிகப் பெரிய பாதிப்புக்குள்ளாக்கியது மட்டுமல்ல; இலட்சக்கணக்கான மக்களுடைய வாழ்க்கையைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டது. சென்னை, கடலூர் போன்ற மாவட்டங்களுக்குக் கிடைத்த முக்கியத்துவம் ஏனோ தெரியவில்லை, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களுக்குக் கிடைக்காமல் போய்விட்டது என்ற வருத்தத்தை இந்தச் சட்டமன்றத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.



2016 ஜனவரி 22]

பிற்பகல் 12-35

**மாண்மிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 மாவட்டங்களிலே பெருமழை பெய்ததன் காரணமாக, தூத்துக்குடி, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். சென்னை போன்ற மாவட்டங்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்காணிப்புப் பணிக்காகவும், மாவட்ட நிருவாகத்திற்குத் தக்க அறிவுரை வழங்குவதற்காகவும், வழிகாட்டுவதற்காகவும் அனுப்பி வைத்ததைப்போலவே, தூத்துக்குடி மாவட்டத்திற்கு மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களையும், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை கண்காணிப்பு அதிகாரிகளாகவும் அனுப்பி வைத்தார்கள். மேலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று மத்தியக் குழுவும் தூத்துக்குடி மாவட்டத்திற்குச் சென்று ஆய்வுப் பணியை மேற்கொண்டது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆம் தேதி முதல் டிசம்பர் மாதம் 29 ஆம் தேதி வரையிலும் பல்வேறு நாட்களில் கடும் மழை பெய்தது. நவம்பர் மாதம் 21 மற்றும் 23 ஆகிய நாட்களில் ஏற்பட்ட மிகப் பெரிய வெள்ளத்தால் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், வேலைவாய்ப்பு அலுவலகம் உட்பட மாநகராட்சியின் பாதி பகுதிகளுக்குமேல் வெள்ளத்தில் மிதந்தன. ஏறக்குறைய பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் தங்களுடைய வீடுகளில் வெள்ள நீர் புகுந்ததன் விளைவாக தங்கள் இல்லங்களுக்குச் செல்ல முடியாமல் கண்ணீர் சிந்தினார்கள். ஆனால், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல், 25 ஆம் தேதியே தூத்துக்குடி

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2016 ஜனவரி 22

மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் இயல்பு வாழ்க்கை வந்துவிட்டது என்று ஓர் அறிக்கை கொடுத்தார். இயல்பு வாழ்க்கை வந்துவிட்டது என்று சொன்னால், என்ன பொருள்? பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் 6 அடி முதல் 8 அடி வரையிலும் தண்ணீர் புகுந்ததால், மக்கள் வீட்டிற்குள் இருக்க முடியாமல் வீதிக்கு வந்தார்கள், எங்கே தங்குவது என்று தத்தளித்தார்கள். ஆனால், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவரும் இயல்பு வாழ்க்கை திரும்பிவிட்டது என அறிக்கை கொடுத்தார்கள் என்று சொன்னால், அது எந்த அளவுக்கு வேதனை அளிக்கக்கூடியது என்பதை உணர வேண்டும்.

**மாண்மிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் 13-11-2015 மற்றும் 14-11-2015 ஆகிய நாட்களில் காலை எடுக்கப்பட்ட அளவின்படி சராசரியாக 44.60 மி.மீ. மழை பெய்திருந்தது. இதில், அதிகபட்சமாக, ஒட்டப்பிடாரத்தில் 74 மி.மீ. மழையும், மணியாச்சியில் 72 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

ஒட்டப்பிடாரம் மற்றும் மணியாச்சியில் பெய்த கன மழையின் காரணமாக தூத்துக்குடி வட்டம், கோரம்பள்ளம் குளத்திலிருந்து வரும் காட்டாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, அதன் கொள்ளளவைவிட கூடுதலாக தண்ணீர் சென்ற காரணத்தால், தூத்துக்குடி, புதுக்கோட்டை அருகிலுள்ள ராஜீவ் நகர், பாக்கியலட்சுமி நகர் பகுதிகளிலும், மரவன்மடம் ஊராட்சியில் அந்தோனியார்புரம், தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பி & டி காலனி, முத்தாலம்மன் காலனி ஆகிய பகுதிகளிலும் வெள்ள நீர் புகுந்தது. இப்பகுதிகளில் ஏற்படும் வெள்ளப் பெருக்கைத் தடுக்கும்பொருட்டு, மேற்படி மழைநீரின் வடிகாலான கோரம்பள்ளம் குளத்தின் மொத்தமுள்ள 24 மதகுகளில் 22 மதகுகள்மூலம் வினாடிக்கு 22 கன அடி நீர் கடலுக்குள் செல்லும் வகையில் திறந்துவிடப்பட்டது. இதனால், கோரம்பள்ளம் குளத்தின் வடிநீர் செல்லும் வழியிலுள்ள தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட அத்திமரம்பட்டி, முத்தையாபுரம், ஜே.எஸ். நகர், வீரநாயக்கன்பட்டி பகுதிகளிலும், முள்ளிக்காடு



2016 ஜனவரி 22] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

ஊராட்சிப் பகுதியிலும் வெள்ள நீர் வந்துவிட்டது. எனவே, மேற்படி பகுதிகளிலுள்ள மக்களின் பாதுகாப்பு கருதி, 10 தற்காலிக முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றில் 1,477 நபர்கள் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான உணவு, குடிநீர், ஆடைகள் முதலியன வழங்கப்பட்டன. அதன் அடிப்படையிலேதான் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

மக்களுடைய இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படக் கூடாது என்பதுதான் அரசினுடைய எண்ணமாக, கொள்கையாக இருந்தது. அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதன் அடிப்படையில்தான், மாவட்ட நிருவாகத்தின் சார்பில் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும் அந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள். இதில் கண்ணீர் வடிப்பதற்கும், வேதனைப்படுவதற்கும் என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. மக்களுடைய இயல்பு வாழ்க்கை திரும்ப வேண்டும் என்பதுதான் எல்லோருடைய எண்ணமாக இருந்தது. அதற்கான முயற்சிகளைத்தான் மேற்கொண்டார்கள். இதில் வேதனைப்படுவதற்கு என்ன இருக்கிறது என்று தெரியவில்லை.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் இல்லங்களுக்குச் செல்ல முடியாத நிலை வேதனை இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான இடங்களிலே நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு, தாழ்வான பகுதிகளில் இருப்பவர்களை முகாம்களில் தங்க வைத்து, அவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், தேவையான மருத்துவ வசதி அனைத்தும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. மக்களுடைய இயல்பு வாழ்க்கை திரும்ப வேண்டும் என்பதற்காகத்தான் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (குறுக்கீடு)

[2016 ஜனவரி 22

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகாம்களில் அரசின் சார்பாக உணவளிக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏற்பட்ட பெருமழையின் காரணமாக தூத்துக்குடி மாவட்டத்திலும் வெள்ளம் வந்து பாதித்தபோது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, மாவட்ட நிருவாகம் அனைத்து நடவடிக்கைகளையும் சிறப்பாக எடுத்து, பாதிக்கப்பட்ட மக்கள் 11 இடங்களில் இருந்த முகாம்களில் தங்கவைக்கப்பட்டு, அவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டு, நிலைமை சீரான பிறகு அவர்களாகவே அவரவர் இல்லங்களுக்குப் போகின்ற வரையில் அனைத்து உதவிகளையும் அரசு செய்து, அவர்கள் திருப்திகரமாக அவரவர் இல்லங்களில் போய் குடியிருந்தார்கள் என்பது அப்பகுதி மக்களுக்கும், அம்மாவட்ட மக்கள் அனைவருக்கும் தெரியும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே வந்து அரசு கொடுத்த அனைத்து சலுகைகளையும் 'அது காணாது, இது காணாது' என்று சொல்லி, நீங்கள் சாலை மறியல் செய்யுங்கள் என்று மக்களை தூண்டிவிட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால், நானும், அவரும் ஒரே இடத்தில் நேருக்கு நேராகக்கூட நின்றோம். இது காணாது, ஒரு இலட்சம் கொடுத்தால்தான் இந்த இடத்தைவிட்டு போக வேண்டும் என்று அவர் தூண்டிவிட்டது எல்லோருக்கும் தெரியும்; வீடியோவில் பதிவாகி இருக்கிறது. இந்த அளவிற்கு இதனை அவர் அரசியலாக்கினாரே தவிர மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அவர் செயல்படவேயில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதை அரசியலாகத்தான் ஆக்கினார். ஒரு பகுதியில் உள்ள மக்களுக்குத்தான் வேண்டும் என்று கேட்டாரே தவிர, அனைத்து மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அனைத்து மக்களுக்கும் நன்மை வேண்டும் என்று கேட்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பகுதி மக்களுக்கு மட்டும்தான் வேண்டுமென்று கேட்டார். மாவட்ட நிருவாகமும் நானும் ஒருமாத காலம் அங்கே இருந்து அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து,



2016 ஜனவரி 22] [திரு. எஸ்.பி. சண்முகநாதன்]

மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த நிவாரணத் தொகைகளையெல்லாம் உடனடியாக வழங்கினோம். வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாடப்புத்தகங்கள், சான்றிதழ்கள் மற்றும் குடும்ப அட்டை ஆகியவற்றை உடனுக்குடன் வழங்கியுள்ளோம். தேர்தலுக்காக, மீண்டும் தேர்தலில் நின்று வெற்றி பெற முடியுமா என்பதற்காக இந்த அவையில் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிக் கொண்டிருக்கிறார். இதை நாங்கள் நேருக்கு நேர் பார்த்திருக்கிறோம். இவர் மக்களைத் தூண்டி விட்டதும், நாங்கள் மக்களை சமாதானப்படுத்தியதும் நடந்த உண்மை. இவையெல்லாம் வீடியோக்களில் பதிவாகி உள்ளன. வேண்டுமென்றே அரசியலாக்க வேண்டாம். உங்கள் கட்சி வளர வேண்டும் என்பதற்காக இதைக் கொண்டு வந்து இங்கு சேர்க்க வேண்டாம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்திற்கு 3 முறை உயர் அதிகாரிகளை அனுப்பி வைத்து அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார்கள். எந்தெந்தப் பகுதிகளில் தண்ணீர் இருந்ததோ, அதனை மோட்டார் வைத்து வடிய வைத்தோம். குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்த இடத்திலேயே நாங்கள் சமையல் செய்து கொடுத்திருக்கிறோம். இப்படி அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்துள்ளோம். வீரநாயக்கன்தட்டு, கக்கன்ஜி நகர், சோரீஸ்புரம் ஆகிய இடங்களுக்கு நேரில் சென்றிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் செல்லவில்லை என்றாலும் நான் அங்கு சென்றிருக்கிறேன். நான் போன பிறகுதான் மாண்புமிகு உறுப்பினர் வந்தார். இதைப் பெரிதுபடுத்த வேண்டாம். அந்த மக்கள் குறை சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர்தான் அரசியலுக்காகக் குறை சொல்கிறார் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாக ஒரு நிவாரண முகாம்கூட அமைக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். (குறுக்கீடு) யார் அளித்தது, நீங்கள் அளித்தீர்களா?

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகாம்கள் அமைத்ததே அரசாங்கமும், மாவட்ட நிருவாகமும்தான். மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவின்பேரில், உடனுக்குடன் அந்தப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு போன்றவற்றை மூட்டை, மூட்டையாக வழங்கினோம். மாண்புமிகு உறுப்பினர்தான் அந்தப் பகுதிகளுக்குச் செல்லவில்லை. ஒரு மாதம் அங்கேயே தங்கியிருந்து, தாழ்த்தப்பட்ட மக்கள் எங்கெங்கு வசிக்கிறார்களோ, அந்த இடங்களுக்குச் சென்று, எல்லா இடங்களிலும் பொருட்கள் வழங்கப்பட்டன. நீங்கள் சுகம் ஓட்டலைவிட்டு வெளியே வரவில்லை. நாங்கள் எல்லா இடங்களுக்கும் சென்று, நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளோம். நீங்கள் அதனை அரசியலாக்காதீர்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் இந்த சப்ஜெக்ட்டை விட்டு விட்டு வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள். (குறுக்கீடு) நேரம் அதிகமாகி விட்டது. (குறுக்கீடு) நேரம் அதிகமாகி விட்டது, நீங்கள் வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ** (குறுக்கீடு) நீங்கள் எல்லோரும் ஒருசேரப் பேசினால், நான் எப்படிப் பேச முடியும்?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை. இவையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) அரசு அனைத்து மக்களுக்கும் நிவாரணம் வழங்கியது என்று தானே மாண்புமிகு அமைச்சர் சொல்கிறார். ஆனால், ** என்று சொன்னால் எப்படி? பொதுவாக, நீங்கள் ஆதாரமில்லாமல் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. அதுவெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் வேறு சப்ஜெக்ட்டில் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*





**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவின் அரசு அனைத்து மக்களுக்கும், எல்லா உதவிகளையும் சரி சமமாக வழங்கியது. தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதியிலே தங்கியிருந்து உணவு சமைத்துக் கொடுத்திருக்கிறோம். நாங்கள் அந்த இடத்தை விட்டு வேறு இடத்திற்குப் போகாமல், அந்த இடத்திலேயே தங்கியிருந்து உணவு சமைத்துக் கொடுத்திருக்கிறோம். வேறு எங்கேயிருந்தும் நாங்கள் உணவு கொண்டு வந்து கொடுக்கவில்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *என்ன? (குறுக்கீடு) இல்லை, யாரை அனுமதிப்பது என்பது பேரவைத் தலைவரின் உரிமையாகும். (குறுக்கீடு) அதைப்பற்றியெல்லாம் நீங்கள் கேட்க முடியாது. நீங்கள் பேசுவதற்கான வாய்ப்பை நான் தருகிறேன். நீங்கள் பேசுங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடு) பேரவைத் தலைவரின் உரிமையைப் பற்றியெல்லாம் நீங்கள் பேசக்கூடாது.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய நான்கு வார காலத்திற்கு மேலாக வீடுகளில் வெள்ளம் சூழ்ந்து, மக்கள் அல்லல்பட்டது குறித்து, சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நான் தொடுத்த வழக்கின் அடிப்படையில்தான் வீடுகளில் சூழ்ந்த வெள்ள நீரை வெளியேற்றுவதற்குண்டான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (குறுக்கீடுகள்) அது உண்மை. நீதிமன்றத்தில் அந்த வழக்கு வந்தது. (குறுக்கீடுகள்) யாருக்கு தெரியும் அது. நான் தூத்துக்குடிக்குப் போய் வந்தேனா, இல்லையா என்பதை அங்கு கேட்டால் தான் தெரியும். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினரைக் கட்டுப்படுத்துங்கள். சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையிலே வழக்கு தொடுத்து, நீதிமன்றம் காட்டிய கருணையின் அடிப்படையில்தான், உயரழுத்த மின்சார மோட்டார்கள் வைக்கப்பட்டன. அதன் காரணமாக அந்த மக்களுக்கு மிகப் பெரிய அளவில் நிவாரணம் கிடைத்தது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடகிழக்குப் பருவ மழையைப் பொறுத்தவரையில், நூறு ஆண்டுகளில் பெய்யாத கன மழை இந்த ஆண்டு பெய்தது என்பதை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். நேற்றுகூட மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்*

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2016 ஜனவரி 22

தெளிவாகச் சொன்னார்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் கொட்டுகிற மழையிலும், தலைமைச் செயலகத்திற்கு வந்து அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் நீதிமன்றத்திற்குச் சென்றதனால்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொல்கிறார். இந்த கன மழையின் காரணமாக, தமிழகம் முழுவதும் 7,500 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு, 25 இலட்சம் மக்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, ஒரு கோடியே 36 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வழங்கப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, வெள்ள மழையை கருணை மழையால் வென்ற தலைவி நம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நீதிமன்றத்திற்குச் சென்றதற்கான காரணம் அவருக்குத்தான் தெரியும். ஆகவே, நீதிமன்றம் உத்தரவு அளிப்பதற்கு முன்பாகவே, அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், தேவையான மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் மேற்கொண்டார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர் நீதிமன்றத்திற்குச் சென்றதனால்தான், மோட்டார்களை வைத்து தண்ணீர் எடுக்கப்பட்டதாகச் சொல்கிறார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த வெள்ளம் வருவதற்கு முன்பே ஒவ்வொரு துறையையும் alert செய்து, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி போன்ற பகுதிகளுக்கு என்னென்ன தேவைகள் என்பதை அறிந்து, அனைத்து உபகரணங்களையும் கொடுத்து உரிய நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எல்லா அமைச்சர்களையும், அதிகாரிகளையும் முன்கூட்டியே அழைத்து, யார் யார் என்னென்ன செய்ய வேண்டும் என்கிற



2016 ஜனவரி 22] [திரு. எஸ்.பி. வேலுமணி]

பொறுப்பையும் கொடுத்து, தமிழகம் முழுவதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது அரசு நிவாரண முகாம்களில் உணவுப் பொருட்கள் கொடுக்கவில்லை என்று சொன்னார். நிவாரண முகாம்களில் மட்டுமல்ல, வெள்ளம் பாதித்த ஒவ்வொரு வீட்டிற்கும் சென்றோம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டபின், நாங்கள் காஞ்சிபுரம் மாவட்டத்தை நேரில் நின்று பார்த்தோம். உயர் கல்வித் துறை அமைச்சர், தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் இவர்களோடு நானும் ஒவ்வொரு வீடாகப் போய் வெள்ள நிவாரணப் பணிகளைப் பார்த்தோம். இரவு பகலாக ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு வேளையும் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, இந்த சப்ஜெக்ட்டை விட்டு வேறு சப்ஜெக்ட் குறித்துப் பேசுங்கள். உங்களுக்கு நேரமாகிவிட்டது. பிறகு பேச நேரம் கொடுங்கள் என்று நீங்கள் கேட்டால் நான் ஒத்துக்கொள்ள மாட்டேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மழை வெள்ளத்தால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையாகவோ, பாதியாகவோ பழுதடைந்திருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாநகராட்சிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நகராட்சி நிருவாக இயக்குநர் திரு. பிரகாஷ், இ.ஆ.ப. அவர்களை மேற்பார்வைக்கு அனுப்பியதோடு, அருகில் உள்ள மாநகராட்சி,

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2016 ஜனவரி 22

பேரூராட்சி உள்ளிட்ட பல்வேறு இடங்களிலிருந்து மோட்டார் உள்ளிட்ட பல உபகரணங்களை எல்லாம் வழங்கியதோடு, என்னென்ன வசதிகள் தேவையோ, அனைத்திற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தூத்துக்குடி மாநகராட்சிக்கு, தூத்துக்குடி மாவட்டத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். இவை எல்லாமே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். எதனால் இப்படிப் பேசுகிறார் என்பதும் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் வேறு சப்ஜெக்ட்டுக்கு கண்டிப்பாகப் போக வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி எல்லா இடங்களிலும் இன்ஸ்பெக்ஷன் நடந்தபோது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், எல்லா அதிகாரிகளுடனும் போயிருக்கிறார்; அதையும்கூட நாம் ஜெயா டி.வி.யில் பார்த்தோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணற்ற கால்நடைகள், ஆடுகள், மாடுகள் இறந்திருக்கின்றன. நான் தனிப்பட்ட முறையிலே கணக்கெடுத்தவரையிலே 12,000-க்கும் மேற்பட்ட ஆடுகள் இறந்து போயிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் தனிப்பட்ட முறையிலே. . .

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் ஊர் ஊராகப் போய் மனு வாங்கினேன். ஒவ்வொரு விவசாயினிடத்திலேயும் வாங்கிய மனுக்கள் 14,000 மனுக்கள். அந்த மனுக்களிலேயிருந்து பெறப்பட்ட புள்ளிவிவரம்தான் அந்த 12,000 ஆடுகள். அதற்கு ஆதாரம் இருக்கிறது. அதை கோர்ட்டில் சமர்ப்பித்து விட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறந்து விட்டால் Postmortem செய்கிறார்கள். அதுபோல மாடோ, ஆடோ, 12,000 கால்நடைகளை Postmortem செய்த report உங்களிடம் இருக்கிறதா?



2016 ஜனவரி 22]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போனால், காட்டுக்குள்ளே ஆடு செத்துப்போனால் எப்படி Postmortem செய்வீர்கள்? (குறுக்கீடு) இல்லை, மேய்க்கப்போன ஆடு காட்டுக்குள் செத்துப்போனால் Postmortem செய்ய முடியுமா? அதற்குப் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போனது உண்மையாக இருந்து, விசாரணை செய்து கிராம நிருவாக அலுவலர் சான்று கொடுத்தால் உடனடியாக நிவாரணம் வழங்கப்படும். மக்கள் பிரதிநிதியான நீங்கள், நாளைக்கு அங்கே நின்று தேர்தலில் வெற்றி பெற வேண்டுமென்ற காரணத்தால், மனுவை வாங்கிக் கொடுத்தால் நிவாரணம் கொடுக்க முடியாது. கால்நடைகள் பாதிக்கப்பட்டிருந்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, வருவாய்த் துறை மூலமாக நிவாரண நிதி வழங்கப்படும். அதுதான் முக்கியம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நேரமாகி விட்டது. இன்னும் 8 பேர் பேச வேண்டும். உரையை முடியுங்கள். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10,000 குடிசைகள் பாதிக்கப்பட்டதாக அவருக்குத் தெரிந்த கணக்கைச் சொன்னார்கள். குடிசைகள் சேதத்தைப் பொறுத்தளவிலே 621 குடிசைகள் முழுவதுமாகவும், 2,051 குடிசைகள் பகுதியாகவும், மொத்தம் 2,672 குடிசைகள் சேதமடைந்து, ஒரு கோடியே 17 இலட்சத்து 71 ஆயிரத்து 500 ரூபாயை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிவாரணமாக வழங்கியிருக்கிறார்கள். அதேபோல, தண்ணீர் சூழ்ந்த குடியிருப்புப்

பகுதியாக 21,100 வீடுகள் கணக்கெடுக்கப்பட்டு, அவற்றிலே 20,420 வீடுகளுக்கு ஏறத்தாழ 10 கோடியே 21 இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். 680 வீடுகளுக்கு இன்னும் வழங்க வேண்டியிருக்கிறது. அதேபோல, கால்நடைகளைப் பொறுத்தளவிலே, 33 கால்நடைகளுக்கு 2 இலட்சத்து 31,000 ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு கால்நடைகளைப் பற்றி அவர்கள் சொல்கிறார்கள். கால்நடை இழப்பிற்கு 30,000 ரூபாய் வழங்குகிற முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆடுக்கு 3,000 ரூபாயும், கோழிக்கு 100 ரூபாயும் இழப்பீடு வழங்குகிறவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இவை எல்லாம் தெரிந்த உறுப்பினர்தான், இப்போது ஏதோ புரியாததுபோலப் பேசுகிறார். ஆகவே, இதுதான் உண்மையான கணக்கு. அவர் தனியாகக் கணக்கு எடுக்கத் தேவையில்லை. வெள்ள நிவாரணம் வழங்குவதிலே அறிவுபூர்வமான கணக்கை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்று இந்தியத் திருநாடே பாராட்டிக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை, வெள்ளத்தின்போது பாதிக்கப்பட்ட அனைத்து இடங்களுக்கும் வீடு, வீடாகச் சென்று அதிகாரிகள் எல்லோருமே சென்று, முறையானபடி கணக்கெடுத்து, ஆடு, மாடு, கோழி முதற்கொண்டு அவற்றிற்கு என்ன பாதிப்பு என்பதைக் கணக்கெடுத்து, அனைவருக்கும் நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வந்தது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சுகம் ஓட்டலில் இருந்துகொண்டு, பாதிக்கப்பட்டவர்கள் என்னிடம் வந்து புகார் தெரிவிக்கலாம் என்று Hotel address-ஐக் கொடுத்து, Hotel-ல்தான் தங்கி இருந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி இருக்கும்பொழுது அவரிடம் யார் மனு கொடுத்திருப்பார்கள்





என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளலாம். ஆனால், அரசு அதிகாரிகள், மக்களோடு சேர்ந்து வீடு, வீடாகச் சென்று முறையாகக் கணக்கெடுத்தார்கள். எனவே, அனைவருக்கும் நிவாரணம் வழங்கப்பட்டு விட்டது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாய்ப்பு இல்லை, நேரம் ஆகிவிட்டது. இதோடு நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 இலட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களில் பயிர் வகைகள், தானியங்கள், வாழை, நெல், காய்கறி வகைகள் ஆகியவை 2 மாத காலத்திற்கு மேலாகப் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் முழுவதுமாக அழிந்துபோய் விட்டன. எனவே, ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம், கோவில்பட்டி, திருச்செந்தூர், விளாத்திகுளம் உள்ளிட்ட தாலுகாகளில் முறையான பயிராய்வு செய்து, விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். (குறுக்கீடு) அமைச்சர் பெருமக்கள், நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை முதலில் கவனிக்க வேண்டும். நான் accuse பண்ண வரவில்லை. மாவட்டத்தில் அதிகாரிகள் முறையாக பயிராய்வு செய்யவில்லை. Azmoish என்றால் பயிராய்வு. முறையாகப் பயிராய்வு செய்ய வேண்டும், கிராமங்களுக்குப் போக வேண்டும், விவசாயிகளிடம் மனு வாங்க வேண்டும். ஆனால், அதிகாரிகள் ரோட்டிலேயே போனார்கள். கிராமத்திலே field-லே இறங்கி ஆய்வு செய்யவில்லை. அதைத்தான் சொல்ல வருகிறேன். அதை நீங்கள் முறையாக inspection பண்ணுங்கள் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சரியான கணக்கீடு எடுக்கப்பட வேண்டும் என்று சொல்கிறார்கள். பயிர் சேதத்தைப் பொறுத்தளவிலே, வேளாண்மைத் துறை மட்டுமல்ல, வருவாய்த் துறையும், புள்ளியியல் துறையும் சேர்ந்துதான் அங்கே கணக்கெடுக்கின்றார்கள். அந்த வகையில், தூத்துக்குடி மாவட்டத்தில், மொத்தம் சாகுபடி செய்யப்பட்டது,

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2016 ஜனவரி 22

தோட்டக்கலைத் துறையைப் பொறுத்தளவிலே 38,848 ஹெக்டேர். வேளாண்மைத் துறையைப் பொறுத்தளவிலே 1 இலட்சத்து 41 ஆயிரத்து 261 ஹெக்டேர். தோட்டக்கலைத் துறையில் மழையினால் பாதிக்கப்பட்ட பரப்பளவு 9,566 ஹெக்டேர். வேளாண்மைத் துறையில் 13,173 ஹெக்டேர். ஆக, தோட்டக்கலைத் துறையைப் பொறுத்தளவிலே, இதுவரை நிவாரண உதவி 36,068 பயனாளிகளுக்கு ஏறத்தாழ 6,712.873 ஹெக்டேருக்கும், வேளாண்மைத் துறையைப் பொறுத்தளவிலே, 12,055 பயனாளிகளுக்கு 5,509.00 ஹெக்டேருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. நிதி ஒதுக்கீடாக ரூபாய் 7 கோடியே 69 இலட்சத்து 38 ஆயிரம் தோட்டக் கலைத் துறைக்கும், வேளாண்மைத் துறைக்கு 7 கோடியே 6 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். பூனை கண்ணை மூடிக்கொண்டால் உலகம் இருண்டுவிட்டதாக நினைக்கக்கூடாது. இதெல்லாம் வழங்கப்பட்டபின், உதவியைப் பெற்ற அந்த விவசாயிகள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் விவசாயிகளுடைய ஒரே பாதுகாவலர், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய பாதுகாப்பு அரண் என்று வாழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வளவு தொகையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். 5 அரசாணைகள் மூலமாக 2,640 கோடி ரூபாய் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் நிவாரணப் பணிகளுக்காக, மீட்புப் பணிகளுக்காக வழங்கி மக்களுடைய நலனைக் காத்து, மக்கள் நலன் காக்கிற அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்று நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு 2011-ல் இங்கே ஆட்சிப் பொறுப்பேற்று, மாண்புமிகு அம்மா



2016 ஜனவரி 22] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அவர்களின் 100 நாள் சாதனை குறித்து இந்தச் சட்டமன்றத்தில் பேசும்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொன்ன ஒரு கருத்தை நான் இங்கே பதிவு செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். "எத்தரப்பு மக்களாக இருந்தாலும், விவசாயிகளாக இருந்தாலும், தொழிலாளர்களாக இருந்தாலும், இன்னும் சொல்லப்போனால், மனித குலத்திற்கு அப்பாற்பட்டு இருக்கக்கூடிய விலங்கினங்களும்கூட இந்த ஆட்சியிலே தனக்கு நீதி கிடைக்கும் என்று எண்ணக்கூடிய ஒரு நிலைமை உருவாகி இருக்கிறது." (மேசையைத் தட்டும் ஒலி) என்று பேசிய மாண்புமிகு டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் இடையில் ஏற்பட்ட சுனாமியில் சிக்கி (சிரிப்பு) அந்தப் படகு இப்பொழுது துடுப்பு இல்லாத படகாக சென்று கொண்டிருக்கிறது என்பதனை நான் இந்தச் சபைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 1-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, இதோடு உரையை முடித்துவிடுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில், குடிசைகள் முழுவதுமாக சேதமடைந்தால் 5,000 ரூபாய், அத்துடன் வெள்ளம் சூழ்ந்தால் 5,000 ரூபாய், ஆக 10,000 ரூபாய் நீங்கள் கொடுக்கிறீர்கள். அதைப்போல, தூத்துக்குடி மாவட்டத்திற்கும் தரவேண்டும் என்ற நோக்கத்தில்தான் சொல்கிறேனேதவிர, இது accusation இல்லை. நான் குற்றம் சுமத்துவதற்காக வரவில்லை. முறையாக, தூத்துக்குடி மாவட்டத்தில் இன்றுவரையிலும் வெள்ளப் பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்யவில்லை என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன், அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, அதைப் பற்றியெல்லாம் நிறைய சொல்லிவிட்டீர்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நேரமில்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நேரமில்லை, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர்

[பேரவைத் தலைவர்] [2016 ஜனவரி 22

எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள். நிறைய பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை, நிறைய பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிவாரண நிதி தமிழகம் முழுவதும் ஒன்றுபோல்தான் வழங்கப்பட்டிருக்கிறது. சென்னையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எப்படி வழங்கினார்களோ, அதைப்போலத்தான், 5,000 ரூபாயும், திரும்பவும் 5,000 ரூபாயும் வழங்கினார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, அனுமதியில்லை. நீங்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். நீங்கள் உட்காருங்கள். முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை, டாக்டர் க. கிருஷ்ணசாமி. நீங்கள் 27 நிமிடங்கள் உரையாற்றிவிட்டீர்கள்; போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை, உரையாற்றியது போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, இதற்குமேல் நான் உங்களை அனுமதிக்கவில்லை. நீங்கள் உட்காரலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்பில்லை. நேரமில்லை, இன்னும் 7 பேர் பேச வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு) அனுமதியில்லை, இன்றைக்கு இன்னும் 7 பேர் பேச வேண்டும். (குறுக்கீடு) இப்போது நேரம் 1 மணி ஆகிறது. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள்.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, அவையிலிருந்து வெளியேறினார்.)

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் குறித்த விவாதத்தில் மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக உரையாற்ற வாய்ப்பு தந்தமைக்காக முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2016 ஜனவரி 22] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

கடந்த நான்கரை ஆண்டுகால அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் பல்வேறு செயல்பாடுகள் குறித்து மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்கள். அதில், குறிப்பாக, இடைநிலைக் கல்வியில் நிகர மாணவர் சேர்க்கை 94.71 விழுக்காடாக உயர்ந்து, நாட்டிலேயே முதன்மை நிலையை நமது மாநிலம் எட்டியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இதைப்போல, உயர் கல்வியில் தேசிய அளவில் 23.6 விழுக்காடாக இருந்த மொத்த மாணவர் சேர்க்கை விகிதம், அதாவது GER, தமிழகத்தில் 44.8 விழுக்காட்டை எட்டியுள்ளது என்றும் மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையில் சுட்டிக்காட்டியுள்ளதை வரவேற்கின்றேன். இவையெல்லாம் மாநில அரசு கல்விமேல் கொண்டுள்ள அக்கறையினால் ஏற்பட்ட நல்ல விளைவுகள். ஆனால், நமது நாட்டின் கல்வித் துறையில் அரசின் பங்கை சீர்குலைக்கக்கூடிய வகையிலே, கென்யா நாட்டின் தலைநகரம் நைரோபியில் கடந்த டிசம்பர் மாதம் 15 முதல் 18 ஆம் தேதி வரை உலக வர்த்தக அமைப்பு (WTO) நடத்திய உறுப்பு நாடுகளின் 10-வது வர்த்தக அமைச்சர்கள் மாநாட்டில் சில முடிவுகள் எடுக்கப்பட்டு, அதற்கு நமது நாடான இந்தியாவும் ஒப்புதலளித்துள்ளது. இது மிகவும் கவலைக்குரிய செய்தியாகும். நைரோபியில் போடப்படும் ஒப்பந்தம், கல்வியை ஒரு சந்தைப் பொருளாக மாற்றும். இதனால் அரசு நடத்தும் கல்லூரிகள், பல்கலைக்கழகங்களுக்குத் தரப்படும் மானியம் இரத்து செய்யப்படும். இந்திய நாட்டின் சட்டங்கள் அனைத்தும் மாற்றப்பட்டு, கல்வி வியாபாரத்தில் முதலீடு செய்யும் இந்திய மற்றும் அந்நிய முதலீட்டாளர்களின் நலன் காக்கும் வகையில் புதிய சட்டங்கள் இயற்றப்படும். இந்த ஒப்பந்தப்படி, இந்திய நீதிமன்றங்கள் கல்வி நிறுவனங்கள்மீதான வழக்கை விசாரிக்க இயலாது. மாணவர்களுக்கு அளிக்கப்படும் அரசின் கல்வி உதவித் தொகைகளும் பறிக்கப்படும். மாநில அரசின் அதிகாரமும் பறிபோகும். பாபா சாகிப் டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார் போராடி நிறுவிய சமூக நீதி அடிப்படையிலான அனைத்துச் சட்டங்களும் பலன் இல்லாமல் போகும். இந்த ஒப்பந்தத்திற்கு இந்திய அரசு தெரிவித்த விருப்பங்களை உடனடியாகத் திரும்பப் பெற மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் தமிழக அரசை கேட்டுக்கொள்கின்றேன்.

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2016 ஜனவரி 22

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சீரான முறையில் பராமரிக்கப்பட வேண்டும். குறிப்பாக, பல்வேறு சமூக, மத ரீதியான மக்களுக்கு மத்தியிலே, நல்ல ஒரு நல்லிணக்கம் தழைத்தோங்க வேண்டுமென்பதற்காக, இந்த அரசு கண்ணும்கருத்துமாகச் செயல்பட்டு வந்திருக்கின்றது. அதற்கு நான் சில எடுத்துக்காட்டுகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-05

சென்ற ஆண்டு புனித ஹஜ் யாத்திரையின்போது, மெக்காவிற்குச் சென்ற முஸ்லிம்கள் நெரிசலிலே இறந்து போனார்கள். அதுகுறித்து இந்த அவையிலேகூட நாம் இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றினோம். இதுகுறித்து மதுரை பா.ஜ.க.-வைச் சேர்ந்த வேல்முருகன் என்பவர், முகநூலிலே ஒரு மோசமான வெறுப்புப் பதிவைப் போட்டிருந்தார். இதுகுறித்து, நான் காவல் துறை உயரதிகாரிகளுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். எங்களுடைய, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, மதுரை, திருமங்கலம் காவல் நிலையத்தில் வழக்கும், புகாரும் கொடுக்கப்பட்டு, அதன் அடிப்படையிலே வேல்முருகன் கைது செய்யப்பட்டார். இந்தச் செய்தியை ஏன் இங்கே நான் குறிப்பிடுகிறேன் என்றால், சமூக வலைதளங்களிலே, தமிழ்நாட்டில் மட்டுமல்ல, பரவலாக இந்தியா முழுவதும் வெறுப்புப் பிரச்சாரங்கள் நடைபெறுகின்றன. காஷ்மீரிலே பெருவெள்ளம் ஏற்பட்டபோதும்கூட, முஸ்லிம் மக்களுக்கெதிராக வெறுப்புப் பிரச்சாரம் facebook-லே செய்யப்பட்டது. ஆனால், இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாமல், இத்தகைய வெறுப்புப் பிரச்சாரத்திற்காக உடனடியான நடவடிக்கையை இந்த அரசுதான் எடுத்தது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இங்கு நன்றியுடன் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

சமீபத்தில் இன்னொரு பா.ஜ.க. பிரமுகர், நபிகள் நாயகத்தைத் தொடர்புபடுத்தி, தன்னுடைய முகநூலில் மிக மோசமான ஒரு பதிவைச் செய்தார். நானே நேரடியாக சென்னை மாநகர காவல் ஆணையாளரிடம் புகார் அளித்தேன். அந்த அடிப்படையிலே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, கல்யாணராமன் என்பவர் கைது செய்யப்பட்டதற்கும், இதன்மூலமாக ஒரு சமூக நல்லிணக்கத்தை நிலைநாட்டியதற்கும், இந்த அரசுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2016 ஜனவரி 22] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

நெல்லை மாவட்டம், ஏர்வாடியிலே காஜா முகைதீன் என்ற ஒரு முஸ்லிம் ஆட்டோ ஓட்டுநர் மர்மமாக படுகொலை செய்யப்பட்டார். அதுகுறித்து துரித நடவடிக்கைகள் எடுத்து, சம்பந்தப்பட்ட உண்மைக் குற்றவாளிகளை காவல் துறை கைது செய்திருக்கின்றது. அதற்காகவும் என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே சட்டப் பேரவையில், தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 3 தமிழர்கள் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோருக்கான தூக்குத் தண்டனையை இரத்து செய்ய வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அரசமைப்புச் சட்டத்தினுடைய 161-வது பிரிவின்கீழ் அது இரத்து செய்யப்பட்டது. அது தொடர்பாகத் தொடரப்பட்ட வழக்கிலே உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி திரு. சதாசிவம் அவர்கள் தலைமையிலான அமர்வு, அந்தத் தூக்குத் தண்டனையை தமிழக அரசு இரத்து செய்ததை ஒப்புக்கொண்டு, அந்தத் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. அது தொடர்பான வழக்கிலே, சமீபத்தில் டிசம்பர் 2 ஆம் தேதி உச்ச நீதிமன்றத்தினுடைய முழு அமர்வு ஒன்று மீண்டும் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கின்றது. அந்தத் தீர்ப்பிலே, இவ்வாறு ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளை, முன்கூட்டியே மாநில அரசு விடுவிக்க முடியாது என்று பரவலாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. நான் அந்தத் தீர்ப்பை முழுமையாக வாசித்துப் பார்த்தேன். அதில் மிகத் தெளிவாக ஓரிடத்திலே அரசமைப்புச் சட்டத்தினுடைய 161-வது பிரிவு, மாநில அரசுக்கு, தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கான தண்டனையை முழுமையாக இரத்து செய்யவோ அல்லது அதைக் குறைக்கவோ அளிக்கப்பட்டிருக்கக்கூடிய உரிமை-It is an unfettered right; யாருமே தலையிடமுடியாத ஓர் உரிமை என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள். அதாவது, அரசியல் சாசனச் சட்டத்தின் 161-வது பிரிவு, ஆளுநருக்கு வழங்கியிருக்கும் இறையாண்மை மிக்க அதிகாரத்தையோ, இ.பி.கோ. பிரிவு 54 மற்றும் குற்ற நடைமுறைச் சட்டம் பிரிவு 434, மாநில அரசுக்கு வழங்கியிருக்கும் அதிகாரத்தையோ, மத்திய உள் துறை அமைச்சகத்தின் ஒரு நிருவாக ரீதியான அறிவுறுத்தல் கடிதம், பறிக்கவோ, கட்டுப்படுத்தவோ இயலாது என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள்.

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2016 ஜனவரி 22 பிற்பகல் 1-10

இந்த அடிப்படையிலே நம்முடைய தமிழக அரசுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோளை விடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இது பலதரப்பட்ட தமிழக மக்களின் ஒட்டுமொத்த உணர்வாக இருக்கிறது. தமிழக சிறைச்சாலைகளிலே இருக்கக்கூடிய ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்ற, பேரறிவாளன், முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயாஸ், நளினி உள்ளிட்ட 7 தமிழர்கள்; அதேபோன்று எஸ்.எல்.இ. என்ற கொடிய நோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற அபு தாஹிர் உள்ளிட்ட சுமார் 50 முஸ்லிம் ஆயுள் தண்டனை கைதிகளை, முன்னாள் முதலமைச்சர், அ.இ.அ.தி.மு.க.வின் நிறுவனர் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய இந்த நூற்றாண்டிலே, அரசமைப்புச் சட்டத்தின் 161-வது பிரிவைப் பயன்படுத்தி, தமிழக அரசு விடுதலை செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த டிசம்பர் மாதம் பெய்த பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு குறித்தும், அதில் அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்தும், மேதகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே குறிப்பிட்டுள்ளார்கள். இந்த வெள்ளப்பெருக்கை தமிழக அரசு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயுள் தண்டனை சிறைவாசிகளை முன்விடுதலை செய்வது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். தமிழ்நாடு சிறை நடைமுறை விதிகள் 1953, விதி எண் 341-ன்கீழ் 14 ஆண்டுகள் தண்டனை முடிந்த ஆயுள் தண்டனை சிறைவாசிகளை அறிவுரைக் கழகம்மூலம் சில நிபந்தனைகளின் அடிப்படையில் விடுதலை செய்திட பரிசீலனை செய்திடலாம். விதி எண் 341-க்கான அதிகாரம் குற்றவியல் நடைமுறைச் சட்ட விதி எண்கள் 432, 433 மற்றும் 433 எ-லிருந்து பெறப்படுகிறது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். தி.மு.க. ஆட்சியில் 1,405



2016 ஜனவரி 22] [திரு. எஸ்.பி. வேலுமணி]

சிறைவாசிகள் விடுதலை செய்யப்பட்டவுடனே திரு. சுப்ரமணியன் சுவாமி ஒரு வழக்குத் தொடுத்ததும், அவ்வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் இன்னும் நிலுவையில் இருப்பதும் தங்களுக்குத் தெரியும். அதையும் சேர்த்து அந்த 50 பேரை விடுதலை செய்யச் சொன்னீர்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்வதற்காக பெரிய முயற்சி எடுத்தார்கள். அதற்கு எதிராக மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் இறுதி ஆணை இன்னும் வரவில்லை. திரு. சுப்ரமணியன் சுவாமி அவர்களால் போடப்பட்ட வழக்கால்தான் அவர்களின் விடுதலை நிலுவையில் இருக்கிறது என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே குழப்பம் செய்வதையே தன்னுடைய முழுநேரப் பணியாகக் கொண்டிருக்கக்கூடிய சுப்ரமணியன் சுவாமி, வழக்குகளைத் தொடுத்துக்கொண்டேதான் இருப்பார். அவர் எத்தனை வழக்குகள் போட்டாலும் உச்ச நீதிமன்றமே அரசமைப்புச் சட்டம் 161-வது பிரிவை பயன்படுத்தக்கூடிய முழு உரிமை மாநில அரசுக்கு உண்டு அதில் நாங்களே தலையிட முடியாது, It is an unfettered right என்று சொல்கிறது. எனவே, இந்த அடிப்படையில் அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளப்பெருக்கை தமிழக அரசு கையாண்ட விதம் குறித்து பல்வேறு விமர்சனங்கள் இந்த அவையிலே முன்வைக்கப்பட்டன. இருப்பினும், வெள்ளத்தால் மலைபோல் குவிந்த குப்பைகளை அகற்றுவதற்காக எடுக்கப்பட்ட உடனடி நடவடிக்கையையும், வெள்ளம் பாதித்த பகுதிகளில் தொற்றுநோய் பரவாமல் தடுப்பதற்காக தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகளையும் நாங்கள் வரவேற்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பணியில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்து அயராது பணியாற்றிய துப்புரவு மற்றும் சுகாதாரப் பணியாளர்களை நாம் பாராட்டவும், நன்றி செலுத்தவும் கடமைப்பட்டுள்ளோம்.

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2016 ஜனவரி 22

கடந்த டிசம்பரில் ஏற்பட்ட வெள்ளம் பல தீய விளைவுகளை ஏற்படுத்தினாலும், சில அற்புதமான நன்மைகளையும் பறைசாற்றியுள்ளது. இதுகுறித்து ஆளுநர் தனது உரையில், "ஒற்றுமை உணர்வு, மனிதநேயம் மற்றும் சகோதரத்துவத்தோடு தாமாக முன்வந்து உதவி செய்த எண்ணற்ற பொதுமக்களுக்கும், குறிப்பாக, இளைஞர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளுக்கும் எனது பாராட்டுகளை பதிவு செய்ய விரும்புகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். இந்த வெள்ளம் பல குடிசைகளை அடித்துச் சென்றிருக்கலாம், எண்ணற்ற வீடுகளில் உள்ள பொருட்களை இழுத்துச் சென்றிருக்கலாம், பல சாலைகளை பெயர்த்திருக்கலாம், பல பாலங்களை மூழ்கடித்திருக்கலாம். ஆனால், தமிழக மக்களின் இதயங்களை இணைக்கும் பாலமாக அந்தப் பெருவெள்ளம் திகழ்ந்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. மதங்களால், கொள்கைகளால் வேறுபட்டு நின்றாலும், பேரிடரில் சிக்கித் தவித்த மக்களை மீட்பதில் முன்னோடியாக எங்களுடைய அமைப்பு, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் மற்றும் மனித நேய மக்கள் கட்சியின் தொண்டர்கள் தங்களது உயிரை துச்சமெனக் கருதி, சில நேரங்களிலே தாங்களே மனித ஏணியாக மாறி, பரிதவித்த மக்களை பத்திரமாக மீட்டனர். பல்வேறு முஸ்லிம் அமைப்புகள், பள்ளிவாசல் ஜமாத்துகள், இன்னும் பலதரப்பட்ட மதங்களை பின்பற்றக்கூடிய, கொள்கைகளையுடைய, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், தனி மனிதர்களும் ஆற்றிய மீட்புப் பணிகள் வெள்ளம் ஏற்படுத்திய ஈரத்தைவிட தமிழர் உள்ளத்தில் உள்ள ஈரம் அடர்த்தியானது என்பதை மெய்ப்பித்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இனி இப்படி ஒரு பேரிடர் வராமல் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை அரசியல் மாச்சர்யத்திற்கு அப்பால் இந்தப் பேரவை சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 1-15*

தமிழகத்தின் தலைநகரான சென்னை, இயற்கையிலேயே மிக அழகான வடிகால் அமைப்பு கொண்டுள்ளது. வட சென்னையில், கொசஸ்தலை ஆறு, மத்திய சென்னையில் கூவம் ஆறு, தென் சென்னையில் அடையாறு என மூன்று ஆறுகள் உள்ளன. ஆந்திராவிலிருந்து பிச்சாவரம் வரை 480 கிலோ மீட்டர் நீளத்திற்கு பக்கிங்காம் கால்வாய் உள்ளது. மாம்பலம் கால்வாய், வியாசர்பாடி கால்வாய், கொடுங்கையூர் கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய் உட்பட 13 கால்வாய்கள் உள்ளன. அது தவிர வேளச்சேரி, பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பகுதி உள்ளது. இத்தனை வடிகால் வசதி இருந்தும், தலைநகர் சென்னையில் வெள்ளம் சூழ்ந்ததற்குக் காரணம் ஆக்கிரமிப்புதான். சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூரில் 3,600 சிறிய, நடுத்தர மற்றும் பெரிய நீர்நிலைகள் உள்ளன. அவை 40 டி.எம்.சி. கொள்ளளவைக் கொண்டவை. அந்தத் தண்ணீர் சென்னை நகரினுடைய மூன்று ஆண்டுகள் தேவைக்குப் போதுமானது. Google Earth வரைபடத்தைப் பார்த்தால், செம்பரம்பாக்கம் ஏரியின் அருகே வடிகால் பாதையின் அகலம் 800 அடியாக இருக்கின்றது. இது ஈக்காட்டுத்தாங்கலில் 123 அடியாக சுருங்கி, அடையாறு அருகே 300 அடியாக விரிகின்றது. ஆக்கிரமிப்பு என்பது நீண்டகாலமாகவே நடந்து கொண்டிருக்கின்றது. சென்னையில் 6,000 கிலோ மீட்டர் அளவிற்கு சாலைகளும், வீதிகளும் உள்ளன. ஆனால், 1,600 கிலோ மீட்டருக்குத்தான் மழைநீர் சேகரிப்பு அமைப்பு உள்ளது. அதைப் பராமரிப்பதும் எளிதான காரியம் இல்லை. சென்னையில் இருந்த 40-க்கும் அதிகமான ஏரிகள், சதுப்பு நிலங்கள், ஆறுகள், கால்வாய்களை ஆக்கிரமித்ததன் விளைவுதான் இந்த வெள்ளம். சென்னையில் நீங்கள் எந்த முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை எடுத்துக்கொண்டாலும், அதன் பிரம்மாண்டத்திற்குப் பின்னால் ஒரு நீர்நிலை உள்ளது. சோழிங்கநல்லூர், குளோபல் மருத்துவமனை மிகப் பெரிய சதுப்பு நிலத்தில் அமைந்துள்ளது. சென்னையில் மிகப் பெரிய மால்களில் ஒன்றான பீனிக்ஸ் மால் வேளச்சேரி ஏரியில் அமைந்துள்ளது. MRTS பறக்கும் ரயில், பக்கிங்காம் கால்வாயை பாதி அடைத்துக் கொண்டு ஓடுகிறது. மதுரவாயல் முதல் சென்னை துறைமுகம் வரை திட்டமிடப்பட்ட பறக்கும் சாலை கூவம் ஆற்றுக்குள் செல்ல திட்டமிடப்பட்டது. பெரும்பாலான கல்வி நிறுவனங்கள், ஐ.டி. பார்க்குகள் பலவும் ஏரிகளை ஆக்கிரமித்தே கட்டப்பட்டுள்ளன. எனவே, நீண்டகால அடிப்படையில் இந்த நீர்நிலைகளிலுள்ள குடிசைகளை மட்டும் அப்புறப்படுத்துவோம் என்ற நிலையை மாற்றி, அங்கே இருக்கக்கூடிய எந்த ஆக்கிரமிப்பாக இருந்தாலும் அவை அகற்றப்பட வேண்டும். சென்னை விமான நிலையத்தினுடைய இரண்டாம் ஓடுதளமே நீர் போகின்ற பாதையிலேதான் இருக்கின்றது. கோயம்பேடு பேருந்து நிலையம் நீர்நிலைப் பகுதியில்தான் இருக்கின்றது. அரசுக் கட்டடங்களாக இருந்தாலும், தனியார் கட்டடங்களாக இருந்தாலும், யாருடைய கட்டடங்களாக இருந்தாலும் இந்த ஆக்கிரமிப்பை அகற்றுவதுதான் இனி எதிர்காலத்தில் இதுபோன்ற வெள்ளப்பெருக்கு ஏற்படாமல்



2016 ஜனவரி 22] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

தடுப்பதற்கான வழியாக இருக்க முடியும். அதை இந்த அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழ்நாட்டில் TET தேர்வு அதாவது, ஆசிரியர் தகுதித் தேர்வு இரண்டு ஆண்டுகளாக நடத்தப்படவில்லை. இதனால் பல லட்சக்கணக்கான மாணவர்கள் தேர்வுக்காக காத்துக் கொண்டிருக்கின்றார்கள். அந்தத் தேர்வை உடனே நடத்துவதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மழை, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பயிர்க் கடனை ரத்து செய்வதோடு கூட்டுறவு வீட்டுவசதிக் கடனின் வட்டியை முழுமையாகத் தள்ளுபடி செய்து, அசல் தொகையை அவர்கள் செலுத்துவதற்கு உரிய கால அவகாசம் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

நீண்ட காலமாக தமிழக முஸ்லிம்களிடம் ஒரு கோரிக்கை இருக்கிறது. தமிழ்நாடு திருமண பதிவுச் சட்டத்திலே உரிய விதிவிலக்கு அளிக்க வேண்டும் என்று பலமுறை பேசியிருக்கின்றேன். அதை இந்த அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஜல்லிக்கட்டுப் பிரச்சினை. மத்தியிலே ஆட்சி செய்யக்கூடிய பா.ஜ.க. நிச்சயமாக இரட்டை வேடம் போடுகின்றது. அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் இந்தத் தடைக்கு மிக முக்கியமான காரணமாக இருக்கக்கூடிய People for Ethical Treatment of Animals (PETA) அமைப்பினுடைய நிருவாகிகளாக தமிழ்நாட்டில் இருக்கின்றார்கள். இதில் பெரிய வேடிக்கை என்னவென்றால், தமிழகத்தில் பாரம்பரியமிக்க விளையாட்டாக இருக்கக்கூடிய ஜல்லிக்கட்டில் மாட்டின் கொம்பைப் பிடிக்கின்றார்கள், மாட்டின் வாலைப் பிடிக்கின்றார்கள் என்று மிருகங்கள்மீது, மாடுகள்மீது அவர்களுக்கு மிகப் பெரிய அக்கறை இருப்பதுபோலச் சொல்கிறார்கள். இந்த PETA அமைப்பு அமெரிக்காவிலே தொடங்கப்பட்டது. அங்கே, கைவிடப்பட்ட செல்லப் பிராணிகளை பிடித்து வைத்துக்கொண்டு அவற்றை பிறருக்கு அளிப்பதுதான் அவர்களுடைய உண்மையான வேலை. அவற்றை யாரும் வாங்காத நிலையில் அமெரிக்காவில் 2015-ல் மட்டும், நாய்கள், பூனைகள், முயல்கள், இன்னும் பிற விலங்குகள் என 35 ஆயிரம் விலங்குகளை இந்த PETA அமைப்பு கொன்றே





இருக்கின்றது. தமிழ்நாட்டில் மிருகங்கள்மீது எங்களுக்கு அக்கறை என்று இவர்கள் சொல்வது நிச்சயமாக இரட்டை வேடமாகத்தான் இருக்கின்றது. தமிழர்கள்மீதான அவர்களுடைய வெறுப்புணர்வைத்தான் காட்டுகின்றது. எனவே, இந்த ஆண்டே ஜல்லிக்கட்டை நடத்துவதற்கு இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-20

அதேபோன்று, சிறுபான்மை மொழிகளான உருது, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலே படிக்கக்கூடிய மாணவர்கள் 10 ஆம் வகுப்புத் தேர்வை இந்த ஆண்டு தமிழிலே கட்டாயமாக எழுத வேண்டுமென்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. சட்டங்கள் ஒரு பக்கம் இருந்தாலும்கூட, சிறுபான்மை மொழி மாணவர்களுடைய எண்ணிக்கையைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், இது ஓர் உணர்வுபூர்வமான பிரச்சினை என்ற அடிப்படையிலே இந்த அரசு கனிவோடு, இதற்கு விதிவிலக்கு அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்தில் வாழும் சலவைத் தொழிலாளர்கள், வண்ணான் சாதியைச் சேர்ந்தவர்கள் 69 ஆண்டு காலமாக தமிழகத்தில் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்படாமல் உள்ளார்கள். அவர்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை நீண்டகாலமாக இருக்கின்றது. அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இறுதியாக, நேற்றையதினம் இந்த அவையிலே மதுவிலக்கு குறித்து மிகச் சூடான விவாதம் நடைபெற்றது. எனக்கு இன்று பேச வாய்ப்பு இருந்ததனாலே இடையிலே குறுக்கிட்டு நான் பேசவில்லை. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள், இந்தியா முழுவதும் மதுவிலக்கை அமல்படுத்தினால்தான் இங்கே அமல்படுத்த முடியும் என்றும், வருவாய் இழப்பை மத்திய அரசு ஈடுகட்ட வேண்டுமென்றும் ஒரு கருத்தைச் சொன்னார்கள். எங்களுடைய கோரிக்கை என்னவென்றால், தமிழகம் மற்ற மாநிலங்களிலிருந்து வேறுபட்டு, பல சமூக மக்கள் சார்ந்த பிரச்சினைத் தீர்ப்பதிலே முன்னோடியாக இருக்கின்றது. தமிழக அரசுதான், அதுவும்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசுதான் சமூக நீதியை நிலைநாட்டுவதற்காக 69 விழுக்காடு இட ஒதுக்கீட்டிற்கான அரசாணையைக் கொண்டு வந்து, அதற்காக இன்னும் நீதிமன்றத்திலே போராடிக் கொண்டிருக்கிறது. அந்தப் போராட்டத்திலே நாம் வெற்றி பெறுவதற்கு நிச்சயமாக ஒன்றாக இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் லாட்டரியை தடை செய்தோம். இன்னும் இந்தியாவில் பல மாநிலங்களிலே லாட்டரி இருப்பதனால் அந்த மாநிலங்களுக்கு அதன்மூலம் வருவாய் இருக்கின்றது. தமிழ்நாட்டில் இந்தச் சட்டமன்றத்திலேதான் பான்பராக்குக்கு தடையைக் கொண்டு வந்தோம். அது பக்கத்து மாநிலங்களிலேயெல்லாம் இருக்கின்றது. எனவே, ஓர் அரசுக்கு ஏறத்தாழ 25 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் வந்தாலும்கூட, இதனால் ஒட்டுமொத்தமாக தமிழக மக்களுடைய நல்வாழ்வில் ஏற்படக்கூடிய அந்த cost-ஐ, அந்த இழப்பைப் பார்க்கும்போது இது ஒரு பெரிய தொகையே இல்லை. நிச்சயமாக, மனம் இருந்தால், வருவாய்க்கான வழி பிறக்கும். அதிலே மாற்றுக் கருத்து இல்லை. எனவே, முழுமையான மதுவிலக்கை அமல்படுத்தக்கூடிய அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மிகவும் ஆவலாக எதிர்பார்க்கிறேன். என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரைக்கு முற்றுப் புள்ளி வைக்கின்றேன். நன்றி.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

இராமநாதபுரம் நகரில் உள்ள அரசு பேருந்துப் பணிமனையை நகரின் வெளிப்புறத்திற்கு மாற்றிவிட்டு, அங்கு நவீன நகரப் பேருந்து நிலையத்தை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழக்கரையில் உள்ள ஜெட்டி பாலத்தை உடனே மராமத்து செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாம்பன் பாலத்தில் இருபுறங்களிலும் அமைக்கப்பட்டுள்ள அனைத்து விளக்குகளும் எரிவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.





இராமநாதபுரத்தில் கணினியில் பதிவு செய்யாமல் விடுபட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு குடும்ப அட்டை வழங்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் நகராட்சிப் பகுதியில் மழை நீர் கால்வாய் அமைப்பைச் சீரமைத்து வெள்ளம் ஏற்படாமல் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, என்ன point of order?

**செல்வி கே. பாலபாரதி:** விளக்கம்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள்தான் பேசி முடித்தார். இதில் என்ன point of order?

**செல்வி கே. பாலபாரதி:** இது வேறு சப்ஜெக்ட்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எப்படி point of order ஆக முடியும்?

**செல்வி கே. பாலபாரதி:** சரி, ஏதோ ஒன்றிற்கு விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எப்படி point of order-ல் வரும்?

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் இஸ்லாமிய இளைஞர்கள் மீது எந்த ஒரு தவறும், குற்றச்சாட்டும் சொல்லப்படவில்லை; சந்தேகத்தின்பேரில் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் தமிழகத்து இஸ்லாமிய இளைஞர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அதுகுறித்து தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுத்து அந்த இளைஞர்களுடைய வாழ்வை மீட்டுக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முன்வர வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) சார்பாக உறுப்பினரின் கருத்தோடு என்னுடைய கருத்தையும் இணைத்து பதிவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டப் பேரவையில் எதிர்க்கட்சி வரிசையின் உறுப்பினராக நான் பங்கேற்கும் கடைசி கூட்டத் தொடரில் உரையாற்ற வாய்ப்பளித்த தங்களுக்கும். . . (குறுக்கீடுகள்) நிச்சயம், உண்மைதான். இந்தக் கூட்டத் தொடரில் எதிர்க்கட்சி வரிசையில் உறுப்பினராக, கிட்டத்தட்ட கடைசி கூட்டத் தொடரில். . . (குறுக்கீடுகள்) அடுத்த ஆண்டு வேறு இடத்தில் இருப்போம். (சிரிப்பு) தங்களுக்கும், எங்கள் தமிழினப் போராளி மருத்துவர் ஐயா அவர்களுக்கும், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் தேதி இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் குறித்த பன்னாட்டு விசாரணையை மேற்கொள்ள ஐ.நா. சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டுமென்று ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானத்திற்கு மத்திய அரசு மௌனம் காத்த நிலையிலும், அந்தத் தீர்மானத்தை ஐ.நா. சபைக்குக் கொண்டு சென்று, ஐ.நா. சபையில் உரையாற்றி, இந்தத் தீர்மானத்தை ஐ.நா. சபைக்கு எட்ட வைத்த மாண்புமிகு முன்னாள் நடுவண் சுகாதாரத் துறை சாதனை அமைச்சர், 2016 ஆம் ஆண்டில் மாற்றத்தைத் தர இருக்கும் மரியாதைக்குரிய அன்புமணி ராமதாஸ் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

வெள்ள நிவாரணத்தின்போது, தானாக முன்வந்து உதவிய தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பொது மக்கள் மற்றும் அனைத்து உள்ளங்களுக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நானும் ஒருமுறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெள்ளம் பாதித்த 4 மாவட்டங்களில் நிவாரணம் வழங்குவதில் உள்ள ஒரு சில குறைபாடுகளைக் களைய அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், வெள்ளப் பாதிப்பு குறித்து கடந்த மாதம் 7 ஆம் தேதி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் ‘மழை வெள்ளம் காரணமாக வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்ததன் காரணமாக பல பகுதிகளில் பொது மக்கள் தங்களது உடைமைகளை இழந்திருக்கிறார்கள். தெருக்களிலும், தரைத்தளங்களில் வெள்ள





நீர் பெருக்கெடுத்ததால் மேல் தளங்களில் உள்ள மக்களும் மழையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரைத் துடைக்கும் வகையில் அவ்வாறு ‘பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூ.5,000/-, ஒரு வேட்டி, ஒரு சேலை, பத்து கிலோ அரிசி ஆகியவற்றை சிறப்பு வெள்ள நிவாரணத் தொகுப்பாக வழங்க உத்தரவிட்டுள்ளேன்’ என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால், முதல் தளத்தில் வசிக்கும் 80 சதவிகிதம் பேர்களுக்கு இந்த நிவாரணம் சென்றடையவில்லை. அதுவும் குறிப்பாக சென்னை கோட்டூர்புரம், சைதாப்பேட்டை போன்ற பகுதிகளில் எல்லாம் முதல் தளத்திலும், அதற்கு மேல் தளத்திலும் வசித்தவர்களுக்கெல்லாம் இந்த நிவாரணம் சரியாகச் சென்றடையவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நிவாரணத்திலே குறைபாடுகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்தியாவிலேயே அறிவுப்பூர்வமான கணக்கெடுப்பு செய்து, பல்வேறு மாவட்டங்களிலிருந்து அதிகாரிகளை அழைத்து வந்து, பாதிக்கப்பட்ட சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர் போன்ற மாவட்டங்களுக்கு சிறப்பு அதிகாரிகளை நியமனம் செய்து, ஒவ்வொரு பகுதிக்கும் ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளை நியமனம் செய்து, அவர்களுடைய நேரடிப் பார்வையிலே, பாதிக்கப்பட்ட மக்களை கணக்கெடுத்ததன் அடிப்படையிலேதான் ஏறத்தாழ 30 இலட்சம் பேர் என்று கணக்கீடு எடுக்கப்பட்டு, 30 இலட்சம் பேர்களுக்கும் ரூ.5,000/-, ரூ.10,000/- என்றும், அதோடு அவர்களுக்கு அரிசி, வேட்டி, சேலை வழங்கி, நிவாரணத் தொகையை அவர்களுடைய வங்கிக் கணக்கிலே வரவு வைத்து, இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டுகின்ற முதலமைச்சராக இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல இதிலே மேல் தளம், கீழ்த் தளம் என்றல்ல; பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நிவாரணத் தொகுப்பை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். ஏனென்று சொன்னால், நிவாரணம் வழங்கப்பட்ட 30 இலட்சம் பேர் குறித்து, எங்களிடத்திலே அவர்களுடைய பெயர்,

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2016 ஜனவரி 22

அவர்களுடைய விலாசம் முதற்கொண்டு அனைத்து விவரங்களும் முழுவதுமாக இருக்கின்றன, அவர்களுடைய வங்கிக் கணக்கும் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், விடுபட்டவர்கள்பற்றி ஏதேனும் குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், நிச்சயமாக அவர்களுக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தாயுள்ளம் கொண்ட அரசு நிவாரணத்தை வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. நான் நடைமுறையில் எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிக்கையில் 'மேல் தளத்தில் உள்ளவர்களுக்கும்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், கவர்னர் அவர்கள் உரையைப் பொறுத்தவரையில், பாதிக்கப்பட்ட தனி நபர்களுக்கு, அதாவது, fridge, washing machine போன்ற பொருட்களை இழந்த பாதிக்கப்பட்ட தனி நபர்கள் குறித்து கணக்கெடுக்கப்பட்டு வழங்கப்படுகிறது என்ற ஒரு முரண்பாடு இருக்கிறது. மேல் தளத்தில் உள்ளவர்களுடைய வாகனங்கள் போன்ற பொருட்களெல்லாம் கீழ்த் தளத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனவே, கணக்கெடுத்ததில் நான் எந்தக் குறையும் சொல்லவில்லை. நிவாரண உதவி உண்டு என்று அறிவிக்கப்பட்டு, வங்கிக் கணக்குகள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்ட பலருக்கு இன்னும் நிவாரணம் சென்றடையவில்லை. நிவாரணம் முழுமையாகச் சென்றடையவில்லை என்று சொல்ல வரவில்லை, நிவாரணம் பலருக்கு இன்னும் சென்றடையவில்லை. அதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிருக்கு இழப்பீடு இன்னும் வழங்கப்படவில்லை.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

குறிப்பாக, இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட என்னுடைய தொகுதி அமைந்துள்ள விழுப்புரம் மாவட்டம், வெள்ளம்



2016 ஜனவரி 22] [திரு. அ. கணேஷ்குமார்]

பாதிக்கப்பட்ட மாவட்டமாக அறிவிக்கப்படவில்லை. செஞ்சி தொகுதியில்கூட இந்த மழை வெள்ளத்தினால் ஏரிகள் உடைப்பெடுத்து பயிர்களெல்லாம் சேதமடைந்திருக்கின்றன. அதற்கான கணக்கீடுகளும் இன்னும் நிறைவுபெறாத சூழ்நிலையில் இருக்கிறது. எனவே, அவற்றையும் கனிவோடு பரிசீலித்து, பயிர் பாதித்தவர்களுக்கும் உடனடியாக இழப்பீடு வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்த அறிக்கைக்கும், மேதகு ஆளுநர் அவர்கள் கொடுத்த அறிக்கைக்கும் முரண்பாடு இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்; முரண்பாடு ஏதுமில்லை. வெள்ள நீரால் சூழப்பட்ட பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதன்படி கணக்கெடுப்புப் பணி நடைபெற்று பாதிக்கப்பட்ட நபர்களாக 30 இலட்சம் பேர் அடையாளம் காணப்பட்டிருக்கின்றார்கள். அதிலே 25 இலட்சம் பேர், 5 இலட்சம் பேர் என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்கு நிவாரணத் தொகுப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதில் எந்தக் குறைபாடும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-30*

விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே வெள்ள நிவாரணம் குறித்து அறிவிக்கவில்லை என்று சொல்கிறார்கள். அறிவிக்க வேண்டும் என்பதல்ல; 32 வருவாய் மாவட்டங்களில், எங்கெங்கு மழை பெய்ததோ அங்கெல்லாம் நிவாரணத் தொகுப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே, விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளுக்கும், பாதிப்பு ஏற்பட்ட மக்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே, 2015 ஆம் ஆண்டு வட கிழக்குப் பருவ காலத்தில் பெய்த கன மழையின் காரணமாக, விழுப்புரம் மாவட்டத்தில் ஏற்பட்ட மொத்த உயிரிழப்புகளுக்காக

1.44 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது. பெரு மழையின் காரணமாக ஏறத்தாழ 746 கால்நடை இழப்புகள் ஏற்பட்டு, அதிலே 383 கால்நடைகளுக்கு 61.49 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது.

குடிசைகள் சேதம். விழுப்புரம் மாவட்டத்தில் 875 குடிசைகள் முழுமையாகவும், 19,626 குடிசைகள் பகுதியாகவும் ஆக மொத்தம் 20,501 குடிசைகள் சேதமடைந்துள்ளன. மேற்சொன்ன சேதமடைந்த குடிசைகளுக்காக 10.6880 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. இரண்டு நாட்களுக்குமேல் வெள்ளத்தால் சூழப்பட்ட குடிசைகள், வீடுகளின் விவரம் எடுக்கப்பட்டதில், இரண்டு நாட்களுக்குமேல் வெள்ளத்தால் சூழப்பட்ட வீடுகள் மற்றும் குடிசைகள் 39,124 என கணக்கெடுக்கப்பட்டு, இதற்காக 19.56 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது.

பயிரிழப்பு என்று பார்த்தால் 36,661.04 ஹெக்டேர் நிலபரப்பில் உள்ள வேளாண் பயிர், மழை வெள்ளத்தால் சேதமடைந்துள்ளது. பாசன ஆதாரம் பெற்ற பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500/-, மானாவாரிப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.7,410/-, நீண்டகாலப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.18,000/- என்ற அடிப்படையிலே 1 இலட்சத்து 12 ஆயிரம் விவசாயிகளுக்கு ரூ.36.25 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. அதேபோல, 2,886.77 ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்ட தோட்டக்கலைப் பயிர்கள் மழை வெள்ளத்தால் சேதமடைந்துள்ளன. இதற்காக 6,435 விவசாயிகளுக்கு 3.91 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கின்ற செஞ்சி சட்டமன்றத் தொகுதியிலேகூட மனித உயிரிழப்புக்கு ரூ.4 இலட்சம் வீதம் இரண்டு நபர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

கால்நடை இழப்பு 49. அதாவது, பசு மாடு 21, கன்று 16, ஆடு 12. மேற்சொன்ன இனங்களுக்கு 9.22 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது.

பயிர் இழப்பு. 2,400 ஹெக்டேர் வேளாண் பயிர் இழப்பிற்கு ரூபாய் 3 கோடியே 1 இலட்சத்து 44 ஆயிரத்து 800 நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது. 91.61 ஹெக்டேர் தோட்டக்கலைப் பயிருக்கு ரூபாய் 12 இலட்சத்து 36 ஆயிரத்து 235 நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது.





குடிசைகள் சேதம். முழுமையாக சேதமடைந்தது 46. அதற்கு 4.60 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. பகுதியாக சேதமடைந்ததற்கு ரூபாய் 1,657 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டிருக்கிறது. இரண்டு நாட்களுக்குமேல் வெள்ளத்தால் சூழப்பட்ட 196 குடிசை வீடுகளுக்கு 9.8 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இவ்வளவும் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, விழுப்புரம் மாவட்டத்திற்கு எதுவுமே வழங்கவில்லை என்று “முழு பூசணிக்காயை சோற்றிலே மறைப்பதுபோல்” (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே விவாதத்தை எடுத்து வைக்கின்றார்கள். ஆகவே, ஏழரை கோடி அன்னைத் தமிழக மக்களுக்கும் பாதுகாப்பு அரணாக, தாய்க்குத் தாயாக, தெய்வத் தாயாக (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு அனைத்து நிவாரணங்களையும் கொடுத்திருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேஷ்குமார், உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் பேச ஆரம்பிக்கவேயில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, நீங்கள் ஏற்கெனவே 10 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** எனக்கு நேரமே கொடுக்கவில்லை. நான் எந்தப் பொருள் பற்றியும் இதுவரை ஆரம்பிக்கவே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் வேறு சப்ஜெக்ட்டிற்கு செல்லுங்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நிவாரணம் எதுவுமே வழங்கவில்லை என்று சொல்லவில்லை; முழுமையாக வழங்கப்படவில்லையென்று சொல்கிறேன். இன்னும் ஒரு கோரிக்கைகூட வைக்கின்றேன். உயிரிழப்புக்கு முழுமையாக இழப்பீடு வழங்கப்பட்டுவிட்டது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் இதை கோரிக்கையாகத்தான் வைக்கிறேன், குற்றச்சாட்டாகச்

சொல்லவில்லை. என்னுடைய செஞ்சி தொகுதி, மேல்மலையனூர் ஒன்றியத்திற்குட்பட்ட கொடுக்கன்குப்பம் கிராமம், திரு. அன்பழகன் மற்றும் தேவி தம்பதியருடைய 6 வயது மகன் பரந்தாமன் என்கின்ற பிரவீன்ராஜ் என்பவர் மழை வெள்ளத்தின் காரணமாக உயிரிழந்தார். F.I.R. பதிவு செய்யப்பட்டு, Postmortem report-லும் தண்ணீரில் மூழ்கி இறந்திருக்கிறார் என்று வந்த பிறகும்கூட அவருக்கு இன்னமும் நிவாரணம் வழங்கப்படவில்லை. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலனை செய்து அவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கின்ற செஞ்சி தொகுதியில் 2 மனித உயிரிழப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அதில் ஒன்றுக்கு ரூ.4 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஒரு மனித உயிரிழப்புக்கு, Postmortem report-பகுப்பாய்வு அறிக்கை எதிர்பார்க்கின்ற நிலையிலே இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த இரண்டு அல்லாத 3-வது ஒன்றை நான் சொல்கிறேன். அதுசம்பந்தமாக தாசில்தாரிடம் கேட்டபோது, நீங்கள் இப்போது காலந்தாழ்த்தி வந்திருக்கிறீர்கள் என்று சொல்லியிருக்கிறார். ஆனால், அது அன்றய தேதியிலேயே பதிவு செய்யப்பட்டு, F.I.R. போடப்பட்டு, Post-mortem report எல்லாம் மழை வெள்ளம் வந்த தேதியிலேயே இருக்கின்றது. அதைக் கனிவோடு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-35*

நேற்றையதினம், மரியாதைக்குரிய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், செம்பரம்பாக்கம் ஏரி குறித்து நீண்ட, நெடிய விளக்கத்தைத் தெரிவித்தார்கள். நான் அதற்குள்ளே செல்ல விரும்பவில்லை. ஒருசில ஐயப்பாடுகள் மட்டும்தான் இருக்கின்றது.





உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட 29,000 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டதாகச் சொன்னார். ஆனால், பல தொலைக்காட்சிகளிலும், பல பத்திரிகைகளிலும்கூட 35,000 கன அடி அளவிற்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டதாக வந்தது. தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலமாக நாங்கள் முறையாக வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்தோம் என்று சொன்னார்கள். அப்படி செய்திருந்தாலும்கூட, தொலைக்காட்சி நிறுவனங்களே குறிப்பாக ஜெயா டி.வி., புதிய தலைமுறை டி.வி. எல்லாம்கூட எச்சரிக்கையை Communicate செய்ய முடியாத சூழ்நிலையில், அவர்களும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டார்கள். இந்தச் சூழ்நிலையில், செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து நீர் திறந்து விடப்பட்டது குறித்து நீதி விசாரணை வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கணேஷ்குமார், நீங்கள் நன்றி கூறி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று இந்தப் பிரச்சினை குறித்து விரிவான விவாதம் நடந்தது. அதற்குரிய விளக்கமெல்லாம் நேற்றே தரப்பட்டது. கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் இந்த ஒரு பிரச்சினை குறித்தே விவாதம் நடைபெற்றது.

செம்பரம்பாக்கத்திலிருந்து உபரி நீர் செல்கின்ற கால்வாயின் நீர்செலுத்தும் திறனே 33,000 மில்லியன் கன அடிதான். நீங்கள் 35,000, 36,000 என்று கனவு கண்டு சொன்னால், தண்ணீர் அங்கே போகாது. அதற்கு மேல் தண்ணீரை வெளியேற்ற முடியாது. அதுதான் உண்மை. அதாவது சென்னை ஒரு சமதளப் பகுதி. இதிலிருக்கிற வடிகால் கடல். கடலும், சென்னை தளமும் ஒன்றாக இருக்கிறது. நீங்கள் நன்றாகப் பார்த்திருக்கலாம். கூவம் வழியாக நாம் தினமும் cross செய்து போய் வந்து கொண்டிருக்கிறோம். Low tide-ன்போது complete ஆக வருகிற தண்ணீர் எல்லாம் கடலுக்குள் போய்விட்டு dry ஆக இருக்கும். High tide-ன்போது நீரினுடைய அலை மேலே வரும். கூவத்திலே மட்டும் 8 கிலோ மீட்டர் தூரம் கடல் நீர் உள்ளே போகக்கூடிய ஒரு சூழ்நிலை சாதாரண காலங்களிலேயே ஏற்படும். அப்படியிருக்கும்போது பெரு மழை, கன மழை பெய்தபோது அத்தனை நீர்நிலைகளிலிருந்தும்,

இந்த ஆறிலிருந்தும் கடலை நோக்கிச் செல்கிறபோது, அது பழவேற்காடாக இருந்தாலும் சரி, எண்ணூர் creek ஆக இருந்தாலும் சரி, அடையாறு, கூவம், பக்கிங்காம் கால்வாய், முட்டுக்காடு வரை இருக்கின்ற அத்தனை sea mouth S- முறையாகப் பராமரிக்கப்பட்டு, அதன் வடிகால்கள் ஒழுங்காக இருந்ததன் காரணமாகத்தான் பாதிப்பு இந்த அளவுக்குக் குறைவாக இருந்தது. சரியாகப் பராமரிக்கப்படவில்லையென்றால், அதன் பாதிப்பு மிகவும் அதிகமாகவும், ஆபத்தாகவும் முடிந்திருக்கும். இதையெல்லாம் புரிந்துகொள்ள வேண்டும். சமதளத்திலிருந்து downstream ஆக இருந்தால் உடனே வெள்ளநீர் போய்விடும். ஆனால், இது கடல்மட்டத்தில் இருக்கும் ஆறு. சாதாரண காலத்திலேயே, High tide உயர் அலை வரும்போது 8 கி.மீ. தூரம் கடல் நீர் உள்ளே போகும். வெள்ளக் காலங்களில் அந்த நீர் வடியக்கூடிய சூழ்நிலை எப்படி ஏற்பட்டிருக்கும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், ஒரு நிமிடம் மட்டும் பேசுங்கள். அடுத்த உறுப்பினரை நான் கூப்பிடுவேன்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு எப்போதும் வாய்ப்பு கொடுப்பதேயில்லை. எல்லாக் கட்சிக்கும் நேற்றையதினம். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை. உங்கள் கட்சியினுடைய எண்ணிக்கைக்கேற்ப 14 நிமிடங்கள் கொடுத்தாகிவிட்டது. இன்னும் ஒரு நிமிடம் மட்டும்தான். ஒரே ஒரு நிமிடம். இல்லையென்றால் அடுத்த உறுப்பினரைக் கூப்பிடுவேன்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம்கூட எனக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை. நான் ஒருவர்தான் இதில் பேசுகிறேன். எனக்கு வாய்ப்பு சரியாக வழங்கப்படவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.





**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சின்னப் பையன் என்பதால் ஏமாற்றாதீர்கள். எனக்கு 2 நிமிடங்கள் மட்டும் கொடுங்கள். மற்றவர்கள் கணக்கையெல்லாம் என் கணக்கில் ஏன் சேர்க்கிறீர்கள்?.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் இடைமறித்து தமிழகத்தில் மதுவிலக்கு சாத்தியமில்லையென்று கூறியிருப்பது மிகுந்த ஏமாற்றத்தையளிக்கிறது. அதுமட்டுமல்லாமல், மதுவிலக்கை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படும் வருவாய் இழப்பை மத்திய அரசு ஏற்றுக்கொண்டால், தமிழகத்தில் மதுவிலக்கை நடைமுறைப்படுத்தத் தயாரென்று கூறியிருப்பது அதிர்ச்சியை அளிக்கிறது. ஓர் அரசு தன்னுடைய செலவிற்காக மது விற்பனைமூலம் கிடைக்கும் வருவாயை நம்பியிருப்பது சரியான அணுகுமுறையல்ல. மது விற்பனைமூலம் கிடைக்கும் வருவாய் என்பது தொழுநோயாளியின் கையில் இருக்கும் வெண்ணெய்க்குச் சமமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரைக் கொண்டு கட்சி நடத்தும் ஆட்சியில் அந்த வெண்ணெய்யை உண்ண நினைப்பது எந்தவகையில் நியாயமாகும்?

அதுமட்டுமல்லாமல், 1935 ஆம் ஆண்டு மரியாதைக்குரிய இராஜாஜி அவர்கள் சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தபோது அண்டை மாநிலங்களில் மதுவிலக்கு இல்லாதபோது 4 மாவட்டங்களில் மட்டும் மதுவிலக்கைக் கொண்டு வந்தார். அதற்குப் பிறகு ஓமந்தூரார் அவர்கள் 1948-ல் அண்டை மாகாணங்களில் இல்லாதபோது சென்னை மாகாணத்தில் மட்டும் கொண்டு வந்தார். 1971 வரை மதுவிலக்கு நடைமுறையில்தான் இருந்தது. 1971-க்குப் பிறகு வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும், தொடர்ந்து வந்த ஆட்சிகளிலும் இந்த மதுவிலக்கை அமல்படுத்துவதற்கு மறுக்கிறார்கள். எனவே, மதுவிலக்கை ஒரு வருமானம் வரக்கூடிய பொருளாகப் பார்க்காமல், அதன் தீமைகளை உணர்ந்து மதுவிலக்கை நடைமுறைப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[2016 ஜனவரி 22

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசி முடியுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** இல்லையென்றால், 2016-ல் பாட்டாளி மக்கள் கட்சி ஆட்சி அமைக்கும்பொழுது நிச்சயமாக இந்த மதுவிலக்கை அமல்படுத்துவோம் என்பதைக் கூறிக்கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** சிரிப்பதற்கு என்று ஒன்றுமில்லை. இந்த அவை பல வரலாறுகளைப் பார்த்திருக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** 1991-ல் தி.மு.க. சார்பில் ஒரேயொரு எம்.எல்.ஏ. ஜெயித்தபோது, பாட்டாளி மக்கள் கட்சியில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஜெயித்திருக்கிறார். 1996-ல் நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அ.தி.மு.க.-வில் வெற்றி பெற்றபோது, பாட்டாளி மக்கள் கட்சியும் நான்கு சட்டமன்ற உறுப்பினர்களை வைத்திருந்த வரலாறு உண்டு. ஆகவே, யாரையும் குறைத்து மதிப்பிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெறவிருக்கிற சட்டமன்றத் தேர்தலில் அவருடைய தலைவர் போட்டியிடுவாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன். சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அவர் தயாரா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் தலைவர் போட்டியிடுகிறாரா என்பதைச் சொல்லி, உரையை முடியுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** இல்லை, சென்ற முறையும் இதுமாதிரிதான் கேட்டீர்கள். தேர்தலில் போட்டியிடுவாரா, போட்டியிடுவாரா என்று கேட்டீர்கள். தருமபுரி தொகுதியிலே



2016 ஜனவரி 22] [திரு. அ. கணேஷ்குமார்]

நின்று, அந்தத் தொகுதியில் வெற்றியை அறுவடை செய்திருக்கிறோம். இதுவும் வரலாறுதான். தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகச் செயல்படுவதாக மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையில் பாராட்டியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ். (குறுக்கீடு) நன்றி சொல்லி முடிக்கச் சொன்னால், நீங்கள் மறுபடியும் புது சப்ஜெக்ட்டுக்குப் போகிறீர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு நேரமே கொடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் 16 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். நான் குறைவாகத்தான் பேசியிருக்கிறேன். இரண்டு விஷயங்களைச் சொல்லி, உரையை முடித்து விடுகிறேன். தமிழகத்தில் விவசாயிகள் பிரச்சினை முற்றிலுமாகத் தீர்ந்துவிட்டதாகவும், உணவு தானிய உற்பத்தியில் தமிழகம் சாதனை படைத்திருப்பதாகவும் ஆளுநர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். ஆனால், இது உண்மை நிலைக்கு வேறுபட்டுள்ளது. இந்த அரசு பதவியேற்பதற்கு முன்பு விவசாயிகள் என்னென்ன பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்தார்களோ அவை அனைத்தும் இன்றைக்கும் அப்படியேதான் உள்ளன.

காவேரி பிரச்சினையைத் தீர்த்ததாகக் கூறி முதலமைச்சருக்குப் பாராட்டு விழாக்கள் நடத்தப்பட்டன. காவேரி பிரச்சினை தீர்ந்துவிட்டதா என்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் விளக்க வேண்டும். உச்ச நீதிமன்றத் தீர்ப்பை செயல்படுத்தி காவேரி மேலாண்மை வாரியம் அமைக்கப்பட்டுவிட்டதா என்பதையும் முதலமைச்சர் அவர்கள்தான் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, உரையை முடியுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** உரையை முடித்து விடுகிறேன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் 20 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட

[திரு. அ. கணேஷ்குமார்] [2016 ஜனவரி 22

தூய்மையான குடிநீர் இலவசமாக வழங்கப்படும், இதன்மூலம் 5.6 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும் என்று கடந்த தேர்தலின்போது வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால், இதுவரை எத்தனை. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவேரி பிரச்சினை குறித்து ஏற்கெனவே நாம் பல முறை இங்கே பேசியிருக்கிறோம். நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பிற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து அரசாணை பெற்றுத் தந்தவர் யார்? சட்டப் போராட்டம் நடத்தி, உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று அரசாணை பெற்றுத் தந்தவர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்ற வரலாறு இங்கே ஏற்கெனவே பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி ஒழுங்குமுறை ஆணையம், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவை அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்திக் கொண்டேயிருக்கிறார்கள் என்பதும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படி இருக்கும்பொழுது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்ல வேண்டும், பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இது எந்த விதத்தில் சரியான கேள்வியாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். தொடர்ந்து இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். எப்படி உச்ச நீதிமன்றத்தின்மூலம் மாண்புமிகு அம்மா அவர்கள் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பிற்கு அரசாணையை பெற்றுத் தந்தார்களோ, இந்த முறையும் காவேரி ஒழுங்குமுறை ஆணையத்தையும், காவேரி நீர் முறைப்படுத்தும் குழுவையும் உறுதியாகப் பெற்றுத் தருவார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.



2016 ஜனவரி 22]

**திரு. அ. கணேஷ்குமார்:** உரையை முடித்து விடுகிறேன். விவசாயிகளின் பிரச்சினை தீரவில்லை என்பதைத்தான் குறிப்பிட்டேன். கடந்த சட்டப் பேரவைத் தேர்தலின்போது, அ.தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில், தமிழ்நாட்டை ஒரு இலட்சம் கோடி ரூபாய் கடனாளி மாநிலம் என்ற தலைக்குனிவிலிருந்து மீட்டு, ஒவ்வொரு தமிழனும் தலைநிமிர்ந்து நிற்கவும், தன்மானத்துடன் வாழவும் தமிழ்நாட்டை தன்னிறைவு கொண்ட தொடர்ச்சியான நீடித்த வளர்ச்சி பெற்ற மாநிலமாக மாற்ற வழிவகை செய்யப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால், கடன் சுமை குறைந்திருக்கிறதா? சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து 64 ஆண்டுகளில். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கான நீண்ட விளக்கத்தை நேற்றே தந்திருக்கிறேன். பொதுக் கடன் திரட்டப்படுகிறது, அது எதற்காக திரட்டப்படுகிறது, எதற்காகச் செலவழிக்கப்படுகிறது, திரட்டப்படுகின்ற பொதுக் கடனும் எந்த அளவுகோலுக்குள் இருக்கிறது என்றால், அந்த அளவுகோல் மத்திய அரசினுடைய 13-வது நிதிக் குழுவால் வரையறை செய்யப்பட்டிருக்கின்ற 25 சதவீதத்திற்குள்ளாகவே கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அதுவும் 19.10 என்ற அளவில் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அண்டை மாநிலங்களான கேரளாவை எடுத்துக்கொண்டாலும், கர்நாடகாவை எடுத்துக்கொண்டாலும், ஆந்திராவை எடுத்துக்கொண்டாலும், நம்மைவிட அவர்கள் சதவிகிதத்தில் அதிக அளவில் கட்டுப்படுத்த முடியாத நிலையில்தான் இருக்கிறார்கள். ஆனால், இதையெல்லாம் மீறி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசில் பெறப்படுகின்ற கடன்கள் அனைத்தும் மூலதனச் செலவுகளுக்காகவே செலவழிக்கப்படுவது உறுதி செய்யப்பட்டு, அதன் மூலமாக நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சி உந்துதலுக்கு அது பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் நேற்று விளக்கமாக நான் சொல்லியிருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேஷ்குமார் அவர்கள் நேற்று இந்தச் சபையிலே இல்லை என்றே நான் நினைக்கின்றேன்.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 22

அது ஒரு நீண்ட விளக்கம். திரும்பவும் அவர் அதற்குரிய விளக்கத்தைக் கேட்டால், என்னிடம் அதற்குரிய குறிப்பு இருக்கிறது. அதை நான் தனியாக அவரிடம் தருவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்வதாக இருந்தால் மட்டும் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் நிறைய நேரம் பேசிவிட்டீர்கள். திரு. ஜேஜி. பிரின்ஸ், பேசுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** ஒரே ஒரு வாய்ப்புக் கொடுங்கள், உரையை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜேஜி. பிரின்ஸ், பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. அ. கணேஷ்குமார்:** கடைசியாக ஒரே ஒரு வாய்ப்புக் கொடுங்கள். உரையை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் நன்றி சொல்வதாக இருந்தால் மட்டும் வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நிறைய பேச வேண்டியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், பேசுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** எனக்கு இதை விட்டால் வேறு வாய்ப்பு கிடைக்காது.

*பிற்பகல் 1-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, உங்களுக்கு எப்போதுமே இனி வாய்ப்பு கிடைக்காது. திரு. ஜேஜி. பிரின்ஸ் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா?

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)



2016 ஜனவரி 22]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கணேஷ்குமார், நன்றி சொல்லி உரையை முடிப்பதாக இருந்தால், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) திரு. ஜேஜி. பிரின்ஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. அ. கணேஷ்குமார், பேசுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கடனைப் பற்றியெல்லாம் பேசவில்லை. கடந்த ஆண்டு தேர்தலின்போது இந்த வாக்குறுதியைக் கொடுத்தீர்களே, அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்றுதான் குற்றம் சாட்டுகிறேன்.

சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், பல்வேறு வழக்குகள், இந்த ஆட்சி பொறுப்பேற்றபிறகு, கிட்டத்தட்ட 9,000 கொலை வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவ்வாறெல்லாம் இருக்கும்போது, அமைதிப் பூங்காவாக இருக்கிறது என்று. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) திரு. ஜேஜி. பிரின்ஸ், நீங்கள் பேசுங்கள். அவர் வேறு சப்ஜெக்ட்டுக்கு தேவையில்லாமல் போய்க் கொண்டிருக்கிறார். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அதற்கெல்லாம் ஆதாரம் இல்லை. (குறுக்கீடு) நீங்கள் பேசுகிற வார்த்தைக்கு எல்லாம் ஆதாரம் இல்லை. (குறுக்கீடு) திரு. ஜேஜி. பிரின்ஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) நீங்கள் பேசவில்லையென்றால் நான் வேறோர் உறுப்பினரை பேச அழைப்பேன்.

**திரு. ஜேஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜேஜி. பிரின்ஸ், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** காங்கிரஸ் கட்சியின் சார்பிலே அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு, சில முக்கியமான கருத்துகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் பேசுகிறீர்களா? வேறு உறுப்பினரைப் பேச அழைக்கட்டுமா?

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** எனக்கு disturbance ஆக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, அவருக்குப் பத்து நிமிடம் கொடுக்கச் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) அவருக்கு வாய்ப்பு கொடுத்தாகிவிட்டது. அவர் வேறு கருத்துகளுக்குப் போய்க் கொண்டிருக்கிறார். அவருக்குப் போதுமான அளவிற்கு நேரம் கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) திரு. அ. கணேஷ்குமார், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் உரையை முடித்து விடுகிறேன். நான் எதையும் சொல்லவில்லை. மாநிலக் குற்றவியல் ஆவணக் காப்பகத்தில், இந்தக் குற்றங்கள் குறித்து இருந்த விவரங்களை இணையதளத்திலிருந்து நீக்கி இருக்கிறார்கள். அதை ஏன் நீக்கியிருக்கிறார்கள்? அமைதிப் பூங்காவாகத் தமிழகம் திகழ்கிறது என்று சொல்கிறார்கள்.

மொத்தத்தில் பல்வேறு துறைகளில் இந்த அரசு தேர்ச்சி பெறாத நிலையில், அவற்றையெல்லாம் மறைத்துவிட்டு, இந்த அரசு சாதனை படைத்தது போன்ற ஒரு தோற்றத்தை ஆளுநர் அவர்கள் உரையின்மூலம் ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் மக்கள் புரிந்துகொண்டு, 2016-ல் நல்ல மாற்றத்தை உருவாக்குவார்கள் என்று தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், பேசுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் சார்பிலே இந்த அவையிலே பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி சொல்லி, அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளைச் சொல்லி, எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒதுக்கப்பட்ட நேரமான 15 நிமிடங்களைத் தந்தால் போதும்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போது நேரம் 1-47 மணி. நீங்கள் 2-00 மணிக்கு உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** நீங்கள் குறுக்கீடுகளையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் குறுக்கீடுகள் வராமல் பேசுங்கள். 2-00 மணிக்கு உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கடன்களைத் தள்ளுபடி செய்யும் அறிவிப்போ அல்லது வட்டியையாவது தள்ளுபடி செய்யும் அறிவிப்போ இல்லை. அதனை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில்கூட, விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையிலே, பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை. அவர்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்க வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள்.

ஆக்கிரமிப்புகளை அகற்றி தமிழகத்தின் நீர்நிலைகளைத் தூர் வாரி இருந்தால், நிச்சயமாக இந்த இயற்கைப் பேரழிவிலிருந்து தமிழகத்தைக் காப்பாற்றி இருக்க முடியும். இனிமேலாவது, இப்படிப்பட்ட பேரிடரிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு வடிகால்களை சரியாக அமைத்து, நீர் நிலைகளைத் தூர் வாரி, எதிர்காலத்தில் நம்முடைய மக்களைப் பாதுகாக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காங்கிரஸ் கட்சி ஆட்சியை எல்லோரும் குறை சொன்னீர்கள். அப்போது கச்சா எண்ணெய் விலை ஒரு பேரல் 167 ரூபாயாக இருந்தது. இப்போது மிகக் குறைவாக, பேரல் ஒன்று ரூ.42/- ஆக இருக்கிறது. ஆனால் இப்பொழுதும் விலைவாசி உயர்ந்திருக்கிறது. டீசல் மற்றும் பெட்ரோல் விலை குறைந்தால்தான் விலைவாசி குறையும். இதைப்பற்றி குறிப்பிட்டு மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து டீசல் மற்றும் பெட்ரோல் விலையைக் குறைக்க வழி காண வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தளவிலே, 2015 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவ மழையின் காரணமாக மொத்தம் 6 மனித உயிர் இழப்புகள் ஏற்பட்டன. 4 இலட்சம் ரூபாய் வீதம் 24 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. கால்நடை இழப்பைப் பொறுத்தளவிலே ஒரு கன்றுக் குட்டி இறந்துள்ளது. அந்த ஒரு கன்றுக் குட்டிக்கும் 16,000 ரூபாயை தாயுள்ளத்தோடு நிவாரணம் வழங்கியவர் மாண்புமிகு முதலமைச்சர் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குடிசைகள் சேதத்தைப் பொறுத்தளவிலே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 182 குடிசைகள் முழுமையாகவும், 981 குடிசைகள் பகுதியாகவும், ஆக மொத்தம் 1,163 குடிசைகள் சேதமடைந்துள்ளன. மேற்சொன்ன சேதமடைந்த குடிசைகளுக்கு 58.15 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 1-50

பயிரிழப்பைப் பொறுத்தளவில், 29,009 ஹெக்டேர் நிலப்பரப்பிலான வேளாண் பயிர்கள் மழை வெள்ளத்தால் சேதமடைந்துள்ளன. பாசன ஆதரவு பெற்ற பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500/-ம், மானாவாரி பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.7,410/-ம், நீண்டகாலப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.18,000/-ம் வழங்கப்படுகின்றது. அதனடிப்படையில், 116 விவசாயிகளுக்கு 3.92 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. 0.88 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட தோட்டக்கலைப் பயிர்கள் மழை வெள்ளத்தால் சேதமடைந்தன; பாதிப்படைந்த 4 விவசாயிகளுக்கு ரூ.12,000/-நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய குளச்சல் தொகுதியில்கூட, மனித உயிரிழப்புகள் ஏதுமில்லை. படுகாயமுற்று, ஒரு வாரத்திற்குமேல் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்காக





1 நபருக்கு, 12,700/- ரூபாய் நிவாரணத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, ஒரேயொரு கன்றுக்குட்டி இழப்பிற்காக ரூ.16,000/- வழங்கியிருக்கிறார்கள்; பயிரிழப்பு ஏதுமில்லை. குடிசை சேதத்தைப் பொறுத்தளவில், முழுமையாக சேதமடைந்தது 63; அதற்காக 3.15 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. பகுதியாக சேதமடைந்தது 88; அதற்கு 4.4 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. எனவே, நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை அவர் வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கியிலிருந்து விவசாயிகள் பெற்றுள்ள கடனை இரத்து செய்ய வேண்டும் அல்லது வட்டியையாவது இரத்து செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இதுவரை எந்த அரசும் செய்யாத அளவிற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் மிகப் பெரிய அளவில் விவசாயிகளுக்கு சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. வட்டியில்லா கடன், குறைந்த வாடகையில் விவசாயக் கருவிகள், உரங்கள் தங்குதடையின்றி கிடைக்க மானிய விலையில் உரம், மானிய விலையில் விதைப் பொருட்கள் போன்றவற்றைக் கொடுக்கிறார்கள். மேலும், விவசாயிகள் விளைவித்த பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வரை அவற்றை வைத்துக்கொள்வதற்கு ஏதுவாக சேமிப்புக் கிடங்குகள் என பல்வேறு சலுகைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள், ஏறத்தாழ 49 இலட்சம் பேருக்கு இதுவரை கடன் வழங்கியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், இந்த ஆண்டுகூட 5,500 கோடி ரூபாய் கடன் வழங்கப்படும் என்று அறிவித்து, இதுவரை 4,850 கோடி ரூபாயை விவசாயிகளுக்குக் கடனாக வழங்கியிருக்கிறார்கள். விவசாயிகள் உரிய முறையில் கடன் தொகையை செலுத்திக்

[திரு. செல்லூர் கா. ராஜு] [2016 ஜனவரி 22

கொண்டிருக்கிறார்கள். யாரும் இதுவரை கட்டாமல் இல்லை; அவர்கள் வாங்கிய கடன்களை சரியான முறையில் செலுத்திக்கொண்டு வருகிறார்கள்.

வைத்தியநாதன் கமிட்டி, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொடுக்கப்படுகின்ற கடன்களை எந்த அரசும் தள்ளுபடி செய்யக் கூடாது, அவ்வாறு தள்ளுபடி செய்தால் அது மிகப் பெரிய தவறான முன்னுதாரணமாக ஆகிவிடும் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறது. சென்ற தி.மு.க. ஆட்சியில்தான் அதற்குரிய சட்டத்தை இயற்றினார்கள். தற்போது, ஆந்திர அரசு கடனைத் தள்ளுபடி செய்தது. அதை ரிசர்வ் வங்கியும், நபார்டு வங்கியும் கண்டித்து, இது தவறு, உடனடியாகக் கடனை செலுத்தியாக வேண்டும் என்று தெரிவித்திருக்கின்றன. இதுபோன்ற கருத்துகளால்தான், கடன் பெற்று, உரிய காலத்தில் கட்டும் அனைத்து விவசாயிகளின் கடனுக்கான வட்டியை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசே செலுத்தி விடுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது வினா எழவில்லை. இந்தப் பதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் போதுமானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு நிமிடம்கூட பேசவில்லை, பார்த்துக்கொள்ளுங்கள். 2 மணி வரை பேசுங்கள் என்று சொன்னீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், சொல்லுங்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கியில் வாங்கிய விவசாயக் கடனை கூட்டுறவு வங்கி தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. அரசு நிதியிலிருந்து கொடுத்து, விவசாயக் கடனை இரத்து செய்ய வேண்டும் என்றுதான் கேட்கிறோம். எனவே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் ஒத்துழைப்புக் கொடுத்து, பயிர்க் கடன்களுக்கு அரசு நிதியைக் கொடுத்து, விவசாயிகளின் கடன்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



2016 ஜனவரி 22]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு கடனை தள்ளுபடி செய்தால் அது தவறான முன்னுதாரணம் ஆகிவிடும், எந்த அரசும் தள்ளுபடி செய்யக் கூடாது, அரசே ஏற்றுக்கொள்ளவும் கூடாது என்றுதான் நபார்டு வங்கி சொல்லியிருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, எந்த அரசும் கடனை தள்ளுபடி செய்யக் கூடாது, அரசு மானியமாகவும் கொடுக்கக் கூடாது என்றுதான் சொல்லியிருக்கிறது. அது மக்களுடைய பணம், வட்டிக்கு வாங்கிக் கொடுக்கிறோம். (குறுக்கீடு) இப்போது வேண்டுமானால் வாருங்கள், அந்த தாக்கீது வேண்டுமானால் தருகிறோம். என்ன போட்டிருக்கிறது என்று நீங்களே பாருங்கள். தற்போது ஆந்திர அரசு வறட்சியின் காரணமாகக் கடனை தள்ளுபடி செய்ததைக் கண்டித்திருக்கிறார்கள். இது தவறு, அதற்கான தொகையைக் கொடுத்தாலும் அது தவறு என்றும் சொல்லியிருக்கிறார்கள். இனி எந்த அரசும் இவ்வாறு தள்ளுபடி செய்ய முன்வரக் கூடாது. இதனால் கூட்டுறவு வங்கியின் பலமே கெட்டுப்போகும். கூட்டுறவு வங்கியின் நோக்கம் கெட்டுப்போகும். மக்களுக்காக, மக்களால் உருவாக்கப்பட்ட, மக்களுடைய நன்மைக்காக நடைபெறுகிற அந்தச் சங்கங்களில் இதுபோன்று செய்யக் கூடாது. ஏற்கெனவே ஒழுங்காகக் கடன் கட்டுகிறவர்களுக்கும் இது தவறான முன்னுதாரணம் ஆகிவிடும். அதாவது, ஏற்கெனவே கடன்களை ஒழுங்காகக் கட்டிக்கொண்டிருப்பார்கள். தங்களுக்கும் தள்ளுபடி செய்வார்கள் என்று அவர்கள் தவறாக நினைக்கும் வாய்ப்பு இருப்பதால்தான் இதனைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூடுதலான தகவலாகச் சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல் மழைக்கால நிவாரணமாக சேதமடைந்த வீடுகளுக்கு ரூ.5,000/-, ரூ.10,000/- என கொடுக்கப்படும் நிதி உதவி போதாது. நிவாரணத் தொகையை நிச்சயமாக அதிகப்படுத்திக்

கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு காவல் துறையைப் பொறுத்தமட்டில், காவலர்களின் strength மிகவும் குறைவாக இருக்கிறது. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்திலிருந்து வெளியிடப்பட்ட புள்ளிவிவரத்தின்படி, road accidents சென்ற ஆண்டு 41,550 என கணக்கிடப்பட்டிருக்கிறது. அதில் 10,000 நபர்கள் இறந்துள்ளனர். ஆகவே, அதிக அளவில் காவலர்களை நியமிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2004 ஆம் ஆண்டில் வீரப்பன் வேட்டையின்போது, அந்தப் பணியில் உதவி ஆய்வாளர்களாக இருந்தவர்களுக்கு பதவி உயர்வு கொடுத்திருக்கிறார்கள். Super Numeric post என்று கொடுத்திருக்கிறார்கள். அது வரவேற்கக்கூடிய ஒன்று. ஆனால், தற்போது அவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கவில்லை. 2005 ஆம் ஆண்டில் உதவி ஆய்வாளர்களாக வந்தவர்களுக்கு பதவி உயர்வு கொடுத்திருக்கிறார்கள்; 2004 ஆம் ஆண்டில் வீரப்பன் வேட்டையில் இருந்தவர்களுக்குக் கொடுக்கவில்லை என்ற ஒரு வருத்தம் இருக்கிறது. அதனை சரி செய்ய வேண்டுகிறேன்.

கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களிலே பணியாற்றும் பணியாளர்களுக்குக் கடந்த 50 மாதங்களாக சம்பளம் வழங்கப்படாமல், மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு மிக முக்கியமான பிரச்சினை. கன்னியாகுமரி மாவட்டத்தின் எல்லையான களியக்காவிளைப் பகுதியில் இந்த அரசால் 3 ஆண்டுகளுக்கு முன்பாக, எல்லைப் போராட்டத் தியாகி சிதம்பரநாத நாடார் அவர்களுக்கு ஒரு சிலை வைக்கப்பட்டுள்ளது. 3 வருடங்கள் ஆகிவிட்டன. ‘சிலையைத் திறக்க வேண்டும்’ என்று பல்வேறு போராட்டங்கள் நடத்தி இந்த அரசை நாங்கள் வலியுறுத்தினோம். அந்தச் சிலை அங்கே அப்படியே இருக்கிறது. தற்போது சிலர் அந்தச் சிலையை அங்கிருந்து மாற்றுவதற்கு plan செய்து கொண்டிருக்கிறார்கள். தற்போது எல்லைப் பகுதியில், களியக்காவிளை பேருந்து நிலையத்திற்கு அருகில் இருக்கக்கூடிய அந்தச் சிலை சரியான இடத்தில்தான் இருக்கிறது. அந்தச் சிலையை உடனடியாகத் திறக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பொற்கால ஆட்சி நடத்தி வருகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் மொழிப் போர் தியாகி சிதம்பரனார் அவர்களுக்கு திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று சட்டப் பேரவை விதி 110-ன்கீழ் அறிவித்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அறிவிப்பிற்கும், ஆணைக்கும் இணங்க, மொழிப் போர் தியாகி சிதம்பரனார் அவர்களுடைய சிலையை களியக்காவிளையில் அமைத்திட அரசாணை வெளியிடப்பட்டது. தற்போது மொழிப் போர்த் தியாகி சிதம்பரனார் அவர்களுடைய திருவுருவச் சிலைக்கான பீடம் அமைக்கும் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு, திறப்பு விழாவிற்குத் தயார் நிலையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுச் சாலைகள், நடைபாதைகள், சாலையோரங்கள் மற்றும் பொதுவான பயன்பாட்டு இடங்கள் ஆகியவற்றில் சிலைகள் மற்றும் கட்டடங்கள் நிறுவுவதற்கு மாநில அரசுகள் அனுமதிக்கக் கூடாதென்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. எனவே, நம் தாய் மொழியாம் தமிழ் மொழியை வளர்த்திட அரும்பாடுபட்ட தமிழ் அறிஞர்களையும், தமிழகத்தை உயர்த்திட தம் ஆயுளையும் அர்ப்பணித்த பெருமக்களையும், இந்திய நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டு தன் இன்னுயிரை ஈன்ற தியாகச் செம்மல்களையும் நினைவுகூர்ந்து அவர்களின் அருமை பெருமைகளை உலகறியச் செய்வதோடு, அந்த மாமனிதர்கள் ஆற்றிய நாட்டுத் தொண்டினை இளைய தலைமுறையினர் அறிந்துகொள்ளும் வகையில் மணிமண்டபங்கள் அமைத்தும், சிலைகள் நிறுவியும், விழாக்கள் எடுத்தும், பல்வேறு அரும் சேவையாற்றிவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி (மேசையைத் தட்டும் ஒலி) கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் அமைந்துள்ள பேரூராட்சி

[திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி] [*2016 ஜனவரி 22*

அலுவலக வளாகத்தில் மொழிப் போர்த் தியாகி சிதம்பரனார் அவர்களின் திருவுருவச் சிலையை அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, கூடிய விரைவில் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் அந்தச் சிலை திறந்து வைக்கப்படும் என்பதை இந்தப் பேரவைக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேண்டுதல் அவருக்குப் புரியவில்லை. அந்தத் திருவுருவச் சிலையை மாற்றி வைக்க முயற்சி செய்கின்றார்கள், அதனைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவற்றிற்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கம் சொல்லிவிட்டார். நீங்கள் வேறு பொருளுக்குப் போங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கக்கூடிய பகுதி பஞ்சாயத்துப் பகுதி. அதனால் எந்தப் பிரச்சினையும் இல்லை. National Highways-க்கு வரவே வராதென்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது அந்தச் சிலை அமைக்கப்பட்டுள்ள இடம் நீதிமன்றத்தினுடைய கண்டனத்திற்குள்ளாகி இருக்கின்ற காரணத்தினால், அதை மாற்றியமைப்பதற்கு துறையின் சார்பாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



*2016 ஜனவரி 22*] [திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி]

மொழிப் போர் தியாகி சிதம்பரனார் சிலை மட்டுமல்ல. கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் அமைக்கப்பட்டுள்ள கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்களின் சிலையும் அதுபோன்ற இடத்தில்தான் உள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சியில் மொழிப் போர் தியாகி கீழப்பழூர் சின்னசாமி அவர்களுடைய திருவுருவச் சிலையும் அதுபோன்ற இடத்தில்தான் அமைந்துள்ளது. இவையெல்லாம் மாற்றப்பட்டு, இந்த மூன்று சிலைகளும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் விரைவில் திறக்கப்படும் என்ற அறிவிப்பை நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அவருடைய கட்சியின் தலைவர் திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்கள், இதை அரசியலாக்க வேண்டுமென்பதற்காக, கன்னியாகுமரி மாவட்டத்திலே சிதம்பர நாடாருடைய செல்வாக்கிலே உள்ள ஓட்டுக்களை வாங்க வேண்டுமென்பதற்காக, 'நானே சிலையைத் திறப்பேன்; இந்த அரசு சிலையைத் திறக்கவில்லை என்று சொன்னால், நானே வந்து, களியக்காவிளையிலே சிதம்பர நாடாருடைய சிலையைத் திறப்பேன்' என்று சொல்லியிருக்கிறார். இது சட்டவிரோதமான செயல். உச்ச நீதிமன்றத்தினுடைய கண்டனத்திற்குள்ளாகக்கூடிய ஒரு நிலைமையை அரசுக்கு உருவாக்க வேண்டுமென்கிற நிலைப்பாட்டினை எடுத்து, மாண்புமிகு உறுப்பினர் சார்ந்த கட்சியின் தலைவர் கன்னியாகுமரியிலும் பேசியிருக்கிறார், நாகர்கோவிலிலும் பேசியிருக்கிறார். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் வலியுறுத்துகின்றவிதமாக இங்கே பேசுகின்றார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மறைந்த தலைவர்களுக்கும், தியாகச் சீலர்களுக்கும் மணிமண்டபங்களையும், நினைவுச் சின்னங்களையும், நினைவுத் தூண்களையும், சிலைகளையும் அமைத்து பெருமைப்படுத்துகின்ற அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் பகுதியிலே வர்த்தகத் துறைமுகம் ஆரம்பிக்கவிருப்பதாகவும், அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதாகவும், வருகின்ற மார்ச் மாதம் 8 ஆம் தேதி, அதற்கான அடிக்கல் நாட்டப்படவிருப்பதாகவும் எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த மத்திய இணை அமைச்சர் மாண்புமிகு திரு. பொன். ராதாகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கும் எங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அதற்கு இந்த அரசு* N.O.C. *ஏதேனும் கொடுத்திருக்கிறதா? மக்களுடைய பிரச்சினைகள் யோசிக்கப்பட்டிருக்கிறதா? இதிலே தமிழக அரசினுடைய நிலைப்பாட்டினை நான் அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மூன்று ஆண்டுகளுக்கு முன்பே இதே அவையில் குளச்சல் பகுதியிலே ஒரு துறைமுகம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். அப்போது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'மத்தியிலே காங்கிரஸ் ஆட்சிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; நீங்களும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்; தமிழ்நாட்டைச் சார்ந்த திரு. ஜி.கே. வாசன் அவர்கள்தான் மத்திய கப்பல் மற்றும் தரைவழிப் போக்குவரத்துத் துறையினுடைய அமைச்சராக இருக்கிறார். எனவே, அவரிடத்திலே நீங்கள் அனுமதியைப் பெற்று, வர்த்தகத் துறைமுகத்தை அமைத்தால், தமிழ்நாடு அரசு அதற்குத் தேவையான உதவிகளைச் செய்யும்' என்று தெரிவித்தார். இப்பொழுது மத்திய இணை அமைச்சர் திரு. பொன். ராதாகிருஷ்ணன் அவர்கள் அதற்கு முயற்சி எடுத்து, அங்கே வர்த்தகத் துறைமுகத்தை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அரசிடத்திலே கோரிக்கை வைத்திருக்கிறார். அது அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது முக்கியமான பாயின்ட். நான் மிகவும் சுருக்கமாகப் பேசுகிறேன். எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும்தான் நான்கு வழிச் சாலை அமைக்கப்படவில்லை. அந்தப் பணியை ஆரம்பிப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கின்றது; அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதை நான் வரவேற்கிறேன். ஆனால், பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகக் குறைந்த அளவில்தான் நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கின்றது. கேரளாவில் மூன்று மடங்கு அதிகமாகக் கொடுக்கிறார்கள். ஆனால், இங்கு அரசால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற தொகை குறைவாக இருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாலையை அமைப்பதற்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்தும்போது, மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட தொகைதான், இழப்பீட்டுத் தொகையாக அந்த நில உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதைச் சொல்கிறார் என்று தெரியவில்லை. நான்கு வழிச் சாலை, மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சகத்திற்குட்பட்டது. அது மாநில அரசுக்குட்பட்டதல்ல. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்குட்பட்ட சாலை. ஆகவே, அந்த இழப்பீட்டுத் தொகை போதவில்லை என்று சொன்னால், நீங்கள் நீதிமன்றத்திற்குச் சென்றால், அதற்கு உரிய இழப்பீட்டுத் தொகையைப் பெறலாம். மத்திய அரசுதான் அந்தச் சாலையை அமைக்கின்றது. அதற்குரிய இழப்பீட்டுத் தொகையையும் மத்திய அரசுதான் நிர்ணயிக்கின்றது; மாநில அரசு அதை வழங்குகின்றது. ஆகவே, ஏற்கெனவே அந்த நிலங்களுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற* guideline value-*படிதான் நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2016 ஜனவரி 22

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

பிற்பகல் 2-05

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** இரண்டே இரண்டு points-தான் பேச இருக்கிறேன். நீதிமன்றத்தின்வாயிலாக நீங்கள் கேட்கச் சொல்கிறீர்கள். நான் தங்களிடத்தில் அன்போடு வேண்டுவது, நீங்கள் மத்திய வலியுறுத்தி, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தகுந்த நஷ்டஈட்டுத் தொகை அல்லது குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பணிவோடு வேண்டுகிறேன். ரப்பர் விவசாயிகள் அதிகம் இருக்கக்கூடிய மாவட்டம், எங்கள் கன்னியாகுமரி மாவட்டம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** இரண்டே இரண்டு points-தான். நான் அதிக நேரம் கேட்கவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ரப்பர் ஒரு கிலோவிற்கு 250 ரூபாயாக இருந்தது. அதை வைத்துத்தான் விவசாயிகள் வாழ்ந்து வந்தார்கள். நானும் அத்தொகையைப் பெற்றுத்தான் வாழ்ந்து வந்தேன். தற்போது 82 ரூபாயாக இருக்கிறது. கேரள மாநிலத்திலும் இதே நிலை ஏற்பட்டிருக்கிறது. கேரள அரசு ஒரு கிலோ ரப்பர் விலை ரூ.150/- என்று நிர்ணயித்திருக்கிறது. ஆகவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளைப் பாதுகாப்பதற்கும், அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் இந்த அரசும் ரப்பர் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** முக்கியமான point. ஒரே ஒரு point-தான். கன்னியாகுமரி மாவட்டத்தில், ஆத்தூர் பகுதியில் பள்ளிக்குலையனூர் என்ற பகுதியில் 50, 60 வருடங்களாக பெந்தகோஸ்தே சர்ச் ஒன்று இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் சில விஷமிகள் சேர்ந்து புதிய இந்து ஆலயத்தைக் கட்ட முயற்சிக்கின்றார்கள். இதனால் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. திரு. வேணுகோபால் கமிஷனின்



2016 ஜனவரி 22] [திரு. ஜே.ஜி. பிரின்ஸ்]

பரிந்துரையின்படி, 1982 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரு சர்ச் இருக்கும் இடத்திற்குப் பக்கத்தில் ஒரு கோவிலைக் கட்ட வேண்டுமென்றால் 1 கி.மீ. இடைவெளி இருக்க வேண்டும், அதற்கு மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெற வேண்டும் என்ற விதி இருக்கிறது. இதையெல்லாம் பார்க்காமல் உதறிவிட்டு, மாவட்ட நிருவாகமும் புதிய கோவில் கட்டுவதற்கு ஆதரவு அளிக்கிறது என்றால் அது தவறான ஒன்றாகும். ஆகவே, தமிழக அரசு அந்த இடத்தில் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவதோடு, எந்தவித இந்து ஆலயமும், 60 ஆண்டு காலமாக நிரந்தரமாக இருக்கக்கூடிய பழமையான சர்ச்சுக்கு பிரச்சினையாக இல்லாதவாறு தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் நல்ல தரமான சாலைகள் இல்லை. அனைத்து சாலைகளும் முற்றிலுமாக பழுதடைந்துவிட்டன. ஒரு சாலைகூட தரமானதாக இல்லை. தயவுசெய்து அனைத்து பழுதடைந்த சாலைகளையும் சீர்செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாலைகளே போடவில்லை என்று சொல்கின்றார். அவருடைய தொகுதியில் 47.08 கி.மீ. நீளச் சாலைகள் 2013 முதல் 2015 வரை போடப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டிலும் 30 கி.மீ. சாலைகள் 22 கோடி ரூபாய் செலவில் போடுவதற்கு டெண்டர் கோரப்படும் நிலையில் உள்ளது.

இந்த நேரத்தில் நான் ஒன்றை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏற்கெனவே நீங்கள் மத்தியில் ஆட்சியில் இருந்தீர்கள். மத்திய அரசிடம் சி.ஆர்.எப். நிதி இருந்தது. அந்த நிதியைப் பெற்று தேவையான சாலைகளைச் சீரமைத்திருக்கலாம். ஆனால், அப்பொழுதெல்லாம் விட்டுவிட்டீர்கள். இப்பொழுது மத்திய இணை அமைச்சராக இருக்கின்ற திரு. பொன். ராதாகிருஷ்ணன் அவர்கள், இந்த ஆண்டு சி.ஆர்.எப். நிதியிலிருந்து 100 கோடி ரூபாய் பெற்றிருக்கின்றார். அதுமட்டுமல்லாமல்,

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [*2016 ஜனவரி 22*

அந்த மாவட்டத்திற்குத் தேவையான பாலங்களையும் கொண்டு வந்திருக்கிறார். உங்களுடைய அரசுதான் மத்தியில் ஆண்டு கொண்டிருந்தது. நீங்கள் காங்கிரஸ் உறுப்பினராக இருந்தீர்கள். நீங்கள் மத்திய அரசை அணுகியிருந்தால், மத்திய அரசிடமிருந்து தேவையான நிதியைப் பெற்று உங்கள் பகுதிக்குத் தேவையான சாலைகள் அனைத்தையும் சீரமைத்திருக்கலாம். ஆனால், மாநில அரசுதான் அதைச் செய்ய வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள். இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, நீங்கள் சொல்கின்ற அத்தனை சாலைகளையும் சீர் செய்வதற்குண்டான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலைச் சொல்லியிருக்கின்றார்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** எதிர்காலத்தில் மத்தியில் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வரும். நிச்சயமாக சிறப்பான செயல்களை நாங்கள் செய்வோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கனவில்கூட உங்களுக்கு அந்த வாய்ப்பு வராது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ், நீங்கள் நன்றாகப் பேசினீர்கள். சந்தோஷமான பதிலையும் வாங்கிவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) நன்றாகப் பேசி நல்ல பதிலை வாங்கிவிட்டார். திரு. ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் நல்லபடியாகப் பேசிவிட்டீர்கள். சந்தோஷமான பதிலையும் வாங்கிவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ், சொல்லுங்கள்.



*2016 ஜனவரி 22*]

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** சமீபத்தில் நடந்து முடிந்த அனைத்து இடைத் தேர்தல்களிலும், பஞ்சாயத்துத் தேர்தல்களிலும் காங்கிரஸ் கட்சி அமோக வெற்றியைப் பெற்றிருக்கிறது. இவை உதாரணமும், சாட்சியுமாய் இருக்கின்றன. எனவே, நிச்சயமாக காங்கிரஸ் கட்சி மீண்டும் ஆட்சி அமைக்கும் என்பதைச் சொல்லி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மத்தியில் உங்களுடைய காங்கிரஸ் ஆட்சிதான் நடைபெற்றுக் கொண்டிருந்தது. நீங்களும் காங்கிரஸ் உறுப்பினர்தான். அப்பொழுதே நீங்கள் தேவையான நிதியைப் பெற முடியவில்லை. நீங்கள் மத்தியில் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், எப்படி நிதியைப் பெறப் போகிறீர்கள்? ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் அடுத்த முறையும் தமிழகத்தில் முதலமைச்சராக வருவார்கள். தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நீங்கள் வைக்கின்ற கோரிக்கைகளையும். மாண்புமிகு அம்மா அவர்களால்தான் நிறைவேற்ற முடியும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், பேசுங்கள்.

பிற்பகல் 2-10

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துகளை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

தமிழகத்தில் வடகிழக்குப் பருவ மழை காலத்தின்போது, கடந்த நூறாண்டுக்காலத்தில் பெய்திராத அளவிற்கு ஒரே நாளில் கொட்டித் தீர்த்த மழையுடன், குறுகிய காலத்தில் நான்கு முறை பெய்த தொடர் கன மழையினால், மிகக் கடுமையான வெள்ளம்

[திரு. எம். ஆறுமுகம்] [2016 ஜனவரி 22

ஏற்பட்டு சென்னையின் பெரும் பகுதிகளும், கடலோர மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. பயிர்கள், கால்நடைகள், பொது கட்டமைப்பு வசதிகள் மற்றும் தனியார் சொத்துக்களுக்கு பெரும் சேதத்தை விளைவித்ததோடு, மனித உயிர் இழப்புகளையும் இந்த வெள்ளம் ஏற்படுத்தியுள்ளது.

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், தூத்துக்குடி மற்றும் நெல்லை போன்ற மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிவாரண முகாம்களைத் திறந்து, பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருந்தாலும், பாதிக்கப்பட்ட மக்கள், குடிசை வீடுகளை இழந்தவர்கள், உடைமைகளை இழந்தவர்கள், அரசு வழங்கியுள்ள நிவாரணத் தொகையான ரூ.5,000/- மற்றும் ரூ.10,000/-க்கு மேல் இன்னும் கூடுதலான நிவாரணத் தொகையை வழங்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள் என்பதனை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, கூடுதலான நிவாரண உதவித் தொகையை வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மத்திய அரசு 1,000 கோடி ரூபாயை வழங்கியிருந்தாலும், தமிழக அரசால் 17,432 கோடி ரூபாய் கூடுதல் நிதி உதவி கோரி, கோரிக்கை மனு மத்திய அரசிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதியினைத் தொடர்ந்து வலியுறுத்திப் பெற வேண்டும். அதற்கான முயற்சிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தில் வெள்ளத்திற்குப் பின் தேங்கியிருந்த குப்பைகளை அகற்றி தூய்மைப்படுத்துவதற்காக மாபெரும் துப்புரவுப் பணி மேற்கொள்ளப்பட்டதில், தமிழகத்தில் உள்ள துப்பரவுப் பணியாளர்களின் பங்களிப்பு சிறப்பானது. அப்பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசு கூடுதல் சிறப்பு நிதியை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பெரும் பேரிடர் ஏற்பட்ட போதிலும், மாநில சுகாதாரத் துறை, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு திறமையாகச் செயல்பட்ட காரணத்தினால், தொற்று நோய் பரவாமல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மனித உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளதை அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். அதற்காக நான் பாராட்டுகிறேன்.



2016 ஜனவரி 22] [திரு. எம். ஆறுமுகம்]

தமிழகத்தில் இருக்கக்கூடிய மக்கள், மத ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக, பெரும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பு நிவாரண நடவடிக்கைகளை ஒற்றுமை உணர்வுடன், சகோதரப் பாசத்தோடு தாமாகவே முன்வந்து அரசுடன் இணைந்து செயல்பட்ட பொதுமக்கள், சிறுபான்மையின மக்கள், தொண்டு நிறுவனங்கள், இளைஞர்கள், பல்வேறு அமைப்புகள் மற்றும் அரசியல் இயக்கங்கள் போன்றவற்றின் சிறப்பான பணியை நினைவுகூர்ந்து இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

தமிழகத்தை வெள்ளம் பாதித்த மாநிலமாக அறிவித்திருப்பதால், பயிர்க் கடன்கள், சிறு, குறு, மற்றும் நடுத்தரத் தொழில் கடன்கள் உள்ளிட்ட இதர கடன் வசூலை ஒத்தி வைத்தால் மட்டும் போதாது, பயிர்க் கடன்களை முழுமையாக இரத்து செய்யவும், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் கடன்களுக்கான வட்டியைத் தள்ளுபடி செய்யவும் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கை அரசு புரிந்த போர்க் குற்றங்கள் மற்றும் ஜெனிவா ஒப்பந்த விதிமீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையத்தில் தீர்மானத்தை நிறைவேற்றக் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தி, இம்மாமன்றத்தில் பல தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. கச்சத் தீவை மீட்கவும், நமது மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீண்டும் நிலை நாட்டவும், முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டத்தை 142 அடியாக உயர்த்தவும், உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பினை அமல்படுத்தவும், காவேரி மேலாண்மை வாரியத்தையும், காவேரி நதிநீர் முறைப்படுத்தும் குழுவையும் தாமதமின்றி அமைக்கவும் மத்திய அரசை வலியுறுத்தி, இந்த மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை தமிழக அரசு மத்திய அரசிடம் மீண்டும் வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றி, ஓய்வு பெற்ற ஓட்டுநர்கள், நடத்துநர்கள், technical staff மற்றுமுள்ள பணியாளர்கள் ஆகியோர் ஓய்வுபெற்ற பின்னும், அவர்களுக்கு

வழங்கப்பட வேண்டிய பணப் பயன்கள், பணிக்கொடை, வருங்கால வைப்பு நிதி, பென்ஷன் போன்றவை வழங்கப்படாமல் உள்ளன. அவர்களுக்கான அனைத்து பணப் பயன்களையும் அரசு உடனடியாக வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விழைகிறேன்.

காற்றாலை மூலம் மின் உற்பத்தியைப் பெற்றுள்ள தமிழகம், காற்றாலை மின் உற்பத்தியாளர்களுக்கு பாக்கிப் பணத்தை வழங்கவில்லை என்ற கோரிக்கையும், காற்றாலைமூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தை ஊக்குவித்து, முழுவதையும் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையும் இருந்து வருகிறது. இதை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*பிற்பகல் 2-15*

வால்பாறை பகுதியை சுற்றுலா மையமாக அரசு அறிவிக்க வேண்டும். வால்பாறையில் படகு இல்லம், தாவரவியல் பூங்கா ஆகியவற்றை அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறை நடவடிக்கை எடுத்து அவற்றை அமைப்பதற்கான பணிகளைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வால்பாறையில் தேயிலைத் தோட்டத் தொழில் மட்டுமே இருந்து வருகிறது. மாற்றுத் தொழிலைத் தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோவை, திருப்பூர், ஈரோடு மற்றும் தமிழகத்தின் பல இடங்களில் பஞ்சாலைகள் இயங்கி வருகின்றன. மத்திய அரசின் ஜவுளிக் கொள்கையினாலும் mismanagement-னாலும் பல ஆலைகள் பல ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளன. இத்தொழிற்சாலைகளில் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு மத்திய அரசு அறிவித்துள்ள நிவாரண நிதியைக் கேட்டுப் பெற வேண்டுமென்றால், இவ்வாலைகளை தொழில் தகராறு சட்டம், 1947 பிரிவு 25(O)-வின்கீழ் மூடப்பட்ட ஆலைகள் என அரசு அறிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே ஏற்பட்ட வெள்ளத்தின்போது, குவிந்திருந்த குப்பைகளை அகற்றுவதற்காக பல்வேறு





மாவட்டங்களிலிருந்து துப்புரவுப் பணியாளர்கள் அழைத்து வரப்பட்டு, அவர்கள் அந்தப் பணியிலே ஈடுபடுத்தப்பட்டார்கள். அவர்களின் தூய்மையான பணியை ஊக்குவிக்கும் வகையில், இதுபோன்ற பணிகளில் ஈடுபட்ட துப்புரவுப் பணியாளர்களுக்கு தமிழக அரசியல் வரலாற்றிலே முதல்முறையாக தலா 2,000 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கிய ஒரே முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அந்த மூடப்பட்ட ஆலைகளை தொழில் தகராறு சட்டம், 1947, பிரிவு 25(O)-ன்கீழ் மூடப்பட்ட ஆலைகள் என அரசு அறிவிக்க வேண்டும். இத்தகைய ஆலைகளின் பட்டியல் மாநிலக் கூட்டுக் கமிட்டி மூலமாக தொழிலாளர் துறை அதிகாரிகளிடம் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசு மூடப்பட்ட ஆலைகளை 'closure' என அறிவித்து, மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இது மாநில அரசு கொடுக்கக்கூடிய நிவாரணம் அல்ல. மத்திய அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய நிவாரணத் தொகை. அது இன்னும் நிலுவையில் இருக்கிறது. தமிழகத்தில் மூடப்பட்டிருக்கக்கூடிய ஆலைகளை தொழில் தகராறு சட்டம், 1947, பிரிவு 25(O)-ன்கீழ் மூடப்பட்ட ஆலைகள் என்று அறிவித்துவிட்டால், இந்த நிவாரணத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு இருக்கும். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இந்த நிவாரணத்தைப் பெறாமல் இருக்கிறார்கள். அதைப் பெற்றுத் தரும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் துறையில், Deputy Commissioner of Labour, Assistant Commissioner of Labour, Joint Commissioner of Labour போன்ற பதவிகள் இன்னும் பூர்த்தி செய்யப்படாமல் காலியாக உள்ளன. உடனடியாக அவற்றைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். ஆறுமுகம்] [2016 ஜனவரி 22

வால்பாறை சட்டப் பேரவை தொகுதிக்குட்பட்ட ஆழியாறு ஆற்றில் நெல்லித்துறை என்ற பகுதியில் சுமார் 1,500 ஏக்கரில் தென்னையும், நெல்லையும், வாழையும் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இங்கு விளையும் பொருட்களைக் கொண்டு வரவும், இடுபொருட்களைக் கொண்டு செல்லவும் சரியான பாதையின்றி விவசாயிகள் சிரமப்பட்டு வருகிறார்கள். இதே பகுதியில் மன்னம் என்ற இடத்தில் பழங்குடியின மலைவாழ் வகுப்பினர் பிரிவைச் சேர்ந்த சுமார் 300 குடும்பங்கள் வசித்து வருகின்றன. மருத்துவமனை செல்லவும், குழந்தைகள் பள்ளிக்குச் செல்லவும், கூலி வேலைக்குச் செல்லவும், மக்கள் ஆற்றைக் கடந்துதான் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியில் ஒரு மேம்பாலம் கட்டுவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டம், அன்னூர் தாலுகா, கீரநத்தம் கிராமம் க.ச. எண் 482/1, 482/2AB உள்ள பூமி 1995 ஆம் ஆண்டில் 214 பேருக்கு குடியிருப்பு மனைகளாகப் பிரிக்கப்பட்டு, site போட்டு கிரயம் செய்து கொடுக்கப்பட்டது. 214 பேருக்கான குடியிருப்பு site-ல், தற்போது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்மூலம் அடுக்குமாடி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கான இடத்தில் குடிசை மாற்று வாரியம் வீடு கட்டியுள்ளதால் அந்த வீடுகளை இவர்களுக்கு ஒதுக்கித் தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் நலத்தினைப் பேணுவதில் அரசு கவனம் செலுத்தினாலும், அவர்களுக்காக ஒதுக்கப்படும் நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். இவர்களுக்கான தங்கும் விடுதிகளின் எண்ணிக்கையை உயர்த்தியும், உணவுப் படி மற்றும் உதவித் தொகையை உயர்த்தியும் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். பழங்குடி கிராமம், வருவாய்க் கோட்டம், வருவாய் மாவட்டம் என்ற அளவில் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். பழங்குடி கிராம அளவில் சத்தியமங்கலம் வனக் கோட்டத்தில் மட்டும் Forest Rights Committees முழுமையாக அமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் பிற பகுதிகளில் இக்குழுக்கள் முறையாக, முழுமையாக அமைக்கப்படவில்லை. வன நிலத்தை



2016 ஜனவரி 22] [திரு. எம். ஆறுமுகம்]

காலங்காலமாகப் பயன்படுத்திவரும் பழங்குடியினர் மற்றும் இதர சமுதாயத்தினருக்கு நில உரிமை வழங்கப்பட வேண்டும். வன மகசூல் சேகரம், கால்நடை மேய்ச்சல் போன்ற பழங்குடியினரின் பாரம்பரிய வாழ்வாதாரங்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். வன நிலத்தில் பள்ளி, மருத்துவமனை, குடிநீர், சமூகக் கூடங்கள், பாதை, அங்கன்வாடிகள் போன்ற பல்வேறு சமூகத் தேவைகளுக்கு வன நிலங்களை மாற்றம் செய்து வழங்க வேண்டும்.

பிற்பகல் 2-20

சட்டத்தை அமல்படுத்த உயர் நீதிமன்றம் கொடுத்துள்ள வழிகாட்டுதல்களை (directions) தடையாணை என்று தவறாகப் புரிந்துகொண்டு இது காலம் வரை தமிழக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, சட்டத்தை அமல்படுத்துவதில் மெத்தனம் காட்டிவிட்டது. சட்டப்படி அத்தகைய மக்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகளுக்கு நீதிமன்றம் தடை விதிக்கவில்லை. மாறாக, நீதிமன்றத்தின் ஒப்புதலோடு அங்கீகாரத்தை வழங்கத்தான் நீதிமன்றம் வழிகாட்டியது. தற்போது இவ்வழக்கு உச்ச நீதிமன்றம் சென்றுவிட்டது. வழக்கை விரைந்து முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுப்பதோடு, அதற்குள் தமிழ்நாடு முழுவதும் வன நில அங்கீகாரத்தை வழங்குவதற்கு கிராம அளவிலான வன உரிமைக் குழு, கிராம சபை, கோட்ட அளவிலான வன உரிமைக் குழு, மாவட்ட அளவிலான வன உரிமைக் குழு ஆகியவற்றை முறைப்படி அமைத்து, கேட்பு மனுக்களை குழுக்களில் பரிசீலித்து, இக்குழுக்களின் அங்கீகாரத்தைப் பெற்று நடைமுறைப் பணிகளை முடித்து வைக்க வேண்டுகிறேன்.

தமிழ்நாட்டில் ஆனைமலை, சத்தியமங்கலம், முண்டந்துறை, களக்காடு ஆகிய பகுதிகள் புலிகள் சரணாலயம் என்று அறிவிக்கப்பட்டுள்ளன. கொடிய மிருகங்களினாலும், யானைகளின் நடமாட்டம் அதிகம் உள்ளதாலும், விலை மதிப்பற்ற மனித உயிர்கள் பலியாகின்றன. மனித உயிர் இழப்புகளைத் தடுக்க போதிய நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தவிர்க்க முடியாமல் ஏதாவது உயிரிழப்பு ஏற்பட்டால், தற்போது கொடுத்து வரும் இழப்பீட்டுத் தொகை ரூபாய் 3 இலட்சம் என்பதை உயர்த்தி, ரூபாய் 5 இலட்சமாக அறிவிக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாயுள்ளத்தோடு இதனை அறிவிக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம். ஆறுமுகம்] [2016 ஜனவரி 22

தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, கோவை மாவட்டத்தில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைமூலம் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி பதிவு முகாம் நடைபெற்றது. சுமார் ஒரு இலட்சத்திற்கு அதிகமானவர்கள் கலந்து கொண்டார்கள். மாவட்டம் முழுவதும் முறையாக விளம்பரம் செய்யப்பட்டு, சிறப்பாக நடைபெற்ற அந்த வேலைவாய்ப்பு முகாமில், கோவை மாவட்டத்தைச் சார்ந்த மரியாதைக்குரிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மரியாதைக்குரிய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார்கள். மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். நிறைய தனியார் முகாம்கள் அமைக்கப்பட்டன. முன்கூட்டியே விண்ணப்பங்கள் வழங்கப்பட்டும், online மூலமாக பதிவு செய்தும் வேலைவாய்ப்பு தேடி வந்த சுமார் 12 ஆயிரம் பேருக்கு உடனடியாக வேலைவாய்ப்பிற்கான உத்தரவுகள் அந்த நிகழ்ச்சியிலே வழங்கப்பட்டன என்பதனை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இதுபோன்ற முகாம்கள் ஒவ்வோர் ஆண்டும் நடத்தப்பட்டால், சட்டமன்ற உறுப்பினர்களுடைய சிபாரிசு இல்லாமல், நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய சிபாரிசு இல்லாமல், அதிகாரிகளுடைய சிபாரிசு இல்லாமல், யாருடைய சிபாரிசும் இல்லாமல் இப்படிப்பட்ட முகாம்களின் மூலமாக வேலை இல்லாதவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதனை இந்த மாமன்றத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன்.

அடுத்து, நரிக்குறவர்கள். தமிழகத்தில் நரிக்குறவர்களை பழங்குடியினராக மத்திய அரசு அங்கீகரித்து 3 ஆண்டுகளாகின்றன. தமிழகத்தில் இன்னும் அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை; உடனடியாக சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும். லம்பாடி மக்கள், லம்பாடி, சுகாலி, பஞ்சாரா என்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். ஆந்திரா, மஹாராஷ்டிரா மாநிலங்களில் பழங்குடி மக்களாகவும், கர்நாடகத்தில் தாழ்த்தப்பட்டோராகவும் உள்ளனர். தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ள லம்பாடி மக்களை பழங்குடியினராக அங்கீகரிக்கக்கோரி தமிழக அரசு மத்திய



2016 ஜனவரி 22] [திரு. எம். ஆறுமுகம்]

அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. அதனை தமிழக அரசு மீண்டும் வலியுறுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆழியாறு அணையிலிருந்து பொள்ளாச்சி வாய்க்கால் சுமார் 24 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெறுகிறது. இதில் மூன்றாவது கிளை வாய்க்கால் மட்டும் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெறுகிறது. இது 18 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. மொத்தப் பாசனத்தில் 3-வது கிளை வாய்க்கால் கால் பங்கு பாசனத்தை உள்ளடக்கியது. இதை வருடம்தோறும் தூர் வார, திட்ட மதிப்பீடு 6 இலட்சம் ரூபாய் ஆகும். மேற்படி கிளை வாய்க்கால், மலைப் பகுதியில் சுமார் ஒரு கிலோ மீட்டர் பயணிக்கிறது. பாறைகளில் விரிசல் ஏற்படுவதால் மொத்தத் தண்ணீரில் கால் பங்கு தண்ணீர் எந்தப் பாசனத்திற்கும் பயன்படாத வகையில் சென்று விடுகிறது. சட்டமன்ற மனுக்கள் குழு, மதிப்பீட்டுக் குழு ஆகியவை பார்வையிட்டு, மேற்படி பாலப் பகுதியையும் வாய்க்காலையும் அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், இதை அரசே ஏற்றுக்கொள்வதுதான் சரியென்றும் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளன. மேற்படி, வாய்க்காலை உதவிப் பொறியாளர், உதவி செயற் பொறியாளர், கண்காணிப்புப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் ஆகியோர் அரசே ஏற்றுக்கொள்ளும்படி பரிந்துரை செய்தும், இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே, மேற்படி வாய்க்காலை அரசே ஏற்றுக்கொண்டு, இதன்மூலம் பாசனம் பெறும் விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்கும்படி நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-25

அரசால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள தொகுப்பு வீடுகள் சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாகி உள்ளன. இவை மழை வெள்ளக் காலங்களில் இடிந்து விழுந்து ஆபத்தை ஏற்படுத்துகின்றன. இந்த வீடுகளை பழுதுநீக்கம் செய்ய அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

நாகை, திருவாரூர் மாவட்டம் பிரிக்கப்பட்டு 18 வருடங்களாகிவிட்டன. அதற்குப்பின் உருவான மாவட்டங்களுக்கு புதிய மாவட்ட அலுவலகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், திருவாரூர் மாவட்ட பதிவாளர் அலுவலகம்

[திரு. எம். ஆறுமுகம்] [2016 ஜனவரி 22

தொடங்கப்படாததால் நாகை மாவட்டத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. ஆகையால், திருவாரூர் மாவட்டத்திற்கு, மாவட்ட பதிவாளர் அலுவலகம் தொடங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டு, வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபொழுது, மக்கள் நலக் கூட்டணி தேர்தல் வரை நீடிக்குமா என்று கவலை தெரிவித்தார். மக்கள் நலக் கூட்டணி கைதேர்ந்த, சிறந்த, நேர்மையான தலைவர்களால் நெய்யப்பட்ட வண்ணச் சேலை என்பதை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த சேலையில் நூலும் பிரிந்து போகாது, சாயமும் போகாது, சுருங்கியும் போகாது. தமிழகத்தில் தேர்தலுக்கு முன்பே குறைந்தபட்ச செயல் திட்டத்தோடு மக்களை சந்திக்கும் முதல் கூட்டணி என்கிற வரலாறு படைக்கப்போகிற கூட்டணி இது. அதன் வெற்றிப் பயணத்தை யாராலும் தடுக்க முடியாது. (குறுக்கீடு) சிரிக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது சுருங்கி, கிழிந்து எந்த அளவிலும் போகாமல் இருக்க வேண்டும் என்றுதான் நாங்களும் நினைக்கின்றோம். ஏனென்றால், தூரத்தில் இருந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றியையும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வெற்றியையும், அவர்கள் ஒன்றாக இருந்து வாழ்த்த வேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணமாக இருக்கின்றது. நீங்கள் பிரிந்து போக வேண்டுமென்று நாங்கள் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அன்புச் சகோதரி செல்வி பாலபாரதி அவர்கள், 'நாங்கள்தான் வருவோம்' என்று சொன்னார்கள். நிச்சயமாக எதிரியே இல்லாத, எதிர்க்கட்சிகளே வெல்லாத, முழுவதும் அனைத்திந்திய அண்ணா



2016 ஜனவரி 22] [திருமதி எஸ். கோகுல இந்திரா]

திராவிட முன்னேற்றக் கழகம் வெல்லக்கூடிய ஒரு தேர்தலாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விருப்பம் நிறைவேறுமா என்று 2016 தேர்தலில் பார்ப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது இறுதிக் கூட்டத் தொடர். "இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் ஆற்றிய அரும்பணியை பதிவு செய்யும் வகையில் இது முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத் தொடர்" என்கிறது ஆளுநருடைய உரை. இந்த இறுதிக் கூட்டத் தொடரிலும் ஆறு உறுப்பினர்கள் கலந்துகொள்ள முடியாத தண்டனை என்பது ஏற்கத்தக்கதாக இல்லை. இது இறுதிக் கூட்டத் தொடர் என்பதால், தே.மு.தி.க.-வைச் சார்ந்த ஆறு உறுப்பினர்களின் அந்தத் தண்டனை இரத்து செய்யப்பட்டு, பட்ஜெட் கூட்டத் தொடரிலாவது அவர்கள் கலந்துகொள்ள வழி செய்ய வேண்டும்.

கடந்த ஐந்தாண்டுகளில் அரசியல் கட்சித் தலைவர்கள்மீது ஏராளமான அவதூறு வழக்குகள் போடப்பட்டுள்ளன. உச்ச நீதிமன்றமே இதுகுறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ளது. ஜனநாயக நலன் கருதி, இந்த வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறுமையும், வேலைவாய்ப்பின்மையும் தீராத பிரச்சினைகளாகவே தொடர்ந்து கொண்டிருக்கின்றன. 100 நாட்கள் வேலை உறுதித் திட்டத்தில் பணி செய்வோருக்கு வழங்க வேண்டிய ரூ.182/- என்கிற ஒரு நாள் கூலி மிகப் பெரும்பாலானோருக்கு முழுமையாக வழங்கப்படுவதில்லை. வேலை குறைவாகச் செய்திருக்கிறீர்கள் என்றோ அல்லது வேறு காரணங்களைச் சொல்லியோ, ரூ.100/-, ரூ.110/-, ரூ.90/-, ரூ.80/- என்று கூலி கொடுக்கிற நிலை கிராமங்களிலே இருக்கிறது. 100 நாட்கள் வேலை உறுதித் திட்டத்திற்கான நிதியை மத்திய அரசு குறைத்துள்ளது. தமிழ்நாட்டில் இந்தத் திட்டம் செயல்படும் பரப்பு எல்லையையும் குறைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. வேலை உறுதி நாட்களை அதிகப்படுத்துவதும், அனைத்து

[திரு. அ. சவுந்தரராசன்] [2016 ஜனவரி 22

பஞ்சாயத்துகளிலும், நகரங்களிலும் இத்திட்டத்தை அமல்படுத்துவதும், வளர்ச்சிக்கும், கிராமப்புறத்து வறுமை ஒழிப்புக்கும் அவசியம். அரசு அதிலே கவனம் செலுத்த வேண்டுகிறேன். இப்போது நீர்நிலைகளைப் பராமரித்து தொடர்ந்து மராமத்து செய்ய வேண்டிய தேவைகளை சமீபத்தில் வந்த வெள்ளம், பொட்டில் அடித்ததுபோல் உணர்த்திச் சென்றுவிட்டது. அரசு நிறைவேற்றும் வகையில், தனித் திட்டங்கள் போட்டு, கிராமப்புற வேலைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நீர்நிலைப் பராமரிப்புகளையும், மராமத்துகளையும் அதிகப்படுத்த வேண்டும்.

பிற்பகல் 2-30

வேலைவாய்ப்பகத்தில் காத்திருப்போர் எண்ணிக்கை 85 இலட்சத்தைத் தாண்டிவிட்டது. வேலை கிடைக்கிற இளைஞர்களுக்கு பெரும் தொழிற்சாலைகளில்கூட ஒப்பந்த முறையில் குறைவான கூலியே வழங்கப்படுகிறது. இப்படி வேலையில் உள்ள பல இலட்சக்கணக்கான பேர்கூட வறுமை நிலையையே தாண்ட முடியாத நிலைமை இருக்கிறது. தொகுப்பூதியம், மதிப்பூதியம் போன்றவற்றை சத்துணவு, அங்கன்வாடிகளில் அரசே பின்பற்றுகிறது. இன்றுகூட, அவர்கள் ஓர் ஆர்ப்பாட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றனர். தனியார் நிறுவனங்களில் 12 மணி நேர வேலை, ஒப்பந்தக் கூலி முறை போன்றவற்றை நாம் ஒழித்து, குறைந்தபட்ச ஊதியம் 15 ஆயிரம் ரூபாய் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். மேதகு ஆளுநர் அவர்கள் உரையில், அரசு விருப்பம் தெரிவித்திருக்கிற வளர்ச்சி, வறுமை ஒழிப்பு என்பதற்கு இவை அவசியம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த உரையில் தொழிலாளர் தொடர்பான எதுவுமே இல்லை என்பது மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது. தனியார் கல்வி நிறுவனங்களில் வைப்பு நிதி உள்ளிட்டவற்றைக்கூட எப்படி ஏமாற்றுகிறார்கள் என்பதும், வைப்பு நிதி உயர் அதிகாரி ஒருவரே கைது செய்யப்பட்டிருப்பதும் சமீபத்திய சான்று. இது மிகப் பெரிய நிறுவனங்களுக்கும், கடை, வர்த்தக நிறுவனங்களுக்கும் பொருந்தும்.

சென்னை வெள்ளம் குறித்தும், செம்பரம்பாக்கம் ஏரி திறப்பு குறித்தும் நிறைய பேசப்பட்டுள்ளது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விரிவான பதிலளித்திருக்கிறார்கள். அந்தப் பதில் முழு திருப்தி அளிக்காத காரணத்தினால், என்னுடைய சில கருத்துகளை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். 45 ஆண்டுகளாக



2016 ஜனவரி 22] [திரு. அ. சவுந்தரராசன்]

நான் சென்னையில் இருக்கிறேன். மூன்று பெரிய வெள்ளம் வந்து போயிருக்கிறது. ஆனால், அத்தனை தெருக்களையும் பாதித்த ஒரு வெள்ளம் இதற்கு முன்பு வந்ததில்லை. ஒரு தெருகூட பாக்கி இல்லாமல் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அவருடைய உரையிலே முழுக்க மறுக்க முடியாத ஓர் உண்மை, அதிக மழை பெய்தது என்பதுதான். மற்றவற்றிலே எங்களுக்கு முழு உடன்பாடு இல்லை. ஆகவே, டிசம்பர் 1 ஆம் தேதி படிப்படியாகவும், குறிப்பிட்ட இடைவெளியிலும் தண்ணீர் திறந்து விடப்பட வேண்டிய மேலாண்மையில் தவறு நடந்திருக்கிறது என்பதையும், ஒரே நேரத்தில் 29 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட்டதுதான் வெள்ளப் பாதிப்பை உயர்த்தியது என்பதையும் ஏற்றுக்கொள்வதில் எந்தத் தவறும் இல்லை. சில ஏரிகள் உடைப்பெடுத்ததும்கூட, ஏற்பட்ட வெள்ளப் பெருக்கிற்குக் காரணம். அதுவும் அரசின் அலட்சியத்தையே காட்டுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது, 'விடிய விடிய இராமாயணம் கேட்டுவிட்டு, விடிந்ததும் கேட்டால் சீதைக்கு இராமன் சித்தப்பன்' என்று சொன்ன கதையாக இருக்கிறது. நேற்று விளாவாரியாக, ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம், ஸ்கூல் பிள்ளைகளுக்கு வாத்தியார் பாடம் எடுப்பதுபோல எல்லோருக்கும் எடுத்துச் சொன்னார்கள். நீங்கள் புரிந்து கொண்டு, மீண்டும் அதே பிரச்சினையைப் புரியாததுபோலச் சொல்வது உள்ளபடியே வருத்தம் அளிக்கிறது. ஏனென்று சொன்னால், ஏற்கெனவே அங்கே 33 ஆயிரம் கன அடி அளவுக்குத்தான் தண்ணீர் திறந்துவிட முடியும் என்ற நிலையில் இருக்கின்றபோது, அதிகபட்சமாக 29 ஆயிரம் கன அடிதான் அங்கே, திறந்துவிடப்பட்டது. அதைப்போல, செம்பரம்பாக்கம் ஏரி, திறந்ததால்மட்டும் இந்தப் பாதிப்பு ஏற்படவில்லை. செம்பரம்பாக்கம் ஏரி, பக்கத்தில் இருக்கின்ற பல்வேறு ஏரிகளில் பெருமழையின் காரணமாக, உடைப்பெடுத்துவிட்டதன் காரணமாக, அங்கேயிருந்தும், ஏறத்தாழ 50 ஆயிரம் கன அடி அளவிலான தண்ணீர், அந்த 29 ஆயிரம் கன அடி தண்ணீரோடு சேர்ந்து கொண்டது. ஆக, ஒட்டுமொத்தமாக, அனைத்து நீரும் ஒரே நேரத்தில் வெளிவந்ததால்தான், இவ்வளவு பாதிப்பு

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2016 ஜனவரி 22

ஏற்பட்டிருக்கிறது. செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து 44 சதவிகிதம் தண்ணீர் வந்திருக்கிறது. மீதி அனைத்தும், பல்வேறு ஏரிகளிலிருந்து வந்த பெருவெள்ளம். ஆகவே, செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து நீர் திறந்துவிட்டதால்தான் வந்திருக்கும், வந்திருக்கும் என்று சொல்வது பொருத்தமற்ற விவாதம், புரிந்துகொள்ளாத விவாதம். பெருமழை ஏற்படுகின்றபோது, சில பாதிப்புகளை தவிர்க்கவே முடியாது. அதைப்போல, இயற்கைச் சீற்றங்கள் வருவதற்கு அரசா காரணம்? ஒன்றே ஒன்றுதான் நீங்கள் சொல்லவில்லை; இந்த மழையை அம்மா கொண்டுவந்து விட்டார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டை மட்டும் சொல்லவில்லை. (குறுக்கீடு) இந்த மழையைக் கொண்டு வந்ததே அம்மாதான் என்ற ஒன்றைமட்டும்தான் சொல்லவில்லை. அதைப்போல இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகின்றபோது, சில தவிர்க்க முடியாத பாதிப்பு ஏற்படும். அப்படிப்பட்ட பாதிப்புக்கு, அரசு உரிய நடவடிக்கை எடுத்திருக்கிறதா, இல்லையா? அதைத்தான் பார்க்க வேண்டும்.

“கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.”

என்கிறார் வள்ளுவர். அந்தக் காலத்திலிருந்தே, மழை நினைத்தால் ஒருவரைக் கெடுத்துவிடும், ஒருவரை வாழ வைக்கும். அதே மழை, மிகப் பெருமைக்குரிய மழை என்றும் சொல்கிறார் வள்ளுவர்.

“துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.”

அதுவும் பாருங்கள், இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே மழையினுடைய தாக்கத்தைப் பற்றி வள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

பிற்பகல் 2-35

மழையால் இவ்வளவு கடினமான பாதிப்புகள் ஏற்பட்டதற்குப் பின்பு, அந்தப் பாதிப்புகளுக்கு உடனடி நிவாரணம் எடுத்தது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இதுமட்டுமல்ல, ஏற்கெனவே ‘தானே புயல்’ ‘சுனாமி’ போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்பட்டபோது அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கை, உலகத்தில் உள்ள அனைத்து நாடுகளுக்கும் முன்னுதாரணமாக அமைந்தது என்பதை பல நாட்டுத் தலைவர்களே ஒப்புக்கொண்டுள்ளனர். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும் இந்த நேரத்திலே முதலமைச்சராக



2016 ஜனவரி 22] [திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]

இல்லாமல் இருந்திருந்தால், இந்தப் பெருவெள்ளத்தினால் பல்லாயிரக்கணக்கான உயிர் பலி ஏற்பட்டிருக்கும். அம்மா அவர்கள் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் காரணமாகத்தான் பெருமளவு சேதம் குறைக்கப்பட்டிருக்கிறது, உயிர்ச் சேதம் தடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்ற மழை ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்குப் பின்பு வந்துள்ளது. எனவே, ஏற்கெனவே இதுகுறித்த தெளிவான பதிலை மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இந்த சப்ஜெக்ட்டை விட்டுவிட்டு அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவையில் இல்லாத நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் தவறான தகவலைப் பதிய வைத்திருக்கிறார். செம்பரம்பாக்கம் ஏரி தண்ணீர் சில ஏரிகளுக்குள் உள்நுழைந்து, அது உடைப்பெடுத்து வெள்ளம் ஏற்பட்டது, அதுதான் உண்மை என்று சொல்கிறார். செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து வந்த உபரி நீர் நேராக உபரி கால்வாயான அடையாற்றில் வந்து ஆதனூரில் சேர்கிறது. எந்த டேங்குக்கும் சென்று feed ஆவதே கிடையாது. போகின்ற போக்கில் ஏதாவது அவதூறை அள்ளிவிட்டுவிட்டு, நீங்கள் ஏற்கெனவே சொன்ன உண்மைக்கு மாறான தகவலை உறுதிப்படுத்துகின்றவகையில், திரும்பத், திரும்ப இதை நீங்கள் எத்தனை முறை பேசினாலும், மக்களுக்கு இதன் உண்மை நிலை புரிந்திருக்கிறது. எனவே, உங்களுடைய தவறான குற்றச்சாட்டு இனிமேல் எடுபடாது என்பதனை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும், சென்னை மாநகரத்தில் எப்படி மழை பெய்தது என்று. திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை உள்ளடக்கிய மூன்று மாவட்டங்களிலும் தொடர்ந்து பெய்து வந்தது. அந்தநேரத்தில் யாராலும் வெளிவர முடியவில்லை. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் போர்க்கால நடவடிக்கைக்காக தலைமைச் செயலகத்திற்கு வந்தார்கள். அந்தநேரத்தில் வரும்போது, பீச் ரோட்டில், கடல், மணல் பரப்பு, ரோடு அனைத்திலும்

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 22

ஒரே மட்டத்திற்குத் தண்ணீர் இருந்தது. அம்மா அவர்களின் கார் தண்ணீரை எதிர்த்து நீந்தி வந்ததுபோல்தான் வந்தது. அந்தநேரத்திலும் மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமைச் செயலகம் வந்து, உரிய நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாகத்தான் (மேசையைத் தட்டும் ஒலி) மனித உயிரிழப்புகள் கட்டுப்படுத்தப்பட்டது என்பதுதான் உண்மை. அது யாருக்குத் தெரிகிறதோ, தெரியவில்லையோ, நல்ல உள்ளம் படைத்தவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் ஒவ்வொரு முறை பேசும்போதும், 'சத்துணவு, அங்கன்வாடி, சத்துணவு, அங்கன்வாடி' என்று இதையே சொல்லிக் கொண்டிருக்கிறார். போராட்டங்கள் நடத்துகிறார்கள், போராட்டங்கள் நடத்துகிறார்கள் என்று சொல்வார். அந்தப் போராட்டங்களை நடத்த யார் தூண்டிவிடுகிறார்கள், ஏன் போராட்டங்கள் நடத்துகிறார்கள் என்பதுவரை எங்களுக்குத் தெரியும். அதை நான் இந்த அவையில் சொல்வதற்கு விரும்பவில்லை. சத்துணவு ஊழியர்களுக்கும், அங்கன்வாடி ஊழியர்களுக்கும் அதிகமான சலுகை அளித்ததே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அது இப்போது அல்ல, 1992 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அந்தக் காலத்திலேயே கருணையோடு சத்துணவு ஊழியர்களுக்கும், அங்கன்வாடி ஊழியர்களுக்கும் சலுகை அளித்துள்ளார்கள். கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் அம்மா அவர்களின் காலத்தில்தான் வழங்கப்பட்டன. மாதம் ஒரு நாள் தற்செயல் விடுப்பு, அம்மா அவர்கள் காலத்திலேதான் வழங்கப்பட்டது. யார் தந்தார்கள், எல்லாமே அம்மா அவர்கள் காலத்தில்தான். அதேபோல், மதிப்பூதிய அடிப்படையிலே பணியாற்றி வந்த, சத்துணவு மற்றும் அங்கன்வாடி பணியாளர்களை 1996 ஆம் ஆண்டு பகுதிநேர நிரந்தரப் பணியாளர்களாக அறிவித்ததும் மாண்புமிகு அம்மா அவர்களின் காலத்தில்தான். எல்லாமே அம்மா அவர்களின் காலத்திலேதான்.



2016 ஜனவரி 22] [திருமதி பா. வளர்மதி]

பி.எட்., முடித்த சத்துணவுப் பணியாளர்களை பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் செய்திட சிறப்புத் தேர்வுக்கு அனுமதி வழங்கியதும் மாண்புமிகு அம்மா அவர்களின் காலத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) சத்துணவு அமைப்பாளர்களுக்கு ரூபாய் 50,000/-, சமையலர் மற்றும் உதவியாளர்களுக்கு ரூபாய் 20,000/- என்று பணிக்கொடை வழங்க உத்தரவிட்டதும் மாண்புமிகு அம்மா அவர்களின் காலத்திலேதான். அதேபோல, சிறப்பு சேமநல நிதி ரூபாய் 20 வீதம் 148 தவணைகளிலே பிடித்தம் செய்து ரூபாய் பத்தாயிரம் வழங்க உத்தரவிட்டதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் காலத்திலேதான். அதேபோல, +2 கல்வித் தகுதியோடு இரண்டாண்டு ஆசிரியர் பயிற்சியில் பட்டயப் படிப்பு தகுதி பெற்றவர்களுக்கு இடைநிலை ஆசிரியர் பணி நியமனம் வழங்கியதும் மாண்புமிகு அம்மா அவர்களின் காலத்திலேதான்.

பிற்பகல் 2-40

மேலும், சத்துணவுத் திட்டத்திலே காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு ஆணை பிறப்பித்ததும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்திலேதான். நீதிமன்றத்திற்கு சில பேர் சென்றிருக்கின்றார்கள். அந்தக் கதையெல்லாம் உங்களுக்குத் தெரியும். யார் போனார்கள், எப்படிப் போனார்கள் என்பதெல்லாம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். அதற்குப் பிறகு போராட்டம் நடத்துகிறேன் என்று வந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அந்தப் போராட்டக் குழுவினரை அழைத்துப் பேசி மாண்புமிகு அம்மா அவர்கள் சலுகை அறிவித்தார்கள்; அதுவும் உங்களுக்குத் தெரியும். இதுவரை சத்துணவு ஊழியர்களுக்கு அதிகமான சலுகைகளை அறிவித்தது அம்மா அவர்களுடைய காலத்தில்தான். OAP பெறவில்லை என்ற certificate தர வேண்டும் என்று கேட்டார்கள். அதையும் தருவதாக பேச்சுவார்த்தையின்போது ஒப்புக்கொண்டு, ஓய்வூதியம் வழங்குகின்றவர்களுக்கு இதுபோன்ற certificate தேவையில்லை என்று சொல்லச்சொல்லி, அதையும் ஒப்புக்கொண்டோம். அதேபோல், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 25 விழுக்காடு பணியிடங்களை சமையலர் மற்றும் உதவியாளர்களுக்கு சத்துணவு அமைப்பாளர்களாக பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று

[திருமதி பா. வளர்மதி] [2016 ஜனவரி 22

கேட்டார்கள். அதற்குக் கல்வித் தகுதியை நிர்ணயித்து, அதையும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். அதேபோல, 20 ஆண்டுகள் பணி முடித்த அமைப்பாளர்களுக்கு 3 சதவிகித தேக்க நிலை ஊதிய உயர்வாக வழங்கப்பட்டு வந்தது. இந்தச் சலுகை 2008-வது ஆண்டுக்குப் பிறகு தகுதி உள்ள நபர்களுக்கு நீட்டித்து வழங்கப்படவில்லை என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகின்றேன். 10, 20 ஆண்டுகள் பணி முடித்த சமையலர் மற்றும் சமையலர் உதவியாளர்களுக்கு தேக்க நிலை ஊதியம் வேண்டும் என்று கேட்டார்கள். அதையும் மாண்புமிகு அம்மா அவர்கள் தந்தார்கள். அதேபோல, மாதாந்திர மலைப் படி வேண்டுமென்று கேட்டார்கள். அதோடு மாண்புமிகு அம்மா அவர்கள் குளிர்காலப் படியையும் சேர்த்து வழங்கினார்கள். மருத்துவக் காரணங்களினால் விருப்ப ஓய்வு பெறுவதற்கு அனுமதி வேண்டும் என்று கேட்டார்கள். அதையும் ஒத்துக்கொண்டார்கள். 72 ஆயிரம் ரூபாய் வருமான வரம்பு அடிப்படையிலே விருப்பம் தெரிவிக்கும் சத்துணவுப் பணியாளர்களுக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்திலே சேருவதற்கு அனுமதி தர வேண்டும் என்று கேட்டார்கள். அதையும் மாண்புமிகு அம்மா அவர்கள் தந்தார்கள். 180 நாட்கள் மகப்பேறு விடுப்பு வேண்டும் என்று கேட்டார்கள். அதையும் மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுத்தார்கள். அதுமட்டுமல்ல, சில்லரைச் செலவினத்திற்காக 10 ரூபாய் போதாது என்று கேட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் அதை ஐம்பது ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கின்றார்கள். அதேபோல, கூடுதல் பொறுப்புப் படியை 20 ரூபாயாக உயர்த்தித் தந்திருக்கின்றார்கள். இன்னும் பல சலுகைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் தந்திருக்கின்றார்கள். ஆனால், காலத்தின் அருமை கருதி, நான் ரொம்ப சுருக்கி, சுருக்கி சொல்லியிருக்கின்றேன். எப்போதுமே நீங்களும் பதிய வைத்துக்கொண்டே இருக்கின்றீர்கள். நாங்களும் பதிய வைக்கின்றோம். மாண்புமிகு அம்மா அவர்கள், சத்துணவு, அங்கன்வாடி பணியாளர்களுக்கு தொடர்ந்து பல்வேறு சலுகைகளை அளித்து வருகிறார்கள். ஏற்கெனவே, மானியக் கோரிக்கையிலே பேசுகின்றபோதுகூட சொன்னேன், சத்துணவுப் பணியாளர்களுக்கும், அங்கன்வாடி பணியாளர்களுக்கும் இவ்வளவு சலுகைகள் எந்த மாநிலத்திலேயும் அறிவித்தது இல்லை, தந்ததும் இல்லை என்று. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டுந்தான் தமிழ்நாட்டிலே தந்து கொண்டிருக்கின்றார் என்பதைத்



2016 ஜனவரி 22] [திருமதி பா. வளர்மதி]

தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இது போதும் என்று நினைக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த விவரங்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதெல்லாம் உண்மை. ஆனால், அவர் பட்டியலிட்ட எல்லா சலுகைகளையும் வழங்கிய பிறகு அவர்கள் வாங்குகிற சம்பளம் 8,500 ரூபாய்தான். அவர்கள் பெறுகிற ஓய்வூதியம் ஆயிரம் ரூபாய்தான். ஓய்வுக் காலத்தில் அவர்கள் பெறுகிற மொத்தத் தொகை 50 ஆயிரம் ரூபாய்தான். நான் சொல்வது என்னவென்றால், நீங்கள் கொடுத்தது எதையும் நான் மறுக்கவில்லை, குறையும் சொல்லவில்லை. அவர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் (OAP) அளவுக்குத்தான் ஓய்வூதியம் இருக்கும் என்று, 30 ஆண்டுகள் ஒரு திட்டப் பணியில் இருந்தவர்களுக்குச் சொல்வது சரியா என்றுதான் நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அதற்கெல்லாம்தான் எனக்குப் பதில் வேண்டும், அவ்வளவுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உண்மைக்கு மாறான தகவலைப் பதிய வைக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்தான் சொன்னார்; OAP-ல்கூட ஆயிரம் ரூபாய் கிடைக்கின்றது. ஆனால், சத்துணவுப் பணியாளர்களுக்கு 700 ரூபாய்தான் தருகின்றார்கள். அவர்களுக்கு ஆயிரம் ரூபாயாவது தரக் கூடாதா என்றுதான். இதை மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, உடனடியாக ஆயிரம் ரூபாய் தர வேண்டும் என்று உத்தரவிட்டு, அந்தப் பணம் தரப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்த உண்மையை மறைக்கின்றார் என்பதைத்தான் இங்கே நான் தெளிவுபடுத்த விரும்புகின்றேன். இந்த 50,000 ரூபாய் ஓய்வூதியத் தொகையை யார் தந்தது? மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்

*தந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் ஓய்வூதியம் 50 ஆயிரம் ரூபாய் தந்தார். எந்தக் காலத்தில் யார் தந்தார்கள்? இந்தச் சலுகைகளை எல்லாம் சத்துணவுப் பணியாளர்களுக்கும், அங்கன்வாடிப் பணியாளர்களுக்கும் அம்மா அவர்கள்தான் தொடர்ந்து தந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாக தெரியப்படுத்திக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

*பிற்பகல் 2-45*

**திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெள்ளம் தொடர்பாக நான் பேச வேண்டிய கருத்துகளைப் பேச விட்டுவிட்டு, அமைச்சர்கள் பதில் சொன்னால் நன்றாக இருக்கும். நான் பதிவே செய்யக் கூடாது என்கிற முறையிலே அமைச்சர்கள் தலையிடுகிறார்கள் என்றே நான் கருதுகிறேன். நான் சொல்ல வருவது என்னவென்றால், நீங்களே சொல்கிறீர்கள், ஏரிகள் உடைப்பெடுத்ததால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது என்று. ஏன் உடைப்பு எடுத்தது? அது அரசின் அலட்சியம் இல்லையா? பொதுப் பணித் துறையின் அலட்சியம் இல்லையா? அதிகாரிகளின் அலட்சியம் இல்லையா?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வானிலை ஆய்வு மையம் சொல்கின்ற மிக கன மழை என்பது 24 செ.மீ.* Catchment area, *நீர்பிடிப்புப் பகுதியிலே பெய்கின்ற மழை குளத்திற்கோ, ஏரிக்கோ வரும்போது அதனை அனுசரித்து,* surplus water, *உபரி நீரை கால்வாய்களுக்கு அனுப்ப* design *செய்கிறோம். இதுதான் நடைமுறையில் இருக்கிறது. ஆனால், அன்றைக்கு பெய்த மழை, உங்கள் எல்லோருக்கும் தெரியும், 100 வருடங்களுக்குப் பின்பு பெய்த மிக, மிக, மிக கன மழை. 100 செ.மீ.-க்கு மேலே பெய்திருக்கின்றது. இங்கே மட்டுமல்ல, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் இரண்டு தினங்களாக மழை பெய்து கொண்டேயிருக்கின்றது. அப்படிப் பெய்த மழைத் தண்ணீர் எங்கே போகும்? எங்கே போகும்? ஒன்று, குளம் அல்லது ஏரிக்கு வரும். இல்லாவிட்டால், எல்லாம் சேர்ந்து உபரி நீராக ஆற்றுக்கு வரும். அதுதான் நடக்கும். உதாரணத்திற்கு ஒரு* glass-*ல் குடிப்பதற்காக தண்ணீரை ஊற்றிக் கொண்டிருக்கிறோம். அது எவ்வளவு கொள்ளளவு பிடிக்குமோ அந்த அளவுதான் பிடிக்கும். அதற்கு மேல் ஊற்றினால் கீழேதானே வழியும். அதுபோல, ஏரிகளின் கொள்ளளவில் சில சில மாற்றங்கள் இருக்கும். செம்பரம்பாக்கம் ஏரியில் இவ்வளவு பிரச்சினைகள் நடந்ததற்குப் பின்னாலும், செம்பரம்பாக்கம் ஏரியினுடைய கரையிலேயோ அல்லது செம்பரம்பாக்கம் ஏரியின் உபரி நீர் வெளியேற்றப்படுகின்ற கரைகளிலேயோ எந்தப் பாதிப்பும் இல்லை. இதை நீங்கள் நன்றாக நோக்க வேண்டும். அப்படி அதைக் காப்பாற்றியதன்மூலம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னை வாழ் நகர மக்கள் அனைவரையுமே காப்பாற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள். 3 டி.எம்.சி. அடி தண்ணீர் உள்ள ஏரி. அது உடைந்திருந்தால் நம் நிலைமை என்னவாகும்? இதுதான் உண்மை. இதை விட்டுவிட்டு, உள்ளே போய், உள்ளே போய், உள்ளே போய் விஞ்ஞானரீதியிலெல்லாம் நீங்கள் யோசனை செய்து, யோசனை செய்து பேசுவதனால் எந்தப் பலனும் ஏற்படப் போவதில்லை. இது இயற்கைச் சீற்றம். சுனாமி வந்தது. அதனுடைய பாதிப்பு உங்களுக்கு நன்றாகத் தெரியும். தானே புயல் வந்தது. அது எல்லாவற்றையும் வழித்தெடுத்துக் கொண்டு சென்றது. 100 வருட பலா மரங்களைக்கூட வேரோடு பிடுங்கி எடுத்துக் கொண்டு சென்றது. அதுமாதிரிதான் இந்தப் பெரு மழை, கன மழை, பெரு வெள்ளமாகப் பெருக்கெடுத்தது. இதை எப்படி அரசு அணுகியது என்பதுதான் இப்பொழுது நடைமுறையில் இருக்கின்ற வாதம். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் போர்க்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அதற்கு முறையாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, உரிய நிவாரணம், இழப்பீடு இப்பொழுது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதுதான் வரலாறு. இதை யாரும் மறுக்க முடியாது. இந்த சப்ஜெக்ட் குறித்து நேற்றே அதிக நேரம் நாம் பேசிவிட்டோம். இதை நம்முடைய இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் திரு. சவுந்தரராசன் அவர்கள் உணர்ந்து, இனி அடுத்த சப்ஜெக்ட்டுக்கு ஏதாவது வலு இருந்தால் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

[2016 ஜனவரி 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருதரப்பிலும் ஒத்துக்கொள்ள முடியாத கருத்து மோதல் வருகின்றபோதுதான் நீதிமன்றத்திற்குப் போகிறோம் அல்லது விசாரணைக்குப் போகிறோம். இப்பொழுது இருதரப்பும் ஒத்துக்கொள்ள முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் இருக்கின்ற அரசியல் கட்சிகளுக்கும், அரசிற்கும் உள்ள கருத்து வேறுபாட்டைப் போக்க ஒரு விசாரணை வைப்பதிலே என்ன அச்சம்? ஏன் விசாரணை வைக்கவில்லை? அதை மட்டும்தான் நாங்கள் கேட்கின்றோம், வேறொன்றும் இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றத்திற்கு விசாரணை கமிஷன் கேட்ட முதல் அரசியல்வாதிகள் தமிழ்நாட்டில்தான் இருக்கிறார்கள். (குறுக்கீடு) எங்கேயாவது இயற்கைச் சீற்றத்திற்கு விசாரணை கமிஷன் கேட்டிருக்கிறார்களா? (குறுக்கீடு) ஏன் மழை பெய்தது என்று விசாரணையா? ஏன் இவ்வளவு அதிகமாக மழை பெய்தது என்று விசாரணையா? இயற்கைச் சீற்றத்திற்கு,* natural calamity-*க்கு எதற்கு விசாரணை கமிஷன்? கைப்புண்ணுக்கு எதற்குக் கண்ணாடி? தேவையில்லாமல், ஏதாவது ஒரு கற்பனையிலே ஒரு குற்றச்சாட்டைச் சொல்வீர்கள். அதற்கு ஒரு விசாரணை கமிஷன் வைக்க வேண்டுமா? அதாவது, நீங்கள் குற்றச்சாட்டு சொல்வதிலே ஏதாவது ஒரு துளியளவு, எள்ளளவு, எள் முனையளவாவது உண்மையிருந்தால் அதுபற்றிப் பேசலாம். எதுவுமே இல்லாமல் ஈரை பேனாக்கி, பேனை பெருமாளாக்கி, பெருமாளை பெத்த பெருமாளாக்கினால் அதற்கெல்லாம் விசாரணை கமிஷன் தேவையா? கற்பனையான குற்றச்சாட்டிற்கெல்லாம் விசாரணை தேவையில்லை. இயற்கைச் சீற்றத்திற்காக விசாரணை கமிஷன் கேட்கின்ற வினோத அரசியல்வாதிகள் இங்கேதான் இருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*



2016 ஜனவரி 22]

**திரு. அ. சவுந்தரராசன்:** *அரசு என்ன சொன்னாலும் உண்மைதான், அது வேத வாக்கு என்பதுதான் ஜனநாயகத்தினுடைய அடிப்படையா? இல்லை. அரசு ஒன்றைச் சொல்கிறது, நாங்கள் மறுக்கிறோம். விசாரணை வையுங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *கற்பனையான குற்றச்சாட்டுக்கு விசாரணை கமிஷன் தேவையில்லை. கற்பனையான குற்றச்சாட்டுக்கு பதில் சொல்ல வேண்டியதில்லை. (குறுக்கீடு) அரசியலுக்காக வைக்கிற காரணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. (குறுக்கீடு)*

*பிற்பகல் 2-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *எந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் நீங்கள் விசாரணை கமிஷன் கேட்கிறீர்கள்? எந்தக் குற்றச்சாட்டும் இல்லை, எந்த விதிமீறலும் இல்லை, எந்த* slackness-*ம் இல்லை. அவ்வாறு இருக்கும்போது, பொத்தாம் பொதுவாக, நீதி விசாரணை வேண்டும், நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டால், எப்படி நீதி விசாரணை நடக்கும்? இந்த விஷயத்தில் நீதி விசாரணை தேவையா? அதாவது, இயற்கைச் சீற்றத்தினால் ஏற்பட்ட விளைவுகளுக்கு, அதனால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் இதுவரையில் இல்லாத வகையில், மத்திய அரசின் நிதியுதவியையும்கூட எதிர்நோக்காமல் உடனடியாக இழப்பீடு வழங்கி, உரிய நடவடிக்கைகளை எடுத்தார்கள் என்பதுதான் உண்மை. இதை விடுத்து, திரும்பத் திரும்ப, இந்தப் பிரச்சினையை எழுப்பி, மீண்டும் மக்களுக்கு ஓர் அச்சத்தை, பீதியை உருவாக்குகிற நோக்கில் நீங்கள் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இதையெல்லாம் பேசினால் மக்கள் உங்களுக்கு ஓட்டு போடுவார்கள் என்று நினைத்தீர்களென்றால், அது தவறான கணக்கு, தப்புக் கணக்கு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்பரம்பாக்கமும், அடையாறும் சென்னையின் தெற்குப் பக்கத்தைச் சார்ந்த பகுதிகளாகும். நகரின் வடக்குப் பக்கத்திலுள்ள பூண்டி, சோழவரம், புழல் போன்ற நீர்த்தேக்கங்களின் திறப்பாலும், உரிய எச்சரிக்கை விடப்படாமையாலும், கூவம், கொசஸ்தலை ஆறு, ஆரணி ஆறு மற்றும் நகரின் உட்புறப் பகுதிகளில் உள்ள கால்வாய்களான. . . (குறுக்கீடு) நான் செம்பரம்பாக்கம் பற்றிப் பேசவில்லை. தென் சென்னையைப் பற்றித்தான் இவ்வளவு நேரம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். வட சென்னையில் ஏற்பட்ட பாதிப்பு மிகக் கடுமையான பாதிப்பு. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து ஒன்றும் சொல்லவேயில்லை. திருவொற்றியூரிலிருந்து, திண்ணனூரிலிருந்து, மணலி புதுநகரிலிருந்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா ஏரிகளும் அவற்றின் முழுக் கொள்ளளவை எட்டும்முன் உரிய எச்சரிக்கை விடப்பட்டிருக்கிறது. அரசின் மூலமாக, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக, காவல் துறை மூலமாக எச்சரிக்கை விடப்பட்டிருக்கின்றது. இதுகுறித்து நேற்று விவரமாகச் சொன்னேன். பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிகள் மூலமாக எவ்வாறெல்லாம் அந்தச் செய்தி ஒளிபரப்பப்பட்டது என்பது பற்றியெல்லாம் சொன்னேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு துரித நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்டவர்களெல்லாம் அந்தப் பகுதிகளிலிருந்து காப்பாற்றப்பட்டு, பாதுகாப்பான முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்தார்கள். இவற்றையெல்லாம் நீங்கள் எப்படி மறுக்கிறீர்கள்? எச்சரிக்கை விடப்படாமலா பாதிக்கப்பட்டவர்களை முகாம்களுக்குக் கொண்டு போனார்கள்? (குறுக்கீடு)

**திரு. அ. சவுந்தரராசன்:** கரையோர மக்களுக்கு எச்சரிக்கை விடுத்தது சரி. என்றாலும். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** கரையோர மக்களைத்தான் முகாம்களுக்குக் கொண்டு போனார்கள். மாடி வீடுகளில் இருந்தவர்களையா முகாம்களுக்குக் கொண்டு போனார்கள்?



**திரு. அ. சவுந்தரராசன்:** ஆனால், இப்போது கரையோரம் மட்டும் பாதிக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய வாதம்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மிக அதிகமான வெள்ளம் வந்ததால், எந்தெந்தத் தாழ்வான பகுதிகளில் மக்கள் வசித்தார்களோ அந்த மக்களையெல்லாம் முகாம்களுக்கு அழைத்துச் சென்று, அங்கே அவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி அனைத்தும் தரப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களை முகாம்களில் வெறுமனே கொண்டு சென்று உட்கார வைத்துவிட்டு, நாங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவில்லை. (குறுக்கீடு) நீங்கள் தவறான கருத்தைப் பதிவு செய்ய ஆரம்பித்தீர்களென்றால், பிறகு எப்படி? (குறுக்கீடு) உங்களுடைய நோக்கம் எங்களுக்குத் தெரிகிறது இல்லையா? (குறுக்கீடு) சொன்னோம். (குறுக்கீடு) சொன்னோம். (குறுக்கீடு) இவ்வளவு விளக்கம் சொன்னதற்குப் பின்னாலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திரு. சவுந்தரராசன், நேற்றிலிருந்து மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மழை வெள்ளத்தைப் பற்றி அவையில் விரிவாகப் பேசிவிட்டார்கள். (குறுக்கீடு) நிறைய பேசியாகிவிட்டது. நீங்கள் இன்னும் அதே பிரச்சினை குறித்து திரும்பத் திரும்ப பேசிக்கொண்டிருப்பது சரியில்லை. இன்று நேரம் இல்லை. (குறுக்கீடு) நேற்றிலிருந்து இதுகுறித்து நிறைய பேசியாகிவிட்டது. நீங்களும் அந்த விவாதத்தில் கலந்துகொண்டீர்கள். திரும்பத் திரும்ப அதைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தால் எப்படி?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நீங்கள் இப்படி வாதம் செய்து கொண்டிருப்பது சரியான சபை நடவடிக்கை கிடையாது. (குறுக்கீடு) கரையோரம். . . (குறுக்கீடு) இங்கே பாருங்கள். (குறுக்கீடு) நான் சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடு) நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சவுந்தரராசன், நீங்கள் சற்று பொறுமையாக மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) சற்று பொறுமையாகக் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** முதலில் நான் சொல்வதைக் கேளுங்கள். மக்களுக்குப் பொதுவான எச்சரிக்கை விடப்பட்டது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 22

தாழ்வான பகுதிகளில் இருக்கின்ற மக்கள் அழைத்துச் செல்லப்பட்டு பாதுகாப்பான முகாம்களில் வைக்கப்பட்டார்கள். இதுதான் உண்மை. அனைத்து மக்களுக்கும் எச்சரிக்கை விடப்பட்டது. எச்சரிக்கை விடப்படவில்லை, விடப்படவில்லை என்று நீங்கள் சொன்னால், அது எப்படிப் பொருத்தமாக இருக்கும்? கன மழை வரப்போகிறது, வெள்ளம் வரப்போகிறது என்கிற எச்சரிக்கை அனைத்து மக்களுக்கும் விடப்பட்டது. (குறுக்கீடு) ஆக, பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பெரு வெள்ளம் வந்ததால், அப்பகுதிகளில் வசிக்கின்ற மக்களை அப்புறப்படுத்தி, முகாம்களில் தங்க வைத்தோம். அதையாவது ஒப்புக்கொள்கிறீர்களா? (குறுக்கீடு) அதையாவது ஒப்புக்கொள்கிறீர்களா? அதையும் ஒப்புக்கொள்ள மாட்டீர்களா? (குறுக்கீடு) இப்பொழுதுதானே சொன்னேன்? கனமழை என்பது, 24 செ.மீ.-தான். ஆனால், மிகக் கன மழையாக கிட்டத்தட்ட 100 செ.மீ.-க்கு மேல் மழை பெய்து கொண்டிருந்தது. மூன்று நாட்களும் தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தது, அதாவது, எப்பொழுது என்றால், 30-11-2015, 1-12-2015 மற்றும் 2-12-2015 விடியற்காலை வரைக்கும் கன மழை பெய்து கொண்டிருந்தது. சென்னையிலே இதுபோன்ற மழை பெய்யும் என்று எதிர்பார்த்தீர்களா? நீங்கள் இதுபோன்ற மழையைக் கண்டிருக்கிறீர்களா? உங்களுக்கு வயது என்னவாகிறது? இதுபோன்ற மழையை இதற்கு முன்னால் நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? இதற்கு முன்னால் இதுபோன்ற மழையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? (குறுக்கீடு) இல்லை, இதுபோன்ற மழையைப் பார்த்திருக்கிறீர்களா என்று கேட்டேன்? நீங்கள் பார்த்திருக்கமாட்டீர்கள். நீங்கள் பார்த்திருந்தால் அதுபற்றிச் சொல்வீர்கள்.

பிற்பகல் 2-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சவுந்தரராசன், மழை வெள்ளத்தைப் பற்றி நேற்றையதினம் நிறைய பேசிவிட்டோம். அதை விட்டுவிட்டு நீங்கள் வேறு சப்ஜெக்ட்டுக்குச் செல்லுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** இல்லை, நான் என்ன பேச நினைக்கிறேனோ அதைத்தான் பேச முடியும். வேறு சப்ஜெக்ட்டில் பேச முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சவுந்தரராசன், நீங்கள் வேறு சப்ஜெக்ட்டைப்பற்றிப் பேசுங்கள்.



2016 ஜனவரி 22]

**திரு. அ. சவுந்தரராசன்:** பெரும் சேதம் விளைந்த பிறகும், இலட்சக்கணக்கான மக்கள் பூஜ்ஜியத்திலிருந்து வாழ்க்கையைத் தொடங்க வேண்டிய நிலை ஏற்பட்ட பிறகும், விளைபொருட்கள் அழிந்த பிறகும், சிறு, குறு தொழில்கள் பேரழிவிற்கு ஆளான பிறகும், மத்திய அரசு கடந்த 50 நாட்களாக இன்றுவரை மாநில அரசு கேட்ட அடுத்த கட்ட நிதியுதவியைச் செய்யவில்லை. இது தமிழக மக்களுக்கு எதிரான பாரபட்சமும், அவமதிப்பும் ஆகும். இதை வன்மையாகக் கண்டித்திருக்க வேண்டிய இந்த உரை ஏன் மென்மையாக இருக்கிறது? இதற்குப் பின்னால் என்ன அரசியல் இருக்கிறது? என்ன தேவை இருக்கிறது? பி.ஜே.பி.-யுடன் கை கோர்க்கும் எண்ணம் இருக்கிறது. இப்போது அரசு அறிவித்துள்ளதும். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, அதற்கு விளக்கம் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் யாரோடு கை கோர்ப்பது என்பது எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, கழகத்தினுடைய பொதுச் செயலாளர் அவர்கள் எடுக்க வேண்டிய முடிவு. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்களாக கனாகண்டு எதுவும் சொல்லக் கூடாது. அதை நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் ஓர் இயக்கத்தில் இருக்கின்றீர்கள். இப்படியிருக்குமா, அப்படியிருக்குமா என்று நீங்களாக கனா காணாதீர்கள். (குறுக்கீடு) இப்போது நீங்கள்தானே மக்கள் நலக் கூட்டணி என்று சொன்னீர்கள். நாங்களா சொன்னோம், நீங்கள்தானே சொன்னீர்கள். அவர் 234 என்று சொன்னார். 234-க்கு என்ன அர்த்தம்? அதற்கு ஒன்றும் அர்த்தம் கிடையாது. எப்போதுமே அவர்கள் புள்ளியை மறந்துவிடுவார்கள். மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் இந்த 234-க்கு முன்பு ஒரு புள்ளி வைத்தால் என்ன நடக்கும்? அதுதான் நடக்கப் போகிறது.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசு அறிவித்துள்ள. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் பேசட்டும்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் நடவடிக்கையைப்பற்றி ஆளுநர் உரையில் கண்டனம் தெரிவிக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். தமிழக மீனவர்களுடைய படகுகள் தொடர்ச்சியாக இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்படுகின்றன. அவற்றை மீட்பதற்கான உரிய நடவடிக்கையை மத்திய அரசு எடுக்கவில்லை என்பது கடும் கண்டனத்திற்குரியது என்ற வாசகம் ஆளுநர் உரையில் இருப்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. அ. சவுந்தரராசன்:** நான் வெள்ள நிவாரணத்தைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறேன். இப்போது அரசு அறிவித்துள்ளதும், அளித்துள்ளதுமான நிவாரணங்கள் போதுமானதாக இல்லை. 'யானைப் பசிக்கு சோளப் பொரி' போன்று இருக்கிறது. சிறு, குறு தொழில் உரிமையாளர்கள் அனைத்தையும் இழந்துள்ளனர். இதனால் சென்னையில் சுமார் 1 இலட்சம் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். வேலைவாய்ப்பை உருவாக்குவதில் முன்னிலையில் இருக்கும் இந்தத் தொழில்கள்தான் உண்மையில் உற்பத்தித் தொழில்கள். பல பெரிய கம்பெனிகள் இவர்களின் உற்பத்திப் பொருட்களை வாங்கி assembling மட்டுமே செய்கின்றன. இவர்களுக்கு மின் கட்டணம் செலுத்த, வரி செலுத்த, கடன் செலுத்த அவகாசம் கொடுத்திருப்பது மிகச் சரியானது. ஆனால், இயந்திரங்களைப் பழுது நீக்கி, மூலப்பொருட்களை வாங்கி தொழிலைத் தொடங்க நிவாரண நிதியுதவியும் வழங்க வேண்டும், மலிவான வட்டியில் கடனும் வழங்க வேண்டும். SSI-யில் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்தான் உதவிகள் என்ற நிலை எடுக்கப்பட்டுள்ளது. அப்படி பதிவு செய்யாத எண்ணற்ற. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் அவர்கள் சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டதைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் அதற்காக என்னென்ன செய்திருக்கிறார்கள் என்பதனை இந்த அவையிலே எடுத்துச்சொல்வது என்னுடைய கடமை என்று நான்





கருதுகிறேன். 14-1-2016 வரை 676 நிறுவனங்களுக்கு ரூ.65.76 கோடியும், 2 ஆண்டுக் காலம் கடன் நீடிப்பும் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், 527 நிறுவனங்களுக்கு ரூ.69.51 கோடி கடன் மறுசீரமைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. கட்டடங்கள், இயந்திரத் தளவாடங்களைப் புதுப்பிக்க, புதிதாகக் கொள்முதல் செய்திட 828 நிறுவனங்களுக்கு ரூ.19.68 கோடி வங்கிகள்மூலம் உதவி செய்யப்பட்டிருக்கிறது. மேலும், 468 நிறுவனங்களுக்கு ரூ.58.52 கோடி நடைமுறை மூலதனக் கடனாக மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மேலும், 66 நிறுவனங்களுக்கு ரூ.3.95 கோடி மாற்றியமைக்கப்பட்ட நடைமுறை மூலதன காலக் கடனில் 50 விழுக்காடு அளவிற்குக் கூடுதல் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. 354 நிறுவனங்களுக்கு அபராத வட்டி மற்றும் காலம் கடந்த வட்டி ஆகியவற்றை செலுத்த விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, கடன் வசதியில்லாத 13 நிறுவனங்களுக்கு புதிய கடன் வழங்கப்பட்டுள்ளது. 4,020 குறுந்தொழில்களுக்கு ஈடில்லாக் கடன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது மாத்திரமல்லாது, வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மிகப் பெரிய அளவிலே 25% மூலதன மானியத்துடன் 5 இலட்சம் ரூபாய் கடன் வழங்கிட மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 3-00

அதேபோன்று, வெள்ளப் பாதிப்பால் சிறு, குறு தொழிற்கூடங்களில் மின்சார மீட்டர்கள் பழுதாகியுள்ளன என்றும், அவற்றிற்குப் பதிலாக புதிய மீட்டர் பொருத்த மின் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டணத்திலிருந்து விலக்களிக்க வேண்டுமென்றும் கோரிக்கைகள் வரப்பெற்றன. அந்தக் கோரிக்கைகளை ஏற்று, உயர் மின்னழுத்த மீட்டர் ஒன்றுக்கு 26,000/- ரூபாய், குறைந்த மின்னழுத்த மீட்டர் ஒன்றுக்கு 3,500/- ரூபாய் என மின் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தை, வெள்ளம் பாதித்த சிறு, குறு தொழில்கள் செய்வோர் செலுத்த வேண்டியது இல்லை என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்வோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

[2016 ஜனவரி 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குணசேகரன், நேற்று நீங்கள் திருப்தியாக எவ்வளவு நேரம் பேசினீர்கள், இப்பொழுது திரு. சவுந்தரராசன் அவர்கள் பேசுகிற நேரத்தை நீங்கள் ஏன் எடுத்துக்கொள்கிறீர்கள்?

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள் ஒரு தவறான கருத்தை முன்வைக்கிறார்கள். இந்த ஆளுநர் உரையில் 17-வது பக்கத்தில், "பாக் நீரிணைப்புப் பகுதியின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களைத் தொடர்ந்து கைது செய்து, அவர்களின் படகுகளை சிறைப்பிடிக்கும் இலங்கைக் கடற்படையினரின் செயல்கள் கடும் கண்டனத்திற்குரியவையாகும்" என்றுதான் இருக்கிறது. கடைசியாகக் கீழே வரும்போது, இதற்கு "விரைவில் ஒரு இணக்கமான நிரந்தரத் தீர்வை எட்டிட மத்திய அரசும், இலங்கை அரசும் இணைந்து முயற்சி செய்யும் என நம்புகிறேன்" என்றுதான் இருக்கிறது. நமது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசால் ஏற்கெனவே போடப்பட்ட தீர்மானத்திற்கு, கொஞ்சம் மென்மையான போக்காகத்தான் இது இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பழைய மத்திய காங்கிரஸ் கட்சி அரசு எப்படிச் செய்ததோ, அதே நடவடிக்கையை, தமிழக மீனவர்கள்மீது மீண்டும் நடத்தக்கூடிய தாக்குதலில், பாரதிய ஜனதா கட்சி அரசும் தொடர்ந்து அத்தகைய நிலைப்பாட்டையே எடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, இது கடும் கண்டனத்திற்குரியது என்றுதான் இருந்திருக்க வேண்டும் என்பதுதான் இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்து.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தின்போது பொதுத் துறை தொழில்கள்தான் மக்களுக்குத் துணை நின்றன. அரசுப் போக்குவரத்து, மின்சார வாரியம், பி.எஸ்.என்.எல். போன்ற நிறுவனங்களை நாம் பாராட்டியிருக்க வேண்டும். மின் வாரிய ஊழியர்களுக்கு, வெள்ளத்தில் பணியாற்றிய ஒரு நாளைக்கு மூன்று நாள் ஊதியம் கொடுத்ததைப் போல, அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கும், சென்னை குடிநீர் வாரிய ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டிருக்க வேண்டும். மின் வாரிய ஊழியர்களுக்கு ரூபாய் ஒரு இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. அதுபோல, அனைத்து பொதுத் துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் கடன்



2016 ஜனவரி 22] [திரு. அ. சவுந்தரராசன்]

வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன். இதில் ஒரு முரண்பாடு என்னவென்றால், இன்னொரு பொதுத் துறை நிறுவனமான டாஸ்மாக் கடைகளும் வெள்ளத்தின்போது முழுமையாகச் செயல்பட்டன. அவற்றை அந்த நாட்களில் மூடியிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்.

தமிழக மீனவர் பிரச்சினை குறித்தும் இந்த உரையில் உரிய அக்கறையுமில்லை, அழுத்தமுமில்லை. நமது மீனவர்கள் படகோடு கைது செய்யப்படுவதும், கொஞ்ச நாட்கள் கழித்து ஆட்களை மட்டும் அனுப்பி வைப்பதும் தொடர்கிறது. தமிழக முதல்வரின் கடிதங்கள் டெல்லிக்குப் போய்க் கொண்டேயிருக்கின்றன. மீனவர்கள் சிலர் விடுதலை செய்யப்படுவதாக அறிவிப்பு வந்த அடுத்த நாளே வேறுசில மீனவர்கள் கைது செய்யப்படுவது நடந்த வண்ணம் இருக்கிறது. மத்திய அரசுக்கு எதிரான சிறு கண்டனம்கூட இந்த உரையில் இல்லை என்பது வேதனை தருகிறது. இந்தப் பிரச்சினையில் இருநாட்டு மீனவர்களைக் கொண்ட கூட்டம் நடத்தி, இணக்கமான முடிவு காணும் முயற்சி வேண்டும் என்று இந்த மன்றத்தில் நான் பேசினேன், பலர் பேசினார்கள். ஆட்சியும் நடவடிக்கை எடுத்தது. தமிழக அரசும் நடவடிக்கை எடுத்தது. இரண்டு கூட்டங்கள் நடந்தன. ஏன் அந்தக் கூட்டங்கள் தொடரவில்லை? இந்த மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அக்கறை அதிலே முழுமையாக ஏன் காட்டப்படவில்லை என்பதை விளக்க வேண்டுகிறேன். இப்போது இந்த உரையில் பெயரளவில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மீனவர்களும், இலங்கை மீனவர்களும் சேர்ந்து பேச வேண்டுமென்று முதன்முதலில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 2004-ல் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்தார்கள். அதன்பிறகு, 2014-லே ஜனவரி மாதம் 27 ஆம் தேதி ஒரு கூட்டம் நடந்தது. அது சென்னையில் நடந்தது. மே மாதம் 12 ஆம் தேதி இலங்கை, கொழும்புவில் நடந்தது. பிறகு, இரண்டு நாட்டு மீனவர்களும், அதாவது, தமிழக மீனவர்களும், இலங்கை மீனவர்களும் பேச வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்பாடு செய்தபோது, இலங்கையிலிருக்கிற மீனவர்கள் இந்தப் பேச்சுவார்த்தைக்கு முன்வர மாட்டேன்

[திரு. கே.ஏ. ஜெயபால்] [2016 ஜனவரி 22

என்கிறார்கள். முட்டுக்கட்டை போடுகிறார்கள். இரண்டு நாட்டு மீனவர்களும், தமிழ்நாட்டு மீனவர்களும், இலங்கை மீனவர்களும் உட்கார்ந்து பேசிய பிறகு, அந்தப் பேச்சுவார்த்தை குறித்து அவர்கள் நாட்டிற்குச் சென்று அதற்கு எதிரான கருத்தைச் சொல்கிறார்கள். தனிப் படையே அமைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். இலங்கை இராணுவம் தமிழக மீனவர்களைக் கைது செய்கிறது. ஆனால், அதேசமயம் அங்கிருக்கிற இலங்கை மீனவர்கள் நம்முடைய நாட்டு மீனவர்களைக் கைது செய்வதற்காக தனிப் படையே அமைக்கப் போகிறோம் என்று அறிவிப்புச் செய்கிறார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான் இதுவரை எந்த அரசும் செய்யாத சாதனையாக 82 கடிதங்கள் எழுதி, மத்திய அரசுக்கு வலியுறுத்தி அழுத்தத்தைக் கொடுத்தார்கள். 2,273 மீனவர்களை மீட்டெடுத்து வந்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களை மட்டுமே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) யாரும் இவ்வாறு நடவடிக்கை எடுக்க மாட்டார்கள். ஆகவே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லையென்ற குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டு. அந்த நாட்டு மீனவர்களை, நம்முடைய தமிழ்நாட்டு மீனவர்களோடு பேச்சுவார்த்தைக்கு அனுப்புவது அந்த நாட்டு அரசாங்கத்தினுடைய கடமை, அதில் நாம் தலையிட முடியாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், பேசுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் உரையில், பெயரளவில் கச்சத் தீவைப் பற்றி கூறிவிட்டு, ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு ஏற்பாடு செய்ய மத்திய அரசிடம் 1,520 கோடி ரூபாய் கேட்டுள்ளோம் என்று அரசு கூறுகிறது. பாக் நீரிணைப்புப் பகுதியில் மீன்பிடிப்பைக் குறைக்க வேண்டுமென்றும் இந்த உரை கூறுகிறது. இவ்வளவு முக்கியமான பிரச்சினையில் தமிழக அரசு மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுக்க தீர்மானம் நிறைவேற்றியிருக்க வேண்டும். தமிழ்நாட்டு மீனவர்களுக்கு விடிவு வராமலே ஐந்தாண்டுகள் போய்விட்டன.



2016 ஜனவரி 22] [திரு. அ. சவுந்தரராசன்]

பேரறிவாளன் உள்ளிட்ட நால்வரின் பிரச்சினையில் தமிழக அரசின் நிலைக்கு எதிரான நிலை எடுத்துள்ள மத்திய அரசு பற்றி இந்த உரையில் எதுவும் கூறப்படவில்லை. இதேபோல ஜல்லிக்கட்டு பிரச்சினையில் உரை மௌனம் சாதிக்கிறது. ஜல்லிக்கட்டு பிரச்சினையில் தமிழ்நாட்டு மக்கள் நம்ப வைக்கப்பட்டு ஏமாற்றப்பட்டுள்ளனர். மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராக கடும் உணர்வுகளை இது உருவாக்கியுள்ளது. காட்சிப்படுத்தப்படாத விலங்கினப் பட்டியலிலிருந்து காளை மாட்டை அகற்றுவதற்கு மத்திய அரசு சட்டம் இயற்ற வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி நாம் அழுத்தம் கொடுத்தால் பொருத்தமாக இருக்கும். இல்லாவிட்டால், தமிழக மக்கள் இதை மத்திய மாநில அரசுகளின் நாடகம் என்றே கருதுவார்கள்.

நாகை மாவட்டம், வழுவூர் திருநாள்கொண்டச்சேரியில் மரணமுற்ற செல்லமுத்து என்பவரின் உடலை பொதுப் பாதை வழியாக எடுத்துச் சென்று அடக்கம் செய்ய பாதுகாப்பு தர வேண்டுமென்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அனைத்துப் பகுதிகளிலேயும் ஆதி திராவிட பெருமக்களுக்குரிய உரிமைகள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளன. உரிய மரியாதைகள் அளிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஏதாவது ஒரு பகுதியில் இந்தத் தவறு நடக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பொத்தாம் பொதுவாக நீங்கள் தொடர்ந்து பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். கச்சத் தீவு பற்றியும் அப்படித்தான் சொன்னீர்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் எதையும் பேச்சளவுக்கு சொல்ல மாட்டார்கள். நாங்கள் அப்போது ஆளும் கட்சி கூட இல்லை. எதிர்க் கட்சி என்ற நிலையில் மாண்புமிகு அம்மா அவர்கள் கழகப் பொதுச் செயலாளராக இருந்து, கச்சத் தீவு பிரச்சினையை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்று, வழக்கு தொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜனவரி 22

கச்சத் தீவு என்பது தமிழ்நாட்டுடைய நிலம், மண். இராமநாதபுரம் சேதுபதியுடைய நிலம், வருவாய் ஆவணங்களில் அதற்குரிய சான்று இருக்கிறது என்று மாண்புமிகு அம்மா அவர்கள் வழக்கு தொடுத்திருந்தார்கள். 2012-ல் மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழகத்தினுடைய முதலமைச்சராக வந்ததற்குப் பின்னால், வருவாய்த் துறையும் இந்த வழக்கிலே இணைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வழக்கு இப்போது உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, தமிழகத்தினுடைய ஜீவாதார உரிமைகளைப் போராடி, வாதாடிப் பெற்றுத் தருகின்ற ஒரே தலைவர், ஒரே முதலமைச்சர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அது காவேரி பிரச்சினையாக இருந்தாலும் சரி, கச்சத் தீவு பிரச்சினையாக இருந்தாலும் சரி, முல்லைப் பெரியாறு பிரச்சினையாக இருந்தாலும் சரி, எத்தனை அரசுகள் இங்கு வந்திருக்கின்றன. அவர்களெல்லாம் காவேரிப் பிரச்சினையில், கச்சத் தீவு பிரச்சினையில், முல்லைப் பெரியாறு பிரச்சினையில் உரிமைகளைப் பெற்றுத் தந்தார்களா, கிடையாது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள்தான் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் உரிமைகளைப் பெற்றுத் தந்தார்கள், ஜீவாதாரப் பிரச்சினையில் காலம்காலமாக நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிற உரிமைகள் பறிபோகிற சூழ்நிலை ஏற்படும்போது அதைத் தடுத்து நிறுத்துகின்ற ஒரே தலைவர், முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள் பேசும்போது ** குறித்து ஆதாரமில்லாமல் சொல்லியிருக்கின்றார்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) இல்லை, ** என்பதற்கான ஆதாரம் எதுவும் இல்லை.

**திரு. அ. சவுந்தரராசன்:** அந்த ஊரில் வீடுகளிலும் கழிவறைகள் இல்லை. பொதுக் கழிப்பிடமும் இல்லை. அந்த மக்கள், பெண்கள் உட்பட காலைக் கடனைக் கழித்துக் கொண்டிருந்த வயல்வெளிகளில் **அவர்கள் இனிமேல்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2016 ஜனவரி 22] [திரு. அ. சவுந்தரராசன்]

வரக்கூடாது” என்று மற்றவர்கள் தடை போட்டிருக்கிறார்கள். இது அங்கிருக்கின்ற பெண்களுக்கு பெரும் சிரமத்தை உண்டாக்கியிருக்கின்றது. இதைச் சொல்லும்போது பெண்கள் கண்ணீர் விட்டு அழுகிறார்கள். ஆகவே அரசு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து பொதுவாகச் சொல்லாதீர்கள். ஏதாவது குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால், அதற்கான ஆதாரம் இருந்தால், அதைக் கொடுத்துவிட்டுப் பேசுங்கள். பொதுவாகவே மாண்புமிகு அம்மா அவர்கள், ஆதி திராவிட மக்களின்மீது தனிப் பாசமும், பற்றும் கொண்டவர்கள். அவர்களுடைய சமூகப் பொருளாதார நிலை உயர வேண்டுமென்று பல வழிகளில் அரசினுடைய உதவிகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், விலையில்லா ஆடு, மாடு வழங்கியது. ஆதி திராவிட பெருமக்களுக்கு விலையில்லா ஆடு, மாடு 20, 21 சதவீதம்தான் கொடுக்கப்பட வேண்டுமென்று சட்டத்தில் இருந்தாலும், 30 சதவீத ஆடுகளையும், மாடுகளையும் அவர்களுக்குக் கொடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய குடும்பப் பொருளாதார நிலை உயருவதற்கு நல்ல பல உதவிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதுதான் வரலாற்று உண்மை என்பதை நான் தெரியப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சவுந்தரராசன், உரையை முடித்துவிடுங்கள், நேரம் ஆகிவிட்டது.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன். நான் கேட்பது அந்த மக்களுக்கு கழிவறை வசதி மட்டும்தான்.

பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி மாநில அரசுகளின் நிதி சுயாட்சியைப் பறிக்கிறது, நிதி இழப்பையும் உண்டாக்குகிறது. 14-வது நிதிக் குழுவின் முடிவால் மாநிலத்தின் நிதி நிலைமை மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று ஆளுநர் உரை வேதனையைத் தெரிவிக்கின்றது. இந்தியாவின் சமஷ்டி முறையை படிப்படியாக ஒழித்து, ஒற்றை ஆட்சி-Unitary State என்கிற

[திரு. அ. சவுந்தரராசன்] [2016 ஜனவரி 22

நிலையை நோக்கியே B.J.P. அரசு செயல்படுகிறது. இந்த வரி மசோதா மாநிலங்களவையில் வரும்பொழுது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அதை எதிர்த்து வாக்களித்து, மாநில உரிமைக்குக் குரல் கொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

உலக முதலீட்டாளர்கள் மாநாடு பற்றியும், தொழில் வளர்ச்சி பற்றியும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. MoU போட்டதெல்லாம் வரவேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். ஆனால், பல நேர்வுகளில் அது நடைபெறுவதில்லை. கடந்த 20 ஆண்டுகளில் அப்படி பல நேர்வுகள் உண்டு. 400 கோடி ரூபாய்க்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்ட நோக்கியா ஆலையை, MoU போட்ட சில மாதங்களிலேயே மூடிவிட்டுப் போய்விட்டார்கள். அங்கிருந்த தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டார்கள். அம்பத்தூர் தொழிற்பேட்டையில் ஏற்கெனவே உள்ள தொழிற்சாலைகளிலேயே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோக்கியா ஆலையோடு எப்பொழுது ஒப்பந்தம் போடப்பட்டது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். MoU போட்ட சில மாதங்களிலேயே மூடிவிட்டுப் போய்விட்டார்கள் என்று சொல்கிறீர்கள். 2005-ல் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒப்பந்தம் போட்டார்கள். 2012-ல் Restrospective Act வந்த பிறகு, அதற்காகப் போராடி, முடியாது என நீதிமன்றம் தெரிவித்த காரணத்தால்தான், அது மூடப்பட்டது. அந்த நிறுவனம் கிட்டத்தட்ட ஏழு ஆண்டுக்காலம் தினந்தோறும் 6 இலட்சம் கைப்பேசியை தயார் செய்தது. கிட்டத்தட்ட 10,000 பேர் நேரடியாகவும், 20,000 பேர் மறைமுகமாகவும் வேலை செய்து கொண்டிருந்தார்கள். அதில் வேலை செய்த அனைத்துத் தொழிலாளர்களுக்கும் குறைந்தது மூன்று இலட்சம் ரூபாய் முதல் பத்து இலட்சம் ரூபாய் வரையிலும் compensation வாங்கிக் கொடுத்தது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலும், குறுகிய காலத்தில் மூடிவிட்டார்கள் என்று சொல்வது தவறான கருத்து. அது மாநில அரசினுடைய பொறுப்பும் அல்ல. அதனை, கடந்த கால



2016 ஜனவரி 22] [திரு. பி. தங்கமணி]

மைனாரிட்டி தி.மு.க. அரசும், காங்கிரசும் கொண்டு வந்தது. பல முறை இந்தச் சட்டமன்றத்திலே நாங்கள் விவரமாகச் சொல்லியிருக்கின்றோம். அவர்களுடைய தவறான பொருளாதாரக் கொள்கையின் காரணமாகத்தான் நோக்கியா ஆலை மூடப்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அதுவும் அம்மா அவர்கள் இதற்காக தனிப்பட்ட கவனம் செலுத்தி, நோக்கியா ஆலை தமிழகத்திற்கு வர வேண்டும் என்பதற்காக 2005 ஆம் ஆண்டு அவர்களை நேரடியாக அழைத்துப் பேசி, ஒப்பந்தம் போட்டார்கள். ஒப்பந்தம் போட்ட ஆறு மாத காலத்திற்குள்ளேயே உற்பத்தி தொடங்கப்பட்டது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசிலேதான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள் கழிப்பிட வசதி குறித்துப் பேசினார்கள். தனி நபர் கழிப்பிடத்தைப் பொறுத்தவரை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான், இந்த வருடம்கூட 15 இலட்சம் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கடந்த 2001-2006 ஆட்சியிலேகூட, 12,796 கழிப்பிடங்கள் கட்டப்பட்டு, அவை சிறப்பான முறையிலே அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயன்பட்டு வந்தன. அதற்குப் பின்னாலே வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு அவற்றைக்கூட பாழடையச் செய்துவிட்டது. அதற்குப் பிறகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மூன்றாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால், ரூ.170 கோடி நிதி ஒதுக்கி, அனைத்துக் கழிப்பிடங்களும் புனரமைக்கப்பட்டு, இன்றைக்கு சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

[2016 ஜனவரி 22

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலதன வருகையிலே நான் குறிப்பிட விரும்புகிற பிரச்சினை என்னவென்றால், அப்படி வருகிற தொழிற்சாலைகளில் வேலைவாய்ப்பு கண்ணியமானதாக இல்லை. சங்கம் அமைப்பது போன்ற சட்டப்படியான உரிமைகளும் இருப்பதில்லை. ஒப்பந்தக் கூலி முறையில் உரிய ஊதியமும், பணிப் பாதுகாப்பும் மறுக்கப்படுகிறது. இதிலே அரசு தலையிட்டு, சட்டப்படி தொழிலாளர்களுக்கு இருக்கக்கூடிய உரிமைகளையும், குறைந்தபட்ச ஊதியத்தையும் பெற்றுத் தர வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 3-15

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கம்பெனி வருகிறது என்றால், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் 1,000 பேருக்கு வேலைவாய்ப்பு, 500 பேருக்கு வேலைவாய்ப்பு, நேரடியாக எவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்பு தருகிறார்கள் என்று புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்படும். அந்த 500 பேருக்கு வேலைவாய்ப்பு கொடுத்த பின்னர்தான் அவர்களுக்கு VAT Refund கொடுக்கப்படும் என்று சட்டம் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போன்று, அவர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ஒப்புக்கொண்ட பின்னர் எந்த கம்பெனியும் வேலை கொடுக்காமல் இல்லை. அப்படி கொடுக்காமல் இருந்தால் நமது மாநில அரசு VAT-ஐ திருப்பித் தராது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக உரையை முடித்து விடுகிறேன். டாஸ்மாக் மதுபானக் கடைகளை படிப்படியாக மூட வேண்டும் என்பதுதான் எங்களது கோரிக்கை. பார்களை முதலில் மூட வேண்டும். கோயில்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், கடைவீதிகள் போன்ற



2016 ஜனவரி 22] [திரு. அ. சவுந்தரராசன்]

பொது இடங்களிலிருந்து 50 மீட்டர் தள்ளி கடை வைக்கலாம் என்று இப்பொழுது இருப்பதை மாற்ற வேண்டும். 50 மீட்டர் என்பது மிகவும் குறைவான இடைவெளியாக இருப்பதால், அதை 500 மீட்டராக உயர்த்த வேண்டும். மதுக் கடைகளின் வேலை நேரத்தையும் குறைக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

கடந்த மழை வெள்ளத்தின்போது சென்னை பாதிக்கப்பட்டதற்குக் கூடுதலான காரணம் மழைநீர் வடிகால்கள் முறையாக பராமரிக்கப்படாமல் இருந்ததுதான். பல இடங்களில் இரண்டு பக்கமும் போடப்பட்ட கால்வாய்கள் இணைக்கப்படாமலேயே இருந்தன. பாதாளச் சாக்கடை வசதியும் மக்கள்தொகை பெருக்கத்திற்கேற்ப அபிவிருத்தி செய்யப்படவில்லை. மழை நீர் வடிந்தபிறகும், சாக்கடைக் கழிவு நீரால் சென்னை தத்தளித்தது. அதனால்தான் வெளியிலிருந்தெல்லாம் நாம் ஆட்களைக் கொண்டு வந்தோம். ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட 1,400 கோடி ரூபாய் திட்டத்தை விரைவுபடுத்தி இந்த ஆண்டே அதைச் செயல்படுத்தினால் சென்னைக்கு அது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். சென்னையில் உள்ள கால்வாய்களின் இருபுறமும் கான்கிரீட் சுவர்களை 6 அடி உயரத்திற்கு எழுப்ப வேண்டும். இப்போதைய வெள்ளம் நமக்கு உணர்த்தியிருப்பது தரையிலிருந்து 6 அடி உயரத்திற்கு மேல் கால்வாய்களின் பக்கவாட்டுச் சுவர்களை உயர்த்தினால்தான் கால்வாயிலிருந்து தண்ணீர் ஊருக்குள் வராமல் தடுக்க முடியும் என்பது. ஆகவே, 6 அடி உயரத்திற்கு கான்கிரீட் சுவர் எழுப்ப வேண்டும்.

அடுத்து, இந்த வெள்ளத்தின்போது ஏற்பட்ட மிக முக்கியமான பாதிப்பு மின் தடையாகும். 2 நாட்கள், 3 நாட்கள் மின்சாரம் இல்லை. அதனால்தான் டெலிபோன் டவர்களெல்லாம்கூட செயலிழந்து இருந்தன. அதற்குக் காரணம், Mini Pillars 3 அடி உயரத்தில், 2 அடி உயரத்தில் இருந்தன. இப்பொழுது சுவர்களில் மழைநீர் போட்டிருக்கிற தடயங்களை வைத்து அதற்கு மேல் ஒரு அடி உயர்த்தி இந்த Mini Pillars-ஐ உயர்த்தி கட்டிவிட்டால், வெள்ளம் வரக்கூடாது, ஒரு வேளை அப்படியே வந்தால்கூட மின்சாரம் தடைபடாது. எல்லா பில்லர் பாக்ஸ்களையும் 6 அடி உயரத்திற்கு நாம் உயர்த்திக் கட்டினால் வெள்ளத்தின்போது நமக்கு. . .

[2016 ஜனவரி 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதற்கான உத்தரவினை மின்சார வாரியத்திற்கு வழங்கியிருக்கிறார்கள். தரைமட்டத்தில் இருக்கின்ற Pillar Boxes-ஐ படிப்படியாக சற்று உயரத்தில் அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகின்றன. திடீரென்று பெருமழை வெள்ளம் வந்தாலும்கூட, Pillar Boxes மூழ்கிவிடாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இப்பொழுது தமிழ்நாடு மின்சார வாரியம் எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னையிலே கால்வாய்கள் தூர் வாரப்படவில்லை, மழைநீர் வடிகால்கள் முறையாக பராமரிக்கப்படவில்லையென்று சொன்னார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள், மழை வருவதற்கு முன்பே என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். Super Checker Machine அம்மா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நீதிமன்ற விதிமுறையின்படி ஆட்கள் சில இடங்களில் சில பணிகளைச் செய்யக் கூடாது என்ற காரணத்தினால், Super Checker Machine கொண்டு அனைத்துக் கால்வாய்களும் தூர் வாரப்பட்டிருக்கின்றன. சென்னை மாநகராட்சி, சென்னை மெட்ரோ வாட்டர் உள்ளிட்டவை இணைந்து தொடர்ந்து பணியாற்றியிருக்கின்றன. அதேபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மழைநீர் வடிகால்கள் பராமரிப்பு குறித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்ததற்கிணங்க, மழைநீர் வடிகால்களை பராமரிக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு இன்றைக்கு அப்பணி நடைமுறைக்கு வந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2016 ஜனவரி 22]

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சென்னையில் ஒரு நாளைக்கு, 5,000 மெட்ரிக் டன் குப்பை உருவாகிறது. இதில் மக்கும் கழிவு, மக்காத கழிவு, எலெக்ட்ரானிக் கழிவு, உயிரின கழிவுகள் அனைத்தும் ஒரே இடத்தில் கொட்டப்படுகின்றன. இது பெரும் சுகாதாரக் கேட்டை உண்டாக்கி வருகிறது. ஆகவே, இந்தக் கழிவுகளை வீடுகளிலிலேயே தரம் பிரித்துப் பெற்று, அதனதற்குரிய இடங்களிலே கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். கொடுங்கையூர், பெருங்குடி குப்பைக் கிடங்குகளை உடனே அகற்ற வேண்டும். அல்லது திடக்கழிவு மேலாண்மைக்கு நவீன முறைகளைக் கையாள வேண்டும். குப்பைகள் வெளியே இல்லாத அளவிற்கு தரையிலே ஒரு பெரிய பங்கர் கட்டி, ஒரு வார குப்பைகளை அங்கே வைத்து, அதை எரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இது பல நகரங்களிலே இருக்கின்றது. அதற்கான ஏற்பாட்டை சென்னை நகரத்திலும் செய்ய வேண்டும். குப்பைக் கிடங்கு, சென்னைக்கு ஒரு பெரும் பிரச்சினையாக இருக்கிறது. மழையின்போதும் அது பெரும் பாதிப்பை உண்டாக்கியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழையின்போது பெரும் பாதிப்பு என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த போர்க்கால நடவடிக்கையினால் 2,30,000 டன் குப்பை 29 நாட்களில் எடுத்து முடிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். இன்றைக்கு கொடுங்கையூர், கொட்டிவாக்கம் போன்ற பகுதிகளில் மூன்று சிப்பங்களாக அப்பணிக்கு டெண்டர் விடப்பட்டிருக்கிறது. பசுமைத் தீர்ப்பாயத்திலே திரு. ஆறுமுகம் என்பவர் இது தொடர்பாக வழக்கு தொடர்ந்திருந்தார். அந்த இடத்தை மாற்றும் பிரச்சினை பற்றியும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அந்த இடம் சம்பந்தமாக இன்றைக்கு வேலை உத்தரவு வழங்கி, அது ஆய்வில் இருக்கின்றது. குப்பை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் இப்போது அதிகமான machineries வாங்கி, சென்னை மாநகராட்சிக்குக் கொடுத்திருக்கிறார்கள். வருங்காலத்தில்

[திரு. எஸ்.பி. வேலுமணி] [2016 ஜனவரி 22

குப்பையில்லாத நிலை உருவாக்கப்படும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, கண்டிப்பாக இந்நிலை தடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 3-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. சவுந்தரராசன், நிறைய நேரம் பேசிவிட்டீர்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** இரண்டே நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். தண்ணீர் பற்றாக்குறையாக உள்ள நமது மாநிலத்தில் கொக்கோ கோலா, பெப்சி கம்பெனிகளை அனுமதிக்கக் கூடாது. ஏற்கெனவே, கங்கைகொண்டானில் இருக்கக்கூடிய கொக்கோ கோலா நிறுவனம் 30 இலட்சம் லிட்டர் தண்ணீரை எடுத்துக் கொண்டிருக்கிறது. இப்போது பெப்சி நிறுவனத்திற்கு அனுமதி தரப்பட்டுள்ளது. அவர்கள் 20 இலட்சம் லிட்டர் தண்ணீரை எடுக்கப் போவதாகச் சொல்கிறார்கள். மேலப்பாளையம், திருநெல்வேலி போன்ற நகரங்களுக்கே வாரத்திற்கு இரண்டு நாட்கள்தான் குடிதண்ணீர் தந்து கொண்டிருக்கிறோம். பெருந்துறையிலே இதுபோன்ற நிறுவனங்கள் வராமல் எப்படி நாம் நிறுத்தினோமோ அதுபோன்று, அங்கேயும் இந்த கம்பெனிகளை நாம் அனுமதிக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மோனோ இரயில் பற்றி ஆளுநர் உரையில் இல்லை. பட்ஜெட்டிலே இருந்தது, போக்குவரத்து மானியக் கோரிக்கைக்கான கொள்கை விளக்கக் குறிப்பில் இருந்தது; இதிலே இல்லை. வட சென்னைக்கு இது மிக முக்கியம். மாநகராட்சி, நகரங்கள் அனைத்திற்குமே இந்த மோனோ இரயில் மிக முக்கியமான ஒன்றாக இருக்கும். அதை விடக்கூடாது. அதை மறுபடியும் இதிலே சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்-மாணவர் விகிதம் இந்த அறிக்கையிலே குறைந்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நேரமில்லாததால் நான் அந்தப் புள்ளிவிவரங்களுக்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால், தமிழ் மீடியத்தில் அரசுப் பள்ளிகளில் அல்லது அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதுதான், இந்த ஆசிரியர்-மாணவர் விகிதத்தில் ஏற்பட்டிருக்கிற குறைவிற்குக் காரணமாக இருக்குமோ என நான் கருதுகிறேன். அதையும் அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.



2016 ஜனவரி 22] [திரு. அ. சவுந்தரராசன்]

வீட்டு வசதி, கூட்டுறவு சொசைட்டிகள் செயல்படாமல் இருக்கின்றன. மூன்று, நான்கு ஆண்டுகளாக அந்த ஊழியர்கள் ஊதியமில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, அந்த சொசைட்டிகளை செயல்படுத்தவும், அவர்களுக்கு ஊதியம் வழங்கவும் அல்லது கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற வேறு நிறுவனங்களில் அவர்களுக்கு வேலை வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்த்தீனியம் செடிகள் முற்றிலும் ஒழிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஆட்சிக் காலம் முடியப்போகிறது, அது இன்னமும் ஒழிக்கப்படவில்லை. நீர் நிலைகளில், கால்வாய்களில் உள்ள ஆகாயத் தாமரைகளை அகற்றுவோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த இரண்டும் மிக முக்கியமானது. வெள்ளத்தின்போது ஆகாயத் தாமரை மிகவும் மோசமான பங்காற்றியது.

மாநிலம் முழுவதும் நாம் பிளாஸ்டிக்குகளை கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தை இந்த மழை வெள்ளம் நமக்கு மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது. அதுகுறித்த ஓர் ஒருங்கிணைந்த திட்டத்தை மாநில அரசாங்கம் கொண்டு வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) உரை முடியப்போகிறது.

அரசு மற்றும் பொதுத் துறையில் உள்ள ஊழியர்களுக்கு 2003-லிருந்து புதிய பென்சன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதை இரத்து செய்வேன் என்று தேர்தல் பிரச்சாரத்தின்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த ஊழியர்களுக்கு, இப்போது பிடிக்கக்கூடிய சி.பி.எஸ். பணத்தின் நிலை என்ன? அது எந்தக் கணக்கில் இருக்கிறது என்றுகூடத் தெரியவில்லை. ஆகவே, அந்தப் புதிய பென்சன் திட்டத்தை மாற்றியமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

[திரு. அ. சவுந்தரராசன்] [2016 ஜனவரி 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

***திருமதி ச. முத்துசெல்வி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரடியால் உலகளந்த இறை தந்த சேயாய், ஈரிலையால் உலகத் தமிழரை இமையாகக் காக்கும் தாயாய், பெரியாரின் துணிவாய், பேறறிஞரின் அறிவாய், மக்கள் திலகத்தின் கனிவாய், உலகெங்கும் வாழ்கிற தமிழினம் உளமார ஓதுகின்ற மந்திரமாய், கூடுகின்ற தொண்டர்களின் தொண்டாய், நாடுகிற நல்லோரின் நல் மருந்தாய், ஊர் வாழ உழைக்கின்ற உன்னதமாய், காவேரியை கைப்பிடித்து கல்லணைக்கு அழைத்து வந்த வீரமாய், கலங்குபவர்களைக் காக்கும் கரமாய், உலகத் தரக் கல்வி தரும் கலைவாணியாய், மின்சாரத் தட்டுப்பாட்டிலிருந்து மீட்டெடுத்த மீட்பராய், மாநிலத்திற்கு மாற்றம் தந்த மாதரசியாய், பாடுபடும் ஏழைகளின் பசி தீர்த்த பண்பாய், வாடுகிற மக்களின் வறுமை மாய்த்த வளமாய், பாரதியின் பாட்டுக்குப் பொருளாய், பாவேந்தன் கூற்றுக்கு வடிவாய், கவியரசு கம்பனின் கவிதைக்குக் கருவாய், தீந்தமிழர் வாழ்வுக்காக வந்துதித்த காவியமாய், காவியத் தலைவியாய் இருந்து, எங்கோ ஒரு மூலையில் சாதாரணப் பெண்ணாக இருந்த என்னை சங்கரன்கோவில் நகரமன்றத் தலைவராகவும், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினராகவும், விரல் பிடித்து வழிகாட்டும் தாயாய் இருந்து என்னை வழி நடத்தும், அமிழ்தினை அளிப்பதில் ஆதிரை, அயராது ஈவதில் அட்சயப் பாத்திரம், தன்னிகரில்லா தமிழகத்தின் அழிவில்லா அட்சயரேகை, எங்கள் குடும்பமே கும்பிடும் குலதெய்வம், எங்கள் இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மேதகு ஆளுநர் அவர்கள் உரைமீது நன்றி தெரிவித்துப் பேச இந்த அரிய வாய்ப்பினை வழங்கியமைக்காக தங்கள் மலர்ப் பாதங்கள் தொட்டு வணங்குகிறேன் அம்மா.

பிற்பகல் 3-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடும்போது மயில் அழகு! ஓடும்போது மான் அழகு! தாவும்போது முயல் அழகு! கர்ஜிக்கும்போது சிங்கம் அழகு! கூவும்போது குயில் அழகு! பாயும்போது புலி அழகு! மேயும்போது பசு அழகு! விடியும்போது விண் அழகு! சாயும்போது அருவி அழகு! துதிக்கும்போது பாடல் அழகு! அணியும்போது நகை அழகு! நாணும்போது பெண் அழகு! சிரிக்கும்போது குழந்தை அழகு! பேணும்போது தாய் அழகு!



2016 ஜனவரி 22] [திருமதி ச. முத்துசெல்வி]

பேசும்போது தமிழ் அழகு! தமிழ் வார்த்தைகளிலே அம்மா என்ற சொல்லே அழகு! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, இந்தத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மீண்டும் தாங்கள் ஆறாவது முறையாக முதல்வராக அமரும்போதுதான், இந்தச் சட்டமன்றத்திற்கே அழகு! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா, இந்தச் சட்டமன்றத்திற்கே அழகு என்ற தமிழக மக்களின் எண்ணக் கிடக்கையை எடுத்தியம்பி என் உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்றது முதல், மக்கள் நலன் பேணுவதையே அரசுக் கொள்கையின் அடித்தளமாகக் கொண்டு நலத் திட்டங்களைத் திட்டமிட்டு செயலாக்குவதில் முன்னோடி மாநிலமாகவும், பிற மாநிலங்கள் பின்பற்றத்தக்க முன்மாதிரி மக்கள் நல அரசாகவும் தமிழக அரசு உருப்பெற்றுள்ளது என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல எடுத்துரைத்து, பெருமகிழ்ச்சியுடன் மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அவையிலே பதிவு செய்துள்ளார்கள். இதற்கு சாட்சிதான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற இடைத் தேர்தலிலே பெற்ற மாபெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி என்பதைப் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருஞானசம்பந்தரோ, பெண்ணின் பெருமையைப் பற்றிக் கூறும்போது, "பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே" என்கிறார். முண்டாசுக் கவிஞர் பாரதியோ, "பெண்ணுக்குள் ஞானம் வைத்தான்; புவி பேணி வளர்த்திடும் ஈசன்" என்று பெண்கள் அறிவுப்பூர்வமாக உயர்ந்து விளங்குவதை தன் பாடலின்மூலம் பெருமைப்படுகிறான். சேக்கிழாரோ, "பிழைக்கு நெறி நமக்கு; தவ பெண் மகவை ஈன்றெடுத்தாய்" என்று பெண்கள் தவமிருந்து ஈன்றெடுக்கப்பட்டவர்கள் என்று பெருமைப்படுகிறார். தமிழினத்தைக் காக்க வந்த தன்னிகரில்லா தமிழில்லம்! தடை தகர்த்து, பகை வெல்லும் தன்மானச் சிம்மம்! தமிழகத்தை தன் இமை போல் போற்றி வாழும் தாயுள்ளம்! எங்களின் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், திருஞானசம்பந்தரும், பாரதியும், சேக்கிழாரும் நினைத்து பெருமைப்பட்டதுபோல், தவமாய் தவமிருந்து கிடைத்த தவமாக பெண்ணினத்தைக் காக்க வந்த பெண் காவல் தெய்வம்.

[திருமதி ச. முத்துசெல்வி] [2016 ஜனவரி 22

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் சீரழிந்து, தீய சக்தியின் பிடியிலிருந்த தமிழகத்தை, தமிழகத்தின் சட்டம்-ஒழுங்கை, மன உறுதி மற்றும் திடமான செயல்பாட்டினால் மாநில காவல் துறை சிறப்பாகச் செயல்பட்டு, பாதுகாத்து, மக்கள் மனதில் நம்பிக்கையையும், பாதுகாப்பையும் உருவாக்கி, சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு உகந்த அமைதிப் பூங்காவாக தமிழகத்தை மாற்றிக் காட்டியவர்தான் நம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் நடந்த போர்க் குற்றங்களினால் பாதிக்கப்பட்ட தமிழினத்தைக் காத்திட வேண்டியும், அதற்குக் காரணமானவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியும் இந்த மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, இந்த அரசு எடுத்த முயற்சி நினைவுகூரத்தக்கது என மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடல் கடந்த தமிழர்கள்மீது கொண்ட அக்கறையை மேதகு ஆளுநர் அவர்கள் பாராட்டியிருப்பது சாலப் பொருத்தமானது. அதுபோல, தமிழக மீனவர்களின் நலனில் மிகுந்த அக்கறைகொண்டு, கச்சத் தீவை மீட்டு, நம் பாரம்பரிய மீனவர்களின் மீன்பிடிக்கும் உரிமையை நிலைநாட்டுவது நம் தலையாய கடமை என மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசு நிரந்தரத் தீர்வைக் காண தொடர்ந்து வலியுறுத்தி, பல்வேறு தீர்மானங்களையும் இந்த மாமன்றத்திலே நிறைவேற்றியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீங்கள் எல்லையில்லா வலிமை பெற்றவர்கள்; உங்களின் உண்மை இயல்போடு ஒப்பிடும்போது, காலமும், இடமும்கூட ஒரு பொருட்டல்ல" என்றார் விவேகானந்தர். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளினால் வட கிழக்குப் பருவ மழை காலத்தின்போது, கடந்த நூறு ஆண்டு காலத்தில் பெய்திராத அளவிற்கு ஒரே நாளில் கொட்டித் தீர்த்த கனமழையால் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான சென்னை மற்றும் கடலோர மாவட்டப் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு, பெரும் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது. மழைக்குப் பின் ஏற்படும் தொற்றுநோயும் கட்டுப்படுத்தப்பட்டது. ஆம், நம் மாண்புமிகு அம்மா அவர்களின் வலிமையால், கால மாறுபாடு



2016 ஜனவரி 22] [திருமதி ச. முத்துசெல்வி]

கருத்துடன் கவனமாகக் கையாளப்பட்டு, காலத்தின் கோலத்தால் இடமின்றி இருந்தவர்களுக்கு உடனடியாக 10,000 வீடுகள் வழங்கப்பட்டன. இதன்மூலம் இடம் பொருட்டல்ல என்ற விவேகானந்தரின் வாய்மொழியை வாய்மையாக்கிக் காட்டியுள்ளார் நம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேதகு ஆளுநர் அவர்கள், "பெரும் பேரிடர் ஏற்பட்டபோதிலும் மாநில சுகாதாரத் துறையின் திறமையான நடவடிக்கைகளால் தொற்றுநோய் பரவாமல் தடுத்தது குறிப்பிடத்தக்க சாதனையாகும். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் திறம்படச் செயலாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக மொத்த மாநில நிருவாகமும் இரவு, பகலாக உழைத்தது என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்." எனப் பாராட்டியுள்ளார்.

பிற்பகல் 3-30

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் ஒரே நாளில் நிவாரணத் தொகையினை அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தி சாதனை புரிந்தவர், நமது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மேலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலையோர வியாபாரிகள் மற்றும் வணிகர்களுக்கு 100 கோடி ரூபாய் வட்டியில்லாக் கடனை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். இனி புறம்பேசிப் புலம்புகின்றவர்களின் கோஷங்கள் எல்லாம் செல்லாக் காசாகி சென்ற இடம் தெரியாது போகும். எதிர்த்தவர்கள் எவரும் எழுந்திடாது போகும். அம்மா இனி, தங்கள் வரலாறு செப்பேட்டில் சென்றேறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நம் நாட்டின் குடிமகனின் கண்களிலிருந்து ஒரு துளி கண்ணீரும் வெளிப்படாத சமுதாயத்தை நாம் சமைத்தாக வேண்டும்' என்ற தேசத் தந்தை மகாத்மா காந்தியின் மன ஓட்டத்திற்கு மாண்பு சேர்க்கும்விதமாக, தமிழக மக்களின் வாழ்வில் ஒளியேற்றும்விதமாக, மாட்சிமை மிக்க 'விஷன் 2023' திட்டத்தினை உருவாக்கி இந்தியாவிற்கே வழிகாட்டியுள்ளார் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையில் பதிவு செய்துள்ளார்.

எங்களது தாய், அறிவு வற்றா ஜீவ நதி, ஆற்றல் வற்றா வல்லமைப் பெட்டகம், அன்பு வற்றாக் கருணைக் கருவூலம்,

ஆளுமை வற்றா அதிசயம், ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவர் என்பதை இந்தச் சட்டமன்றத்தில் பறைசாற்றியுள்ளார் என்பது நமக்குப் பேருவகை அளிக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீய சக்தியால் இருளில் மூழ்கிக் கிடந்த தமிழகத்தை மின் மிகை மாநிலமாக்கி, 7,485 மெகா வாட் உற்பத்தித் திறனைக் கூடுதலாக உற்பத்தி செய்து, சாதனை படைத்தவர் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மேலும், சூரிய ஒளி மின் உற்பத்தியிலும் முதன்மை மாநிலமாக்கிக் காட்டியவர், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இன்று சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் 2,42,000 கோடி முதலீடுகளை ஈர்த்து வந்து, இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்த ஒரே முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறைந்த பனித் துளியின் உள்வெப்பம் உணர்வதுபோல், உறைந்த பனித் துளியின் உள்வெப்பம் உணர்வதுபோல், அம்மா மருந்தகம், அம்மா உணவகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா சிமெண்ட், தாய் திட்டம், அம்மா குழந்தைகள் நலப் பரிசுப் பெட்டகம், சூரிய ஒளியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம், புது வாழ்வுத் திட்டம், அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம், பண்ணைப் பசுமை காய்கறிக் கடைகள், விலையில்லா அரிசி, மானிய விலையில் பருப்பு, விலையில்லா ஆடுகள், பின்தங்கிய பகுதிகளில் ஒன்றான சங்கரன்கோவிலில் கோழி வளர்ப்புத் திட்டம், அம்மா திட்டம், விரைவு பட்டா மாறுதல் திட்டம், முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம், தாய்ப்பால் வங்கிகள், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம், சமூகப் பாதுகாப்புத் திட்டம், தாலிக்குத் தங்கம் திட்டம், விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், ஃபேன் வழங்கும் திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், இ-சேவை மையம், அம்மா அழைப்பு மையம் என தமிழக மக்களின் உள்ளக்கிடக்கினை உணர்ந்து, பல்வேறு திட்டங்களை அமலாக்கம் செய்து, விதவிதமாய் திட்டங்களை வீடுதோறும் வித்திட்டு, உருவாகும் சமுதாயம் உருப்படியாய் உயர்ந்திட, உழன்று உழைத்திட்ட உன்னதமாய், உலக வியப்பாய் திகழ்கிறார், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைப் பற்றி ஒரு சிறு விஷயத்தை இங்கே பதிவு செய்யலாமென்று நினைக்கிறேன். என்னுடைய தொகுதிக்குட்பட்ட ஒரு தந்தையாரும், ஒரு குழந்தையும் என்னை வந்து அணுகினர். ‘என் குழந்தைக்கு வாயில் ஓட்டையே இல்லை, ஒரு அரிசி பருக்கை போகும் அளவிற்குத்தான் ஓட்டை இருக்கிறது, இதற்கு operation செய்ய வேண்டியிருக்கிறது’ என்று வந்தனர். அப்பொழுது நாங்கள் கடிதம் கொடுத்து, சென்னைக்குச் சென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைச் சென்று பாருங்கள், அவர்கள் கண்டிப்பாக உதவி செய்வார்கள் என்று அனுப்பி வைத்தோம். அவர்களும் சென்னைக்கு வந்து, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்மூலமாக operation செய்ததன்மூலம், இன்றைக்கு அந்தக் குழந்தை வயிறார உணவு உண்ணக்கூடிய வாய்ப்பை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு எத்தனையோ மக்களின் நோய்களை குணமாக்கி, இன்றைக்கு ஆரோக்கியமான தமிழகத்தை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் காட்டியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘பயிற்றுப் பல கல்வி தந்து, இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்’ என பாரதி உரைத்ததன்பேரில், உலகை மாற்ற உன்னதமான உள்ளர்த்தங்கள் கொண்ட வார்த்தைகளை உச்சரித்த வீரத் துறவி விவேகானந்தர், “நீங்கள் எல்லை இல்லாத வலிமை பெற்றவர்கள்” என்று இளைஞர்களின் வலிமையை எடுத்துரைத்தார். ஆம், அப்படிப்பட்ட இளைஞர்களுக்காக, கல்லூரிகளில் பயிலும் 5.5 இலட்சம் மாணவ, மாணவியருக்கும், பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் 21.56 இலட்சம் மாணவ, மாணவியருக்கும், இம்மையிலும் நன்மை தரும் இலவச மடிக் கணினிகளை வழங்கி, வருங்காலத் தமிழகத்தை வல்லரசு மிக்க மாநிலமாக உருவாக்கியுள்ளார்கள், மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதை நான் பெருமையாகக் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-35

அதுமட்டுமா? தரமான கல்வியை வழங்கிட பள்ளிக் கல்வித் துறைக்கு ரூ.64,485.97 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அதேபோல, உயர் கல்விக்கென ரூ.85,422.47 கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

இதனால் தமிழகத்தில் தொடக்க நிலை மற்றும் இடைநிலை கல்வியில் மாணவர்-ஆசிரியர் விகிதம் முறையே 29.18-லிருந்து 25.11 ஆகவும், 35.20-லிருந்து 21.94 ஆகவும் குறைந்துள்ளது.

முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு கல்விக் கட்டணத்தைத் திரும்ப வழங்கும் திட்டத்தின்கீழ், கல்வியில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த 2,84,609 மாணவர்கள் தடையின்றி உயர் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்று, இதன் பயனாக தேசிய அளவில் 23.6 சதவிகிதமாக இருந்த மொத்த மாணவர் சேர்க்கை விகிதம், தமிழகத்தில் 44.8 சதவிகிதத்தை எட்டியுள்ளது. இதன்மூலம் கல்வி வசதி எளிதில் கிடைப்பதையும், கல்வியின் தரம் உயர்வதையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதி செய்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மாணவச் செல்வங்கள், தங்களுடைய உயர் கல்வியைத் தொடருவதற்கான வாய்ப்பை இந்த அரசு உறுதி செய்துள்ளது. அதாவது, ஆதி திராவிட மாணவர்கள் உயர் கல்வியைத் தொடரும்போது, அவர்களுக்கான முழு கல்விச் செலவையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டு, அவர்கள் பள்ளிப் படிப்பை மட்டுமல்லாமல், உயர் கல்வியையும் தொடர்ந்து பயில்வதற்கான வாய்ப்பை இந்த அரசாங்கம் உறுதி செய்துள்ளது. இவ்வாறு மாணவச் செல்வங்களாகிய கூம்பிய மொட்டுகளுக்கு சந்திரனாய், கசிந்தோருக்கு கணக்கின்றி கொடுக்கும் கல்வியின் வள்ளலாய்த் திகழ்கிறார் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், சில இயக்கங்களோ பழுதாகிவிட்டாலும், பளபளப்பு படுதா விரித்து, பகட்டு காட்டி, பாமர மக்களை ஏமாற்ற நினைக்கின்றன. ஆனால், சில இயக்கங்களோ பழுதாகிவிட்டாலும், பளபளப்பு படுதா விரித்து, பகட்டு காட்டி, பாமர மக்களை ஏமாற்ற நினைக்கின்றன. ஆனால், கெட்டிக்காரர்களின் பொய்யும், புரட்டும் எட்டு நாட்களிலே தெரிந்துபோய்விடும் என்பதைத் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமை கொடியது என்றார் ஔவைப் பெருந்தகையார். பருக்கையற்ற கூழுக்குப் போட உப்பில்லை என்பார்க்கும், குத்தித் தைத்த காலுக்குத் தோல் செருப்பில்லை என்பார்க்கும், பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பார்க்கும் விசனம் ஒன்றே. ஆனால், பசிப்பிணி தீர்க்க, பருக்கையற்ற கூழ்தான் முக்கியம். அந்தப் பருக்கையற்ற





கூழுக்கு, உணவு உற்பத்தி செய்யும் உழவர்கள்தான் முக்கியம். எனவேதான், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், உலகோர்க்கு உணவளிக்கும் உழவர்களுக்கு புதிய தொழில்நுட்பங்களை முறையான திட்டச் செயலாக்கத்தின்மூலம் அமல்படுத்த வேண்டுமென்பதை தன் நுண்ணறிவால் நுகர்ந்து, வறட்சியின் வடு தெரியாமல் செய்து, வளமையைத் தன் வல்லமையால் பெற்று, ‘இருமடங்கு உற்பத்தி; மும்மடங்கு வருமானம்’ என்ற தாரக மந்திரத்தை, தன்னை நம்பியிருக்கும் விவசாயிகளின் விளைநிலங்களில் விதைத்து, இன்றைக்கு அதனுடைய பலனை, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியதன்மூலம், விவசாயிகள் பெறுகின்றவகையில், கடந்த 4 ஆண்டுகளில் மூன்று முறை 100 இலட்சம் மெட்ரிக் டன் அளவிற்குக் கூடுதலாக உற்பத்தி செய்து, சாதனை படைத்து, தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் முழுமையாக அழைத்துச் சென்றதை உலக வங்கி பாராட்டியுள்ளதாக மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

‘எடுத்ததில் தோல்வி இல்லை; எதிர்த்தார்கள் மீண்டதில்லை; எடுத்ததில் தோல்வி இல்லை; எதிர்த்தார்கள் மீண்டதில்லை’ என்ற எங்கள் மாண்புமிகு அம்மாவின் அகராதியில் உள்ள வார்த்தைகளை (மேசையைத் தட்டும் ஒலி) வாய்மைப்படுத்தும்விதமாக, உரிமைக்காக இடையறாதும், தடையறாதும், உச்ச நீதிமன்றத்தின் கதவைத் தட்டி, முல்லைப் பெரியாறில் முரண்டு பிடித்தோரை முழுமையாக சட்டத்தின்முன் நிறுத்தி, அன்று காவேரியை மீட்டெடுத்த காவேரித் தாய்; இன்றைக்கு முல்லைப் பெரியாறையும் வென்றெடுத்தார். ஆம்! காவேரியைக் கைப்பிடித்து கல்லணைக்கு அழைத்து வந்தார். முல்லைப் பெரியாறை முன்னின்று அழைத்து வந்து, அதை 142 அடியாக இரண்டு முறை உயர்த்தி, தென் தமிழகத்தையே திளைக்கச் செய்தார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் மாண்புமிகு அம்மாவின் ஆட்சிக் காலத்தில், 2011-2012 மற்றும் 2013-2014 ஆம் ஆண்டிற்கு ‘க்ரிஷி கர்மான் விருது’; 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான ‘மாநிலத் தலைமைப் பண்புக்கான விருது’; 2014 ஆம் ஆண்டில், இந்தியா டுடே பத்திரிகை நிறுவனத்தின் ‘பெரிய மாநிலங்களுக்கிடையேயான சிறந்த விருது’; 2014-2015 ஆம் ஆண்டில், மின் ஆளுமைக்கான தங்கப் பரிசு;

[திருமதி ச. முத்துசெல்வி] [2016 ஜனவரி 22

2015 ஆம் ஆண்டின் நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சிறந்த மாநிலத்திற்கான விருது; தமிழ்நாடு பல்கலைக்கழகத்திற்கு மத்திய அரசின் பல்வேறு விருதுகள் என எல்லா நிலைகளிலும், அனைத்து விருதுகளையும் அடுக்குத் தொடராய்ப் பெற்று அன்னபூரணியாய் மிளிர்கிறார் நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-40

முதன்மை மாநிலத்திற்கான விருதுகளைப் பெற்றதோடு மட்டும் நிற்காமல் வருடந்தோறும் விருதுகளை வழங்கியும் வருகிறார்கள் நம் அம்மா அவர்கள். அவ்வகையில், தகுதிவாய்ந்த அறிஞர்களின் இலக்கிய சாதனைகளைப் பாராட்டும்விதமாய், தமிழ்த்தாய் விருது, கபிலர் விருது, உ.வே.சா. விருது, கம்பர் விருது, ஜி.யு. போப் விருது, அம்மா இலக்கிய விருது, மேலும், மாணவர்களின் நலனில் அக்கறை கொண்ட தமிழகத்தைச் சேர்ந்த சாதனையாளர்களை அங்கீகரிக்கும்வகையில், ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் விருது வழங்கி, அவரது பிறந்த தினத்தை “இளைஞர் எழுச்சி நாளாகவும்” அறிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோர்’ என்பது ஆன்றோர் வாக்கு. ஆம், புதுமைக்குப் புதுமையாய், பொது நலத்திற்குப் பொலிவிடமாய், ஒரு சுவையும் இல்லா உணவையே அருந்தியவர்க்கு அறுசுவை உணவளித்து அம்மா உணவகங்கள் கண்ட ஒப்பில்லா உங்கள் திறத்தை உலகமே உன்னிப்பாய்ப் பார்க்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆம் அம்மா, உலகமே உன்னிப்பாய்ப் பார்க்கிறது. இன்றைக்கு அம்மா உணவகத்தில் சாப்பிடக்கூடிய அனைத்து மக்களும் மாண்புமிகு அம்மா அவர்களை வயிறாரவும், மனதாரவும் வாழ்த்திவிட்டுச் செல்கிறார்கள். ஆனால், எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்கள் சாப்பிட்டுவிட்டு வயிறெரிந்து போகிறார்கள். ஏனென்றால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்படி திட்டங்களைக் கொடுத்து மக்கள் மனதிலே இடம் பிடித்து விட்டாரே என்று அவர்கள் வயிறெரிந்து போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



2016 ஜனவரி 22] [திருமதி ச. முத்துசெல்வி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவன் சேற்றில் கையை வைக்கவில்லை என்றால் நாம் சோற்றில் கை வைக்க முடியாது. அதுபோல, நெசவாளி தறியில் கை வைக்கவில்லை என்றால் நாம் ரோட்டில் கால் வைக்க முடியாது. ‘நேசம் கொண்டவர் வார்த்தை நெல்லிக் கனி தின்றதற்கு ஒப்பாகும்’ என்ற பழமொழிக்கிணங்க, எல்லோரிடமும் நேசம் கொண்ட மாண்புகள் நிறைந்த எங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நெசவாளிகள்மீது நேசம் கொண்டு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார் என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘கூடி வாழ்ந்தால் கோடி நன்மை’, ‘இரு கை தட்டினால்தான் ஓசை வரும்’, இதெல்லாம் நம் முன்னோர்கள் ஒற்றுமைக்காகச் சொன்ன பழமொழிகள். “எதிர்கால இந்தியா உன்னதமாக விளங்க வேண்டுமானால் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரே மனம் கொண்டவர்களாகி ஒரே இடத்தில் சங்கமமாக வேண்டும்” என்றார் விவேகானந்தர். ஆம், இன்றையதினம் தீர்க்கதரிசி, ஆற்றல் அரசி, தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி கூட்டுறவுத் துறையானது சிறந்து விளங்கி, தன்னுடைய திட்டங்களை சீரோடும், சிறப்போடும் செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “அறிவும், சிந்தனைத் தெளிவும், செயல்முறையும் போற்றி வளர்க்கப்பட வேண்டும், அதுவே சமுதாய நெறியாகவும், வாழ்க்கை முறையாகவும் அமைந்திட வேண்டும்” என்றார் பேறறிஞர் அண்ணா அவர்கள். நாடாளுமன்றத்திலே பேரறிஞர் அண்ணா அவர்களின் இருக்கையிலே அமர அருமையான வாய்ப்பைப் பெற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பேரறிஞரின் வாய்மொழிக்கிணங்க அறிவையும், சிந்தனைத் தெளிவையும் பெற்று, தமிழகத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றுள்ளார் என்பதை நான் பெருமையாக இந்த அவையிலே கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னை-அசாதாரணமானவள், அதி ஆனந்தம், அகிலம் எங்கும் ஆதி அதிசயம். அனைவருக்கும் அம்மா, அன்னை சந்தியாவின்

அருந்தவப் புதல்வியே, அ.தி.மு.க.-வின் அதிசயத் தலைவியே, அமிர்தம் அளிக்கும் அமிர்த செல்வியே, ஆனந்தம் அளிக்கும் ஆனந்த லட்சுமியே, அதிக அசாத்தியங்களை அள்ளிக் கொடுத்த அற்புத லட்சுமியே, ஆராய்ந்ததில் அனைத்திலும் அற்புதமானவரே, (மேசையைத் தட்டும் ஒலி) அபூர்வமானவரே, வாழ்க நீர் பல்லாண்டு.

நீரின்றி அமையாது உலகு, இனி, நீங்கள் இன்றி அமையாது தமிழ் உலகு. (மேசையைத் தட்டும் ஒலி) பெண் இனத்தைக் காக்க வந்த போராளியே, மாதர் குல மாணிக்கமே, மகளிர் நலன் காக்கும் மாதரசியே, அல்லலுற்ற தமிழர்களின் வாழ்வை மீட்டெடுத்த அன்புப் பெட்டகமே, உழைத்துப் பசித்தவருக்கு உணவில்லை எனும் பேச்சை உதைத்துத் தள்ளி, புதுமைக்குப் புதுமையாய், பொது நலம் ஆற்றும் செம்மணியாய், வளத்திற்கு வளம் சேர்த்து, பெருமைக்குப் பெருமை சேர்த்து, அச்சத்திற்கு அச்சம் ஊட்டி, ஆக்கத்திற்கு ஆக்கம் கொடுத்து, உரிமைக்கு வலிமை கொடுத்து, பொய்யை பொய்மையாக்கி, இல்லாமையை இல்லாமை ஆக்கி, துஞ்சாத துணிவுடைமை, (மேசையைத் தட்டும் ஒலி) தூய்மையான பொதுவுடைமை, தஞ்சமென வந்தோருக்குத் தாயாகி, தமிழகத்தைக் காத்த தாயே! மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே! தாங்கள் ஆண்ட காலமே பொற்காலம்; இனி ஆளப் போகும் 2016 ஆம் ஆண்டும் பொற்காலம் (மேசையைத் தட்டும் ஒலி) எனக் கூறி, மேதகு ஆளுநர் அவர்களின் உரைமீது நன்றி தெரிவித்துப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23-1-2016) சனிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 3-44 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*





## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*7. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் முப்பத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*8. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தின் முப்பத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

*9. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் இருபத்தாறாவது ஆண்டறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-

******